உ

ஓம் சிவாயநமஹா

...ரிதியப்பர் ஸ்தலபுராணம்

மூலமும் உரையும்

மூலம் முத்தம்மாள்புரம்

மகா வித்துவான் ஸ்ரீ நாராயணசாமி

உபாத்தியாயரவர்களாலும்

உரை

...கு. நாகப்ப பிள்ளை யவர்கள...

செய்யப்பெற்றுப்

பொன்னுப்பூர்

ஸ்ரீ வை. இராமசாமித் தேவரி...

முயற்சியினால்

நாகை நீலலோசனி அச்சியந்திரசாலை...
பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்புவிலை ரூபா 1-4-0.

விபவ௵ மாசி௴ 19உ
1929

ஓம் சிவாயநமஹா:

பரிதியப்பார் ஸ்தலபுராணம்.

இந்த மகாஸ்தல புராண வரலாறு இதையடுத்துச்சேர்க்கப் பெற்றிருக்கிற முதற்பதிப்பு முகவுரையைப்படித்தால்யாவர்க்கும் இனிது விளங்கும். இப்புராணத்தின் மூலம் ஷை பரிதியப்பார் கோவில்பஞ்சாயத்தார்களுடைய பொருளுதவியால் சென்ற சர்வசித்துஸு சித் [illegible] தஞ்சைத்திவாகர முத்திராட்ச சாலையில் பதிப்பிக் [illegible] புராணத்திற்கு மகாா ா-ஸ்ரீ பொன்னுசாமிப் பொ [illegible] இயற்றமிழ் வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ தி. க. [illegible] யவர்களுக்குப் பொருளுதவி செய்து அவரைக் [illegible] முழுமைக்கும் உரை யியற்றுவித்தனர். அதன் [illegible] மூலமும் உரையும்சேர்த்து அச்சிபற்றியிருப்பது [illegible] இல்லாத திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் [illegible] பதிகமும் உலாயாசிரியர் இயற்றிய பரிதிவனே [illegible] ளநாயகியம்மை பதிகமும் பரிதிவனேசுரா லய [illegible] சேர்த்து அச்சியற்றப் பெற்றிருக்கின்றன.

[illegible] பாகிய மூல இலிங்கம் [illegible] யச் செயலால் யாவர்க்கு [illegible] ஒரு அதிசய சம்பவத் [illegible] ஸு தை மாதத்தில் ஓர் [illegible] க்கு அபிஷேகம் செய் [illegible] குருதிபீறிட்டடிர்க்கக் [illegible] ஓடிவந்து பலரிடமுங்கா [illegible] முதலியவை செயதுள்ள [illegible] சனி முதலிய பத்திரி [illegible] ம் மேற்படி தேவாலயத் [illegible] ன் எட்டுக்குடி சண்க [illegible] ளியிருக்கும் மூர்த்திக [illegible] றிந்த விஷயம். இதற்கு [illegible] தில் வரும் அளவுபட்ட பிரார்த்தனைக் காவடிக் [illegible] பகரும்.

இவ்விதமகா மகிமைகள்வாய்ந்த ஸ்தல புராணத்தை அச்சிடப் பொருள் உதவிபுரிந்த புண்ணிய சீலர்கள்.

பொன்னப்பூர்.

மகா-ா-ஸ்ரீ பொன்னுச்சாமிப் பொன்னுப் பூண்டாரவர்கள்.

,, ஷையூர் வை. இராமசாமித் தேவரவர்கள்.

,, ஷையூர் து. அண்ணாசாமி ஆலத்தொண்டமானவர்கள்.

தலையாமங்கலம் மகா-ா-ஸ்ரீ வீ. சோக்கலிங்க ஆலத்தொண்டமானவர்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

31-1

உ

ஓம் மகாகணபதே நமஹா.

ஸ்ரீ பாஸ்கரேஸ்வர சுவாமின் நமஹா.

[illegible] முத்தம்பாபுரத்திலிருக்கும் இப்புராணமியற்றிய மகா-ா-ா-ஸ்ரீ [illegible]த்தியாயாவர்கள் ஜேஷ்டபுத்திரராகிய மகா-ா-ா-ஸ்ரீ மகா [illegible]

வீராச்சாமிநாயக்கரவர்கள் இயற்றிய

முகவுரை.

[illegible] சிறந்த நீர்வளம் நிலவளம்பொருந்திய சோமதேசத்தில் [illegible] [illegible] யம்போலும் திலதம்போலும் சர்வ[illegible] [illegible]த்திற்குத் தெற்குக் காததூரத்தில் அஸ்[illegible] [illegible] மகாக்ஷேத்திரமாகிய பரிதி நியமத்[illegible] [illegible] முத்தம்பாபுரஞ் சத்திரத்தில் [illegible] [illegible]னுமாகிய எனது தந்தை நாராயண[illegible] [illegible] மாசிமாதம் மகஸ்நானத்திற்கு ஷேபா[illegible] [illegible]புட்கரணியில் ஸ்நானஞ்செய்து [illegible] [illegible] பரிதீஸ்வரரையும் மங்களநாயகி யம்[illegible] [illegible] மற்றுமுள்ள ஆவரண தெய்வங்களை [illegible] [illegible]ராவில் தென்புற வாயிலிலுள்ள [illegible] [illegible]யோடுறங்கினர். அக்காலையில் அவ[illegible] [illegible] வந்து இத்தலபுராணத்தை நீ செய்ய[illegible] [illegible]னயவர் விழித்து இஃது பரிதீஸ்வ[illegible] [illegible] கொண்டு உதயமாயினபின் நித்[illegible] கொண்டு ஸ்ரீ பரிதீஸ்வரர் சந்நிதியில் வந்துநின்று மிகு[illegible] [illegible]திரம்பண்ணி எம்பெருமானிட்டகட்டளைப்படி இவ்வேழையறிவிலேனல் பூர ணமாய் முடித்தற்கேலுமோ உம்முடைய திருவருட்பாரமேயென்று உள்ளபடி தோத்திரஞ் செய்துகொண்டு ஷை சத்திரம் வந்துசேர்ந்[illegible] எமதிறைவனே உம து தலப்புராணம் எங்குளதோ யானுணர்ந்திலேன் தா[illegible]ம யென்னிடம் வந்து சேரும்படி செய்விக்கவேண்டுமென்கின்ற சிந்தனையும் ஆராய்ச்சியுமாயிருந்தனர் இங்ஙனம்எண்ணமுற்றிருக்குங்காலத்தில் பரசுராமக்ஷேத்திரமாகிய மலையாளத் திலிருந்து வந்த ராமஜடாவல்லவரிடத்திலிருப்பதாய்க் கேள்விப்பட்டு அவ ரைக்கண்டு வணங்கித்தங்களிடத்தில் பரிதிநியமஸ்தலபுராணமிருப்பதாய்க் கேள் விப்பட்டேன் அதை அடியேனுக்குத் தமிழ்வாசகத்திற் சொல்லவேண்டுமென் று மிகவணக்கத்துடன் கேட்க அவரும் அதிப்பிரியத்தோடு சொல்ல அதை வாசகநடையா யெழுதிக்கொண்டுவந்து அப்பா உன்னையல்லாம லோருறவு மசையாததலால் என்னுள்ளத்திருந்தியற்றுவிப்பது உனதுகருணையேயென்று

முகவுரை.

ஸ்ரீ பரிதீஸ்வரரைத் தியானித்துத் தமிழில் காவிய விருத்தக் கவிகளாகப் பாடி வைத்திருந்தனர். தற்காலம் கும்பகோணம் சப்கலெக்டர்சிரஸ்தாதாராகிய, மக-ா-ா-ஸ்ரீ முத்துசாமி பிள்ளையவர்களின் பிதாவாகிய ஷை சத்திரம் கமாசு தாராகவிருந்த மகா சத்குணசிலரான மகா-ா-ா-ஸ்ரீ வீராசாமி பிள்ளையவர்கள் கனவில் நம்முடைய ஸ்தலபுராணத்தை ஏன் அரங்கேற்றுவிக்காமலிரு [illegible]கின்று யென்று ஸ்ரீ பரிதீஸ்வரர் ஓர் பிராமணவேடமாய்ப் போய்த் தெரி[illegible] அவர் விழித்து உதயமானபின் என் பிதாவான ஷை யுபாத்தியாயரைக் கண்டு[illegible]ங்கள் பரிதியப்பர்ஸ்தலபுராணம் செய்திருக்கின்றீர்களோ வென்று வின[illegible] மென் றுரைக்கக்கேட்டுத் தான் கண்ட சொற்பனத்தையுஞ் சொல்லி [illegible] சென் ற அட்சயஞு பங்குனிமீ ௰௨௨ சோமவாரம் சுபதினத்தில் வ[illegible]லும் தென்மொழியிலும் சிறந்த வித்வான்களையும் ஷை முத்த[illegible]கன வான்கள் வர்த்தகர்கள் முதலானவர்களையும் குழுமச்செய்து அ[illegible]ப்படி செய்கிற முறைமைப்படி அரங்கேற்றப்பட்டு அப் பரிதியமர்[illegible]கண் ணே இப்புராணமிருந்தது. நிகழ்ந்த வியஞு பங்குனி[illegible]லத் திற்காகத் திருவானைக்காவிலிருந் தெழுந்தருளியஸ்ரீ அகண்ட[illegible]சிதா [illegible]சுவாமிகளின் பிரதம சிஷராகிய ஸ்ரீ ஓங்காரஸ்வாமிகள் [illegible] [illegible]யும் பராசத்தி குமாரக்கடவுள் முதலியோரை[illegible]த்த [illegible]தலப்பஞ்சாயத்தார்களை நோக்கி இத்தலப்புராண மிருக் [illegible]னவ அப்பஞ்சாயத்தவர்கள் புராணம் வர்த[illegible]றையுஞ் [illegible]தன்றனர். அதைக்கேட்டுச்சுவாமிகள் [illegible]த்தி [illegible]சர் தரிசனத்திற்காகத் தஞ்சைமாநகர[illegible]த மகா [illegible]முத்து உபாத்தியாயரவர்கள் சிவபெரு[illegible] செ [illegible] ஷை ஓங்காரசுவாமிகளைத் தரிசித்[illegible]சாது [illegible]ண்டிருக்கும்பொழுது ஷை சுவாமிகள் [illegible]யரை [illegible]ணத்தை நீர் பிழையற ஆராய்ச்சிசெய்[illegible] கொடு [illegible]கேட்க அவர் சுவாமிகள் கட்டளைப்படி [illegible]மென [illegible]மிகளின் கட்டளையினுலும் ஷை மதுரைமுத்து உபாத்தியா [illegible]யவிலக்கண அமைதியும் பொருளமைதியும் ஒழுங்குபட[illegible]ச் [illegible]லுள்ள ஆன்மகோடிகளெல்லாம் அறிவுணர்ந்து சிவிக்கும் [illegible] எப்பிரல்மீ தஞ்சைமாநகரம் திவாகர முத்திராட்சரசாலை [illegible]க்கப்பட்டது.

முகவுரை முற்றிற்று.

உ

ஓம் மகாகணபதே நமஹா.

சிவமயம்.

தஞ்சைமாநகரத்துத் தலைமைபொருந்திய

மஹாவித்வான்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மதுரைமுத்துபாத்தியாயரவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

சீர்வளர் அகண்ட பரிபூரணச் சச்சிதாநந்தச் சிவபரம்பொருளே
ஏர்வளர் தருதன் னருளை யோர்சக்தி யெழிலுருவாய்க் குறைவிலதாய்
[illegible]ர்வளர் தருமா றியற்றிமற்றதனாற் பிறங்குமைந்தொழிற் குரியவா[illegible]
நேர்வ்ளர் பஞ்ச சத்திகள் தமையு நிகமமு மாக்கியதாங்கே.

அன்னதி[illegible]ளியா லைம்பெரும் பூத மாதிய சராசரமனைத்தும்
பின்ன [illegible]தாய்ப் பல்லாண்டகோடி பிறங்குறப்படைத்[illegible]
அன்னி[illegible] சாட்சிமாத்திரமா யலகிலாத் திருவிளையாடல்
மன்னி[illegible]தப் பொருள் அதைநாளு மறப்பிலாதிறைஞ்சி யாம்

மீதுயர் அ[illegible]லவ தாரணியத்து வேங்கை நாடதனுப்பணுகத்
தாதுறு பரிதிநியம மற்றதற்குத் தக்கணங்கன்னலோர் மூன்[illegible]
[illegible]ாதுறு சோலை புடைகொள்முத்தம்பா புரமதிற் பல்கலை க[illegible]
ஓதுறுசாலை யுபாத்தியார்க்கெல்லா முயர்தரு தலைமையா யு[illegible]வான். (௩)

நிலைதிருக்கண்ண புரத்துமான்மியமு நிராலம்ப தீ பிகையெ[illegible]
கலைமொழிதருசின் மயதீ பிகையு மிக்காசினிக் காடையாய்[illegible]
அலைதுயில் அரிபக்திச் சுதோதயமு மலகில் பன்னூல்களும்வகுத்[illegible]
தலைமையாஞ் சமயம் யாவையு முணர்ந்து தத்துவநெறியினைச் சார்ந்தோன். (௪)

தொய்தமத் தொய்தமிரண்டையு நன்கு தூக்கிஓர் சமஷ்டி பாவமதாய்ச்
செய்தவ முறைமை வழாதுதன் னிலையிற் சிதறாது சாத்தியமுற்றோன்
மெய்ந்நிலைநாராயண சாமியுபாத்தியாயரோன் பெயர்விள்ங்குறுவோன்
கைதரு முணர்வோன் கனவிடைக்கால காலனார் மொழிந்ததைக் கருதி. (௫)

பரசிவநந்தி கேச்சுரர்க்கருளப் பயின்றவர் சனற்குமா ரற்குத்
தரவவர் வியாதற் குதவவன் னோர்சூ தற்குரைத் தருளிய பவிடோத்
தரபுராணத் திரவிநேம மான்மியந்தானுள வெனவின வுற்றுத்
திரகுணராம ஜடாவல்லவரிடந் தெரிவிக்கவவர் தமிழ்நடையாய் (௬)

மொழிதரவரைந்த கொடுசிவபெருமான் முண்டகச்சரணிணைபோற்றிக்
கழிமகிழ்வோடு கண்டுமுக்கனிதேன் கைக்குமாறினியன கவியால்
பொழிபயம் புலவர் சுருதிவாய் மாந்திப் புளகமெய் போர்ப்பவின் பெய்தி
விழியிலானந்த நீர்ததும்புற வவசமடைதா வியற்றினனே. (எ)

புவியிடைப் புலவர் புராணங்க ளனேகம்புகன்றுளா ரவையெலாமல்ல
கவிசமே யலது சிவசரணிணையைக்காட்டுறு விஃது கற்றுணர்ந்தோர்க்
செவிதரீ வினைக ளிருப்பினு மனலி விடுதுரும்பெனத் தகித்தான்மா
சவிபெறவிளக்கு மிதற்கிதேயிணையாய்ச் சாற்றலாஞ் சமம்பிற விலவே. (அ)

கம்ப ராதிய முற்புலவரே புராணகாவியஞ் சொல வலோரென்ன
இப்பாரார் மொழிவ தெவன் கொலிப் புராணமியற்று முனென்றியா [illegible]
வம்புலாம் பொழில்சூழ் முத்தம்பாபுரத்து வசித்த நாராயணசாமி
அம்பெரும் புலவனுக்கிணன் புகழ்வதாரையோ வறிகிலே னம்மா

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

உ

சிவமயம்

திருஞான சம்பந்த சுவாமிகளருளிச்செய்த

தேவாரப் பதிகம்

திருப்பரிதிநியமம்-பண்-பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்.

விண்கொண்ட தூமதிசூடி நீடு விரிபுன் சடை தாழப்
பெண்கொண்ட மார்பில் வெண்ணீறு பூசிப் பேணார்பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலோடேர்கவர்ந்த கள்வர்க்கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும்பரிதிந் நியமமே (க)

அரவொலி வில்லொலி யம்பினொலி யடங்கார்புரமூன்று
நிரவவல்லார் நிமிர்புன் சடைமே னிரம்பா மதிசூடி
இரவில்புகுந்தெனெழில்கவர்ந்த விறைவர்க்கிடம் போலும்
பரவவல்லார் வினை பாழ்படுக்கும் பரிதிந்நியமமே.

வாண்முகவார் குழல்வாணெடுங்கண் வளைத்தோண் மாதஞ்ச
நீண்முகமாகிய பைங்களிற்றின் னுரி மேனிகழ்வித்து
நாண்முகங்காட்டி நலங்கவர்ந்த நாதர்க்கிடம்போலும்
பாண்முக வண்டினம் பாடியாடும் பரிதிந்நியமமே.

வெஞ்சுரஞ்சேர் விளையாடல்பேணி விரிபுன்சடை தாழத்
துஞ்சிருண் மாலையுநண்பகலுந் துணையார்பலிதேர்ந்து
அஞ்சுரும்பார்குழல் சோரவுள்ளங்கவர்ந்தார்க் கிடம்போலும்
பஞ்சுரம்பாடி வண்டியாழ் முரலும்பரிதிந் நியமமே.

நீர்மல்குபுன்சடை நின்றிலங்க நெடுவெண்மதிசூடித்
தார்புல்கு மார்பில் வெண்ணீறணிந்து தலையார் பலிதேர்வார்
ஏர்புல்குசாயலெழில் கவர்ந்த விறைவர்க் கிடம்போலும்
பார்புல்குதொல்புகழால் விளங்கும் பரிதிந்நியமமே. (ரு)

வெங்கடுங்காட்டகத்தாடல் பேணிவிரிபுன்சடைதாழத்
திங்கள்திருமுடிமேல் விளங்கத்திசையார் பலிதேர்வார்
சங்கொடுசாயலெழில் கவர்ந்த சைவர்க்கிடம்போலும்
பைங்கொடி முல்லைபடர் புறவிற் பரிதிந்நியமமே (சு)

பிறைவளர் செஞ்சடை பின்றயங்கப் பெரியமழுவேந்தி
மறையொலிபாடி வெண்ணீறு பூசி மனைகள்பலி தேர்வார்
இறைவளை சோர வெழில் கவர்ந்த விறைவர்க்கிடம் போலும்
பறையொலி சங்கொலியால் விளங்கும் பரிதிந்நியமமே (எ)

ஆசடை வானவர்தானவரோடியா ரமர்ந்தேத்த
மாசடையாத வெண்ணீறுபூசி மனைகள் பலிதேர்வார்
காசடைமேகலைசோர வுள்ளங்கவர்ந்தார்க் கிடம்போலும்
பாசடைத்தாமரை வைகுபொய்கைப் பரிதிநியமமே (அ)

நாடினர் காண்கிலர் நான்முகனுந் திருமாலயந்தேத்தக்
கூடலராடலராகி நாளுங்குழகர் பலிதேர்வார்
ஏடலர் சோரவெழில் கவர்ந்தவிறைவர்க் கிடம்போலும்
பாடலராடலராய் வணங்கும் பரிதிநியமமே (௯)

கல்வளராடையர் கையிலுண்ணுங் கழுக்களிழுக்கான
சொல்வளமாக நினைக்கவேண்டா சுடுநீறதுவாடி
நல்வளைசோர நலங்கவர்ந்த நாதர்க்கிடம்போலும்
பல்வளர் முல்லையங்கொல்லை வேலிப்பரிதிநியமமே (௰)

பையரவம் விரிகாந்தள் விம்முபரிதி நியமத்துத்
தையலொர்பாக மமர்ந்தவனைத் தமிழ்ஞான சம்பந்தன்
பொய்யிலி மாலை புனைந்த பத்தும்பாவிப் புகழ்ந்தேத்த
[illegible] வில்லைபிறப்பறுத்தல் லவலம் மடையாவே (௧௰)

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் பரிதியப்பர்-தேவியார் மங்களநாயகியம்மை
திருஞானசம்பந்த சுவாமிகளருளிச்செய்த
தேவாரம்-முற்றும்

உ

கணபதிதுணை

இப்-பரிதியப்பர் ஸ்தல புராணத்திற்கு-உரை இயற்றிய-உபாத்தியாயராகிய தி. க. கு. நாகப்பபிள்ளை அவர்கள்செய்த பரிதிவனேசர்-பதிகம்

காப்பு-நேரிசைவெண்பா

கருதியவெல்லாம் நமது கைகூடவேண்டிச்
சுருதியொரு நான்குந்துதிக்கும்—பரிதிவன
ஈசன் பதிக மியம்பற் கிபமுகப்ப்ர
காசன்பதயுகளங் காப்பு

எழுசீர்க்கழிநெடிற்சந்த ஆசிரியவிருத்தம்.

திங்களிளம்பிறை கங்கைவிளங்கிய-சேகரனேயடியார்
தங்களினம்பர வும்பதபங்கஜ தற்பர நற்பொலிவார்
சங்களவுங்கள மங்களநாயகி தன்புலமின்புறவோர்
பங்களவாக தரும்பர ஓம்ஹர—பரிதிவனேச்சுரனே

அத்திமுகத்தனோ-டாறுமுகத்தவ னத்தசுராதியர்மெய்
அத்தியொடயனரி மத்தகமாலை யணிப்பணியோடணியும்
பித்தபுராதன சுத்தநிராமய பேசருநேசமுறாஉம்
பத்தர் மனத்தி னிலைத்தமகத்துவ பரிதிவனேச்சுரனே (௨)

காலவிநாச கழற்பதகஞ்ச காத்திரி சிம்மதர
வாலமிடற்றர வைம்முகதென்முக மாகுநடேசசிவ
சூலதரப்ரிய சீலகுணோத்பவ சோதிசொரூபவனற்
பாலினதாகிய பாலவிழிப்பர பரிதிவனேச்சுரனே (௩)

நேசகைலாசல வாசமகேச நிரஞ்சனகஞ்சமலர்
வாசபிதாவரி வாசவனாதியர் வாசமலர்ப் பலதூஉய்
வீசமதேனும் விடாவருள்வையென விடைமீதேறிவரும்
பாசவிநாச பராபரஸ்ரீகர பரிதிவனேச்சுரனே (௪)

தீனஜனாத்மசிம் மாசனயோக்ய சிரேஷ்டகுணோத்தார
ஞானோபதேசமு னாளிழலன்றொரு நால்வர் பெறும்வணமாய்
மோனமதாய் மொழியாது மொழிந்தருள் முதல்வமுனீரிலெழும்
பானுபராவிய-பதயுகபங்கஜ பரிதிவனேச்சுரனே (௫)

கூர்த்தபலப்படை யார்த்தமருங்குற் குலவேடன்கூட்டிற்
சேர்த்த புருத்தியர் பார்த்ததைராட்சனை செய்யக்கைவாளாற்
பேர்த்துடலின்றசை சேர்த்ததுலாத்திற் பெய்தவனானசிவிப்
பார்த்திபனர்ச்சனை பண்ணமுனண்ணிய பரிதிவனேச்சுரனே (௬)

நோதகமாதர்கள் மீதகலாநசை தொலையாநிலையாகிப்
பேதகமாய்நிதி யாதுமிலாதுறு பிணிநனுகிப்பலநற்
போதமிலாதுழல் பூசுரநாமம் போருகநயனப்பேர்ப்
பாதகனைப்பரி பாலித்தருளிய பரிதிவனேச்சுரனே (௭)

ஆதலருக்கெப் போதமறைக்கா சளவுமளிக்காதிப்
பூதலமேற்பொன்-பொருளொடுபவமும் போதவுமீட்டவெழும்
சாதகனாகிய பாதகவணிகத் தனதத்தற்குத்திரும்
பாதபெருஞ்சிவ பதவியதுதவிய பரிதிவனேச்சுரனே (௮

வருந்திருவொன்று பொருந்திலதாகி வருந்திவருந்தியிருந்
திருந்துயர்வான பெருந்துயரான்மன மேங்கினனேனுங்கவருட்
டருந்தினமேது பரிந்தையோது தனுதிமுதற் சனனம்
பரு[illegible]ரிந்து பணிந்துபாவிய பரிதிவனேச்சுரனே (௯)

நஞ்சரவம்புனை நம்பசிலம்பொலி நாலவிருக்குமிரு
செஞ்சரணம்பிய நெஞ்சனெனக்கருள்-செய்குவ தென்றுகொலோ
குஞ்சரமுகவன் வலஞ்செயமாங்கனி கொள்கென வீந்தபரா
பஞ்சர[illegible]கிளி கொஞ்சும்வளஞ்செறி பரிதிவனேச்சுரனே (௰

மங்கள நாயகியம்மை பதிகம் காப்பு.

நேரிசை வெண்பா.

[illegible]இங்கதிர வாரணம்வா யேழ்பரித்தே ரேறிவருஞ்
செங்கதிர வன்வனத்துத் தேவியாம்—மங்களப்பேர்
[illegible]யகியின்மேற் பதிகம் நன்குரைத்தற் கைங்கரவி
[illegible]யகன் பதம்பணிவேன்—நான்.

[illegible]ழுசீர்க்கழில் நெடில் ஆசிரிய விருத்தம்.

[illegible]பொலிதிருமுகமும் புன்னகையொளியு மைவிழியும்
வா[illegible]ப மருட்டிவாதிட்டு வளரிருதனமு மெவ்வனமும்
ஆரணம்பரவு மழகியபதமு டன்பனேன் காணமுன் வருவாய்
ஏரணவியவானிரவி யாரணியவிறைவியே மங்களாம்பிகையே (௧)

நாயினுங் கடையேனாயினேன் மனத்துணனுகிடுங் குறைகளைநலஞ்சேர்
தாயினுஞ்சிறந்த தண்ணளிமிகுமுன் றனக்கலாற் றாணியி லெவர்பாற்
போயினும் புகல்வேன் போதினைவானா போக்கிப்பின் போதநல்வரங்கள்
ஈயினும் வேண்டேனிரவி யாரணிய விறைவியே மங்களாம்பிகையே (௨)

மலையினிற்பிறந்தோர் மலையனைப்புணர்ந்து மலைதொறு மலைதருமாறு
தலையனை மாறுதலையனை யீன்ற தன்மையோ நின்மனங்கரையாச்
சிலையினை நிகராய்ச் சித்தமோர் சிறிய தினையள வாகினுமுருகற்
கிலையென விருந்தா யிரவியாரணியத் திறைவியே மங்களாம்பிகையே (௩)

காவெனுங்குறியாய்க் காவெனக்குழந்தை கதறியே யழுதல் கேட்டனையப்
பாவென வனைத்துப்பால் கொடுத்தாற்றும் பண்பினைப்போலடியவனம்
மாவென வடைந்தவர மெனுமருட்பால் வழங்கிடாவாறு கூறிடுவாய்
ஏவெனும் விழியாயிரவியாரணியவிறைவியே மங்களாம்பிகையே (௪)

தொடுக்குமித் தமிழ்நாற்கவியின் வல்லவரைத் துதித்துச் சம்மதித்துப்
[பொன்னெடுத்துக்
கொடுக்குஞ் செங்கரத்தைத் தடுக்கும விவேகக் குருட்டுலோபியர்
[கடைத்தலைவாய்
அடுக்குமாறுளத்தைக் கெடுக்க யானரியேரு மெனவடைந்தால்குரவாம்
இடுக்கணைத்த விர்த்திரவியாரணியவிறைவியே மங்களாம்பிகையே (௫)

நாட்டிடைத்தருமம் நாட்டுமோர்பிர போர்நாட்டின்கைத்தடைந்தவர் விரும்பிக்
கேட்டிடும்பொருளை நீட்டிடானுகிற் கிடைக்குமோ கீர்த்தியிஃதினைப்போல்
வேட்டதைக் கொடுக்காவிடிலுனதிசைகள் மேம்படுமோ விளம்படியார்
ஈட்டியநிதியேயிரவியாரணியவிறைவியே மங்களாம்பிகையே (௬)

எடவிழ்வனச மிரண்டுந்தம் முருவத்தினை யெனவனையு மெல்லியர்நின்
சேடியராகித் திருத்தொண்டுபுரிந்து திரிந்து நின்னடியர்பா லொரு...
ஓடிவந்துற மற்றொருத்தி நின்பணிசெய்துற்றனளோ விதையு...
ஈடிலாப்புகழ்கொள் ளிரவியாரணியவிறைவியே மங்களாம்பி[கை]யே (௭)

பஞ்சணைமீதுன் பக்கலிற்படியாம் பரிதியப்பாரடைந்திருந்து
கெஞ்சியோர் வாய்முத்தளிப்பை யென்றிரந்து கேட்கும்வே...

மிஞ்சுமென்குறையை விளம்பிடிற்சினமாய் வெறுப்பரோ வி...

இஞ்சிசூழ்ந்தெழிலாரிரவியாரணியத் திறைவியே மங்களாம்[பிகையே] (௮)

தாய்க்குளவிரக்கந்தயை பொறைசம்ரட்சணை பிதாதனக்குச்ச...
வாய்க்குதலரிது வாய்க்கினும்மாதர் மையலான் மயங்கிப்பின்...
பேய்க்குணமாவர் பிசகிலையிதனாற் பிள்ளையாமென்னை யா...
தேய்க்குதல்சரியோ விரவியாரணியத்திறைவியே மங்களாம்[பிகையே] (௯)

பொன்பொருள்மணிநெற் புதல்வராமடிமை பூஷணம்வாக...
நன்பொருட்டொகை நாலிரண்டெனுமாக்கம் நன்குற வளர...
தன்பொருட்டாகத் தருமமென்னுன் குஞ்சந்ததம் வளர்ப்ப...
றென்பொருட் டுரைசெய்யிரவியாரணியவிறைவியே மங்களாம்பிகையே (௰)

மங்களாம்பிகை—பதிகம்—முற்றும்

பரிதிவனேசர்—ஆகிய—சண்முகர்
பதிகம்

காப்பு-நேரிசை-வெண்பா

விண்முகமா-யேழ்பரித்தேர்-மேல்வருவோன்பூசித்த
தண்முகைகொள் வோன்வாழ்-தலத்தில்வளர்—சண்முகன்மேல்
நற்பதிகமாலை-நவிலவன்னேன் முன்னேனுங்
கற்பகக்கணேசனருள்—காப்பு

எழுசீர்க்கழில்நெடில் ஆசிரியவிருத்தம்

சந்திரசேகரன் திருப்பாலா தானவர்காலவைவேலா
இந்திரவிசன் கேசொனுங்குழைக்காதா யெண்ண வொண்ணுதப்ரக்யாதா
மந்தாமுடன் மாமேருநேர்தோளா வந்தருள்புரிக்ருபையாளா
[illegible] பரிதிவனேசர்-தனயனே சண்முககுகனே (க)

[illegible] எதிர்த்த சூரன்மார்பகத்தைத்துளைத்தவை வேலவாவடி யார்
[illegible] பாதா குருநாதா வுயர்சிவ போதஞதிதா
[illegible] வந்தகுணாளா மகிழ்வுட ஞதரித்தெனை
[illegible]செய் பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (உ)

[illegible] யேழையை யாள்வாரிவ்வுலகத்தினிலுளரா
[illegible] கருத்தென்னசிலையா கனகமாமேரொனுமலையா
[illegible]யபினேன்வெம்பி நாளுமே துயருறல்சரியா
[illegible] பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (ங)

[illegible] பரினை நாளுந்தொலைத்துச் செல்வத்திடை நிலைத்துப்
[illegible] யெனச்செய்யும் பண்புளோனீ யலவோபார்ப்
[illegible] யவாயா பக்தர்கள்பரவிடும் நேயா
[illegible] திவனேசர் தனயனே சண்முககுகனே (ச).

[illegible] ழுமெழுமீன்கள் விரிமரைக்கரங்களின் வெவ்வே
[illegible] வாறுருவாய்வந்திருந்தமு தருந்தியன்னோர்க்கு
[illegible] ரம்பவவும் நல்கியநாயக வெனையாள்
தண் [illegible] பெருகும் பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (ரு)

தாரநேர்துதிசெய் கிரனேடருணகிரி யிவர்கிரியை செய்தஃதென்
னேதாய்வந்து நின்றனைதிதமும் நின்றனை மருமலன்னோர்கள்
நேதாய்த்துதிசெய் வோரிடமதுபோல் நெருங்கிடாதென நிகழ்த்திடுதி
தாரகாதிபனும் பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (சு)

முகமொராறுடனே முளரிநேர் விழிநான்மூன்றுமவ்விதந் திருச்செவியும்
ககமெனும் சிகிவாகனமு நிற்கிருந்தங் கசடனைக்கண்டு நான்கழறும்
சகயிலாக் குறையாந்துதி களைக்கேட்டுத் துடித்தெதிர்தோன்றிடாதென்னே
சகமெலாம்புகழும் பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (எ)

தும்பியானனனென் றம்பிவாவென்னத் துதிக்கையா லெடுத்தாத்தணைக்கும்
நம்பியேயுளம் வெதும்பியேயுனது நற்பதஙளினமே துணையாய்
நம்பியான் றுதிக்கவும் பிஞல்நிற்றல்ஞாயமா நேயமாமாமா
சம்பிரமகுணப் பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (௮)

ஆண்டவனீயானடிய னுமுனக்கேயைய விஃதையமாஞ்சொல்லோ
வேண்டவிவ்வாறுயிருக்கநீயெனைக்கைவிடும்படி யேய்க்குதல் சரியோ
காண்டகுமணியே கவின்மிகுந்துயர் மங்களாம்பிகை யம்மைகண்மணியே
தாண்டவமாடும் பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (௯)

உடையவா போற்றி மொப்பிலாய் போற்றி யுண்மையாமடியவர்க்குதவும்
கொடையனே போற்றி குமரனே போற்றி குழகனேபோற்றி கூர்ங்கதிர்வேற்
படையனே போற்றி பச்சைமாமயூரப்பாகனே போற்றி பன்னாளுந்
தடையிலாதருள்செய் பரிதிவனேசர் தனயனே சண்முககுகனே (௰)

பரிதிவனேசராலய சண்முகர் பதிகம் முற்றும்.

உ

திருப்பரிதிச்சுரப்புராணம்

துதிச் சருக்கம்

விநாயகக்கடவுள் துதி,

உலகெலா மகிழ்ந்து போற்ற வொளிர்கின்ற பரிதி தேவத்
திலகமாஞ் சிவனைப்பூசை செய்தல மகிமைகூறச்
சொலவொணுப் பிரணவத்தின் சுருவமா யன்பர்கண்மு
னிலகுமைங் கரவேழத்தி னிணையடி தலைமேற் கொள்வாம். (க)

இதன்-பொருள் — கடல்சூழ்ந்த உலகமுழுதும் அன்புற்றுத் துதிக்க வானத்தி[illegible]ண் பிரகாசியாநின்ற சூரியபகவான் தேவரனைவர்க்குந் திலகம் போற்சி[illegible]மேம்பாட்டை வகித்த சிவபிரானை யருச்சித்த-இப்-பரிதித்தல மான்[illegible]சொல்லுதற்குச் சொல்லவொண்ணு ரகசியப்பொருளாகிய ஓங்[illegible]பர்முன் ரேன்றி அருள்புரியும் ஐங்கரங்களையுடைய ஆனை முகவி[illegible]பாத பதுமங்களைச் சிரசின்மேற்சூடுவாம்

சண்முகக்கடவுள் துதி.

திரு[illegible]லகமெலாஞ் சூழ்வரவே திறமைபூணுந்
திருப[illegible]மை செந்தமிழா லுரைத்திடவே செல்வ நல்குந்
திருப்ப[illegible]மமுதம்வரக்கடைந்தோன் மருகனெனும் செவ்வேளென்றன்
திருப்பருதி மிரமாற்றிக் கருணையுட னுளத்திருந்தே தெளிவித்தானே (உ)

இ-ள்-அழகியசூரியன் பூசித்து இவ்வுலக முற்றுஞ் சுற்றிவரத்திறமுற் றவரம்பெற்றதிருப் பரிதித்தல மான்மியத்தைச் செவ்வியதமிழாற் செப்புதற்கு அட்டயிசுவரியங்களையும் அருள்புரியும் இலக்குமியும் பூரணச்சந்திரனும் தேவாமு தமும் எழும்பாற்கடலை மதித்தபரந்தாமன் மருமகனுகிய முருகக்கடவுள் மாற்று தற்கரிய வெனது மனதிருளைப் போக்கிக் கிருபையோடும் அம்மனத்தின் கண்டங்கித் தெளிவைக் கொடுத்தருளினன்......என்றவாறு

இதுவுமது

கருதுமனத் தவருண் மழைபற்றுறு கனிவொடு நெக்குருகிச்
சரிதைமுதற் கொடுதொழுமடியார் பவசலதி மரக்கலமே
சுருதிமுதற் பொருள்தவ நிலையுந் தமர்துரிய நிறைப்பொருளே
பரிதிவனத் துறைசரவண வற்புதபரம னடித்துணையே (ங)

வேதத்தினோதும் ஆதிப்பொருளீதென ஓர்ந்து அன்புகூர்ந்து மனந் தேர்ந்து தவத்தில்நிலைத்த வுத்தமர்சுத்த நிலையில் நிறைவாகிநின்ற நின்மலப் பொருளே- தியானிக்கு மனத்தையுடையவர் கருணையென்னும் மழையாற் களித்துக்கனிவுமிகுந்து நெக்குருகிப் புகலும் சரிதாதிகளை வினவி வணங்கிவழி படும்அடியார்களது பாவக்கடலைக் கடத்தற்குக் கிடைத்தமரக்கலமே-ஆம்-பரிதி வனத்துத் தங்கிய சரவணபவனது அற்புதமாகிய அடித்துணைகள் என்ற வாறு.

வேறு.

திருமால் துதி

கந்தஞ்சமழும் பங்கயப்பெண் கலந்தவுரமு மசுரர்முடி
சிந்தப் பதைக்குஞ் சினவாழி திறஞ்சேர் சங்கங் கரத்தேந்தி
கந்தப்பெருமாள் கட்டழகைக்கண்டே கண்கள்களிகூர
வந்தப் பெருமான் றனைப்பரிதி வனத்திற் றுதித்து வணங்கிடுவாம் (௪)

வாசம் வீசும் வனசத்திற்றங்கிய மாதென்னுஞ்சீதேவி மருவியுறையும் மார்பமும் அரக்கர்முடியைத் தரிக்கத்துடிக்கும் கோபங்கொண்ட கூராழியும் திங்களை நிகர்த்தசங்கமும் கரத்தேந்தி மருகனென்னு முருகன துகட்டழகைக் கண்டுகளிக்கப் பரிதிவனத்தில் வந்தமர்ந்தபெருமாளைத் போற்றிப்பணிவாம் (எ-று).

வேறு இதுவுமது

மருகனு ரசுரரைவென் றிப்பரிதி வனத்தமர்ந்த வளமைகாண்பான்
பருகுநா ரந்துளிப்ப தெனக்கருணை துளிதுளிப்பப் பசுமேகமே
லுருகினுர்க் கருள்புரியுஞ்செந்திருவா மின்னலுடனுலவாச் செ[illegible]
முருகனு றெதிர்விளங்கு முகுந்தனு ரடிக்கமல முடிமேற்கொள்[illegible]

தனது மருகன் அரக்கரைவென்று ஜெயங்கொண்டு ப[illegible] வந்தமர்ந்த வளப்பத்தைக்காணவேண்டித்தானுண்டநீரை மேகத்து[illegible] போல் கருணையென்னுந் துளிகளைத்தூற்றி அப்பசியமேகத்தை யொப்பமனமுருகும் அடியார்க்கருள்புரிய இலக்குமியென்னும் மின்னலோடும் கெடாதசெல்வத் தையுடைய முருகக்கடவுட் கெதிராக விளங்காநிற்கும் முகுந்தன பாதகமலங் களைச் சிரமேற்கொள்வாம்......எ-று

வேறு

பரிதிவனேஸ்வரர் துதி.

தத்துவத்தின் பொருண்முடிவாய்த் துரியாதீதத்
தற்பரமாய் நிட்களமாய்ச் சார்ந்து மேலாய்ச்
சுத்தபரிபூரணமாய்ச்சத்தாய்ச்சித்தாய்ச்
சுயஞ்சுடராய் நிரஞ்சனமாய்ச் சுயம்பதாகி
முத்தொழிலுநடத்தியுமோர் படிவமாகி
முழுமுதலா யருட்கடலாய் முன்னிற்றேன்று
நித்தியநம்பரிதிவன நிமலன்பொற்று
ணிச்சலுமே பணிந்துருகி நினைதல் செய்வாம். [௬]

தத்துவமென்னும் உண்மைப்பொருளின் அந்தமாய்த்துரியாதீதங்கடந்த தற்பரமாய்ப்பரிசுத்தமாய் மேலாய்ச்சார்ந்த நின்மலபரிபூரணமாய்ச் சத்தாய்ச்சித்தாய்ச்சயஞ்சுடராய் எங்குநிறைந்ததாய்த்தானே தோன்றியதாய் ஆக்கல்அளித்தல்துடைத்தலென்னும் முத்தொழிற்குமூர்த்தியாய் அக்கிரியைகளை நடாத்தியும்ஏகவுருவாய்முழுமுதலாய்க்கருணைக் கடலாய்நித்தனாய்அடியார்கள்முன்றோன்றும் பரிதிவனேசனது பொற்பாதங்களை அநுதினமும்வணங்கி மனமுருகி நினைவாம். [சு]

மங்களநாயகியம்மன் துதி.

தங்கத்தி னொளிபோலுந் தோயத்துள்ள
தண்மையைப்போலுங் கலைகள் சாரநின்ற
திங்களிடத் தமுதெனவுந் தீயில் வெம்மை
வானினிற்காற் றேனினிமை கவியிலின்பம்
பங்கயத்துண் மணம்போலுங் கலந்தெப்போதும்
பரிதிவன நாதரிடப் பாகங்கொண்ட
மங்களநா யகியுமையாள் பதுமப்பொற்றாண்
மறவாதா ரெந்நாளும் பிறவா தாரே. (எ)

இ-ள். தங்கத்தின்பிரகாசம்போலும் நீரிலுள்ள குளிர்ச்சியைப்போலும் சோடசகலையின் நிறைந்தசந்திரனிடத்துள்ளஅமுதைப்போலும் நெருப்பிலுள்ள வெப்பத்[illegible]போலும் ஆகாயத்துள்ள காற்றைப்போலும் தேனிலுள்ளமதுரம் போலு[illegible]யிலுள்ளஇன்பம்போலும் மலரிலுள்ளமணம்போலும் பரிதிவனேசரி[illegible]றக்கலந்து இடப்பாகங்கைக்கொண்ட மங்களநாயகியம்மையின் பொ[illegible] பாதங்களை மறவாதாரென்றும் பிறவாதார்—என்றவாறு (எ)

சபாநாயகர் துதி.

செம்பவளச் சடைக்காடு கொன்றை தும்பை கங்கைமதி சேர்ந்து விண்ணிற்
பம்பியெங்குஞ் சுழன்றாட வரவாட வைம்பூதப் பகுதியாட
உம்பர்சய சயவென்று கூத்தாட மார்க்கண்ட ருருகித்தேகங்
கம்பிதமாய்க் களித்தாடப் பரிதிவனத் தாடியசீர்க் கழல்கள் போற்றி. (அ)

சிவந்தபவளம்போன்ற சடாடவியிற்கொன்றை கங்கை ;திங்கள்தும்பை பொருந்தி ஆகாயமெங்கும் நின்றுநிறைந்து சுழன்றாடப் பிரிவாகிய பிருதிவிமுதல்ஐம்பூதங்களும்பெயர்ந்தாடத்தேவர்கள் ஜெயஜெயவென்றுகூத்தாடமார்க்கண்டேயர் மனமுருகித் தேககம்பிதமாய் மகிழ்ந்தாடப் பரிதிவனத்தில் ஆடாநின்ற சிவபிரான் சிறந்தபாதங்கள்போற்றி (அ)

தட்சிணாமூர்த்தி துதி.

வேதங்க ளாகமங்கள் சாத்திரங்க ளுபநிடத்தின் விரிவதான
பேதங்கண் முழுதுணர்ந்த முதுமூப்பு நால்வரின்பம் பெறவு வாவாய்ச்
சீதமதி யெனவாலின் கீழிருந்து கைகாட்டுந் தேவதேவன்
பாதமல ரிணையதனைப் பரிதிவனத் தினிற்கண்டே பணிதல் செய்வாம். (கூ)

வேதாகமங்களுடன் சாத்திரோபநிடதத்தின் விரிவானபேதா பேதங்கள் அனைத்து முணர்ந்துமேன்மையுற்ற ஜனகாதியர்நால்வர் ஆனந்தம்பெறப்பூரணை யிலுதித்தகுளிர்ச்சந்திரன்போல வடவாலநீழலின் கீழிருந்துகைகாட்டிக்குறித்த பொருளைத்தேவ தேவனாகிய தெட்சணாமூர்த்தியின் இருபாதமலரைப்பரிதி வனத்துப்பார்த்துப்பணிவாம் (கூ)

நாமகள் துதி.

வெண்ணிலவு தருங்கமல மலரிலுறை நாமகளிவ் வெளிய நாயே
னுண்ணிறைந்து பரிதீசர் தலமகிமை செந்தமிழா லுரைக்கநாளுங்
கண்ணருள் செய்தாள்கின் றுளுண்மையிது வாதலினுற் காநீயென்று
பண்ணமைந்த பாமகன்மேற் பாவிசைக்குஞ் செயலுளதோ பகருங்காலே. (ய]

வெள்ளொளியைவீசும் தாமரையிலுறையும் நாமகள் அற்பவெளியனு யினேன் மனத்துளிருந்துபரிதீசர்தலமான்மியத்தைச்செவ்வியதமிழாற்சொல்ல எப்பொழுதுந்தனதுகிருபாநோக்கம் செய்தாளுகின்றனள் - இஃதுண்மையாத லால் இன்னமும் நீயென்னைக்காக்க வேணுமென்று அழகமைந்த அப்பாமகள் மேற்பாவினங்களைச்சொல்லித்துதிக்கவேண்டிய செயலுமுண்டோ. [ய]

வேறு காளியம்மன் துதி

குழுமிய வசுரர்சேனை குலைந்திட மகிடன் சாய்ந்து
விழவடி வாள்கைக்கொண்டு விமலமாம் பரிதிநேமம்
பழுதறக் காத்துப்பாதம் பரவிய பேர்கட் கெல்லா
மழகிய வளமை நல்கு மம்மைதா ளகத்துள் வைப்பாம். [யக]

போர்க்கெழுந்துகூடியஅரக்கர்படைகள் புறங்கொடுத்தோடமகிடாசுரன் சாய்ந்து விழச்சாடிய வடிவாளை மலர்க்கரத்தேந்திப் பரிசுத்த பரிதித்தலத்தைப் பழுதறுமற்பரிபாலித்துத்தனதுபாதம்பணிவோர்க்கெல்லாம் அழகியவளத்தைக் கொடுக்கும் காளியம்மன்பாதங்களைக் கருத்துள்வைப்பாம் [யக]

வேறு நந்திதேவர் துதி.

இந்திரன் வானவர் முனிவர்கணநாத ரெண்ணிறந்த சித்தர் யாழ்கொள்
கந்திருவ ரியக்கர்வித்தி யாதரர்கள் பரிதிவனக் கடவுள் பாதம்
வந்தனை செய்திட வந்தோர் முனம்பணியும் வேத்திரத்தை வலக்கைகொள்ளும்
நந்திகேசுரப்பெருமா னிணையடியை முடிக்கணியாய் நாளுங்கொள்வாம் (யஉ)

தேவேந்திரன் தேவர் முனிவர்கணநாதர் அளவற்றசித்தர் யாழின்வல்ல கந்தருவர் இயக்கர் வித்தியாதரர் முதலியபலதேவர் பரிதிவனேசன் பாதவந்தனை செய்ய வரும்போதெல்லாம் அவ்வவர் முந்திப்பணியும் பிரம்பை வலக்கையி லேந்தும் நந்திப்பெருமான் நளினபதங்களைத் தலைக்கணியாகச் சந்ததமுங்கொள் வாம்......எ-று (யஉ)

திருஞான சம்பந்தர் துதி.

சூழ்வினையாம் வெப்பமற வஞ்ஞான விருளோடத் தொண்டரான
தாழ்வில்லாச் சகோரங்கள் சுதைபருந்தவரு ளுடையதாயினல்ல
யாழ்மொழிச் சங்கரியூட்டமமு தருவாய்க் கவிநிலவை அரன்மேல் வீசக்
காழியெனு மாழிவரு முழுமதியாங் கவுணியர்தான் கருத்துள் வைப்பாம் (௰௩)

சூழ்வினையென்னும் வெப்பம்நீங்க அஞ்ஞானமென்னு மிருளோட அடியா ரென்னுஞ் சகோரங்கள் குறைவில்லாவமுதமருந்தயாழ்போன்றவசனமுடைய கிருபை நிறைந்த தாயாகியபார்வதி கிண்ணத்தில் நிறைத்தூட்டிய பாலினுரு வமாய்க் கவிகளென்னும்நிலவைத் தந்தையாகிய தற்பரன்மீதுவீசச்சீகாழியெ ன்னும் பதியாகிய சமுத்திரத்திற் பிறந்தெழுந்த பூரணச் சந்திரனாகிய திரு ஞான சம்பந்தரைக் கருத்துள் வைப்பாம் (௰௩)

வாகீசர் துதி.

திலகவதி யார்வேண்டச் சிவனருளாற் செந்தமிழைச் செழிக்கப் பாடிக்
கலகமிகுஞ் சமண்பகையுங் கற்புணையாற் கருங்கடலுங் கடந்து தொண்டர்
நலமுறவே யின்பமழை பொழிமுகிலாய்த் தோன்றி யெந்நாளு மோங்கி
யிலகியிடும் வாகீசர் பொற்கமலச் சரணிணைக ளிறைஞ்சி வாழ்வாம் (௰௪)

திலகவதியென்னுந் நமங்கை வேண்டுகோளால் சிவபிரானருளால் செந் தமிழ்ப்பாக்களை எங்குஞ் செழிப்புறப் பாடிக்கலகமேவிளைக்கும் சமணர்கள் பகையும் தன்னைக் கட்டிப்போட்ட கல்லேதெப்பமாய்க் கருங்கடலையுந் தா ண்டி அடியார்கள் நன்மைபெற ஆனந்தமென்னு மழைபொழியும் மேகம்போற் றோன்றி எந்நாளுஞ் சீர்த்தியோங்கி இலகும் திருநாவுக்கரையர் பொன்போ ன்றபதங்களை வணங்கி வாழ்வாம் .. என்றவாறு (௰௪)

திருநாவலூரர் துதி.

சந்திரனைச் சடைக்கணிந்தோ ருடலகற்றிடப்பாவை தன்பாலேகிச்
சந்துசொல வும்முதலை யுண்டசிறு வன்வரவுஞ் சார்ந்து கேட்போர்
பந்தமற வும்பாடிப் பரசிவத்தின் றோழனெனப் பரிசுபெற்ற
சுந்தரனு ரடிபரவுந் தொண்டர்திரு வடிக்கமலந் துணையாக் கொள்வாம் (௰௫)

சந்திரனைச் சடாபாரத்தணிந்த பரமேசன்பிணக்ககற்றப்பரவை நாச்சியாரி டம்போய்த் தூதுசொல்லவும் முதலை விழுங்கிய சிறுவன்வரவும் விருப்புடன் வினவுவோர் பாசபந்தமகலவும் பதிகங்கள்பாடிச் சிவபிரான் றோழனெனப் பரி சுபெற்று வீற்றிருந்த சுந்தரர்பாதம் பரவுந்தொண்டர்களது பாதபதுமந்துணை யாகக் கொள்ளுவாம்......எ-று (௰௫)

திருவாதவூரர் துதி.

குருவாகிச் சிவபெருமா னருளியவின்பந்தினைத்துக் கோடிபுத்தர்
பெருவாது வென்றவர்தம் பேடிதனைப் பேசவைத்துப்பிறங்கலோடு
தருவாதி யுருகியிடத் திருவாசகத்தமிழுந் தந்ததெய்வத்
திருவாத வூரடிக ளடிக்கமல முடிக்கணியாய்ச் சேர்த்து வாழ்வாம் (௰௬)

குருமூர்த்தமாய்ச் சிவபிரான் குருந்தமரத்தினடியினின்றருளிய போதனுனுபவவின்பத்தின் முழுகி அளவற்ற புத்தரை வாதில்வென்று அவர்களில் ஓர் ஊமைப்பெண்ணைப் பேசவைத்து மலைகளோடு மரங்களுமுருகத் திருவாசகமென்னுந் தமிழ்நூலோதிய தெய்வத் தன்மைபொருந்திய திருவாதவூரடிகள் அடிக்கமலம் முடிக்கணியாய்ச் சேர்த்துவாம்.....என்றவாறு (௰௬)

சண்டியடிகள் துதி திருத்தொண்டர் வணக்கம்.

எந்தைபத மடைந்திடத்தன் றந்தைபத மெறிந்தசண்டி யீசர்பொற்றாள்
வந்தனைசெய் தேமுன்னர் வழிபட்ட தொண்டர்பதம் வணங்கியிந்நாட்
பந்தமறுத் திடுமன்பர் பதம்பாவி யினிப்பிறந்து பாமர்தாளில்
சிந்தைவைப்போர் தனைக்கருதிப் பரிதிவன மகிமைதனைச் செப்பலுற்றேன்.

எனது தந்தை பாதத்தைச் சாரத் தனது தந்தை பாதத்தை யறவெட்டிய சண்டேசரது பாதத்தைப் பணிந்து அதற்கு முந்தி வழிபட்ட அடியார் பாதம் வணங்கி இந்நாளிலுள்ள பந்தமறுத்த பத்தர் பாதம் பாவி இனிப் பிறந்து இறைவர் பாதத்துச் சிந்தைவைப்போரையுஞ் சிந்தித்துப் பரிதிவன மான்மியத்தைப் பகரலுற்றேன்.. எ-று. (௰௭)

அவையடக்கம்.

தொண்டர்க ளாய்ந்தெடுத் தணியுறு வாச வலரியினும் தூயதென்றே
திண்டிறல்சேர் சாக்கியனா ரெறிந்த சிலையுவந்தேற்குந் தேவதேவன்
அண்டருல கத்தமுதின் சுவைதிரண்ட தெனமுன்னோ ரன்பாய்ச்சாத்துந்
தண்டமிழினுடனாயேன் புன்சொலுங்கொண் டருள்வனெனச்சாற்றினேனே.

தொண்டர்கள் தோஷமில்லாததாய்ப் பரிசோதித் தெடுத்தருளியும் நறிய வாசமலரினும் பரிசுத்தமென்று வன்மை மிகுந்த சாக்கிய நாயனாரெறிந்த கற்களை அன்புடனேற்குந் தேவாதிதேவன் தேவருலகத் தமுதத்தைத் திரட்டியதைப்போன்று மதுரமாக முன்னோ ரன்புடன் சொல்லிய தமிழ்ப் பாக்களுடன் நாயினேனது அற்பச்சொல்லையும் அங்கீகரிப்பானெனச் சாற்றினேன் என்றவாறு. (௰௮)

இதுவுமது.

தூயசுரநதியினை யோர்தேரை யெச்சிலென்னுமற் றோய்வார்போல
நாயினிலுங் கடையனுரை யென்னுமலகத்திமிர மடுங்கியோடப்
பாயுமொளிப் பரிதீசர் சரிதமதைப் பகர்கின்ற பனுவலென்றே
நேயமுறு வாரன்ப ரெனத்துணிந்து நாவசைத்து நிகழ்த்தலுற்றேன்.

பரிசுத்தமாகிய கங்காநதியிற் றவளைகளி னெச்சில்கள் சார்ந்துளதென் றெண்ணுமன் மூழ்குவார்போல் நாயினுங் கடையேன் வாக்கியமென் றெண்ணுமல் அகவிருணடுங்கியோடக் கிரணங்கள் பாயும் பரிதீசன் சரித்திரத்தைச் சொல்லுகின்ற பாடலென்று அன்பர் ஆசைகொள்வாரெனத் துணிந்து நாவசைத்து நவிலலுற்றேன்...எ-று. (௰௯)

இதுவுமது.

சுவையிரத விழைவுடையோர் கழைக்கோணல் பாரார்போற் றுன்னுற்ற
நவையகற்றி வீடருளும் பரிநிசர் மகிமைதனி லுட்டமுற்ற
கவிவலவர் பாவில்வருங் குற்றமொரு பொருளாகக் கருதாரென்று
புவியினிலிச் சிறியவனா வசைக்கின்றேன் குருவருளைப் போற்றிசெய்தே.

மதுரமாகிய இரசத்தில் விருப்புடையோர் கரும்பினுள கோணலைக் கருதிப்பாரார் அதுபோல் சஞ்சித பிராரத்துவத்தாலடைந்த குற்றத்தை நீக்கி முத்திவீடருளும் பரிநிசர் மகிமையிற் குறிப்பை நாட்டிய கவியில் வல்லவர் என் பாடல்களில்வருங் குற்றத்தையோர் பொருளாயெண்ணாரென்று குருவருளைப் போற்றிச் சிறுவனாகிய நான் பூவுலகில் நாவசைக்கின்றேன் எ-று (உ௰)

வேறு வாழ்த்து.

சந்ததம் வேதம் வேள்வி தழைத்திட சுரந்துமாரி
சிந்திட உலகமெல்லாஞ் செழித்திட மறைகொண்டாடு
முந்துமுட் சமயமாறு முறைவழி விளங்க மன்னர்
கந்தலில் செங்கோல் வாழ்க நல்லற நாளும்வாழ்க.

அநுதினம் வேதமும் வேதத்தால் நடாத்தப்படும் வேள்வியும் தழைக்க மழைசுரந்து கொழிக்க மாநிலமுழுதுஞ் செழிக்க வேதங்கள் கொண்டாடும் முதன்மையாகிய உட்சமயம் ஆறும் ஆறுக மாறாத முறைவழியாய் விளங்க கேடுதலில்லாத மன்னர் செங்கோல் வாழ்க தருமங்கள் நிறைந்து சதாகாலம் வாழ்க எ-று. (உக)

நூற்பயன்.

சங்கையணி பரிநிசர் மகிமைதன்னைக்
    கருத்துருகக் கேட்போர்கள் மகப்பேறுண்டாய்ப்
பங்கயமா தருள்பெருகுஞ் செல்வமெல்லாம்
    படைத்திடுவர் பகைவெல்வர் பிணிசேராத
அங்கமொடு வாணாளும் வளரவாழ்வ
    ரமரரென வானந்த போகமெய்தி
மங்களாயகி யருளாற் சீவன்முத்தி
    மருவுபரி பூரணமாய் வயங்குவாரே.

சங்காதரனாகிய பரிநிசர் மான்மியத்தை மனமுருகிக்கேட்போர் புத்திரப் பேறுண்டாய் இலக்குமி அருளால் எல்லாச் சம்பத்தும் படைத்திடுவர் பகைவரை வெல்வர் நோயணுகாத் தேகத்துடன் ஆயுளும்வளர வாழ்வர் தேவரைப் போலானந்தபோக மனுபவித்து மங்களாயகி கருணையால் ஜீவன்முத்தாய்ப் பரிபூரணதசையை யடைவர் . எ-று. (உஉ)

அதிச்சருக்கம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் 1க்குக் கூடிய செய்யுள் உஉ.

பாயிரம் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருக்கைலாயச்சருக்கம்.

செழுமணிச் சுடிகையுச்சிச் சேடனார் சென்னியேதொட்
டெழுமுடி யண்டகோளத் தெல்லையுங் கடந்ததாகி
யொழுகொளி விரிக்குமாற்று லொண்சுட ரெரிக்கும்வெள்ளி
முழுமுதற் கடவுள்வாழு முதுபதி கைலைக்குன்றம்.

செழிய ரத்தினத்தை மகுடமாயணிந்த உச்சியையுடைய ஆதிசேடனது தலையளவாய்க் கீழ்ப்போய் எட்டித்தொட்டு அண்டகோளத்தளவையும் கடந்தூருவி யெழுந்த சிகரங்கொண்டதாய்ப் பிரகாசத்தை வீசுந் தன்மையால் ஒள்ளிய கிரணங்களை வீசும் வெள்ளியென்னுஞ் சுக்கிரனையொத்தது முழுமுதற் கடவுள் வாழாநின்ற பழம்பதியாகிய கைலைமலை...எ-று. (க)

தெண்டிரை யவனியுற்றோர் திருவடிக் குள்ளாய்த் தோன்றக்
கொண்டமால் நின்றதேய்ப்பக் குறையற நிமிர்ந்து மேலாய்
அண்டர்மா முனிவர்க்கெல்லா மணுகிட வரிதாய் நம்புந்
தொண்டர்க ளாட்சியாகத் துன்னுவ கைலை மாதோ.

தெளிந்த அலைகளையுடைய கடல்சூழும் புவியிலுள்ளோர் அனைவரும் தனது அழகிய அடிக்குட்டோன்ற விசுவரூபங்கொண்டு நின்ற திருமாலை யொப்பக்குறைவறவளர்ந்து மேன்மையுற்றதாய்த் தேவர்முனிவர்க்குஞ்செல்ல வரியதாய் நம்பிய தொண்டர்கட்காளுகையாய் நிலைபெற்றுநின்றது அக்கைலை மலை...எ-று. (உ)

தூயவெண் சுடரினாலுந் தொண்டர்மேற் கொள்ளச் செய்யு
நேயம தாலுங்கங்கை நிலவிய தாலும் பச்சைச்
சாயலார் மயில்சேர்கின்ற தகுதியா லானே யன்ன
மீயுயர் கயிலைவெற்பு விண்டொட விளங்கு மம்மா.

பரிசுத்தமாகிய வெண்கதிர் வீசுவதாலும் அடியாரை மேற்கொள்ளச் செய்யும் ஆசையாலும் கங்கைநிலை பெற்றிருப்பதாலும் மாகச்சாயலையுடைய மயூரஞ் சேர்ந்திருப்பதாலும் உரிமையாலும் சிவபெருமானையொத்த மிகவுமுயர்ந்த கைலைமலை ஆகாயமளாவ விளங்கும்...எ-று. (ங)

களங்கமிற் றூய்மை யானுங் கவிழ்த்திடு கண்ணீரானுந்
துளங்குத லின்மை யானுஞ் சோதியுட் டங்கலானும்
விளங்கிமே லோங்கலானும் வியப்புறு தன்மையானு
மளந்திட வரியதானு மன்பராங் கைலைக் குன்றம்.

களங்கமில்லாப் பரிசுத்தத்தாலும்சொரியுங் கண்ணீராலும் அசைவின்மையாலும் சிவபிரான் றனதாட்டங்களாலும் மேலோங்கி விளங்கலாலும் ஆச்சரியப்படும் பரிசாலும் அளந்தறியக்கூடாததாலும் அடியாரையொக்கும் அக்கைலைக்குன்றம்...எ-று. (௪)

உண்மையா மன்பருள்ள முருகிவீழ்ந் திரங்கல் கண்டு
திண்மையா மெனினுமீசர் சீர்பெறக் கரைவோ மென்று
வெண்மையாங் கிரணம்வீசும் வெள்ளியங் கிரியு முற்றுந்
தண்மையா மருவிவாரச் சந்ததம் விளங்கு மாதோ.

உண்மையாகிய அடியர் மனமுருகி வீழ்ந்தழக்கண்டு வன்மை தன்மையுடையேம் யாமெனினும் ஈசன் அருள்பெறக் கரைவோமென்று வெள்ளிய கிரணம்வீசும் வெள்ளியக்கிரியென்னுங் கைலைமலைமுழுதும் குளிர்ந்த அருவியொழுகச் சந்ததம் விளங்கும்...எ-று (௫)

பூரணக் கலைகொ டிங்கள் பொருந்திட வனந்தகோடி
சிறுற வடுக்கிச்செய்த தென்னலாந் திகழ்ந்து மேன்மே
லேறுறுங் கயிலையுச்சி யினிற்பல விரவி யொன்றாய்ச்
சேருவ தென்னலாகுஞ் செழுமணி மாடக் கூடம்.

சோடச கலைகணிறைந்த வனந்தகோடி சந்திரர்களைப் பொருந்தவடுக்கிச் சிறக்க வலங்கரித்துச்செய்ததென்று சொல்லலாம் மென்மேலுமுயர்ந்து அழகினாற் பிரகாசிக்குங் கயிலையை அதன் முடியில் அநேக சூரியர்கள் ஒன்றாய்ச் சேர்ந்ததென்று சொல்லலாம் செழிய ரத்தினங்கள் பதித்த மாடகூடங்கள் என்றவாறு. (௬)

தேவர்கண் முனிவர் சித்தர் திண்ணிய வியக்கர் விஞ்சை
மேவிய ருரகர் யாழில் மிக்ககந் திருவ ரும்பர்
காவலரோ டியாருங் கரைந் தின்பக் கண்ணீ ருற்று
மோவிய மென்ன நிற்கு மொளிமணிக் கயிலைச் சாரல்.

தேவர் முனிவர் சித்தர் வலியயக்ஷர் வித்தியாதரர் நாகர் யாழின்வல்ல கந்தருவர் இவர்க்குமேம்பட்ட பல தேவர்கள் யாவரும் மனங்கரைந்து ஆனந்தக் கண்ணீருற்றி அசைவற்ற பிரதிமைபோல நிற்பார் ஒள்ளிய மணிகள் பிரகாசிக்கும் அக்கைலைமலைச் சாரலில்...எ-று. (௭)

வேதனும் வேத நான்கும் விளம்புதற் கரியதாகுஞ்
சோதியின் கைலைதன்னிற் றுலங்கிய வளங்க ளெல்லா
மேதினி தனிலோர் மன்னன் மேன்மையைக் கூறலொவ்வாப்
பேதையா மடியேன் வாயாற் பிதற்றிடி லமையுங் கொல்லோ.

பிரமனும் வேதம் நான்குஞ் சொல்லித் துதித்தற் கரியதாகும் சிவபெருமான் கைலையில் விளங்கும் வளங்களனைத்தையும் இவ்வுலகின்கணுள் ஓர் அரசன் சிறப்பையெடுத்தோதுதற்கே வல்லமையற்ற பேதையாகிய அடியேன் வாயாற் பிதற்றில் முடியுந் தன்மையோ ..எ-று (௮)

நதிதல மூர்த்தி சேவை நலமுறுஞ் சரிதையோர்க்கும்
புதியநன் மலராற்பூசை புரிந்திடுங் கிரியையோர்க்குங்
கதியென நம்புமியோகுக் கருத்தர்க்கு ஞானிகட்கும்
பதமொரு நான்கு நல்கும் பதியதாங் கைலைக் குன்றம்.

மூர்த்திதலம் தீர்த்தமென்னும் மூன்றுஞ் சேவித்து நலமுற்ற சரிதையர்க்கும் ஆய்ந்தெடுத்த புதுமலரால் அர்ச்சனைசெய்யும் கிரியையர்க்கும் கதியென நம்புங் கருத்தையுடைய யோகியர்க்கும் ஞானிகட்கும் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென்னும் நான்குபதமும் நல்கும் பதியாம் அக்கைலைமலை என்றவாறு. (கூ)

அங்கண்மா விசும்பிற் கோளோ டரும்பிய வுடுக்களென்னத்
துங்கமா மணிக ளெங்குந் துலங்கிநல் லழகு காட்டத்
தங்கமா மணல்கள் வாரத் தமனிய வரைநாண் பூண
வெங்கணும் பிரபை வீசு மெழிற்கயி லாயக் குன்றம்

அழகிய இடமகன்ற பெருத்த விசும்பிற் கிரகங்களும் நட்சத்திரங்களும் ஆம் என்ன எவ்விடத்தும் பரிசுத்தமாகிய பருத்தமணிகள் பிரகாசித்து அழகுகாட்டித் தங்க மணற்களைக் கொழிக்கும் பொன்மலையாகிய மகமேரு வெட்கங்கொள்ள எவ்விடத்தும் ஒளியை வீசாநின்றது கைலைமலை ..எ-று.(ய)

பக்தியா யிறைஞ்சுவோரும் பரிவொடு பூசிப்போருஞ்
சித்திகள் வேண்டிநின்று சிறந்திடு தவஞ்செய்வோருஞ்
சுத்தியா யோதுசெய்யுந் தூயரு ஞானதீர
முத்தரு மொய்க்குஞ்சாரல் முருகுவார் கயிலைக்குன்றம்

அன்புடன் வணங்குவோரும் ஆசையுடன் அருச்சிப்போரும் காமியார்த்த சித்திகள் பெறத் துதித்துநின்று தவஞ்செய்வோரும் பரிசுத்த மனத்தோடு யோகஞ்செய்யுமேலோரும் தீரமிகும் ஞானராகிய முத்தரும் மொய்த்துச் சாரும் சாரலையுடையது அழகுடன் நீண்ட அக்கைலைமலை...எ-று. (யக)

காவுறை தருக்களெல்லாங் கற்பக மணிக ளெல்லாந்
தேவரு மிரக்க நல்குந் தியாகமா மணிகள் மேயுங்
கோவெலாங் காமதேனு கோலமா வாசப்பூவே
பூவெலாங் கயிலைச்சாரற் பொலிவெனப் புகல்வர் வல்லோர்.

சோலையிலுள்ள விருக்ஷங்களெல்லாம் கற்பகத்தருக்கள். மணிகளெல்லாம் தேவரும் யாசிக்கக் கோரியதைக் கொடுக்கும் சிந்தாமணிகள். மேயும் பசுக்களெல்லாக் காமதேனுக்கள். நிலங்களெல்லாம் அழகுடன் மலர்ந்து மணக்கும் புட்பங்களே அக்கைலைச்சாரலிற் பொருந்தியுளதென வல்லோர் சொல்வார் என்றவாறு. (யஉ)

அமாரு மறியவொண்ணு வமலமாஞ் சோதிதன்னை
யிமயமா மலையினின்று மெய்திய மயிலதான
உமையுட னுள்ளக்கொண்ட வூக்கத்தால் வரைகடம்மை
யமையுற நகைப்பதொக்கு மவிரொளிக் கயிலைக்குன்றம்.

தேவரும் அறியலாகாப் பரிசுத்தப் பரஞ்சோதியாஞ் சிவனை இமையமலையி னின்றும் அடைந்த மயில்போலுஞ் சாயலையுடைய மரகதாம்பிகையைத் தன் னுடன் வாசஞ்செய்யக் கொண்ட ஓர் உற்சாகத்தால் மற்றைய மலைகளைநோக்கி உங்களி லொருவர்க்கேனு மிவ்வாறு பெருமையின்றெனச் சிரிப்பதுபோன்று பிரகாசிக்கும் ஒளியை வீசும் அக்கைலைமலை.. எ-று. (௰௩)

வேறு

வெள்ளியங் கிரியி னுச்சியிற்கோடி வெயிலவர் கூடியதென்னத்
தெள்ளிய மணிகள் கூட்டியேயமைத்த சித்திர மண்டபமதனில்
ஒள்ளிய வரியாசனத்தினி லுமையோடுவந்துமெய் யன்பர்களினிய
வுள்ளமீ தென்னச் சிவபெருமானு மோலக்க மெய்தியபோதில்.

இவ்வித மேன்மைதங்கிய கைலாசாசல முகட்டில் கோடி சூரியர் கூடி யதையொப்ப தெளிந்த ரத்தினங்களைச் செறித்துச்செய்த சித்திர மண்டபத் தில் மெய்யன்பர்களி னுள்ளமென்ன அழகிய சிங்காசனத்து அம்பிகையுடன் அடைந்து சிவபெருமான் திருவோலக்கமா யெழுந்தருளி யிருக்கும்போது என்றவாறு (௰௪)

மகபதி முதலார் தேவர்கள் குழுவு மாமுனிவோர்களும் வணங்கி
யகங்குழைந் துருகி யானந்தக்கண்ணீ ராறதாய்ப் பெருகிடப்புளக
மிகமிக வரும்பப் பணிபவர் நெருக்கம் விலக்கியே யகிலே காத்தியார்க்கும்
இகபர மளிக்குநந்தி யெம்பெருமா னிசைத்தன னின்பமீக் கொளவே.

தேவேந்திரன் முதலிய தேவர் கூட்டமும் சிறந்த முனிவர் கூட்டமும் வணங்கி மனங்கசிந்துருகி ஆனந்தக்கண்ணீர் ஆறாய்ப் பெருகப் புளகமரும்ப வணங்குவார்களுடைய சந்தடியை விலக்கிக் கைலையைக் காத்துச் சகலருக்கும் இகபர சுகத்தைப் பாலிக்கும் நந்தி யெம்பெருமான் இன்பமீற இப்பரிதிவன மான்மியத்தைத் திருவாய் மலர்ந்தருளினான்...எ-று. (௰௫)

ஆகச் சருக்கம் உக்குச் செய்யுள் ௩௭.

திருக்கைலாசச் சருக்கம் முற்றிற்று.

மூர்த்திவிசேடச்சருக்கம்.

---o---

திருக்கயிலை தனினந்தி சனற்குமாரர்
 தெரிந்திடவே யருளியதை யவர்வியா தற்குக்
கருத்துறவே நவின்றதுகேட் டவர்சூ தற்குக்
 கட்டுரைத்த பவிஷேத்திர புராணந் தன்னில்
விரித்திடுமுத் தரபாகத் தலங்கண் டாங்கு
 விளங்கு மத்தியாயந் தொண்ணூற் றெட்டி னின்பந்
திருத்தமுட னவர்சவுன கருக்குச் சொன்ன
 சீர்பரிதித் தலமகிமை செப்பலுற்றும்.

அழகிய கைலையங்கிரியில் நந்திகேச்சுரர் சனற்குமாரரறிந்திடச் சொல்லியதை அவர் வேதவியாசரது மனதிற் பதியச் சொல்லக்கேட்டு அவர் சூதற்குச் சொல்லிய பவிஷோத்தர புராணத்தில் விரித்து உத்தரபாகத்துள்ள தலமகிமைகளைக் கண்டதுபோல அத்தியாயந் தொண்ணூற்றெட்டினுள் இன்பந் தழைக்க அவர் சவுனகருக்குச்சொன்ன சிறந்த பரிதித்தல மகிமையைச் சொல்லலுற்றும்.. எ-று. (க)

மூர்த்தியொடு தலமகிமை தீர்த்த மேன்மை
 முதுமேனந் தொடக்கறுத்தன் முதலாம் வண்மை
சீர்த்தியுள சிவியெனும்பே ரரசன் பூசை
 செய்துசிறந் ததும்வசியத் திலக னெய்தித்
தீர்த்தனுஞ் சிவபெருமா னடிகள் போற்றித்
 திருக்கூறுத்து முத்தியுறந் திறமு முன்னோர்
பார்த்திபன்ற னமைச்சன்சேய் புரிந்த தீய
 பாதகந்தீர்த் தருள்பரிசும் பகர லுற்றும்.

மூர்த்திதலந் தீர்த்தமென்னும் மூன்றின் மேன்மையும் பருந்தின்பாவந் தீர்த்ததுமுதல் சீர்த்தி வகித்த சிபிச்சக்கரவர்த்தி பூசித்ததுவும் வைசியகுல திலகனாகிய தனதத்தன் சிவபெருமானை அருச்சித்து முத்திபெற்றதும் சோராஜனது மந்திரிமகன் செய்த தீயபாதகந் தீர்த்தருள்பெற்றதும் சொல்லலுற்றும்...எ-று. (உ)

அருளியதோர் பவுடோத்திர புராணந்தன்னி
 லளகையாந் தஞ்சைதல மறையுங்காலைப்
பரிதிவன மென்றதனுக் கருகி லெண்ணம்
 பலித்திடுநற் றலமுளதென் றுரைத்தி ரந்தப்

பொருவிறல மகிமைதனை யுணர்த்த வேண்டும்
புண்ணியனே யென்றுசவு னகர்வினவத்
தெருளுறக் கேட்டவந்தக் கேள்விக் கொப்பாஞ்
சிறுளதோ வெனச்சூதர் செப்பலுற்றார்.

மேற்சுட்டிச்சொல்லிய பவுடோத்திர புராணத்தில் அளகையென்னுந் தஞ்சையின் சிறப்பைச் சொல்லி வருங்காலத்துப் பரிதிவனமென்றொன்று அதற்கருகிலுள்ளதென்றும் அத்தலத்தை நினைத்தால் நினைத்ததெல்லாம் பலிசமாமென்றும் உரைத்தீர் அவ்வித ஒப்பற்ற தலமகிமையைச் சொல்ல வேண்டும் புண்ணியனே யென்று சவுனகர் கேட்கத் தெளிவாய்க் கேட்டீர் அக்கேள்விக்குத் தக்க சிறப்புள்ளதோவெனச் சூதமுனி சொல்லத்தொடங்கினார். எ-று. (௩)

கங்கையினிற் படிநீயென் றுரைத்த பேர்க்குங்
கசடறவே நடந்தந்தக் கங்கை தன்னில்
அங்குமுறப் படிந்தோர்க்குந் தீமை நீக்கி
யமலபத மருள்கின்ற வாற்றல் போலப்
பங்கயனே யன்பணியும் பரிதி நேமம்
பகருமெனக் கும்மிதனைப் பரிவாய்க் கேட்டு
முங்களுக்கு மின்பமுறு மென்று சூத
குருவேத வியாதர்பத முன்னிச் சொல்வார்.

ஒருவரைப் பார்த்து நீர் கங்கையைத் தேடிச்சென்று ஸ்நானஞ்செய்யுமென்று சொன்னவர்க்கும் அவ்வாறே குற்றமற விதிப்படி நடந்து அக்கங்கையிற் றேகம் படிய முழுகினோர்க்கும் அக்கங்கை தீவினையை நீக்கிக் குற்றமற்ற பதவியை அருளுந் தன்மையைப் போற்றுமரைக்கு கண்பனுகிய சூரியன் வணங்கும் பரிதித்தல மான்மியத்தைச் சொல்லப்புகும் எனக்கும் இதனை யன்புடன் கேட்கு முங்களுக்கும் ஆனந்தமடையுமென்று சூதமுனிவர் தனது குருவாகிய வேதவியாசரது பதத்தைச் சிந்தித்து வந்தித்துச் சொல்வார். எ-று. (௪)

அண்டமதி னிறைந்தவிருட் பிழம்பை நீக்கி
அடர்கிரண வெயிலெறிக்கு மடைவால் வெப்பங்
கொண்டுதினஞ் சுழல்வதன்றிச் சாந்தமாயுட்
குளிர்ந்திடவே னென்செய்வே னென்றுவாசப்
புண்டரிக மலரலர்த்தும் பரிதிதேவன்
புனிற்றிளவெண் பிறைமுடித்த புனிதற்கன்பாய்
மண்டலத்திற் பூசித்தே யருள்பெற்றின்று
மகிழ்வனென வேதுணிவு மன்னிறுறல்.

ஆகாயமுழுதும் நிறைந்த விருட்கூட்டங்கள் நீங்கியேங்க நெருங்கிய கதிர்களை விரிக்கும் தன்மைபோல் வெப்பமிகுந்து அனுதினமுஞ் சுற்றித் திரிவதன்றிச் சாந்தமடைந்து உள்ளங் குளிர்ந்திடியேன் இதற்குயாதுசெய்வே

னென்று வாசமிகுந்த வனசமலரை மலர்த்தும் சூரியபகவான் புதிய வெண் ணிறத்த இளம்பிறை முடித்த சிவனுக்கு ஆசைமீற இப்பூதலத்திற் பூசித்து அவர் கருணையைப் பெற்று மகிழ்வடைவேனென்று துணிவுகொண்டான் என்றவாறு. (ரு)

பூசிக்கப் பரிதியுமெய் யன்பு கொண்டிப்
புவிமீது வச்சுவத்தப் பொதும்பர் நண்ணி
நேசித்தே மணலினையோ ரிலிங்கமாக
நிருமித்து மறையோது நெறியா னல்ல
வாசமல ரதுகொண்டே யருச்சித் தேத்தி
வணங்கியுள முருகுமப்போ தவ்வானுகங்
தேசுபெற வுருகியொரு சுயம்பதாகித்
தெரிந்திடவே கண்டுமகிழ் சிறந்தானன்றே

சூரியபகவான் உண்மையாகிய அன்புகொண்டு அருச்சிக்க இப்புவியின் கண்ணடைந்து அரசமரச்சோலையிற்சேர்ந்து ஆசையுடன் அவ்விடத்துள்ள மணலைச்சேர்த்து லிங்கரூபமாய் நிருமித்து வேதத்திற் புகலு முறைப்படி இனிய வாசமலர்களைக்கொண் டருச்சித்துத் துதித்துப் பணிந்து உள்ள முரு கினபோது அம்மணற்குவிய லுருகிப் பிரகாசிக்கும் சுயம்புலிங்கமாகக்காணத் தனது கண்களாற்கண்டு மகிழ்ச்சிகொண்டான்...எ-று. (சு)

மேடமதிப் பருவமதி லெனதுகையால்
விதித்தமண லிலிங்கமது மிக்கசோதி
நீதியதோர் சுயம்பாகி யொளிர்வதாலே
நித்தியபூ ரணப்பொருளாய் நிறைந்தேதேவர்
நாடவரு மீசரு ளுண்டென் யேனு
நான்பெற்ற பெரும்பேறே பேறென் றோதிப்
பாடியுடற் புளகமுற வெழுந்து துள்ளிப்
பணிந்துகரங் கூப்பிநிதம் பரவலுற்றான்

சித்திரைமாதம் பௌர்ணமையில் அடியேன் காத்தாவியுற்றிய மணலி லிங்கம் சோதி மிகுந்த சுயம்புலிங்கமாய்ப் பிரகாசிப்பதாலே நித்ய பூரணப் பொருளாய் எங்கும் நிறைந்து அநேக தேவர்கள் தேடத் தெரிசனை தாவருஞ் சிவபிரான் அருள் என்மீதுமுண்டு நான் பெற்ற லாபமே லாபமென்று பாடிப் புளகாங்கனு யெழுந்து துள்ளி வணங்கி இருகாமுங்குவித்துத் துதிக்க லுற்றான் ... எ-று. (எ)

வேறு

மூலமாய் முதலாய் மூன்றாத்துமுத் தொழிலின் முயன்றிடு மூர்த்திகளாகி
ஞாலமாய்ப் புனறீ கால்வெளியாகி நாமமு முருவமு மனந்தங்
கோலமா யிலகுஞ் சராசரமாகிக் குறைவற நிறைந்த பூரணனீ
சீலமொன் றறியா வெய்யவெற் கிரங்கித் தெளிவுற வந்தவெத் திறமே

ஆதியாய் ஆதிமூலமாய்த் தோன்றி ஆக்கல் அழித்தல் காத்தலென்னும் மூன்று தொழிலையுமுயன் றுடாத்தும் மும்மூர்த்திகளாகிப்பிரிதிவி அப்பு தேயு

வாய்வு ஆகாயமென்னும் ஐம்பூதருபமும் அனந்தவடிவாயிலங்கும் சராசரமாகிக் குறைவற்று யாவற்றன்ளும் நிறைந்த பரிபூரணப் பொருளாகியநீ ஆசாமென்பதியாதுமறியாக் கொடியனுகிய அடியேனுக்கிரங்கி என்மனந் தெளிவடைய அடைந்தது எத்தன்மைத்து...எ-று. (௮)

அன்பினுலுள்ள நெக்குநெக் குருகிடியனலிடு வெண்ணெயா யுக்க
வின்புறு கண்ணீர்க் கருமரக் கலமா இசைந்தமெய்த் தொண்டருக் கிரங்கி
முன்புறத் தோன்றி யருளுநீ யுலகமுற்றிலுந் தீச்சுடரென்னத்
தன்புறமென்ற னெஞ்சமுங் குளிரத்தோன்றிய வியப்பையென்சொல்கேன்

தாங்களடைந்த அன்பினுல் மனம் நெக்குவிட்டு அனலிலிடும் வெண்ணெ போலுருகிக் கப்பலோடுங் கடல்போல ஆனந்தக்கண்ணீருகுக்கும் அடியார்களுக்கிரங்கிச் சேவைதந்தருளும் நீ உலகமுழுதும் தீச்சுடரோனென்னத் திரிந்து துயருற்ற என் மனங்குளிர ஆனந்தசேவைதந்த அதிசயத்தையாதென்று சொல்லுவேன்...எ-று (௯)

பாயிருள் பருகும் பரிதிமெய் யன்பாய்ப் பசுபதி தனைத்துதிபுரிந்து
மீயுயர்விசுவ கருமனை யழையா வியப்புறக் கோயிலு மதிலுந்
தூயதா மணிக்கோ புரங்களும்வி மானத் தூபியும் கயிலை யேயென்னக்
காய்கதிர் மணியுங் கனகமுங் கூட்டிக் கவின்பெற வமைத்தனன் கருதி

உலகமுழுதும் வியாபிக்கும் இருளைப் புசிக்கும் சூரியன் உண்மையாகிய அன்பால் உமாபதியைத் துதிசெய்து மிகவுமுயர்ந்த விண்ணுலக விசுவகருமனை வரவழைத்து யாவரும் அதிசயமுற ஆலயமும் மதிலும் பரிசுத்தமாகிய அழகிய கோபுரங்களும் விமானத்தூபியும் இதுவே கைலயங்கிரியென்னச் சொல்லக் கதிர்கள் வீசும் நவரத்தினங்களும் கனகமுஞ் சேர்த்து அழகுபெற அமைத்தான்...எ-று. (௰)

அண்டமீன் றெடுத்த வன்னையா யடியார்க் கருள்பொழி மங்களாம் பிகைக்குங்
கொண்டல்போற் கருணை யன்பர்மேற் சொழிக்குங் குஞ்சரமுகக்கணபதிக்கும்
தெண்டிரை சுவற வேலெடுத் தவர்க்குஞ் சீதா ளுர்க்குமங் கோவில்
விண்டொடக் கனக மயமதாயமைத்து வியப்புற மற்றவா னவர்க்கும்.

சகல லோகங்களையும் பெற்றெடுத்த தாயாய் அன்பர்க் கருண்மழை பெய்யும் மங்களாம்பிகையம்மைக்கும் அடியார்மேல் மேகம்போற் கிருபாவருஷம் பொழியும் ஆனைமுகக் கணேசருக்கும் கடல்சுவற வேலெறிந்த கந்தப்பெருமானுக்கும் ஆகாயமளாவச் சொன்ன நிறமாகிய ஆலயங்கள் நியமித்து மற்றைய தேவர்களுக்கும் ஆச்சரியப்படும்படி...எ-று. (௰௧)

பசும்பொனுற் கோவில் பற்பல படைத்தும் பகாரு நந்தன வனங்கள்
விசும்புற வமைத்தும் வேதியர் வீதிவிளங்கிட விளக்கியுஞ் சுவணத்
தசும்புக ணிறைத்து மட்டமங் கலங்கள் சதிர்பெற நிறுவியெப்போதும்
நிசம்புகன் றிடுவோர் ஞானமதென்ன நீர்தரு கூவங்க டொட்டும்.

பசும்பொன்னுற் பற்பல ஆலயங்கள் சமைத்துச் சொல்லற்கரிய வளங்களுடன் அண்டமளாவும் பூஞ்சோலை யேற்படுத்தியும் பிராமணர்களுக்கு அக்

கிராமங்கள் ஏற்படுத்தியும் ஆங்காங்குத் தங்கக்கும்பங்கள் நிரப்பியும் அஷ்டமங்கலங்களும் அழகுபெற அமைத்தும் சந்ததமும் உண்மையுரைப்போர் மேன்மைதம் போல ஊற்றுநீரூறும் குளங்கள் தோண்டியும்...எ-று. (௰௨)

கங்கையோ டரிய திங்களும் புனைந்த கண்ணுதல் கோவிலின் குணபால்
செங்கையிற் சிலைகொண்டெய்தவம் பிரண்டுசேர்ந்திடு நெட்டினுக் குள்ளாய்ப்
பங்கமில் பரிதி தன்பெயர் புணர்த்திப் படிவமுந் தன்னுரு வென்னச்
சங்குறு தடமொன் றமைத்தனன் யமுனை தன்முக மிகக்கரு கிடவே.

சந்திரனுங் கங்கையுஞ் சூடிய சடாதரனும் நெற்றிக்கண்ணனுமாகிய நின்மலனது ஆலயத்திற்குக் கீழ்பால் தன் குமாரத்தியாம் யமுனையின் முகங் கருக கையில் விற்பிடித்தெய்த அம்பு போய்விழும் இரண்டளவு தூரத்துள் குற்றமற்ற சூரியன் தனது பெயரைச்சூட்டித் தன்னுருவம்போல் விருத்த வடிவாய்ச் சங்குகளுலாவும் தீர்த்தமொன்று ஏற்படுத்தினன்...எ-று. (௰௩)

மூவரு மொன்று மூர்த்தியின் கொன்றை முடியினிற் றிருவபிடேக
மாவதற் குரித்தாய்ப் பரிதியோர் தீர்த்த மாக்கினு னென்பதைக் கருதித்
தேவரும் வியக்கு நதிமட வார்கள் சென்றுவெஞ் சுறவுபாய் கடலிற்
கோவென வலறிக் குப்புற லிந்தக் குவலய மறிந்திடா தலவே.

மூவரும் ஒருருவாகிய மூர்த்தியினது கொன்றை மலரணிந்த முடிமீது அபிஷேகமாகுதற்குத்தகுதியாய்ச் சூரியன் இவ்விடத்தில் ஓர் தீர்த்தம் நியமித்தானென்பதை நினைந்தல்லவோ சுரர்களும் அதிசயிக்கும் கங்கை முதலிய நதியென்னு மாதர்கள் வெட்கி சுறுமீன்கள்பாயுஞ் சமுத்திரத்தில் கோவென்ற சத்தத்துடன் வாய்விட்டழிப்பாய்தல் இச்செய்தியை இப்பூவுலகின்கண் யாவர் அறியாதுளர்...எ-று. (௰௪)

சூரிய நாமப் புஷ்கரி ணியிலே தோயம தெடுத்துமே பரிதி
யாரிய சுயம்புக் காட்டிப்பொன் னுடை யணிந்துசாந் தணிந்துசண் பகத்தின்
றாரணிந் தொளிரு மணிப்பணி யணிந்து சாற்றரும் பாயசம் படைத்துத்
தூரியத் தோடு துந்துமி முழங்கச் சுரிமுகச் சங்கமார்த்திடவே.

இவ்வித மேம்பாடுற்ற பரிதிப் பேர்பூண்ட தாமரைத் தளத்தில் அச்சூரியனவன் நீர்மொண்டு தன்னால் நியமித்த சுயம்புலிங்கத்திற் கபிஷேகஞ் செய்து பீதாம்பரஞ் சாத்தி சந்தனமணிந்து சண்பகமாலை சாத்தி நவரத்தினப் பணிகள் பூட்டிச் சொல்லுதற்கரிய உரிசை மீறிய பாலன்னம் நிவேதித்து முரசு பேரிகைமுழங்க வரிசேர்ந்த முகமுள்ள வெண்சங்கமார்ப்ப...எ-று (௰௫)

எண்ணிரண் டெனப்பண் ணுரைத்திடு முகம ணியற்றிநல் லட்சதை மலர்கள்
தண்ணறுந் தும்பை கூவிள முதலாய்த் தனித்தனி யருச்சனை புரிந்து
பண்ணிசை பாடி யரம்பைய ராடப் பாளிதத் தீபமு மேந்தி
யுண்ணிறை யன்போ டிறைஞ்சிமா மறைக ளோதியுள் ளுவகையா லுருகி.

சோடச வுபசாரங்களுஞ் செய்து அட்சதையுடன் குளிர்ந்த தும்பை முதலிய மலர்களாலும் வில்வ முதலிய தளிராலும் தனித்தனி பூசைபுரிந்து இனிய இசைகளைப் பாடி அரம்பை முதலியோராட கர்ப்பூர தீபமேந்தி மனம்

நிறைந்த அன்போடு வணங்கி வேதத் துதிகள் புகன்று ஆனந்தத்தாலுருகி என்றவாறு. (௰௬)

பணிந்தெழுந் தாடி வலமதாய்ச் சுழன்று பரமனு ருக்கு மம்பிகைக்கு
மணிந்த மெய் யன்பாய்த் தினமிரு முக்கா லருச்சனை புரிந்துமைங் கரற்கும்
தணந்திடா வசுர ருளம்பிளந் தழித்த சண்முகன் றனக்கு மங்குரவை
பிணைந்தமா தவர்க்கும் பூசனைபுரியப் பெற்றபின் பன்னிரு திங்கள்.

வணங்கி எழுந்து நிருத்தஞ்செய்து வலம்வந்து பரிதிசனுக்கும் மங்களாம்பிகைக்கும் மெய்யன்பாய்ப் பிரதிதினமும் அறுகாலபூசை நடாத்தி விநாயகர்க்கும் அடங்காத அசுரர்மார்பகத்தைக் கீண்டழித்த ஆறுமுகவனுக்கும் குரவைக் கூத்தமைய தொறுக்கும் பூசைகள் நடாத்தியபின்பு பன்னிரண்டு மாதங்களுள் என்றவாறு. (௰௭)

முந்திய திங்க டனிலைந்தா நாளில் முன்றிலில் விடைக்கொடி நிறுவிச்
சந்திரருடர் தனக்கிரு போதுந் தனிவிழாக் களிப்பொடு நடத்தி
யிந்திர புரம்போ னகரலங் கரித்து மெழிலுட னந்தநாளதனிற்
சுந்தர மாக விரதமொன் றமைத்தான் றொழுபவர் பவத்தொடக் கறவே.

சித்திரை மாதப் பஞ்சமி திதியில் கோவிலின் முற்றத்து ரிஷபக்கொடியேற்றிப் பரிதிசருக் கிருபோதும் ஒப்பற்ற திருவிழா அன்புடன் நடாத்திப் பொன்னுலகம்போல அந்நகரை யலங்கரித்து அஸ்த நட்சத்திரத்தில் வணங்குவோர் பாவக்கட்டறும்படி இரதமொன்று அழகாக அமைத்து.. எ-று. (௰௮)

முப்பதோ டிரண்டு கோணம தனதாய் முழுவதுஞ் சந்திரகாந் தத்தால்
செப்பருந் தூபித் தகம்புடன் சுவணஞ் சேர்த்திய துகிலது புனைதந்
தொப்பிலாத் துவசந் தூக்கியே மிக்க வொளிர் மணி மாலைக ணிறைத்து
முப்புர மெரிக்க வூர்ந்-தே ரழகின் மும்மடங் காலயலங் கரித்தான்.

முப்பத்திரண்டு தன்கோணப்புள்ளதாய்ச் சொல்லற்கரிய அழகிய சந்த்ரகாந்தத்தாற் செய்த தூபியும் கும்பமும் பொருத்திப் பொற்சரிகை சேர்ந்த ஆடையால் அலங்கரித்து ஒப்பில்லாக் கொடிகளை நிறுத்தி மிகவும் பிரகாசிக்கும் நவமணிமாலைகள்நிறைந்துத் திரிபுரமெரிக்க நடந்தாளில் செலுத்திய தேரினும் மும்மடங்கு அழகுள்ளதாய்த் தேரை அலங்கரித்தான்...எ-று. (௰௯)

அம்பிகை தனக்கு மைங்கரன் றனக்கு மறுமுகக்கு மரவேடனக்குஞ்
சம்புவின்றொண்டு தணந்திடாச் சண்டி தனக்குமே யிரதங்களரிய
வும்பரூர் திபென வலங்கரித்துலவு முததியினொலியென வியங்கள்
பம்பிட வரம்பை மாதர்க ணடிப்பப்பரமனைத் தேரினி லேற்றி.

மங்களாம்பிகைக்கும் கணபதிக்கும் ஆறுமுகக் குமாரவேளுக்கும் அரனாறு அடித்தொண்டின் அகலாத அன்புள்ள சண்டிகேசுரர்க்கும் அருமையாகிய தேவ விமானமென்ன இரதங்களலங்கரித்துக் கடலொலிபோலப் பற்பல வாத்தியங்கள் நிறைந்தொலிக்கத் தேவரம்பைகள் நடிக்கப் பரிதிசனை இரதத்தில் ஆரோகணிக்கச்செய்து . எ-று. (௨௰)

காரண ரிரத முதலைந்து தேருங்கவின் பெறச்சிலர் தொட்டீர்ப்பத்
தோரண வீதிவருதலாற் பரிதி துளக்கரு முளமெனக் களித்தும்
பூரணகும்ப மேந்தியே தேவப் புனிதர்கள் குழுமியே கூடி
யாரணமோதி யுடன்வரத் தேர்விட் டண்ணலுங் கோவில்சென் றமர்ந்தார்.

பரிதீசர் தேர் முதலாகிய ஐந்து தேரும் அழகுபெற அன்பர்கள் வடம் பிடித்திழுக்கத் தோரணங் கட்டிய வீதியில் வருவதால் சூரியனது அன்பால் அசைவற்றமனம்போல் அந்தணர்கள் ஆனந்தித்துப் பூரணகும்பமேந்திக் குழுக்களுடன் கூடி வேதாகமமோதி யுடன்வரப் பரிதீசருந் தேர்விட் டிறங்கி யாலயத்துட் சென்றமர்ந்தார்...எ-று. (௨௧)

சித்திரைப் பருவ மொத்தநாட் பரிதி சிவபெரு மான்றிருத்தாளிற்
பத்தியாய்ப் பூசை புரிந்துகண் பனிப்பப் பதைப்பற வோவிய மொத்துச்
சித்தம தோய்ந்து பரவசமாகச் சேர்ந்தமை கண்டுள மிரங்கி
முத்திதந் தாளும் பதமல ரருளி முன்வரக் கருதினன் முன்னோன்.

சித்திரா பௌர்ணமி சேர்ந்தநாளில் சூரியன் பரிதீசரது அழகிய பாதத்தில் அன்பாயருச்சித்துக் கண்ணீர்சோரப் பதைப்பற்றுச் சித்திரப்பாவைபோற் சித்தமொடுங்கி பரவசமானதை முன்னோனாகியப்பரிதீசர் கண்டு மனமிரங்கி முத்திகொடுத்தாளும் பாதாம்புயந்தந்து பாலிக்க அப்பரிதிமுன் றெரிசனந்தரவெண்ணினன் எ-று. (௨௨)

வேறு.

திங்களஞ் சடையும் பங்கய முகமுந் திருவருள் பெருகுமுக் கண்ணும்
பொங்கர வணியும் புலியத ளுடையும் பொற்பத மறைச்சிலம் பொலியு
மங்கச னுள்ள மழலுமெய் யழகு மம்பிகை பாகமு மாகச்
செங்கணே றேறி யெதிர்வரக் கண்டு திகைத்தனன் பரிதிவா னவனே.

சந்திரனைச் செருகிய சடாபாரமும் தாமரைவிகர்த்த முகமும் அழகிய அருள்பொழியு நேத்திரமும் சர்ப்பாபரணமும் புலித்தோலுடையும் வேதச்சிலம் பாற்றும் விகசித பொற்பாதமும் மன்மதனுங் கண்டு மனம் வெதும்புந் தேகவழகும் மங்களாம்பிகை பாகமுமாகச் செவந்த கண்களையுடைய விடையேறி எதிர்வரக்கண்டு மயங்கினன் சூரியனென்றவாறு. (௨௩)

திகைத்தவன் றேறி நோக்கிடுங் காலைச் சின்மயச் சொரூபமா முமையும்
பகைத்தவர் மூன்று புரமுந்தீப் பட்டுப் பதைத்துவெண் ணீறதாம்படிமுன்
நகைத்தபெம் மானும் விடையினிற் றோன்ற நாண்மலரடி மிசைப்பணிந்து
சகத்தினை நீக்கித் தனித்தமெய்த் தவத்தோர் தன்மைபோன் மகிழ்ச்சியுட்டாழ்
[ந்தான்.

மயங்கித் தெளிந்து பார்க்கும்போது சின்மய சொரூபமாகிய உமையும் தமைப்பகைத்த திரிபுரம் பதைத்துத் தீப்பட்டுச் சாம்பராம்படி சிறுநகை செய்தபெருமானும் விடைமீது காண அன்றலர்ந்த மலர்போன்ற அடிமேற் பணிந்து உலகவாசையை யொழித்து ஒப்பற்ற மெய்த்தவத்தை யடைந்தோர் போல் மனமகிழ்ச்சியுள் மூழ்கினன் ...எ-று. (௨௪)

வெருமுகக் கடன்கொண்டவரவ ரேசமிடியுறு வோன்வசமாகத்
தொகுபெருஞ் சேமநிதியிடைத் தென்னத் துள்ளின னாடினன்பாடி
நகுமுகமாகி யானந்தக்கண்ணீர் நளினமுத் தெனச்சொரிந் திடநற்
சுகமுறப்பரிதி சச்சிதா னந்தச் சோதியை வாயினாற் றுதித்தான்

பலரிடத்துங் கடன்பட்டு அவரவர் நிந்திக்க வறுமையுற்ற ஒருவனுக்குக் கூட்டமாகிய பெரும் புதையல் அகப்பட்டதுபோலத் துள்ளினான் ஆடினான் பாடினான் சிரித்த முகத்தோடு தாமரையின் முகத்தைப்போல் ஆனந்தக்கண்ணீர்சொரிந்து சுகப்படச் சூரியனானவன் அச்சச்சிதானந்த சோதியைத் தனது வாய்திறந்து தோத்தரிக்கத் தொடங்கினான். எ-று. (உரு)

சோதியே சோதிச் சுடரேயோர் பச்சைமின்சேர்
பாதியே யொன்றே பழமறையும் பாடவொண்ணா
வாதியே யீறுநடு வாயிருந்து நீநடத்து
நீதிதனை யான்வாயா னிகழ்த்துந் தரமாமோ.

சோதியே சோதிக்குட் சோதியே ஒப்பற்ற பார்வதியாள் சேர்ந்த பாதியே தனிப்பொருளே பூரணமாகிய வேதமும் ஓதுவதற்கொண்ணா ஆதியே ஆதி அந்தம் நடுவாயிருந்து நீ நடாத்திவரும் நீதியை அடியனாகிய யான் எடுத்துச் சொல்லுந்தரமோ...எ-று. (உசு)

ஊனா யுயிரா யுணர்வா யுணர்விறந்த
மோனாதீ தச்சுடராய் முற்றும்வெளி யாய்ப்பரம
வானா யயன்றனக்கும் வாசாம கோசரமாங்
கோனான நின்பெருமை கூறவெளி தாகாதே.

உடலாய் உயிராய் அறிவாய் அவ்வறிவையுங் கடந்து சாத்துவிக குணத் தோன்றாகிய மௌனத்திற்குமெட்டாத மேற்பட்ட சோதியாய் முழுவெளி யாய்ப்பரமாகாசமாய்ச் சதுர்முகப்பிரமனுக்கும் வாக்குமனத்துக்கெட்டாஇறைவனான உனது பெருமையை அளவிட்டுச் சொல்லவும் எளிதோ. எறு. (உஎ)

யானே யெனவு மரும்போக மென்னதெனத்
தானே யெழுங்கடிய தற்போத மற்றுவெறு
வானே நிகர்க்கு மவுனத்தோர் கண்மணியாந்
தேனே யுனைக்காணச் செய்ததுநா னெத்தவமே.

யான் எனவும் அரியபோகங்களனைத்தும் என்னாலாகிய தென்னென்னதெனவும் தனக்குத்தானே மேற்கொண்டெழும்பும் தன்னறிவொழிந்து ஏகவெளியைநிகர்த்த மவுனியர் கண்மணிபோன்ற தேனே அடியேன் உனைத் தெரிசிக்க யாது தவஞ் செய்தேனே...எ-று. (உஅ)

ஆக்க வயனாவா யாகியதோ ரண்டமெல்லாங்
காக்கவே யச்சுதனாய்க் கட்டழகு கொண்டுநிற்பாய்
நீக்கிவிடக் கண்ணுதலாய் நிற்பா யுனைக்காணும்
பாக்கியஞ்செய் தேனடியேன் பற்றியபூ சைப்பயனே.

சிருட்டிக்கப் பிரமனும் அவனுலாக்கிய அண்டங்களை இரட்சிக்கத் திருமாலாய் சங்கரிக்க நெற்றிக்கண் படைத்த நீயாய் நிற்பாய் யான்செய்த அர்ச்சனைப்பலனுல் உனைக்காணும் பாக்கியம் அடியேன் படைத்தேன் எ-று (உக)

வேதமே வேதப் பொருளே விளங்குமைந்து
பூதமே பூதப் புணர்ப்பே வெளிகடந்த
நாதமே நாத முடிவேமெஞ் ஞானியர்கள்
போதமே யுன்பதத்தைப் போற்ற வறியேனே.

வேதமாயும் வேதப்பொருளாயும் ப்ரகாசிக்கும் ஐம்பூதமாயும் அப்பூதங்களின் புணர்ப்பாகியும் வெளிகடந்த நாதமாகியும் நாதமுடிவாகியும் மெய்ஞ்ஞானியர் போதமாயும் நின்ற உனது பதத்தைத்துதிக்க அடியேன் அறியேன் என்றவாறு (உஉ).

அஞ்சக் கரப்படையா லாங்காரக் காடெறிந்து
நெஞ்சைத் திருத்தி நிருவிகற்ப வித்தையிட்டு
வஞ்சப் புலக்களையை வாங்கியன்பு நீர்பாய்ச்சித்
தஞ்சமென்பா ருண்போகச் சத்தெனக்குக் கிட்டியவே.

அஞ்சக்கர மென்னும் ஆயுதத்தால் அகங்காரமென்னும் ஆரணியத்தை வெட்டி மனத்தைத் திருத்தி நிருவிகற்பமென்னும் வித்தை நாட்டி கபடஞ்செய்யும் ஐம்புலன்களென்னுங் களையைக் களைந்து பக்தியென்னும் நீரைப் பாய்ச்சி உன்னைத் தஞ்சமென் றடைவோருண்ணும் விளைவென்னும் உண்மை யெனக்குக் கிடைத்தனவே...எ-று (உக)

சராசரங்க ளாகித் தனித்தோ ரருஞ்சுடராய்
நிராமயமாய் நிர்க்குணமாய் நித்தியமாய்த் தத்துவத்தின்
றாதாரமாய் நின்ற சருவபரி பூரணமாம்
பராபரமே யுன்னைப் பணியுந் தரங்காணேன்.

சரமும் அசரமுமாய் ஒப்பில்லாத ஓர்சுடராய் நிராமயமாய் நிர்க்குணமாய் நித்தியமாய்த் தத்துவத்துக்கினமாய் நின்றசர்வ பரிபூரணமாம் பராபரமே உன்னையான் வணங்கும்வகை இவ்விதமென்றறியேன்...எ-று. (உஉ)

வேதச் சிறுவனுக்காய் வீய்ந்தசண்டன் போய்ப்புரளப்
பாதத்தா லெற்றும் பழம்பொருளே மெஞ்ஞான
போதமுற்றோ ருக்கெளிய புண்ணியனே பொன்னிதழிச்
சீதத்தா ராவருணீ செய்ததற்கென் கைம்மாறே.

மார்க்கண்டனுக்காக மறலி இறந்து மண்ணில்விழுந்துபுரள மலர்ப்பதத்தா லெற்றிய பழம்பொருளே மெஞ்ஞான போதமடைந்தோர்க் கெளிதாகும் புண்ணியனே குளிர்ந்த பொற்பிரகாசம் பொருந்திய கொன்றை மாலையனே நீ அடியனுக்கியற்றிய உதவிக்குச்செய்யும் பிரதியுபகாரம் யாது...எ-று. (உங)

என்றுபரிதி இறைஞ்சி யுடனடுங்கி
நின்றபொழு திந்த நிரஞ்சனனுமேசிறிய
கன்றுக் கிரங்குகின்ற கற்று வெனவிரங்கி
நன்றனது பூசையென நல்வரங்க ளீகுவனுல்.

சூரியன் இவ்வாறு துதித்து உடலொடுங்கி நின்றபொழுது எங்கும் வியாபகனாகிய விமலன் சுதனும் சிறியகன்றுக் கிரங்கும் ஆவைப்போல மனமிரக்கங்கொண்டு நீ செய்த பூசனைமிகவும் நன்றென்று வரங்களைத்தருவானானான். என்றவாறு. (௩௪)

வேறு

பரிதிவா னவநீ யன்பாய்ப் பரிந்துசெய் கின்ற பூசை
யுரிமைகண் டனமங் கண்ணி னுள்ளொளி யாகக்கண்டேந்
திருவுரு வட்ட மூர்த்தந் தனிலொன்றாய்த் திகழ்வாய் மெச்சி
யருள்புரி தனமுப் போது மந்தண ரரிக்கமென்றும்.

தேவர் வகுப்பிற் சிறந்தவனாகிய நீ அன்புடன் செய்த அர்ச்சனையின் தகுதியைக்கண்டேன் அவ்வர்ச்சையைக் கண்களிலொளியாகக் கொண்டேன் மெச்சி அருள்புரிந்தேன் எப்புவனத்தும் முப்பொழுதும் அந்தணர் அருச்சிக்க அட்ட மூர்த்திகளிலொருவனாய் நின்று பிரகாசிப்பாய்....எ-று (௩௫)

பூசுரர் செய்வை தீகப் பூசையி னம்மோடும்மை
நேசமாய்ப்பூசை செய்ய நியமித்தே முமைவந் திப்போர்
மாசறப் பிணிக ளற்று மகிழ்ந்திட வரமுந் தந்தேந்
தேசடை னண்டஞ் சூழுந் திறந்தந்தேஞ் சிருந் தந்தேம்.

வைதிகப்பிராமணர் செய்யும் பூசையில் என்னோடுன்னையும் சேர்த்து அன்புடன் அர்ச்சிக்க நியமித்தேன் இதுவன்றி உன்னைத்துதிப்போர் நோய்கள் நீங்கி மகிழும் வரமுந் தந்தேன் ஆகாயமுழுதும் ஒளியுடனுலாவும் வல்லமையுஞ் சிறப்புந் தந்தேன்...எ-று. (௩௬)

வெப்புறு கிரணக்காட்டி வெளிவெயி லெறித்திட்டாலுந்
தப்பற வாய்ந்த ஞானி தன்னுளத் தன்மைக் கென்று
மொப்பவும் முளமுஞ்சித முற்றுமே மகிழ்வாய் மேலு
மிப்பதி கயிலைக்கொப்பா யென்றுமே புனிதமாகும்.

வெளியில் வெப்பமாகிய கிரணங்களைக்காட்டி வெயிலை யெறித்தாலும் வேதங்களைக் குற்றமறச் சோதித்த ஞானிகளுளத்தைப்போல உனது உள்ளங் குளிர்ந்து மகிழ்வையடைவாய் உன்னால் நியமித்த இத்தலமும் கைலைக்கிணையாய்ப் பரிசுத்தத்தலமாகும்.. எ-று (௩௭)

இத்தல மூழிதோறு மிலகியே வாழு முன்றன்
சித்தம தன்பு கூறந் தினகர கோத்திரத்தோர்
சுத்தனாய் மெய்ந்நு லோர்ந்து சுகம்பெறு ஞானமுற்று
முத்தராய் மோனா னந்த மூர்த்திக ளாகிவாழ்வார்,

இத்தலம் ஊழிதோறும் அழியாமல் நிலைபெற்றுவிளங்கி வாழும் உனது மனம் ஆனந்திக்க உன் வம்சத்தோர் யாவரும் பரிசுத்தராய் உண்மையாகிய ஆகமங்களோர்ந்து சுகத்தைப்பெறும் ஞானத்தையுற்று முத்திக்குடையவராய் மோன ஆனந்த மூர்த்திகளாய் முடிவில்லா வாழ்வுற்றிருப்பர்...எ-று (௩௮)

திமிரம தகற்றுகின்ற தேசுறு பரிதிதேவ
வமுதனங் குளிரத்தொட்ட வூரற்புஞ் சுரிணிதன்னி

மூர்த்தி விசேடச் சருக்கம்.

லமாருங் கங்கையும்வந் தன்புடன் றீர்த்தமாடித்
தமதுமா சகற்றி வாழ்வர் சந்தத மின்பமுற்றே.

இருட்கூட்டங்களை யொழிக்கும் ஒளிமிகுந்த சூரியனே உன் மனங்குளிரத் தோண்டிய ஊற்று நீரேற்றமாயுள்ள புட்கரணியில் தேவருங் கங்கையுஞ் சேர்ந்து ஆசையுடன் முழுகித் தங்களது குற்றங்கள் முற்றும்நீக்கிச் சதாகாலமும் இன்புற்று வாழ்வர் . எ-று (டகூ)

இந்தமா விலிங்கந்தன்னை யாமெனப் பூசைசெய்த
சந்தத மிகத்திலின்பஞ் சார்ந்துவாழ்ந் திருந்துமுத்தி
சொந்த மாயடை வரிந்தச் சுயம்புவோ ரூழிகாறு
முந்துற வளருந்தச்சர் முழத்தள வொன்று கொள்வாய்.

உன்னாலமைத்த இவ்விலிங்க ரூபத்தை நாமேயெனப் பாவித்துச் சேவித்துச்சந்ததம் அருச்சித்தோர் இவ்வுலகவின்பத்தமைந்து வாழ்ந்திருந்து அதன்பின் தமது சொந்தமாக முத்திப்பேறையுமடைவார் இச்சுயம்புலிங்கம் ஒவ்வொரு ஊழிகாலங்கள்தோறும் தச்சர் காத்திற் பிடிக்கும் அளவுகோலளவின்படி ஓர் முழத்தளவாக வளருமென்று தெரிந்துகொள்ளக்கடவாய் என்றவாறு. (சய)

பிரளய வூழிசென்ற பின்புநீ யிந்நாட்போலத்
தெருளுட னாலயாதி செய்துவா தாரபீடம்
பொருளதாஞ் சுயம்புவூணப் பொற்புடன் கோத்துப்பூசை
யிருளற வியற்றுவாய்பின் னெழுகின்ற வூழிதோறும்.

பிரளயகாலமாகும் ஊழிகாலஞ் சென்றபின்பு நீ இப்பொழுது செய்ததைப்போல அன்புடன் கோவிற்றிருப்பணிகளை முடித்துச் சுயம்புலிங்கத்திற்கு ஆதாரபீட முதலியதும் அழகுடனமைத்துவரும் ஊழிகள்தோறும் உன்மனவிருள் அகலப் பூசைபுரிவாய்...எ-று (சக)

இன்னன வரங்க ளீய்ந்தே யீசனூர் வளர்ந்து நின்ற
நன்னயச் சுயம்பிற் சேர னாடியே பரிதிதேவ
னென்னயான் பூசை செய்தற் கிரங்கிவந் தாண்டாரென்று
முன்னவர் தன்னை யுன்னி முற்றிலுங் குளிர்ந்தான் மாதோ

இவ்வித வரங்களனைத்துங் கொடுத்துப் பரிதீசர் வளர்ந்துநின்ற சுயம்புலிங்கத்திற் கலந்து மறைந்தவுடன் இவைகளைக்கண்ட சூரியன் அடியேன் செய்த அர்ச்சனைக்கிரங்கி மனமுவந்து வந்தாண்டாரென்று முதல்வனருளை எண்ணி எண்ணித் தன்னுடல் முழுதுங் குளிர்ந்தான் ...எ-று. (சஉ)

ஆகச்சருக்கமொன்றுக்குச் செய்யுள் (எக)

மூர்த்தி விசேடச் சருக்கம்

முற்றிற்று.

தலவிசேடச்சருக்கம்.

செய்ய பரிதி மெய்யன்பாற் சிறந்த பூசை செய்திடவே
பொய்யில் வரங்க ளளித்தாண்ட புனித மூர்த்தி தனையுரைத்து
வைய மதனிற் பரிதிவன மான தலத்தின் மகிமைதனை
ஐயமின்றிச் சகமுழுது மறிந்தின் புறவே யறைந்திடுவாம்.

செவந்த வடிவுடைய சூரியன் உண்மையாகிய அன்பால் மேம்பட்ட அர்ச்சனைபுரிய மெய்யாகிய வரங்கள்தந் திரட்சித்த நிஷ்களங்கமாகிய மூர்த்தி விசேஷத்தைச் சொற்றனம். இனி இவ்வுலகின்கண் பரிதிவனமென்னும் அத்தல விசேஷத்தைச் சந்தேகமற ஜகத்திலுள்ளோர் தெரிந்தன்புமீறச்சொல் லுவோம். எ-று. (க)

பூதி யணிந்து கண்டிகையும் பூண்டேயெழுத்தைந் தினையுணர்வா
லோதிச் சிவபூ சனைபுரிந்தே யுறுத்தகாலன் றனைவென்ற
வேதத் துருவா மார்க்கண்டர் மேவித் தவஞ்செய் திடவிடந்தான்
சோதித்திந்தப் பரிதிவனந் தோன்ற வுணர்ந்தார் ஞானத்தால்

திருநீறணிந்து உருத்திராக்கம் பூண்டு பஞ்சாக்கரத்தை மறவா நினைவா யுச்சரித்துச் சிவார்ச்சனை செய்து தன்னைப் பயமுறுத்திய யமனைச் சயங் கொண்ட வேதத்துருவமாகிய மார்க்கண்டேயர் தான் சென்று தவஞ்செய்திட உத்தமவிடம் யாதெனத் தன்னுணர்வாற் பரிசோதித்து இப்பரிதிவனமே மேன்மையென்று தன் மனதிற்றோன்ற அறிந்தனர்.. எ-று (உ)

அரனூர் விடைமீ தம்பிகையோ டருளா லெழுந்த பரிதிவனக்
சூரூர் வரங்க ளளித்ததல முண்மை யிதுவே தூயதெனுச்
சாரும் புயங்கள் சிவப்பேறச் சார்ந்து புலன்க ளைந்துடனே
கரணா திகளு மடக்கியிடக் கடிய தவமேற் கொண்டிடுநாள்.

சிவபெருமான் றேவியுடன் ரிஷபவாகனரூடராய்ச் சூரியனெதி ரெழுந்து வலிய வரங்களைக் கொடுத்த உண்மையாகிய ஸ்தலம் இப்பரிதிவனம் ஆதலால் இதே பரிசுத்த ஸ்தலமெனக் கருதி மார்க்கண்டேயர் தன திருபாதாரவிந்தங்கள் சிவக்க நடந்து சென்றடைந்து ஐம்புலன்களுங் கரணாதிகளுமடங்கி யடக்கக் கொடிய தவமேற்கொண் டொழுகுநாளில். எ-று (ங)

மனம டங்க வனிய டங்க மாவி னினங்கள் சிலையெனவே
தனதி ருடல முரிஞ்சிவிடச் சலியா தியற்றுந் தவமுகந்து
புனிதப் பொருளாம் பரமனருள் புரிந்து தவம்பூண் டவரெதிரே
யினிய வமுத மெனத்தோன்ற வெழுந்தா னென்று மிடரில்லான்.

தலவிசேடச்சருக்கம்

மனமடங்கச் சுவாசமடங்கி வனத்துற்ற மிருகவினங்கள் கல்லென நினைந்து தேகத்தினவுதிர உராயவும் அசைவற்றுச் செய்யுந் தவத்திற் சந்துஷ்டியடைந்த நிஷ்களங்கச் சிவபிரான் கருணைகூர்ந்து மார்க்கண்டேய ரெதிரே தேவாமுதமெனத் தோன்ற எழுந்தருளினர்...எ-று, (ச)

எழுந்து சிவனர் பொற்பதத்தி விறைஞ்சி யேத்தி யுளமுருகி
விழுந்து கண்ணீ ராருக விம்மு முனியைக் கண்டுதவத்
தழுந்தா நின்ற தென்பெறுதற் கறையா யென்னச் சிவஞானக்
கொழுந்தா முனிவன் றன்னுளத்திற் கொண்டகுறிப்பை யுணர்த்திடுவான்.

அவ்வித மெழுந்தருளிய சிவபிரானைக் கண்டு மார்க்கண்டேய ரெழுந்து அவர் பொற்பாதத்தில் விழுந்து வணங்கித் துதித்து உள்ளமுருகிக கண்ணீராருய்ப் பெருக விம்மிநிற்கும் முனியைக்கண்டு நீ அருமையாந் தவஞ் செய்தது யாது பெறற்பொருட்டுச் சொல்லுவாயென்னச் சிவஞானக்கொழுந்தாயெழுந்த மார்க்கண்டேயர் தன்னுள்ளக் குறிப்பை அறிவிக்கத் தொடங்கினர் என்றவாறு. (ரு)

தில்லைக் சனக சபைதனிலே சிறந்தே நடித்த பதமதுகண்
டெல்லை யிகந்த வானந்த மெய்திக் களித்த பதஞ்சலியும்
வல்ல புலித்தாள் முனியுமென மகிழ்ந்தே கண்கள் களிகூர்ந்து
கல்வி யிடரைக் களைந்திடவே கடுகித் தவத்தை முயன்றனனல்

சிறந்த தலமாகிய சிதம்பரமென்னும் பொன்னம்பலத்திலே தாம் நடனஞ்செய்த பாததரிசனங் கண்டு பதஞ்சலியும் வியாக்கிரபாத முனியும் அளவில்லாத ஆனந்தமடைந்து களித்ததுபோல் யானும் மகிழ்ந்து நேத்திரானந் தம்பெறக் கண்டு வினையென்னும் வேரைக் கல்விக் களையும்படி இத்தலத்தில் தவத்தை முயன்று செய்தனனென்றார் மார்க்கண்டேயர்...எ-று (சு)

என்று முனிவ னியம்பிடுமு னிசைந்தா னியம்பாப் பாணர்க்கா
வன்று விறகு சுமந்துபாட் டழகாய்ப் பாடிப் பகைவென்ற
கொன்றைச் சடையா னவருள்ளங் குறித்த படியே கூத்தாட
நின்ற புலித்தோ லுடையிறுக்கி நீண்டசடையுந் திருத்தினனல்.

இவ்வாறு மார்க்கண்டேயர் சொல்வதற்கு முந்தி மதுரையி னிடத்துத் தனது குறையை யியம்பி முறையிட்ட பாணபத்திரர்பொருட்டு விறகு சுமந்து வீணையிசை பாடி ஏமநாதனென்னும் எதிரியை வென்ற கொன்றைச் சடையானகிய கோமான் கோரியவண்ணங் கூத்தாடப் புலித்தோலாடையை இடையிலிறுக்கி நீண்ட சடையைத் திருத்தி நின்றார்.. எ-று (எ)

வேறு.

கங்கை பொங்கியலை வீசி வீசியுறு கறைய லம்பிநில வொழுகிய
திங்க ளம்பிறைநடுங்க வாளரவு சீறி யாடவசரஞ்சர
மெங்குமாட முனிவோர்க ளோடுகண நாத ராடவிமை யோரெலாஞ்
செங்கை மாமலர்க டூவியாடநட மாடினர் சுடலை யாடினர்.

தலவிசேடச்சருக்கம்

ஈமத்தாடிய ஈசன் சிரோருகத்துள்ள திரிபதகை பூரித்து அலைகளை வீச அகளுற்றனதுடற் களங்கத்தைக் கழுவி யொழித்து ஒளிவொழுகிய அழகிய சந்திரப்பிறையசைய நீண்ட சர்ப்பங்கள் சீற்காரத்துடனுட சாசாமுழுதுமாட முனிவர்களோடு [illegible] கூத்தாட நடனமாடி அருளினர்.. எ-று (அ)

தித்த குள்ளமதின் மாற்றியாடுவித முற்றி லும்பிறழ் மினென்னவே
யத்த னூர்நடன மாடு கின்றதிரு வபுரு கண்டுநிமை யாமலே
சித்த மும்விழியு மொக்க வேதிரவி சித்த ரப்படிவ மெனமுனே
நித்த னுகரிச பத்தி செய்தமுனி நின்ற னன்னிருவி கற்பமாய்.

முத்திக்குரியோர் மனத்தன்பு முதிர்ந்தாடுவது முழுதுந் தவறுறுமோ அன்றோவென் னையமுறச் சிவபிரான் நடிக்கின்ற கோலத்தைக்கண்டு கண் களிமையாமல் முகக்கண்ணையும் அகக்கண்ணையும் ஒருவழிப்படுத்தி ஓவியத் தெழுதிய பாவைபோல உண்மையாகிய பத்தியுடன் றவஞ்செய்த மார்க்கண் டேயர் நிருவிகற்ப சமாதியைப்போல அசைவற்று நின்றனர்...எ-று. (கூ)

வேறு.

கண்ட கண்கள் களிப்புறக் கருணைபுரிந்தவடிகளடித்
தண்டா மரைக டலைக்கணிந்து தனியா வின்பச் சலதிமடுத்
தண்டே னியானுங் கண்டிடவே யொருதா டேக்கி நடனமிடு
மெண்டோண் முக்க ணெம்மானே யினியே தெனக்குக் குறையென்றான்.

பார்த்தகண் பரமானந்தமுற அருள்புரிந்தாடிய ஆண்டவரது குளிர்ந்தபாத தாமரைகளைச் சிரபூஷணமா யணிந்து அடியேன் அகலாச் சந்தோஷ சமுத் திரத்தை வாய்மடுத்துண்டேன் யான் கண்டிடுமாறு ஒற்றைப்பாத மேலெடுத் துக் கூத்தாடும் எண்டோளும் முக்கண்ணுமுள்ள எம்பெருமானே எனக்கினி யாது குறையென்றார் மார்க்கண்டேயர்.. எ-று (௰)

[illegible]டா யென்பார் முன்பாகப் பாடப் பதைப்பாய்ப் பரிவாக
[illegible]டா யென்பார் கண்காண வாடு வாய்பெண் பாற்றாதுக்
[illegible]டா யென்பார்க் காவோடி யுறவாய்த் தூது முறைப்பாயாற்
[illegible]டா ருந்த வருட்கவர்செய் பேற்றி யென்னே பெருமானே.

பாடுமென்ற அடியார் அதிக்குமுன் பாடுதற்கு வாய்பதைப்பீர்அன்புடன் [illegible]மென்பார் கண்களிக்க ஆடுவீர் பரவையென்னும் பெண்ணிடம் தூது [illegible]க்க வோடுமென்பார்க்காக வோடி இருவரையு முறவுசெய்யத் தூதுமுறைப் [illegible] பெருமை பொருந்திய உமக்கவர் செய்த நன்மை யாதோ சொல்லுவீர் [illegible]ருமானே என்றார் மார்க்கண்டேயர். எ-று, (௰க)

[illegible]ப ருக்காய் மண்சுமந்தா யடியா னிடம்பிட்டினையருந்தித்
[illegible]பம் நடைத்தா யென்மூன் றூற்றொடர்ந்த காலன் மிகைக்குமைந்தே
[illegible]யளித்தா யிப்போதுவெளி நடித்துப் பதந்தந்தா
[illegible]ய ரெருக்கினியாக வேதோ வொன்றுங் காணேனே.

தலவிசேடச்சருக்கம்

அன்பராகிய வாதவூரர்க்காய்மண் சுமந்திர் வந்தியென்னும் அடியாளிட்ட உதிர்ந்த பிட்டுண்டு அவள் துன்பமொழித்தீர் எனைப் படிக்கத் தொடாந்த எமனை யுதைத்து எனக்கின்பங் கொடுத்தீர் தற்காலம் என்முன் நடனஞ்செய்து பாததாமரையின் றெரிசனங் தந்தீர் உமது பெருத்த கருணைக்கு உபமானஞ் சொல்ல ஒகோ ஒன்றுந் தோன்றக் காணமென்றார் மார்க்கண்டேயர் என்றவாறு (௰௨)

என்ன முனிவன் றன்பரவ விப்பே ரின்பக் கடல்பருக
மன்னு மமரா ரனுறையு மாண்சேர் கோவிற குடபாலிற்
றன்னுங் கணையோர் நெட்டினுக்குட் டோட்டார் பொய்கை கரங்களினு
லன்ன தீர்த்த மதற்கன்றே யவர்தம் மகிமை யருள்செய்தார்

இவ்விதமாக மார்க்கண்டேயர் தோத்தரிக்க இப்பெரிய சந்தோஷ சாக ரத்தை வாய்மடுத்தருந்த அவண் வந்து நிறைந்த தேவர்கள் சிவபெருமான் வசிக்கும் மாட்சிமையாகிய ஆலயத்தின் மேற்றிசையில் வில்வளைத்து நாண் பூட்டி எய்யும் அம்பு போய்விழுந் தூரத்துள் ஓர் தடாகம் தங்கள் கைவருந்தத் தோண்டி அத்தீர்த்தத்திற்கு அன்றே அவர் தமது பெருத்த பெருமையைக் கொடுத்தருளினர்...எ-று. (௰௩)

தேவ தீர்த்த மிதனுமஞ் சிறந்த கரதீர்த் தமுமிதுவே
யாவ தென்ன வமரரெலா மன்பா யரனை வலம்வந்து
போவ தானு லித்தலந்தான் புனிதன் கயிலைப் பொருப்பெனவும்
பாவமகற்று நம்பரமன் பாத மெனவும் பகர்ந்திடலாம்,

தேவர்களால் நிருமித்தபடியால் தேவதீர்த்தமென்னும் பெயரும் அவர் கள் தமது கையென்னும் கரம் வருந்தத் தோண்டியதாற் கரதீர்த்தமென்றும் இதற்கிருபெயராகக்கடவதென்றும் தேவர்களியம்பிச் சிவபிரானை வலம்வந்து போவரென்றால் இத்தலத்தை நிஷ்களங்கமாகிய கைலாசாசலமென்றும் பாத கங்களைப் பரிகரிக்கும் அப்பரமன் பாதமென்றும் சாற்றச் சந்தேகமுளதோ என்றவாறு, (௰௪)

தத்து மலையால் முத்தெறியுந் தண்ணந் துறையார் நதிப்புனலுஞ்
சித்தர் முதலா னோர்பரவுந் தில்லைத் தலமுந் தெளிவுற்ற
முத்த ரமலப் பொருளணுகி முயலு கின்ற திருவுளமும்
அத்தர் தவத்தோர் பூசையும்போ லவிரோ தங்கா ணித்தலமே,

பாயும் அலைகள் முத்தினங்களை எத்தினமும் வீசும் குளிர்ந்தழகிய துறை களையுடைய கங்காநதிப்புனல் சூழ்ந்த காசியும் சித்தர் முதலோர் பரவுஞ் சிதம்பரத்தலமும் தெளிவையுடைய முத்தர்கள் தொழக் குற்றமற்ற பொரு ளாய்ச் சிவபிரான்றிருவுள்ளமென்ன அமர்ந்த கைலாயமும் இவ்விடங்களில் முனிவர் செய்யும் அர்ச்சனைபோல் விரோதமின்றி நடக்கும் இத்தலமாம் என்றவாறு, (௰௫)

பொன்னம் பலஞ்சேர் காழிகச்சி புனிதவெள்ளி யம்பலஞ்சேர்
கன்னற் கழனி வேய்க்காடு கனத்த விடபா சலம்வெண்கா

டன்னம் பயிலுமாலங்கா டையா றருணை வில்வவன
மின்ன லகற்றும் பரிதிவன மீரா றருநடனதலம்.

தில்லைத்தலம் சீகாழி கச்சி களங்கமற்ற மதுரை சிறந்த கருப்பங்கழனி சூழ்ந்த வெய்க்காடு கனம்பொருந்திய நந்திமலை திருவெண்காடு அன்னப் புட்கள் நடமாடுந் திருவாலங்காடு திருவையாறு அருணாசலம் வில்வவனம் துன்பங்களைக் களையும் இப்பரிதிவனம் என்னும் பன்னிரண்டும் சிவபிரான் திருநடஞ் செய்த தலமாம் எ-று (௰௬).

சொல்லு மிந்த வீரா று தொல்லை நடனத்த லங்கடோறும்
வில்லின் மதியி லாதிரைநாள் விடியும் புலரிக் காலமதில்
அல்ல லகற்றும் நடேசர்பத மருச்சித் தேத்து மவர் பலனுக்
கெல்லை யுளதோ வனந்தனுந்தா னெடுத்துச் சொல்லுந் திறனுளதோ.

மேற்சொல்லிய இப்பன்னிரெண்டென்னும் பழமையாகிய நடனத்தலங்களில் மார்கழிமாதத் திருவாதிரை நட்சத்திரத்தில் வைகறையென்னும் விடியற்காலையில் துன்பங்களைத் துடைக்கும் நடேசர் பாதாம்புயத்தைப் பூசித்துத் துதிப்பவர் அடையும் பலனுக்கு ஓரளவிவ்வளவென்று சொல்வதற்குளதோ ஆயிரம் வாயைப்பெற்ற ஆதிசேஷனாலுஞ் சொல்லுந்தரமன்று...எ-று (௰௭)

சித்தி யருளுங் கபிலர்முதற் சீரா மியோகப் புனிதர்களு
முத்தி யளிக்கு நாரதமா முனிவர் வியாதர் மார்க்கண்டர்
சித்த முவந்து தவம்புரியச் சிறந்த பரிதித் தலமிதனிற்
பத்தி புரிவோர் பெறும்பயனைப் பகர வெளிதோ பாரினிலே.

கோரிய சித்திகளைப் பாலிக்கும் சிறந்த கபிலர் முதலாம் யோகீஸ்வரர்களும் முத்தியே யாயினுந் தரவல்ல நாரதர் வியாதர் மார்க்கண்டேயர் முதலிய முனிவர்களும் மனம்பூரித்துத் தவம்புரிந்த சிறந்த தலமாகிய இப்பரிதிவனத் தலத்தில் பக்தியுடன் அருச்சிப்போர் பெறும் பெரும் பிரயோசனத்தைப் பூமியின் கண் புகலுவதற்கு எளிதல்ல ..எ-று (௰௮)

இந்தத் தலத்தின் கெல்லையது வியம்பி லைம்மா யோசனையாம்
பந்த மறுக்கு மித்தலத்திற் பயின்றே யிருக்குஞ் சராசரங்க
ளெந்தப் பொருளுஞ் சிவவடிவா மினிய தேவா ரப்பதிகஞ்
சந்தத் துடனே முதன்மூவர் சாற்றி யருள்பெற் றனரன்றே.

இப்பரிதிவனத்தின் தலத்திற்கெல்லையளவு சொல்லுங்கால் கால்யோசனை தூரமாம் பாசபந்தங்களை அறுத்தெறியும் இத்தலத்திலிருக்கும் எப்பொருள்களும் சிவவடிவமாம் இனிய பண்களுடன் அப்பர் சுந்தரர் சம்பந்தரென்னும் மூவர் முன் தேவாரப் பதிகஞ்சாற்றி அருள்பெற்ற ஸ்தலமாம்...எ-று. (௰௯)

வில்லா மதியி னாதிரையில் விளையும் புலரிக் கால மதி
லெல்லார் பரிதி பரிதி வனமதனி லிலங்கு நடனம் பணிவோர்க
டொல்லை வினையின் றொடக்கறுத்துத் துலங்கு மின்பக் கடல்படிந்து
நல்லோராகி மார்க்கண்டர் நட்புற் றவராய் வாழ்வாரே.

தலவிசேடச்சருக்கம்

மார்கழி மாதத் திருவாதிரை விடியற்காலையில் பிரகாசம் பொருந்திய பாஸ்கரவனமென்னும் இதனில் நடிக்கும் நடேசனைப் பணிவோர்கள் பூர்வ வினையின் சம்பந்தங்களை யொழித்து மேலாகிய சந்தோஷ சாகரத்தின் மூழ்கி நற்பேறோங்கி மார்க்கண்டேயரது கிருபைபெற்றவராய் வாழ்வார்..எ-று (உ0)

கன்னி மதியின் மதிவளரக் கடவ தான நவராத்திரி
யென்னுந் தினங்கள் பரிதிவனத் திலங்கு முமையாட கான்பாலுங்
கன்னலிர சந்தேனுடனே கலந்தே யபிடே கஞ்செய்தே
அன்னம்பிரச மதிரசமு மன்பாய் வடைநி வேதனமும்.

புரட்டாசி மாதப் பூர்வபட்சமாகிய நவராத்திரியென்னும் நாளில் இப் பாஸ்கர வனத்துள் வசிக்கும் மங்கள நாயகிக்குப் பசுவின் பாலும் கரும்பிரச மும் தேனுங்கலந்து திருவபிஷேகஞ்செய்து அன்புடன் அன்னம் தேன் அதிரசம் வடை இவைகள் நிவேதனஞ்செய்து...எ-று. (உக)

செய்து வணங்கு மெய்யன்பர் சித்தி யெட்டும் வாணளு
மெய்திக் கல்விப் பொருளுடனே யெழிலார் செல்வப் பொருளார் வார்
தெய்வப் பரிதி பூசிக்குந் தினமா மேடச் சித்திரையிற்
றையல் பாகற் கன்பாகச் சார்ந்தே மகிழ்ந்து மனங்குவிந்து.

வணங்கித் துதிக்கு மெய்யடியார் அஷ்டமாசித்திகளும் ஆயுளும்பெற்றுப் கல்விப்பொருளுடனே செல்வப்பொருளும் பொருந்துவர் தெய்வத்தன்மை பொருந்திய தினகரனாகிய சூரியன் பூசித்தநாளாகிய மேஷமாதச் சித்திரை நட்சத்திரத்தில் பார்வதி பாகராகிய பரிதீசரைச் சார்ந்து மகிழ்வாய் மனங் கசிந்து.. எ-று. (உஉ)

விதியா யபிடேகம்புரிந்து விளங்கும் பூசை விதமியற்றி
மதியார் முடியிற் சண்பகப்பூ வணிந்து பணிவோரெந்நாளு
நிதியார் செல்வ மிகவெய்தி நிறைந்த வின்பக் கடறளைந்து
மதியூர் மக்கட் பேறெய்தி மகிழ்ந்து வாழ்வார் நீடூழி.

சாத்திர விதியாயபிஷேகஞ்செய்து அருச்சனைகளை முடித்துச் சந்திரன் விளங்குஞ் சடாபாரத்தில் சண்பகமலர் தரித்துச சாஷ்டாங்க வந்தனஞ் செய் வோர் சந்ததமும் அளகைப்பதியன்போல் அளவிலாத ஐஸ்வரியமடைந்து குறைவில்லாத இன்பக்கடலிற் படிந்து விவேகசாலிகளாகிய மக்களைப்பெற்று நீடூழிகாலம் நீங்கா மகிழ்வுடன் வாழ்வார்கள்...எ-று. (உ௩)

துய்ய பரிதி வனமென்றுந் துலங்கும் வேதா ரணியமென்றும்
பொய்யி லச்சுவத்தவனப் பொதும்ப ரென்றுஞ் சிவனருளா
லய்ய மகற்றும் பிரமவன மாகுமெனவீ ரிருநாம
மெய்ய தாகப் படைத்தவிந்த மேலாந் தலத்துக் கிணையுளதோ.

பரிசுத்தமாகிய பாஸ்காவன மென்றும் பிரகாசிக்கும் மறைக்காடென் றும் மெய்யாகிய அரசமரச் சோலையென்றும் சிவபெருமானருளால் மயக் கத்தையொழிக்கும் பிரமவனமென்றும் இந்நான்கு திருநாமங்களை உண்மை

யாகப் பெற்ற இம்மேலாந்தலத்திற்கு நேரான தலம் உலகத்துள்ளதோ... என்றவாறு. (உச)

தவமா மிதனிற் பிறந்தோருஞ் சரிப்ப தோய்ந்தே யிறந்தோரு
மிலகா நின்ற பரிதீச ரிணைத்தாள் பணிந்த வியல்போரு
நலமார் நாவா லுரைத்தோரு மயர்ந்தே யொருகா லுணர்ந்தோரு
மலமூன் றகற்றி வீடுறுவார் மதிசேர் சடையா னருள்பெற்றே.

இத்தன்மையாகிய மேலான தலத்திற் சனித்தோரும் சஞ்சரித்தலையொழிந்த மாண்டோரும் ஒளிபொருந்திய பரிதீசனுடைய பாதாம்புயங்களைப் பணியந்தன்மையோரும் நன்மை பொருந்திய நாவாற் றுதித்தோரும் ஓர்தரமாகிலுந் தரிசித்தோரும் சந்திரசேகரனாகிய சதாசிவனருளைப்பெற்று மும்மலமகன்றுமோட்ச வீட்டை அடைவார்கள் எ-று (உரு)

அமரர் பரவித் தொழுதேத்து மமல பரிதீச் சுரர்கோவிற்
சிமயத் தூவி தனைக்கண்டோர் சென்மாந் திரத்தின் பாவமெலா
நிமையிற் றீப்பற் றியபஞ்சாய் நீறாய் விளியு மெனநூல்க
ளமையப் படிவ ரருளிதென் றறைந்தார் முன்னூ லறிந்தோரே.

தேவர்கள் புகழ்ந்து வணங்கித் துதிக்கும் பாஸ்கரேசரது உயர்ந்த மலைச்சிகரம்போன்ற ஆலய கோபுர தெரிசனையைக்கண்டோர் பூர்வபாதகங்களெல்லாம் இமைப்பொழுதில் தீப்பற்றிய பஞ்சுபோற் சாம்பராய் மாயுமென்று வேதாகமங்களறிந்த விப்பிரர் விளம்பினர். எ-று (உசா)

அந்தணரை யொருவர்தமக் கந்தத் தலத்தி லமுதளித்தா
னந்தூர் கங்கை தனிற்கோடி நன்மா மறையோர்க் களித்ததுவாம்
புந்தி யுறவே பணவிடைபொன் பூசு ரர்க்கன் றீந்தவர்க்குச்
சிந்தின் றுறையி லொருகோடி செம்பொன் னளித்த பலனுறுமே.

இவ்விதப் புண்ணியத் தலத்தில் ஓர் வேதியர்க் கன்னங் கொடுக்கில் சங்குகள் தவழாநின்ற கங்காதீரத்தில் கோடிப் பிராமணர்களுக்குக் கொடுத்த பலனுண்டாகும் மனமொத்த ஓர் பணவிடைப் பொன் மறையோர்களுக்களித்தால் சகல நதிகட்கும் பதியாகிய கடற்றுறையிற் கோடி செம்பொன்கொடுத்த பலனுண்டாகும்...எ-று. (உஎ)

மிக்க சிறிய வாலின்விதை மேதி னிதனிற் பொருந்தியிடிற்
றக்க பெரிய மரமாகித் தழைக்கு மதுபோற் பரிதிவனம்
புக்கி யறம நியற்றிடினும் பொருந்தாத் தீமை செய்திடினுந்
திக்க தனைத்துஞ் சிறிதெனவே செறிந்தே யொன்று கோடியதாம்

மிகவுஞ் சிறிய ஓர் ஆலின் வித்தை பூமியிற் புதைத்து நாட்டில் அவ்வித்துப் பெருத்த மாமாய்த் தழைப்பதுபோல இப்பரிதிவனேசர் தலத்திற்புகுந்து தருமஞ் செய்யினும் மனத்திற்கொவ்வாத கருமஞ்செய்யினும் எட்டுத்திக்குஞ் சிறிதென்று சொல்லும்படி ஒன்று கோடியாய் நின்று வளரும்...எ-று (உஅ)

தலவிசேடச்சருக்கம்

சுவையார் நற்பாற் சூரப்பூறுஞ் சுரபி யொன்று பூசுரர்க்கு
நவைதீ ரந்தத் தலந்தனிலே நல்கி னுலகி லனைத்தினையும்
தவருதீய்ந்த பலனெய்துந் தனிமெய்ப் பொருளாம் பரிதிநேர்க்
கெவையா கினுங்கொண் டர்ச்சிப்போர்க் கிடமாங் கயிலைப்பதிதானே.

உரிசையாகிய பாற்சுரப்பு மிகுந்த பசுவொன்று குற்றமற்ற அத்தலத்திலே அந்தணர்க்குத் தானஞ் செய்யில் இவ்வுலகமுழுதுந் தத்தஞ்செய்த பலனுண்டாகும் ஒப்பற்ற உண்மைப்பொருளாகிய பாஸ்கரேசரை எவ்விதப்பொருளேனுங்கொண்டு பூசனை இயற்றுவோருக்குக் கைலயங்கிரியே சதா இருப்பிடமாகும்.. எ-று. (உக)

மீன மாதத்துத்திரத்தில் வேலற் கினிய பாலதனிற்
றேனு மினிய கனிரசமுங் செய்ய கரும்பி னறுஞ்சாறு
மானெய் யுடனே கூட்டியொன்று யபிடே கஞ்செய் திடிலென்று
மீனஞ் சேராப் பிணிசேரா தின்புற் றரசு னெனவாழ்வார்

வேலாயுதக் கடவுளுக்குப் பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரத்தில் பால் தேன் இனியபழம கருப்பஞ்சாறு பசுவின்நெய் இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து அபிஷேகஞ் செய்பவர் துன்பமும் பிணியுஞ் சேராது அரசனைப் போல் அதிக மகிழ்ச்சியுடன்வாழ்வார்கள்...எ று. (உய)

சீரார் கும்பச் சிவநிசியிற் சேர்ந்த சாம நாலினுக்குஞ்
சாரு ரிடையார் வில்லுவஞ்செங் கமலஞ் சாதி வலம்புரிப்பூ
வாரார் கொங்கை யுமைபாக மருவும் பரிதீ சற்கிடுவோர்
தீராத் தொல்லை வினைதீர்ந்து சிவன தருளாற் சிறந்திடுவோர்

சிறப்பாகிய மாசிமாத சிவராத்திரி நாற்சாமங்களிலும் வில்வம் செந்தாமரை சிறுசண்பகம் நந்தியாவட்டம் இம்மலர்களைக் கச்சணிந்த தனபாரங்களையுடைய பார்வதி பாகங் கலந்துறையும் பரிதீசருக்கணிந்து பணிகுவோர் நீங்குதற்கரிய சஞ்சித வினைகள் நீங்கிச் சிவபெருமா னருளாற் சிறப்புற்று வாழ்வார்கள் என்றவாறு. (நக)

நன்மை தீமை யறம்பாவம் நாடிப் பகுக்க வறிவில்லாப்
புன்மை யுடையோர் வழியொழுகிப் போவார் போக விசைபாமல்
மன்னிப் பரிதி வனத்தெல்லை மருவி யிரவொன் றிருந்திடினும்
பொன்னி னுலகை யாள்வாரேற் புகல்வ தெவனத் தலமகிமை

நன்மையென்றுந் தீமையென்றுந் தருமமென்றுங் கருமமென்றும் நோக்கிப் பிரித்தறிய ஞானமில்லா அற்பருமியோரும் வேற்றுருக்குப் போவோர் போகப் பொழுதின்றிப் பரிதிவனத்தெல்லையிலடைந்து ஓர்இரவு தங்கியிருந்தோரும் சொர்க்கலோகத்தைப் பரிபாலிக்கும் பாக்கியமடைவாரெனில் இவ்வளவென்று அப்பரிதிவன மான்மியத்தைச் சொல்லுதற்கேவரார் கூடும் கூடாது.. எ-று. (நஉ)

ஆகச்சருக்கம் ச-க்குக் கூடிய செய்யுள் ௱௪௧.

தலவிசேடச் சருக்கம்

முற்றிற்று.

தீர்த்தவிசேடச்சருக்கம்.

சுருதி யுரைத்தபடி யுணர்ந்து சுத்தமன தா யானடியில்
ஒருவா திருக்கு மன்புடனே யுள்ளங் குளிரக் கண்குளிரக்
கருதிப் பூசைபுரிந்து மிகக்களித்து நாளு மின்பமுறும்
பரிதிநேமத் தலமகிமை பகர்ந்தே தீர்த்தம் பகருவாம்

வேதாகமங்கள் கூறிய நிச்சயித்தை யோர்ந்து நிஷ்களங்க சித்தனாய்ச்சிவ பெருமான் பாதாரவிந்தத்து நீங்காமலிருத்திய அன்புடனே மனமுங்கண்ணும் மதிபோற் குளிர மார்க்கண்டேயர் ஆனந்தமிகுந் தர்ச்சித்து வேண்டியவரங் களைப் பெற்றின்புற்ற பரிதிவனத் தலமான்மியத்தைச் சொல்லினோம்இனித் தீர்த்தவிசேடச் சருக்கத்தைச் சொல்லலுற்றாம்...எ-று. (க)

வினைகளகற்றத் தீர்த்தமதாய் விளங்குமறு பானறுகோடிப்
புனிதமதி தைப்பூசநாள் பொருந்துங் காலைபிரயாகை
தனிலேபடிந்து மம்மதியிற் சாரிரத சத்தமிப் பகலில்
இனிய திருவேணியிற் படிந்துமெய்துந் தூய்மையெனு நூலே

உலகின்கணுள்ளவருடைய தீவினையைத் தீர்க்கத் தீர்த்தரூபமாய் விளங்கும் குற்றமற்ற அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் தத்தமது சுயரூபமாய்த் தைமாதப் பூச நட்சத்திரத்தன்று காலையில் ஸ்நானஞ்செய்து அத்தைமாதத்தில் சார்ந்த ரதசத்தமியன்று பகலில் இனிதாகிய திருவேணியில் முழுகிப்பரிசுத்தத்தை யடையுமென்று வேதங்கள் முறையிடுகின்றன. எ-று. (உ)

ஆடுகின்றோர் மாசனைத்து மகத்திற்கொள்ளு நதிமடவார்
தேடிவந்து திரிவேணி சங்கந்தனிலே திளைப்பதனாற்
கூடுகின்ற பாவத்தாற் கொதித்துக் கங்கை யவைநீக்க
ஏடுவிரியு மலரோன்பா லெய்தியிறைஞ்சி முறையிடலும்

தன்னிடந் தேடிவந்து முழுகுவோருடைய குற்றங்களனைத்தையும் ஏற்றுக்கொண்டு அவரைப் பரிசுத்த ராக்கிவிடும் தீர்த்தரூபமாகிய மேற்கண்ட அறுபத்தாறுகோடிப் பெண்களும் தங்கள் பாபங்களை யொழிக்கத் தேடிவந்து ஈசனது சடாபாரத்தினின் றுதித்த திருவேணிச் சங்கத்தில் மூழ்குவதால் அவரிடத்திருந்து தன்னிடம் வந்து கூடிய பாவத்தைச் சகிக்கொணாமல் கங்கையானவள் கொதித்து அப்பாதகங்களை நீக்கும் வழியையோசித்து இதழ்கள்விரியும் செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனிடத்திற் சென்று நின்று வணங்கித் தன்குறையை முறையிட்டனள்...எ-று (ந)

தீர்த்தவிசேடச்சருக்கம்

மலரோன் கங்கைதனை நோக்கி மகிழ்ந்து பரிதிவனந் தனிலே
இலகும்பரன் சந்நிதி முன்னிருக்குஞ் சூரியபுட்கரிணி
மலமதகற்றத் தக்கததின் மருவியுனது மாசகற்றி
நலமதுறுவாயென வெந்தநாள்யான் சேர வெனவில்வான்

தேன்றுளிக்குஞ் செந்தாமரையில் வசிக்கும் திசைமுகனாகிய பிரமன் மகிழ்ந்து கங்கையைப் பார்த்துப் பிரகாசமிகுந்த பரிதிவனத்தில் பெருமான் திருச்சன்னிதானத்தின் முன்னிருக்கும் சூரிய புட்கரணி என்னுந்தீர்த்தம் தன்னிடத்தில் படிவோருடைய பாவங்களைநீக்கிப் பவித்திரஞ்செய்யத்தக்கது ஆதலால் நீயும் அதிற்சென்று முழுகி உனது குற்றங்களை யகற்றி நன்மை பெறுவாயெனச் சொல்லக்கேட்ட கங்கையானவள் யான் எந்தத் தினத்தில் அவ்விடஞ் சேரவேண்டியதெனக் கேட்கப் பிரமதேவன் சொல்லுவான்... என்றவாறு. (சு)

கடகந்தனிலே தேவகுரு கலந்தேவரு மோராண் டளவங்
கடகக் கரத்தாய்நீ யந்தக்கமழ்பூம் பொய்கை கலந்துவந்தித்
தடருமுனது மாசனைத்து மகற்றியுறையு நிலக்கெய்தி
யிடலாத் தவிர்ப்பான் வந்தடுத்தோரேதம்பலவுந் தீர்ப்பையென

கற்பதித்த கங்கணந்தரித்த கரங்களையுடைய கங்கையே கற்கடகராசியுடன் பிரகஸ்பதி கலந்துவரும் ஓர்வருடம் வரையில் நீபரிமள மிகுந்த பல நீர்ப் புட்பங்கணிறைந்த அச்சூரிய புட்கரணியின் மூழ்கிச் சிவபிரானைத் துதித்து உன்னிடம் நெருங்கிய குற்றமுற்று மகற்றிப் பின்பு நீதங்கியிருக்கும் தலஞ் சென்று நின்று தங்கள் துன்பத்தைத் தவிர்க்க உன்னைத்தேடி வந்தடுத்து மூழ்குவோர் குற்றங்களைப் பரிகரித்துக் குறைவற்று வாழ்குகவென்றார் பிரமதேவன்...எ-று. (கு)

அயனுருரைத்த மொழிப்படியே யமலமான சுராநதியும்
வியவா வீராறாண் டளவு மிடன்றான்றீர்ந்து குருகடகம்
நயவா நிற்குமோ ராண்டுநண்பாய்ப் பரிதிபுட்கரிணிப்
பயனார்தீர்த்தம் படிந்திருந்து பாவமகற்றும் பரிசுற்றாள்

பன்னிரண்டு வருடம் வரையில் தன்னிடம் வந்து மூழ்கியபாதகாது பாபங்களை ஏற்றுத்தனது வல்லமைகுன்றிய கங்கையானவள் சந்தோஷித்துப்பிரமன் சொல்லிய மொழிப்படி குருவானவர் கடகராசியில் ஆசையோடமர்ந்து நிற்கும் ஓர் வருடம் வரையில் பலனைக்கொடுக்கும் சூரிய புட்கரணியின் மூழ்கியிருந்து பாபங்களை நீக்கும் பண்பையடைந்தாள்...எ-று. (சு)

ஆண்டொன்ற மலபடிந்திருக்கு மந்நாடனிலே தேவதவம்
பூண்டமுனிவர் சித்தர்முதற் புனிதயோகு புரிந்திடுவோர்
ஈண்டிப் பரிதிபுட்கரிணி யெய்திப்பணிந்து குங்குமத்தால்
வேண்டிக்கங்கை யாயிரம் பேர்விளம்பி யருச்சித்திறைஞ் சிடுவார்

இவ்வாறு ஓர் வருடகாலம் கங்கை இடைவிடாது சூரிய புட்கரணியில் மூழ்கி இருக்கும் அக்காலத்தில் தெய்வத் தன்மையாகிய தவத்தைமேற்கொண்

தீர்த்தவிசேடச்சருக்கம்

டொழுகுமுனிவர்களும் சித்தர்முதலியோரும் களங்கமற்ற யோகியர்களும்சேர்ந்து சூரியபுட்கரணியி லடைந்து வணங்கி மங்களகரமாகிய குங்குமங்கொண்டு அநேக விதமாய்வேண்டி கங்கையினது பல்லாயிரம் பெயர்களை உச்சரித்து அர்ச்சனைசெய்து ஆனந்தித்தார்கள் . எ-று. (எ)

கங்கைதானே ராண்டாடிக் கனமாச கற்றிப் புனிதமுறுந்
துங்கமல புட்கரிணி தோய்ந்தோர் பலனை யென்சொல்வாந்
திங்க ளிரவி யொன்றாகச் சேருங்கால முவாமதிநாள்
பங்கமறவே யப்பகலிற் பரிவாய்ப்படிவார் பலனுறுவார்

இவ்விதம் தெய்வத்தன்மையிற் சிறந்த கங்கையானவள் ஓர்வருட மூழ்கித் தனதும்பெருத்த பாபங்களை யகற்றிப் பவித்திரமாக்கிய பரிசுத்தமாகிய சூரிய புட்கரணியில் மூழ்கினோர் அடையும் பலனையாதென்று சொல்லத்துணிவது சந்திரசூரியர் ஒன்றாகச் சேருங்காலமாகிய பௌர்ணமையிலும் சோமவாரத்திலும் தாங்கள்செய்த குற்றமுற்றும் அற்றுப் போம்படி மத்தியானத்தில் மூழ்குவோர் ஆசையிருந்த அநேக பலன்களை அடைவார்கள்.. எ-று. (அ)

கதிரோன் கும்பமுறமதியிற் கலைசேர் பருவமக நாளில்
விதியாய்ப் பரிதிபுட்கரிணி விரை நீராடு பவர்கருணை
நிதியாஞ் சிவசங்கரனருளை நீங்காரவர் தம்பிதிர்க்களெலாம்
பதியாய்ச் சுவர்க்கமதையாளும் பரிசுற் றின்பம்பருகுவரால்

சூரியன் கும்ப ராசியில் வருங்காலத்துச் சந்திரனிடம் சோடசகலைகள் நிறைந்தபௌர்ணமியிலும் மகநட்சத்திரத்திலும் ஆகமவிதிப்படி புட்பங்களின் சுவாசம் நிறைந்த சூரிய புட்கரணியின் மூழ்குவோர் கிருபாநிதியாகிய சிவபிரானருளை நீங்காதவராய் அவர் பிதிர்க்களெல்லாம் தமது சுயநாட்டைப்போல் சொர்க்காதி போகங்களை அநுபவிக்குந் தன்மையராய் இன்புற்றிருப்பார்கள் என்றவாறு. (கூ)

கங்குல்தனில் வெண்டுகில் மேற்கண்டுயின்று வெண்ணெயொடு
சங்கந் தவிர்த்துத் தூயவனந் தானுண்டொழுக்க மாயொழுகித்
திங்கண்முழுது மாசமதிற் செய்ய பரிதித் தடமூழ்கிற்
பங்கமகன்று மகப்பெறுவர் பரமனருளின்படி நிசமே

இரவிதோறும் வெள்ளைவஸ்திரம் விரித்து அதன்மேல் நித்திரைசெய்து யாதொருவர் கூட்டுறவின்றி வெண்ணெயுடன் சேர்ந்த பரிசுத்தமாகிய அன்ன முண்டு ஆசாரந்தப்பாமல் மாசிமாத முழுதும் செவந்த சூரிய புட்கரணியில் மூழ்கினவர்தங்கள் குற்றமகல்வதுமன்றிப் பரமனருளால் நன்மகப்பேறுமடைவர் இவ்வசனம் உண்மையாம் எ-று (ய)

மாசமதி முப்பது நாளு மனமே விரும்பிக் கதிர்த்தடத்தி
லேக மதியாய் நீராடி யிறைவன் பதங்க ளிறைஞ்சிடுவோ
ராகங் குளிரச் சொற்பனத்தி லானோர் கனிகளலது மலர்ப்
பாகமுறவே தாஞ்செய்கள் பலிக்குஞ் சொன்னேன் சத்தியமே

தீர்த்தவிசேடச்சருக்கம்

மாசிமாத முப்பதுநாளும் நற்புத்திரப் பேறிச்சித்துச் சூரிய புட்கரணியில் ஏகமனதாய் ஸ்நானஞ்செய்து சிவபிரான்றிருப் பாதங்களைத் தெரிசித்து வணங்குவோர் தேகங்குளிரும்படி அவர்களுடைய சொற்பனத்திற் கனிகளாவது புட்பங்களாவது இவ்விரண்டிலொன்று ஈசன்றிருவுளமிரங்கிக் கொடுக்கப் பெற்று அதனாற் புத்திர சம்பத்துண்டாகிப் பிரபலித்து வாழ்வார்கள் இதுசத்திய வார்த்தையாகச் சொன்னேன் . எ-று. (௰௧)

ஆனே டவனி யெண்ணெய் துகிலக்காரம் நெல்லுப்புடனே
வானோர் கனக மிரசதமு மறைகூர்தச தானமதாகுந்
தானே யிதற்குப் பிரமாணஞ் சாற்று மூவர்க் கமுதீயுந்
தேனே மூவர்க் கோராண்டு செழிக்க வுணவீ வதுவவனி

*பசு-பூமி-எள்-நெய்-வஸ்த்திரம்-சருக்கரை-நெல்-உப்பு-உழுமாடு-பொன்-வெள்ளி என்னும் பத்துவித தானங்களாகும் இதற்குப் பிரமாணம் வேதம் இதுவுமன்றி மூவருக்குப் பிரதிதினம் தேன்போல் ருசிக்க ஓர் வருடம் அமுதிடவேண்டும்...எ-று. (௧௨)

வள்ள நான்காந் திலநெய்தான் வள்ளமொன்று துகிரண்டு
தெள்ளிதான வக்காரஞ் சேர்தாமெட்டு நெல்லுப்பு
கள்ளமில்லா மூவாறு காணும் வள்ளக்கணக்காகு
மொள்ளிதாம் பொன்னிரண் டரையா மொளிசேர் வெள்ளி முக்கழஞ்சு

†நான்கு கிண்ணம்-எள்ளு-ஓர் கிண்ணம் நெய்-வஸ்த்திரம் இரண்டு-குற்றமற்ற சர்க்கரை-எட்டு சேர்-நெல்லும்-உப்பும்-வகையொன்றிற்குக் கணக்காகப் பதினெட்டுக் கிண்ணம்-பிரகாசம்பொருந்திய பொன் இரண்டரைக்கழஞ்சு வெள்ளி மூன்று கழஞ்சு.. எ-று. (௧௩)

இயம்பு மிந்தத் தசதான மெழிலார் பரிதித் தலத்தீர்த்தக்
கயங்க ளிரண்டிற் புரிந்துபெருங் கருணா நிதியாய் விளங்குகின்ற
சுயம்பைப் பாவி யருச்சித்தோர் சுகமா யிருமைப் பலனெய்தி
நயம்பூண் டிடுவ ரவர்பிதிர்க்க ணளினத் தயனூர் பயனுறுவார்

மேற்சொல்லிய இத்தசதானங்களும் அழகுபொருந்திய இப்பரிதிவனத்துள்ள இரண்டு தீர்த்தங்களினுஞ் செய்து தயாநிதியாய் விளங்காநின்ற சுயம்புலிங்கத்தைத் துதித்தருச்சித்தோர் இம்மை மறுமைச் சுகானுபவமெய்திநன்மையடைவதுமன்றி அவர் பிதிர்க்கள் முழுவதும் தாமரைவாசியாகிய சதுர்முகப்பிரமனது சத்தியலோகத்தையடைந்து நித்தியானந்தராய் வாழ்வார் எ-று.(௧௪)

குருதி வாரங் கடைப்பூரங் கொண்ட நாளுங் கூடிடுங்காற்
பரிதிவனத்துப் பொய்கைகளிற் படிவார் பாவம் பறக்குமென
வுரிமையாகு மிதுவன்றி யொளியு முமைக்குஞ் சங்கார்க்கும்
மருவார் மலர்க ளணிவிப்பார் மருவி வாழ்வார் சிவபதமே

---

*எள் நெய் என்பதை எண்ணெய் எனச் சேர்க்கில் உழுமாடு தேவையில்லை.
† பூமியையும்-பசுவையும் சேர்க்கில் தசதானம்.

தீர்த்தவிசேடச்சருக்கம்

செவ்வாய்க்கிழமை பூரட்டாதி நட்சத்திரஞ் சேர்ந்த நாளிற் பரிதிவனத் துள்ள இரு தீர்த்தத்தும முழுகுவோர் பாதகங்களனைத்தும் பறக்குமெனல் உண்மையாகும் இதுவுமன்றிப் பார்வதிக்கும் பரமசிவனுக்கும் மேற்கண்ட தினத்திற் பரிமளமிகுந்த மலராலலங்கரித்தர்ச்சிப்பார் சிவபதத்திற்சேர்ந்து சிறப்புற்று வாழ்வார் . எ-று. (௧௫)

ஆடித்திங்க ளமாவாசை யந்தத் தலத்திலிரு தீர்த்த
மாடித் தருப்பணஞ் செய்யில மராவர் பிதிர்க்களெலாங்
கோடி ஸ்நானந் திருவேணி கூடுமிடத்திற் செய்ததுவா
நாடி ரவி மதியதனை நாகந் தொடரு நாளதிலே

ஆடிமாத அமாவாசையில் அத்தலத்துள்ள காதீர்த்தத்தும் சூரியபுட்காணி யிலும் மூழ்கித்திலதர்ப்பணஞ்செய்வோர் தேவராவார்கள். அவ்அவர்பிதிர்களனை வரும் திரிவேணிசங்கத்திற்கோடித்தரம் ஸ்நானஞ்செய்த பலனைக்கொடுக்கும் இதுவுமன்றிச் சூரிய சந்திரானை ராகு கேதுவெனுங் கோட்கள் தீண்டுங் கிரண காலங்களில்...எ-று. (௧௬)

தேவ தீர்த்தமதிலாடித் திலதர்ப்பணங்க ளியற்றியபின்
பாவமகற்று புஷ்கரிணி படிந்த தானாதிகள் பண்ணி
மேவிச் சிவபெம்மா னடியைவிரும்பித் தொழுவார் மாபனைத்துந்
தேவ ராவா ரெனவுரைப்பர் தெளிந்த நூல்க டெரிந்தோரே

தேவதீர்த்தமென்னுங்காதீர்த்தத்தில்மூழ்கித்திலதர்ப்பணஞ்செய்தபின்பு பாதகங்களனைத்தையும் நீக்கும் சூரியபுட்காணியினு முழுகித் தானதருமங்க ளியற்றி அவ்விடத்திருந்தேகிச் சிவபிரான்றிருவடிகளை ஆசையுடன் பணிபவர் வமிசங்களனைத்தும் தேவர்களாவா ரென்பதற் கையமில்லையென்று பரிசுத்த மாகிய நூல்களாய்ந்தோர் உரைசெய்வார்...எ-று. (௧௭)

காதீர்த்தத்திற் பிதிர்க்குள்ள கரும முடித்துப் பரிதிபுரி
யாதீர்த்தத்தி லிராடி மணித்தென்கரையி னரசடியிற்
சூரவர்க்கினிய தர்ப்பணங்கள் கொடுப்போர் பிதிர்கள் பொருந்தலர்தம்
புரமெரித்த சிவன்பதத்திற் புகுவாரென்று புகல்வாரே

தெய்வத்தன்மை மேவிய காதீர்த்தத்தின் முழுகிப்பிதிர்களுக்குச் செய்ய வேண்டுங் கடன்களை முடித்து மற்றும் சூரியபுட்காணியின் முழுகி அழகிய தென்கரையில் நிற்கும் அரசடியில் பிதிர்களுக்குரிய தர்ப்பணங்களைக் கொடுப் போருடைய பிதிர்க்கள் திரிபுவனங்களைச் சிரித்தெரித்த சிவபெருமான் திரு வடிகளிற் சேர்ந்தின்புறுவார்...எ-று. (௧௮)

மாகத்திங்க ளிருதீர்த்த மகிழ்ந்தே யுதயாதியிலாடி
யேகப் பொருளாம் பரிதிசரினைத்தான் பரவ விசைவோர்கள்
போகந் துய்த்து நற்பதவிற் பொருந்தப் பெறுவா ரெந்நாளும்
ஆகமிழச் சிவனடிய ரவரிதற்கோரைய மின்றே!

தீர்த்தவிசேடச்சருக்கம்

மாசிமாதத்துக் காதீர்த்தம் சூரியபுட்காணி என்னும் இரு தீர்த்தத்தும் வைகறைப்பொழுதில் மூழுகி ஒப்பற்ற பரமபொருளாகிய பரிதீசாது உபய பாதாரவிந்தங்களை வணங்குவதற்கிசைந்த மனமுடையோர்கள் இந்திரபோகங்க ளனுபவித்து நற்புத்திரர்களைப் பெறுவதுமன்றி என்றென்றும் ஆனந்தத்தை மேற்கொள்ளும்படியாகிய சிவனடியருமாவார்கள் இதற்குச் சந்தேகயில்லை... என்றவாறு. (கக)

கும்பமதியி னமாவாசைக் குளிர்நீராடக் காதீர்த்த
மிம்பர தனின் முக்கியமா மிதனிற் படிந்தோர் தங்கள்குலம்
பம்பும் பிதிர்க்க ளனைவோரும் பாபமகன்று பரிசினரா
யும்ப ரிறைஞ்ச வான்பதியி லுறைவாரது விட்டொழியாரே

மாசிமாத அமாவாசையன்று குளிர்ந்த ஜலம் நிறைந்த காதீர்த்தத்தின் முழுகுவதற்கு இவ்வுலகின்கண் முக்ய நாளாகும் அக்காலத்தின் முழுகி னோர் குலங்களில் நிறைந்த பிதிர்க்கள் சகலரும் பாபம் நீங்கிய தன்மையராய்த் தேவர்கள் வணங்க மேலாகிய முத்தி வீட்டின் வாழ்வார்கள் அதைவிட்டு என் றென்றும் நீங்கார்கள்...எ-று. (உய)

மீனமதியின் பருவமதில் மிக்கவுச்சிப் பகலதனில்
வான விரவித் தடம்படிந்தோர் மகவானுத னிச்சயமா
மூனமில்லாத் திலமதனை யொளிருஞ் செப்புக்கலத்திலிட்டுத்
தானஞ்செய்வோர் புவிமுழுதுந் தானஞ் செய்த பலனடைவார்

பங்குனிமாதப் பூரணையில் உச்சிகாலத்துச் சூரியபுட்காணியில்மூழ்கினோர் உண்மையாகத் தேவேந்திரனேயாவர் யாதொரு குற்றமில்லா எள்ளைப் பிரகா சம்பொருந்திய செப்புப் பாத்திரத்திலிட்டுத் தானஞ்செய்வோருக்கு இப் பூலோகமுழுதுந் தானஞ்செய்த பிரயோசன பலனைக்கொடுக்கும். எ-று. (உக)

அந்தமதியி லமாவாசையான பகலிலப்பதியி
னந்தூர் தடங்க ணீராடி நலமா வெள்ளி யீவோர்கள்
சொந்தமான பிதிர்க்க ளெல்லாந் தொலையா விருபத்தெண்கோடி
பந்த நரகம் விடுபட்டுப் பாங்கா யயன்றன் பாலுறைவார்

. மேற்கண்ட பங்குனிமாத அமாவாசைப் பகலில் அப்பரிதிவனத்தில் சங்கு கள் தவழும் தடாகமாகிய இரு தீர்த்தத்தினு முழுகி ரஜிததானங் கொடுப்ப வர்களின் சொந்தமாகிய பிதிர்க்களனைவோரும் நீங்கரிய பந்தமாகிய இருபத் தெட்டுக்கோடி நரகங்களினின்றொழிந்து பிரமதேவனுறையும் சத்தியலோகத் தினிடத்திற்றங்கி வாழ்வார்.. எ-று. (உஉ)

ஆதித்தன் றன்தீர்த்த மதினருகாய் விரிபிப் பிலத்தடியிற்
பாதியனுவி னளவெனினும் பரிந்தேதேனு மீயிலது
சோதிக்கனக வரையளவாய்த் தோன்றுஞ் சிவனுக் கற்புதமாய்க்
கோதில் பிதிர்க்க ளின்புடனே குறை வற்றென்று மகிழ்வாரே

தீர்த்தவிசேடச்சருக்கம்

சூரியபுட்கரணித் தீர்த்தத்தின் சமீபத்திலுள்ள விசாலமாகிய அரசமரத்தி னடியில் யாதொரு பொருளேனும் அணுவிற்பாதி அவ்வளவேனும் அன்புடன் கொடுக்கில் அவ்வணுவிற் பாதியானது பிரகாசிக்கும் பொன்மலையாகிய மேரு கிரியளவாய் வளர்ந்து தோன்றும் அப்பொருள் அப்பரமசிவனுக் கற்புதமாய்க் குற்றமற்ற பிதிர்களையும் யாதோர் குறைவின்றி ஆனந்த பரவசமடையச் செய் யும்...எ-று. (உங)

சாடிமதியி லத்தடத்திற் சாரு மரசினடிதனிலே
தேடியொரு பூசுரனுக்குத் தெவிட்ட வன்ன மளிக்கிலது
கோடி மறையோர்க் கமுதளித்த குணமாய்ப் பிதிர்க்கள் சுவர்க்கத்தி
லாடிப்பாடி யானந்த மடையச்செய்யு மெந்நாளும்

மாசி மாதத்தில் சூரியபுட்கரணி தீர்த்தத்தருகில் சார்ந்த அரசமரத்தடியில் எங்காகிலும்போய்த் தேடி அழைத்துவந்த ஓர் பிராமணனுக்குத் திருப்திகர மாய்த்தெவிட்டும்படி சட்சுவைப்பதார்த்தத்தோடமுது படைக்கில்அதுகோடிப் பிராமணருக்கு அமுதளித்த பலனும் அவ்வவர்கள் பிதிர்க்கள் சுவர்க்கபதவியில் ஆடிப்பாடி எந்நாளும் பின்னமாகா ஆனந்தத்துடன் இருக்கச் செய்யும் என்றவாறு. (உச)

எள்ளைச் செப்புக் கலன்றனிலே யிட்டத்தலத்தி லியல்பாகக்
கொள்ள மறையோர் தனக்களிக்கிற் கொடுத்தோரந்த வெட்கணித
முன்னதாகு மாண்டளவு மும்பர் பரவச் சிவனுலகிற்
றெள்ளிதாக வாழ்வரெனச் செப்புவார் நூலறிந்தோரே

செப்புப்பாத்திரத்தில் எள் நிறைத்து அப்பரிதிவனத்துள்ள பிராமண ரேற்றுக்கொள்ள மனமகிழ்வுடன் தானஞ்செய்வோர்கள் ஒரு எள்ளிற்கொரு வருஷகாலக்கணக்காய்த் தேவர்கள் வணங்கச்சிவலோக வாழ்வடைந்துஸ்திரமா யிருப்பரென்று நூலறிந்த மேலோர்கள் இயம்புவார்கள்...எ-று. (உரு)

கோதானந் தான்கன் றுடனே குளிர் புஷ்கரிணி யரசடியில்
வேதாதி கடேர்ந்தவர்க்கு விளங்கச் செய்யினப் பசுவின்
மீதாருரோம மொன்றினுக்கு மிகுநாளுண்டாமளவு சிவன்
பாதாம்புயத்தி னருகாகப் பதிந்துவாழும் பயனுறுவார்

குளிர்ந்த ஜலம் நிறைந்த சூரியபுட்கரணி தீர்த்தத் தரசடியில் வேதங்க ளோதியுணர்ந்த வைதிகராகிய ஒருவருக்குக் கன்றுடன் பசுவுந் தானஞ் செய் வோர் அப்பசுவின் சரீரத்திற்பொருந்திய ரோமமொன்றிற்கு நாளுண்டளவாகச் சிவபெருமானுடைய பாதாரவிந்தத்தருகாகப் பொருந்திவாழும் பலனையடை வார்கள்.. எ-று. (உசா)

பூமிதானம் பரிதிவனப் புனித தீர்த்தக் கரைதனிலே
சேமமாக விருந்தளிப்போர் நிகரிலன்னோர் நிலந்தனிலே
சேமப் பைங்கூழ் விளைதொறுஞ் செழிக்குமதனோ ராண்டெல்லாஞ்
சோமப் பிறைசேர் செஞ்சடிலன் றொல்லைப் பதத்திற் சுகமுறுவார்

இந்தப்பரிதிவன க்ஷேத்திரத்தின் பரிசுத்தமான தீர்த்தக்கரையில் நியமமாயிருந்து பூதானஞ்செய்வோர்கள் அவர்களுக்கு உரித்தாகிய காணிபூமியில் பயிர்பயிர்கள் வளர்ந்தோங்கி யெக்காலத்திலும் விளைவுகுறையாமல் செழித்துவரும். இம்மையில் இவ்வாறாக மறுமையில் சந்திரசடாதாரனாகிய சிவபெருமானது சிவலோகஞ்சென்று வாழ்ந்திருப்பார். எ-று (உஎ)

ஈரானன மதிசெலவம் இருந்தே யிருதீர்த்தமு மாடிச்
சீரார் பரிதிவனமாதர் திருத்தாள் போற்றி யம்பிகையின்
ஏரார் கமலப் பதங்கள் பணிந்திருபோதுஞ் செய்யபிடேக
நீரார்ந் திருப்போர் வினைப்பிணிக ணீங்கிமகிழ்ந்து நிலைபெறுவார்.

ஒரு வருடகாலபரியந்தம் இந்தப்பரிதிவன க்ஷேத்திரத்தில் வசித்துமேற்கூறிய இரண்டு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து மங்கள நாயகி சமேதபரிதியப்பரின் திருவடிகளைத்துதித்து வணங்கிக் காலை மாலைகளில் அபிஷேகமாகுந் தீர்த்தத்தையருந்தி யிருப்பவர்கள் பிறவிநோய் நீங்கப்பெற்று மனமகிழ்ச்சியுடன் நிலைபெற்று வாழ்வார்கள். எ-று (உஅ)

செய்ய பரிதித் தலந்தனையுந் தீர்த்தமிரண்டின் சீர்தனையு
மய்யமகலத் தியானித்தே யடிவாக்கிடைத்த தெதுவேனும்
வெய்யவெந்த விடத்திருந்தும் விரும்பிக்கொடுத்தோ ரந்தியத்தி
றய்யநமது பதமடைவா ரென்றார் சுயம்பாஞ் சுந்தரமே.

செவ்விதாகிய பரிதிவனஸ்தலத்தையும் இரண்டு தீர்த்தங்களையும் சந்தேகமில்லாமல் தியானித்துக்கொண்டு கையிற்கிடைத்தது எதுவாயிருந்தாலும் எந்த இடத்திருந்தும் விருப்பமாகக் கொடுத்தவர்கள் அந்தியகாலத்தில் பரிசுத்தமாகிய நமது சிவலோகத்தைச் சேர்வார்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார் சுயஞ்சோதியாகிய சுந்தரக்கடவுள் எ-று (உகூ)

இரவிதீர்த்தத் தடமதனை யிரவதன்றி யெய்திடுவோர்
சிரமே முதலாய் முண்டனமுஞ் செய்து திலதர்ப்பணஞ்செய்து
பரமென்றே சேத்திர பிண்டம் பாலிப்போர்க ளப்பிண்டத்
தொருவன்னத்துக் கூழியொன்று யுறைவார் பிதிர்க்களுடனினிதே.

சூரியதீர்த்தத் தடாகத்தையடைந்தவர்கள் தலைஉரோமங்களை முண்டனமுஞ்செய்துகொண்டு திலதர்ப்பணஞ்செய்து க்ஷேத்திர பிண்டம்போடுவார்களையானால் அந்தப்பிண்டத்திலுள்ள ஒரு அன்னத்துக்கு ஒருஊழிகாலபரியந்தமும் பிதிர்த்தேவருலகத்தில் பிதிர்த்தேவர்களுடன் இனிதாய் வசிப்பார்கள். எ-று (௩௰)

பகலோன் பரவுஞ் சுயம்பினுட பரிசம்பரிதி புஷ்கரிணித்
தகவா மகிமை களுமெடுத்துச் சாற்று யென்னிற் றபனனுநற்
சுகமார் கங்கை யெனுமாதுஞ் சொல்லவரியோ மெனிலிந்தச்
சகமீதற்றோ ரறிந்திதனைச் சாற்றவடங்குந் தகுதியதே.

சூரியனால் பூஜிக்கப்பெற்ற சுயம்புமூர்த்தியின் மகிமையையும் சூரிய புஷ்கரிணியின் மகிமையையும் எடுத்துக்கூறுவதற்குச் சூரியனாலும் கங்காதேவியினாலும் சொல்லமுடியாதென்றால் இந்தப்பூமியிலுள்ள அற்பமானிடர்கள் எப்படியறிந்துசொல்லக்கூடும்! எ-று (௩க)

காட்சியாக வெதிர்தோன்றுங் கடவுளாகுங்கதிரவனே
சூட்சியாகப் பூசைபுரி சுயம்பு சுடரு மார்க்கண்டர்.
ஆட்சியாகத் தவம்புரியு மமல தலமுங் கங்கைபடி
மாட்சித் தடமு மன்னுமெனின் மகிமையுரைக்க வரம்புறுமோ.

உலகத்தில் பிரத்தியக்ஷதெய்வமாகத்தோன்றும் சூரியமூர்த்தியே வந்து பூஜைபுரியும் சுயம்புமூர்த்தியும், மார்க்கண்டேயர் ஸ்திரமாகத் தவம்புரியும் பரிசுத்தமானஸ்தலமும் கங்காதேவிபடிந்து தன்பாவத்தைப் போக்கிக்கொண்டதீர்த்தமும் பொருந்தியிருக்குமேயானால் இந்தப்பரிதிவன க்ஷேத்திரத்தின் மகிமையையுரைக்க அளவுபடுமோ எ-று

எள்ளுந் தியர்தீர்த்தத்தா லீடேறுவரென்பது வன்றி
உள்ளுந் தீர்த்த மகிமைகளை யுரைப்போருரைப்பக் கேட்டகங்கப்
புள்ளு நல்ல கதியதனைப் பொருந்திற் றென்றாற் பொய்கை நலம்
விள்ள வெமக்கெளிதாமோ விளங்கு கேள்விச் சவுனகரே.

இகழ்ச்சிக்குரிய நிலைமையாளர்களும் இந்தத்தீர்த்தத்தால் பாவம்நீங்கப்பெற்று ஈடேறுவார்களல்லாமலும் அதன்மகிமைகளைச்சொல்வோர் சொல்லக்கேட்ட பருந்தாகியபட்சியும் நல்லகதிமோட்சத்தை யடைந்ததென்றால் இந்தத்தீர்த்தத்தின் மகிமைகளைச்சொல்ல நம்மால் ஆகுமோ கேள்விச்செல்வத்தை யுடைய சவுனகரே. எ-று. (௬௬)

ஆகச்சருக்கம் ௫-க்குச் செய்யுள் ௩௬௩.

முற்றிற்று

சேனத்தின் பாவந்தீர்த்த சருக்கம்.

சீவராசியின் கண்ணெனுஞ் செங்கதிர்ப்பரிதி
யாவலாகவே தொட்ட தோர் தீர்த்தத்தினடைவும்
தேவதீர்த்தத்தின் மகிமையுஞ்செப்பினேஞ்சேனம்
பாவந்தீர்ந்து நற்பதமுற்றபரிசதுபகர்வாம்

உலகின்கண்ணுள்ள சகலஜீவகோடிகளின் திருவிழியையளிகர்த்த செங்கிரணச் சூரியன் அன்புடன்இயற்றிய சூரியபுஷ்கரணியின் மகிமையும் தேவதீர்த்தமென்னும் காதீர்த்தத்தின் மகிமையுந் தெரிந்தவரையிற் சொல்லினேம் பருந்தின் பாபந்தீர்ந்துபதவிபெற்ற பான்மையைச் சொல்லலுற்றாம்—எ-று (௧)

இனியநல்லமுதென்னநீர்வாய்மலர்ந்தசைத்த
புனிததீர்த்தத்தின் மகிமையாற்பொருந்தினமின்பம்
குனியுந்துண்டத்துச்சேனமும்பவனுற்றகொள்கை
கனியவோதெனச்சூதனுங்கழறலுற்றனனால்

உரிசையைப்பெருக்கும் தேவாமுதமென்னத்தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய குற்றமற்றதீர்த்தங்களின் பிரதாபத்தைக்கேட்டு இன்பமடைந்தோம் வளைந்தமூக்கையுடைய ஓர்பருந்து இத்தீர்த்தமகிமையைக்கேட்டுப் பதவியடைந்ததன்மையைமனக்கனிவுடன் சொல்லுவீரெனக்கேட்ட சவுனகருக்குச்சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்—எ-று (௨)

புண்ணியங்களெல்லாமொருபடிவமாய்ப்பொலிந்து
நண்ணிவாழ்கின்ற வாரியாவர்த்தன நாட்டில்
தண்ணிலா மதிதவழ் தருமாடகூடங்கள்
எண்ணிலாத் தருமா வரமெனவுண்டோரகரம்

தருமமென்பவைகளனைத்தும் ஒருவடிவமாய்ச்சிறந்து பொருந்திவாழ்கின்ற ஆரியாவர்த்தனமென்னும்நாட்டில் குளிர்ந்தநிலவைவீசுஞ்சந்திரன் ஊர்கின்ற உயர்ந்தஉப்பரிகைகள் அளவில்லாதிருக்கும்தருமாவரமென்னும்பெயர்பூண்டஓர் அகரம் உண்டென்றவாறு—எ-று (௩)

தரும மாவரமெனு மகரந்தனிற் சார்வோன்
பிரம சர்ம்மனென் றியாவரும் விளித்திடும்பெயரோன்
அருமறைக் குலநான்குடனங் கங்களாறும்
தெரியுங் கல்வியுங் கேள்வியுந் தெளிவுறுந் திறலோன்

அத்தருமாபுரமென்னும் அகரத்தில்வாழ்வோன் பிரமசருமனென்றி யாவரு மழைக்கும்பெயரையுடையோன் பிராமணவமிசத்திற்பிறந்தோன நான்குவேதமும் ஆறுசாத்திரமும் நன்கோர்ந்தோன் கல்வி கேள்விகளிற்றெளிந்துதேறியவல்லவன் என்றவாறு. (௪)

G

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

நித்தியம்புரி நியமங்க ளொழுவுறு நெறியாஞ்
சுத்த மாகிய வொழுக்கமே வுயிரெனச் சூழ்ந்து
கொத்தலர்க் கொடுநம் பனைக்குறை யறக் குறித்துப்
பத்தியாகவே பூசனை புரிந்திடும் பரிசோன்

அனுதினமுஞ்செய்யும் நியமங்களில் அனுவளவுந்தவறாதவன் நல்வழிக்கு உரித்தாகியபரிசுத்தஆசாரமே தன்னைவிட்டகலாது ஆவியைப்போற்சூழக்கொத் தாகச்சாத்தியவலர்ந்த புட்பங்களால் குறைவற்றபக்தியுடன் சிவபிரானைக்குறித்து நாடோறும் பூசிக்குந்தன்மையுடையோன்—எ-று (௫)

மகத்தெழுந்தழன் மூன்றையும் வளர்த்திடும் வளத்தோன்
அகத்தின் மன்னுயிர் தன்னுயிர் போலெணு மளியோன்
சகத்தி லொப்புர வாற்றலிற் றன்னையும் விற்று
மிகுத்திடும் புகழ்விரும்புவோன் றீமையைவீப்போன்

யாகத்துக்குரிய மூவிதஅக்கினிகளையும் வளர்க்கும்வளப்பத்தையுடையவன் மனத்தினகண மன்னுயிரைத்தன்னுயிர்போலெண்ணும் தயையுள்ளவன் சகத்தினிடத்துத் தருமஞ்செய்வதில் தன்னையுமவிற்றுக்கொடுத்து மிகுந்தபுகழைவிரும்புவோன் பாபங்களைப்பறக்கஅடிப்போனவென்றவாறு (௬)

தவஞ்செயுந் திருவாச் சிரமமுடையவர் தமக்குக்
குவித்தவன் புடன்றா யெனக்காக்கு நற்குணமும்
பவங்கடந்த விச்சையுந் தனிற்படரு நல்விருந்துக்
குவந்து போனக மூட்டிடு முறைமையு முன்னோன்

தவஞ்செய்யத்தகுந்த ஆசிரமத்தையுடைய அதிதிகளுக்கு அன்னையைப்போல் நிறைந்தஅன்புடன் ரட்சிக்குமநற்குணமும் பாதகத்தைக்கடந்த பக்ஷயத்தேடுமா சையும் தனவீடுதேடிவருமவிருந்தினர்க்கு ஆசையுடனஅன்னமூட்டிவளர்க்கும் வழக்கமும உள்ளவனென்றவாறு (௭)

தேவர்தென்புலத்தவ ரொக்கலுடன் விருந்தைவர்க்
காவதாகவே யீட்டிய நிதியினை யளிப்போன்
பாவரும் பொருட்சுவை யெனவினியவை பகரும்
நாவனும்மிய சினத்தினைச் சினந்திடு நலத்தோன்

தேவர்பிதிர்க்கள்உறவினர்தாஸ்வர்தவிருந்தினர்என்னும் ஐவருக்கும் உபயோகமாதற்பொருட்டுத்தான் நல்வழியில்வருந்தித்தேடியபொருளைப் பகிர்ந்து கொடுப்பவன் பாடலினுள்ளடங்கியபொருளின் இனிய சுவையைப்போலமதுரவசனம் பேசுமகாமையுடையவன் தன்னிடத்தெழுங்கோபத்தைமீறி எழாவண்ணம் சோயிக்குமநலத்தையுடையவன்—எ-று (௮)

பிறிலார் மடவார்களைத் தாயென வென்றும்
போதமே யுருவமாமென மதித்து நற்பொறுமை
நீதியென்னவும் பிறன்பொருளை விடமெனவும்
கோதினற்குணங்கொண்டு நிற்றினக்கலை குறுகான்

சேனத்தின் யாவந்தீர்த்தசருக்கம்.

ஆயலவர்பெண்டிரைப் பெற்றஅன்னையைப்போல் எண்ணுர் ஞானமே தேடற்கரிய சிரேஷ்டமாகிய தருமமெனச்சிந்தித்தும் பொறுமையே குற்றமற்ற தெனவும் அன்னியர்பொருளைவிடமென்னவும் குற்றமகன்றநற்குணங்களைக் கைக்கொண்டு சிற்றினத்தசொன்னுந் தீயர்சினேகத்தைத் தேடாதவன் என்றவாறு (௯)

சாதனிங்கிடமென்னினுஞ் சத்தியர் தவறான்
காதலானெறி பிழைதகிலாக் காமனென்றெவரும்
ஓதுறுந்திரு வழகுடையவனெளிதேயாச்
சீதமாமதி யெனமுக மிலங்கெழில் சிறந்தோன்

தனக்கிறப்புவராமற்போயவிடுமெனினும் சத்தியந்தவறிடவான்மோகத்தினால் கல்வழியைத்தவறுதமன்மதனென்றியாவரும் புகழுமழகுடையவன் பிரகாசமுங்கலையுங் குறையாதகுளிர்ந்த பூரணசந்திரன்போற் பிரகாசிக்கும் முகாலங்காரத்திற்சிறந்தோன் என்றவாறு (௧௰)

ஆயபூசரக்காளை தான்வேட்ட தோரரிவை
தூயதன்மையும் பதியுளக் குறிப்பினைத் தொடரு
நேயமோடெதிர் மொழிகரியனைகிலா நிலையும்
ஆயுமேலவாருந்ததி யிவளென வறைவார்

இவ்விதத்தன்மையுடைய பிரமசருமனென்னும் வாலிபப்பூசான் விவாகஞ்செய்துகொண்ட மனைவியானவள் பரிசுத்தகுணமும் புருடன் மனக்குறிப்பையோர்ந்து அதன்பின்றொடர்ந்தே சமன்பும் புருடன்வார்த்தைக்கெதிருத்தரஞ்சொல்ல நினைக்கிலாநினைவும் அறிந்தபெரியோர் அருந்ததியேயிவளென்று ஐயமறச் சொல்வார்கள் என்றவாறு (௧௧)

நாணுமச்சமும் மடமையும் பயிர்ப்புமெந்நாளும்
பூணும் பூணெனப் பூண்பவள் புத்தமுதமுநல்
வேணும் வீணையும் வெட்கிடு மொழியுளாள் வேட்டோன்
காணவும் முளங்கூசுவள் கமலையையனையாள்

நாணம் மடம் அச்சம் பயிரிப்பு என்னும் மகளிர்க்குரிய நற்குணங்கள் நான்கையும் அணியும் ஆபரணமென்ன அணிபவள் புதிய தேவாமுதமும் புல்லாங்குழலும் வீணையும் கேட்டு வெட்கப்பேசும் மொழியையுடையவள் தன்னைக்கொண்டவன்றனதழகைப்பார்க்கவும் மனங்கூசுபவள் செந்தாமரையில் வசிக்கும் சீதேவியை நிகாத்தவள் என்றவாறு (௧௨)

பச்சைமாமயிற் சாயலள் பதிபருகின்னவர்
மிச்சிலல்லது வேறொன்று மிசை விருப்பில்லாள்
நச்சுமாரமுத முமெனும் விழியினளல்ல
கச்சுற்றேயெழுநரி மருப்பாங் கனதனத்தாள்

பசியகலாமயில்போன்ற சாயலையுடையவள் தன் புருடனுண்டு மிகுந்த மிச்சமாகிய எச்சிலின்மேலல்லது வேறொன்றின் விருப்பமில்லாதவள் விஷமும்அமு

சேனத்தின் பாவந்திர்த்தசருக்கம்.

மும்போற் கருமையும் வெண்மையுங்கலந் தகண்களையுடையவள் மேன்மையாகிய சக்ரணித்தம யானைக்கொம்பைபொததெழும் பாரமாகிய தனங்களையுடையாள் என்றவாறு. (௧௩)

கலைசிறம்பிய முழுமதி தன்னையுங் கனக
மலையிரண்டையுந் தாங்கியோர் மழைமுகி லெழுமின்
நிலைகலங்கியே நிலத்தனி னிகழுவ தெனவுங்
குலவு பொற்கொடி சுசிலையெனறே பெயர் கொண்டாள்

ஓர் மின்னலான துசோடசகலை நிறைந்த பூரணச்சந்திரனையும் மேருமலை யிரண்டையுந்தாங்கி மழைபொழியுமேகத்தினின்று தவறி நிலத்தில் விழுந்து எழுந்து நடப்பதபோன்ற அழகிய பூங்கொமபு அவள் பெயர் நல்லொழுக்கமுடையளாத லாற் சுசிலையென்பார்கள்—எ-று. (௧௪)

நல்லறஞ் செயும்பிரம சர்ம்மாவு நங்கையுஞ்சேர்ந்
தில்லறம வழுவின்றியேயியல் புடனியற்றி
எல்லையில் வினிதின்ப மீதுறிட வெவருஞ்
சொல்லியே புகழ்விரித்திடச் சுகித்தினி திருந்தார்

தானதரும பரோபகாரமிருந்த பிரமசர்மாவும் அவன் மனைவி சுசீலையுங்கூடி இல்லறதர்மத்தில் யாதோர் தவறின்றி ஒழுக்கத்துடன் நடாத்தி அளவில்லாத வினியவின்பமதிகரிக்க இவர்கள் நன்னடக்கையை யாவருஞ் சொல்லிப்புகழ சுகாநுபவர்களாய் வாழ்ந்திருந்தனர்—எ-று. (௧௫)

பஞ்சபாணறு மிரதியு மென்னவே பரிவாய்
அஞ்சகத்தினை மொழிபயிலரிவையுமழகார்
கஞ்ச நாண்மலர் மார்பனுங் கருத்துறக் கலந்து
நெஞ்சமின்புறப்புணர்ந்து வாழ்ந்திருந்தனர்நிதமும்

புட்பபாணமேந்தும் மதனும் ரதியுமென அழகிய கிளியையொத்த மொழி பழகிய அழகிய சுசிலையுடன் அன்பாக அன்றபூத்த தாமரைமலர்மாலையணிதந் பிரமசர்மன மனமொத்துக் கலந்து சிந்தையானந்தமுடிச்சேர்ந்து வாழ்ந்திருந்தனர்—எ-று (௧௬)

குணங்களான் குறவாழ் பவர்பதிக்குத் தென்குடபால்
இணங்கவே யிரண்டி யோசனை யினிடை யிலகும்
பணைகோலுக கங்கணர் விழாப்பாதான புரத்தில்
இணைகுகா லுணர்ந்தான் மதவே வேறுமெழிலான்

இவ்வித குணங்களால் மேம்பட்டுவாழும் இவரது நாட்டுக்குத்தென்மேற்றிசையில் இரண்டுயோசனை தூரத்தில் பிரகாசிக்கும்படியுடைய நாகாபரணராகிய சிவபெருமான் வாழும் க்ஷேத்திரமாகிய பாதாளபுரமென்னும் பதியில் திருவிழா வருந்தினத்தந்த தெரிந்தான் சித்தசனையொத்த அழகிய பிரமசர்மன்—எ-று (௧௭)

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

உள்ளமான நூ களிப்புறவுமை யொருபால்சேர்
கள்ளறு மலரிதழியந் தாரற்குக் கணித்து
விள்ளொணு விழா நடப்பது கண்டின்பவெள்ளங்
கொள்ள வந்தனன் மனைவியோ டேகினன் குறித்தே

மனமகிழ்வுடன் பார்வதியை யோர்பாகத்திருத்திய தேன்பொழியுங் கொன்றைமாலையணிந்த சிவபிரானுக்கென்று நியமித்து நடாத்தும் திருவிழாவைக்கண்டு ஆனந்தமென்னுங் கடலிலாழப்பிரமசரிமன் தன்தேவியுடன்சென்றனன்-எ-று(கஅ

பாதங் கன்றிட நடந்து பாதாள வீச்சுரர்தஞ்
சீதபங்கயக் கழலிணை முடியுறச்சேர்த்தி
ஓதரும் விழாவுவந்து கண்டின்ப மீதூரும்
போதற்பாற்கரன் குகளறக் குடகடல் புக்கான்

இருவர் பாதங்களுங்கன்றிப்போக நடந்து பாதாளேச்சுரரது குளிர்ந்தபத பதுமங்களை தங்கள் சிரத்திற்பொருந்தச் சேர்த்திச்சொல்லற்கரியமங்களகரமாய் நடாத்தும் திருவிழாவைக்கண்டு ஆனந்தபரவசமாகுங்காலத்தில் சூரியன்மேற் கடலிற் புகுந்தொளித்தான்—எ-று. (க௯)

நம்மையின்புறவுயர்த்திச்செஞ்சடையிட நல்கும்
அம்மையப்பனு மரன்விழாக் காண்ப லென்றழகு
செம்மையா யொளிதிகழ் சீதளக் கதிரோன்
தம்மைத் தானுணர் ஞானியருளமெனச் சார்ந்தான்.

இவ்விதம் சூரியஸ்தமனமானவுடன் சீதளகிரணச்சந்திரன் நம்மனஞ் சந்தோஷிக்க யாவரினும் மேன்மைபெற நம்மையுயர்த்தித் தமது செவந்த சடாபாரத்திடங்கொடுத்தமர்த்திய அம்மையப்பனென்னும் பேர்பூண்டச் சிவபிரான்றிருவிழாவினைநாமுங் காண்பமென்று தனதழகு செவ்வையாய்ப்பிரகாசிக்கத்தன்னைத்தானுணர்ந்தஞானியருளத்தைப்போல நிஷ்களங்கமாய் ஆகாயமார்க்கத்தெழுந்தான் என்றவாறு. (உ௰)

மருவுகின்ற விச்சாரசர் மதியணிந் தோன்றன்
உருவதாமென வுணர்த்தல் போலொளி நிலா வென்னும்
திருவெண்ணீற்றினை யணிவித்துத் திகழ்ந்திடு சோதிப்
பொருவிறண் மதியெழுந்தது புணரியின் முகட்டில்.

தம்மிடஞ்சார்ந்த வித்தையின்ரசமாகிய உரிசையுணர்ந்தமதிவல்லோர் சந்திரசேகரனாகிய சதாசிவனுருவம் இவ்விதமாகிய வெண்மையேயென்று தெரிவித்தல்போல் பிரகாசிக்கும் நிலவென்னும் வெண்ணீற்றால்தான் தன்னை அலங்கரித்துக்கொண்டு ஒப்பற்ற வெண்சோதியையுடைய குளிர்ந்த சந்திரன் கடன்முகட்டில் எழுந்தான்—எ-று. (உக)

வேறு,

அண்டர் நாயகனுமமலனைப் பூசையன புடனியற்றியே மகிழும்
தொண்டர் தம்புகழ் போற் பரந்த வெண்ணிலவிற்றிருகையும் பிரமசர்ம்மாவும்
கெண்டை யங்கண ளோடாடலும் விநோதக் கிளர்ச்சியுங் கண்களி கூரக்
கண்டபின் கோயின மண்டபந்தனிலே கண்டுயில் கொளவிசைந் தனரால்

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

தேவர்பிரானுகிய சிவபிரானை அன்புடன் அர்ச்சித்து ஆனந்தமுறும் அடியமர்கள் கீர்த்தியைப்போற் பரவிய வெண்ணிலாததோற்றிய புண்ணியமாலையில் பிராசரிமாவுச சசிலேயும் மின்போன்ற விடுக்கையுடைய வேசையராடலும் விநோதாலங்காரங்களும் நேதானாக்கம் பெறப்பார்த்தபின் அவ்வாலய மண்டபத்துள் நித்திரைகொள்ளச் சேர்ந்தாரெனறவாறு. (௨௨)

துயில்கொள விரைச்சோலைப்புலி யாளுர் தயல்வரு தென்றலினுறும்
அயலுறு மலருமானம ச்சார்ந்து மதிகவாசந் தாலாலும
மயலுற விடர்கள் மதன வாகமத்தின் வருத்த வாவிசனைர் பாடும்
செயலினுலுந்தன்மாதினைப் புணரச் சிந்தையின் மோகமதுற்ருன்.

இவ்விதந் துயிலவேண்டி அவ்வாலயமண்டபத்துட்டங்கிய பிரமசர்மன் சந்திரனுலும் அசைந்துலாவும் குளிர்ந்ததென்றலாலும் அருகிலிருந்துவீசும் அலர்ந்த புட்பசந்தனகனபகஸ்தூரிவாசத்தாலும் மோகமீறியவாலிபாகள் கொக்கோகத்திற்கூறிய லீலாவிசனவிலயத்தைப்பற்றிய பாடல்கள் பாடுவதாலும் மனமயங்கித்தியங்கித் தன் மனைவியாகிய சசிலேயைச்சேர முடிவில்லாத மோகாவேசமடைந்தான் என்றவாறு. (௨௩)

உற்றதோர் மோகந் தனையறிவதனு லோதுங்கிய செயலுணர்ந் தடல
தற்றவன் வெருண்டே யெனமுனுன் வென்ற வான்சிலே யிறுத்தனனுமைதாள்
பற்றிய வரன்றன் காத்திலம்மி பதித்திடச்செய்த மென்றன்னே
வெற்றி கொண்டிட லெவ்வயனே வென்றுவில்லினைவளைத் தெதிர்கின்ருன்

அவ்விதந் தனக்குற்றமோகத்தை இவ்விடத்திற்றீர்க்கமுயலுவது தகாதெனப்பிரமசர்மன் தனதறிவினுல் சிக்கியதன்மையையறிந்து உடலற்றுருவிலியாகிய மன்மதன் கோபமீறி என்னேப்பூர்வத்தில் வெற்றிகொண்டஈசன வில்லைச்சீதைபொருட்டால் இராகவனுல் இருதுண்டாய் ஒடிப்பித்தேன் பார்வதியின்பாதத்தை அப்பரமனை குனிந்து தனதுகையாற்றூக்கி அம்மியின்மேலவைக்கச்செய்தேன் இவ்விதவல்லமைபடைத்தவென்னேயோ இப்பிராமணன் வெற்றிகொள்ளவல்லவனென்று தன் கரும்புவில்லைவளைத்து எதிர்கின்ருன் என்றவாறு (௨௪).

நின்ற வேளையம்பெய்யவு மறையோ னிலேகுலைந் தறிவது மிகவுஞ்
சென்றிசெய் மயக்கமோக சன்னத மாங்காரிருள் மூடிட வரிவை
நன்றென மீறுங் குயர்தனைத் தமுவச் சோலைசன் னுளமது கூசி
இன்றாம் பொழுதற் கிசைந்தவிம மோக வேதுவே தெனவினி துணர்வான்

இவ்வாறெதிர்த்துநின்ற மன்மதனுனவன் புட்பபாணங்களையெய்யவும் பிரமசரிமன் தனது மனதிலேயினின்றும் பொருந்து நேர்ந்து மயக்கி விசலங்கரியென்னும் இருள்மூடிக்கொள்ளத் தன் மனைவியாகிய சசிலேயினது மேருமலையொத்த விம்மிய தனங்களைத்தழுவியவுடன் அச்சசிலே தன்னுளம் நாணி மௌனமாகநின்றிடவப்பொழுது இம்மோகம்பிறந்ததற்கேதுவேதெனத்தனது மனதின்கண் ஆராய்பவனானுன்—என்றவாறு. (௨௫).

சேனத்தின் பாவநீர்த்தசருக்கம்.

தூமமதியங்கு மிடத்தினிலக்கினி சுடர்கின்றதென விவ்வாலயத்துள்
காமமேலிந்த லகத்தத்தைக் கேடு காட்டிடுமென் றறிந்தாலுஞ்
சோமனை நிகர்க்கும பதியுள வேட்கைச் சூழ்ச்சியை மறுத்திட லவனைச்
சாமுறன் புரியும பாதகமெனலாற் றடுத்திலனெனக் கருதினளால்.

புகையுள்ளவிடத்தில் அக்கினிசுடர்விட்டெழுமென்பதுபோல் இவ்வாலயத்தினிடத்து இவ்விதபோகம் உண்டாதல் கேட்டிற்கேதுவென முற்குறியாய்க் காட்டுவதென்று அடியாள அறிந்திருந்தாலும் சந்திரனை நிகர்த்த சுந்தரனான எனது கணவன் பமேருல்லாசத்தின் குறிப்பை வெறுப்புறச்செய்தல் சாகும்படிக்குச் செய்யும்பாதகமுமுண்டாமாதலால் காம தடுத்துக்கெடுத்தல் கூடாதென ச்சுசீலை நினைத்தவளாயென்றவாறு. (உசு)

சங்கரன் கோயிறனிற்பிழை செய்தாத்திணையெய்திடும் பாவம்
எங்களுக்குறினு முறவென்றன் பதிகொளிச்சையைத் தடுக்கிலேனென்று
மங்கையும் வாளாவிருந்தனளவனு மாவியேயிதழமுதருந்திப்
பொங்கிய மோகந்தணிந்தபின் னுணர்வு போந்தவன் புலம்புவன் மாதோ.

இவ்வீசன் சன்னிதானத்தில் இக்குற்றஞ்செய்வதனால் சேரும் பாதகம் எம்மிருவருக்குமுண்டாயினுமவருக கணவனகொண்ட ஆசையைத்தடுத்துக் கெடுக்கேனென்று சுசீலை வாய்பேசாமல் மௌனமாயிருந்தனள் பிரமசர்மன் அவளை ஆலிங்கனஞ்செய்தணைந்திணைந்ததராமுதம் பருகிப்புருஷப்ரகாவேச வெறி தெளிந்தபின் அறிவுவந்தவனாய்ப் புலம்பலுற்றான் என்றவாறு. (உஎ)

தேவரெல் லோரும் பணிதலாற் சிவந்த செய்யதாட் டேவ தேவனுமாய்
மூவரா யொன்று முதல்வன்றன் கோயின் முன்றிலிலாம்பிழையதனை
ஆவலா யியற்றும் புலையனா யுய்யு மாறு முண்டோ வெனவயர்ந்து
பூவரு மயனெப்பாகிய மறையோன் புலம்புகொண்டன னுணர்வுற்றே.

தேவர் யாவரும் வணங்கலாற் சிவந்த பாதாம்புயம்படைத்த தேவதேவனால் மூவராய் அம்மூவுருவுமோருருவாய் நின்ற முதல்வனது ஆலயமண்டபத்தின் முன்பின்யோசியாமல் அடாத இப்பிழையை அன்பாகச்செய்த நீசனுகியயாய்ப் பிழைக்கும்வழியுண்டோவெனத் தெளிவுகொண்டபின் சிந்தித்தயர்ந்து புலம்பினுன். செந்தாமரைப்புட்பத்தில் வசிக்குந்திசை முகனையொத்த பிரமசர்மனென்னும் பிராமணனென்றவாறு. (உஅ)

உண்டவர் தம்மை மயக்கிடுங்கள்ளி னூக்கமோர் கோடிக்கு மேலாய்க்
கண்டவர் கேட்டோர் நினைந்தவர் தமையுங் காதலாங் கடலிடுங் காமம
அண்டர்கண் முனிவர் தமையுமோர் ஞான மடைந்தவர் முதலெவர்களையுந்
தெண்டிரைத் துரும்பாய்ச் சுழறவாய்ப் பஞ்சாய்ச்செய்வதற்கையமுமுளதோ.

கள்ளின்சுபாவம் குடித்தவருவனையேமயக்கும் அதினுங்கோடிபங்குவல்லமையையத்தன்னிடங் குடியாய்க்கொண்டு கண்டவர் கேட்டவர் நினைத்தவர் என்னும் இம்மூவரையும் ஒருங்கே மயக்கி ஆசையென்னுங்கடலிலழுத்தி மோசஞ்செய்யும காமமென்னுங்கள்ளானது தேவர்களையும் முனிவர் யாவர்களையும் தமமைத்தா

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

முணர்ந்த ஞானியர்களையும் மயக்கிக்கடலில்விழுக்க துரும்பைப்போலவும் சூறா வளிக்காற்றிலகப்பட்ட இலவம்பஞ்சைப்போலவும் அலையச்செய்வதற்கு ஐய முண்டோவென்றான் என்றவாறு. (௪௯)

இந்திரன் பண்டோ ரகலிகையின் மோக மெய்தியதாலியை பிழையுஞ்
சந்திர னடைந்த பழியுமா முனிவர் தவமிழந் திழிவுறு தாழும
சிந்தையி லுணர்ந்துந் தெரியாமை யதனாற் றீவினை யிழைத்தனென் சிறியேன்
எந்தவா றுய்வே னெனப்பதை பதைப்போ டேங்குவா றுடலிளைத்திடுவான்.

பூர்வத்தில் இந்திரன் அகலிகையின் மோகத்தால் அங்கமுழுதும் ஆயிரம் யோனியாகிய குற்றமும் சந்திரன் குருபத்தினியாகிய தாரையால் தன்னுடல் குறைந்ததும் வளர்ந்தும் நின்ற குற்றமும் தாருகாவனரிஷிகள் மோகினியினால் தங் கள் தங்கள் தவமிழந்து இழிவடைந்த குற்றமும் யான் மனதாரத் தெரிந்தும் தெரியாமையால் இவ்விதத்திதாகிய பாதகக்குற்றத்தைச் செய்தேன் இனிச்சிறி யேன் எவ்வாறு பிழைப்பேன் அறியேனெனப்பதைத்து உடலிளைக்க ஏங்குவான் என்றவாறு. (௫௰)

உத்தம தலக்கடமிலற மேனு முறுகணைத் தருங் கொடிதேனும்
சுத்தியே சிறிது புரிந்திடின் மேருவாகத்தக் கிணையதாமென்று
முத்தர்க ளுரைத்த நூல்வழியறிந்து முப்புர தகனர் முன்றிலினில்
இத்திறம் வெய்ய பிழையிழைத்திட்டே னெவ்வகை யுய்வனென் றேங்கும்

உத்தம க்ஷேத்திரங்களில் விசுவாசத்துடன் தருமமாகிலும் துயரைத்தரும் கொடிய மாபாதகமாகிலும் அற்பஅளவுசெய்யில் அது பொருந்த மகாமேருக்கிணை யாய் வருமென்று மேலோர்களுரைத்த சாஸ்திரவழிகளை யானறிந்திருந்தும் திரிபுரதகனரான சிவபிரான் ஆலயத்திடத்து இவ்விதக்கொடிய குற்றத்தைச்செய் தேன் இனி எவ்வாறு குற்றம் நீங்கிப்பிழைக்கும்வழியென்றெண்ணியேங்குவான் என்றவாறு (௫௧)

உணர்விலா வொருவன் செய்பிழை யதனை யுத்தமர் பொறுத்தருள் புரிவார்
தணிவிலா நூல்க ளளப்பிலவாய்ந்தஞ் சங்கரன் கோவிலி லியான்செய்
துணிவுறு பிழைக்கு முய்வகை யுளதோ தொடர்தவித் தீமையைதகற்றப்
பணியணி யணிந்த பரமனையல்லாற் பரமிலே னெனமனம் பதைப்பான்.

புத்தியின்மையால் ஒருவன்செய்தகுற்றத்தை உத்தமர்கள் க்ஷமித்துக்கிருபை செய்வார்கள் குறைவில்லா சாஸ்திரங்கள் அளவில்லாமல் பரிசோதித்தும் இச்சிவ பிரான் ஆலயத்தில் மனந்துணிந்து செய்த குற்றத்திற்குப் பிழைக்குமவழியு முண்டோ என்னைத்தொடர்ந்த இக்கொடிய தீமையையகற்றச் சர்ப்பாபரணமணிந் த கடவுளையல்லாமற்றவரையில்லையென மனம்பதைப்பான் என்றவாறு. (௫௨)

சுழலுறு மனத்தோ டவன்பதிக்கேகித் துன்பொடு சிலபகல் கழிய
அழலுறு மடவா ளாக்கையை நீத்த வாவலை யறநெறி தலையோர்
உழலுறு காம மூறிய கனவா லுட்பர்காயகன் றனுவ யத்திற்
பிழைசெயா வண்ணந் தடுத்திடா திருந்த பெருந்தவ முடையளிப்பேதை.

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

இவ்விதக் கவலையாற் சுழற்சிபெற்ற மனத்தோடு அப்பிரமசர்மன் ஊர்க்கேகி அளவற்ற துயரத்துடன் சிலநாட் சென்றபின் அழகுபொருந்திய சுசீலை என்பவள் இறந்தாள் அவள் உயிரை நடுவநிலையோனென்னும் நமன்கண்டு இவள் தன்னைச் சுற்றிக்கொண்டு கெடுக்க முயலும் மோகமீறிய தன்கணவன் சிவபெருமானுகிய தேவதேவனாலயத்தில் தன்னை மருவ வந்தகாலத்தில் தடுக்காதிருந்த புத்தியற்ற பெருங் குற்றமுடையவள் இவளென்று அவ்வெமன் பின்னுஞ் சொல்லுவான் என்றவாறு (௩௩)

காதல னிச்சை மறுத்திடா தொழுகல் காரியைக் கருமமே யெனினுங்
கோதுறு கள்ளுண் டுணர்வழி வுற்றோன் கொடியதீ விழிற்றடுப்பதுவுந்
தீதுசே ரிருட்கண் ணுடையவன் கூவத் திடைவிழல் விலக்கலுஞ் சிதைவோ
ஆதலான் மயலுற்றறி விழந்தோனை யாலயங் கடத்துத லழகே.

தன்னைக்கொண்ட புருஷனது ஆவலைத்தடுக்காமல் நடப்பது பெண்களுக்குத்தருமமெனினும் குற்றம் பொருந்திய மதுவுண்டு வெறிகொண்டு அறிவிழந்தோன் அக்கினியிற்றவறி விழும்போது தடுத்திரட்சிப்பதும் இருகண்ணுமிழந்த குருடன் பள்ளத்தில் விழப்போம்போது விலக்கலுங் குற்றமாமோ அப்படியிருப்பதால் மோகவெறிமீறி தடுமாறி வேசாரி சுயபுத்தியற்றவனை ஆலயத்தைவிட்டப்புறம் அகற்றுவது அழகென்று பின்னுஞ் சொல்லுவான் நமன் என்றவாறு (௩௪)

ஆலயந் தனைவிட்டகற்றிடாப் பிழையா லரிவையோ ரஞ்சுகமாவாள்
சீலமாய்க் கற்பைக் காத்ததனாலே தெரிவுறு பூருவ ஞானம்
எலுமென் றுரைப்பத் தத்தையாய் மாதுவுரோமச மாமுனி தவஞ்செய்
சாலையின் மரப்பொந் துறைந்துமே தனியாய்ச் சஞ்சரித்தது சிலபகலே.

தன்னைப்புணரவந்தபுருஷனைச் சிவாலயத்தைவிட்டப்புறப்படுத்தாதகுற்றத்தால் இச்சுசீலை யென்பவள் ஓர் கிளியின்ரூபமடைவாள் நல்லொழுக்கத்துடன் தன் கற்பைக் கெடாது காத்ததினாலே கிளிரூபமடையினும பூர்வஞானமறியுந்தன்மை கிடைக்குமென்று நமன் சொல்லியவுடன் சுசீலையின் ஆவி கிளிரூபமாய்ப்பறந்து உரோமசன்மா தவஞ்செய்யுஞ்சாலையின் ஓர் மரப்பொந்தில் தனித்துச் சஞ்சரித்துச் சில நாள் வசித்திருந்தது. என்றவாறு (௩௫)

மற்றவம் மறையோ னுடலினை நீத்து மறுவிலாக் கற்புடை மனையைப்
பெற்றவர்க்கில்லை நரகென வுரைக்கும் பெற்றியாற் சேனமதாகிக்
குற்றமா மூனுக் கிராப்பகலலைந்து குறுகினன் கிருதமா விகைப்பேர்
நற்றவ நதிமாட்டுரோமசர் நிட்டை நடாத்திய சாலையை நாடி.

இச்சரித்திரமிவ்வாறாகச் சுசீலையின் கணவனாகிய பிரமசருமன் தன்னுடலினை விட்டுக் குற்றமற்ற கற்புடைய ஓர் பெண்ணை மனைவியாகப் பெற்றவர்கட்கு நரகமில்லை யெனப் பெரியோர் சொல்லுங்காரணத்தால் ஓர் பருந்தின் ரூபமடைந்து பலவிதமாமிச பட்சணத்துக்கிச்சித்து இராப்பகல் பறந்தலைந்து கிருதமாவிகையென்னும் மேன்மை பொருந்திய நதியின் பக்கத்து உரோமசன்மர் நிட்டையிலிருக்கும் சாலையைத்தேடியடைந்தது, என்றவாறு (௩௬)

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

வந்தவச்சேன மரவிட நுழையு மடச்சகப் பேட்டினைக் கண்டே
இந்தவெம் பசிக்கிதே யிரையென்ன வெண்ணியே வெளியுறல் நாடிச்
சந்தத மிருப்பக் கிள்ளையும் வெளியிற்சஞ்சரிப்பதை யொழிந்திடலும்
முந்தவே சேனந் ததையை நோக்கி மொழிந்தது புள்ளுரையதனால்.

இவ்விதமவ்விடமடைந்த பருந்தானது மரப்பொந்தில் வசிக்கும் இளமையா ன பெட்டைக்கிளியைப்பார்த்து எனது வயிற்றெழுந்த கொடிய பசிக்கு இது தக்க இரையாகுமென்றெண்ணி எப்பொழுதிக்கிளி வெளிப்புறப்படுமென்று இடை விடாமற் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கையில் இக்கிளியும இதைக்கண்டு தான் வெளியில்வந்து சஞ்சரிப்பதைவிட்டிருக்கப் பருந்து அப்பசுங்கிளியைப்பார்த்துத் தமது பட்சிசாதிவார்த்தையால் இவ்விதஞ் சொல்லுதற்குத் தொடங்கியது. எ-று (௩௭)

தத்தையே யுனையுண்டென்றனை வாட்டுந் தளர்வுறு பசியினைத் தவிர்ப்பான்
சித்தமது வந்தேன் வெளியுறக் காவாய்ச் சேருமிவ் விடரினுக் குள்ளாய்
எத்தினைகால முறைவையென்றுரைக்க வென்னுயிரக் கஞ்சினே னன்று
நித்தமாய் வெய்ய காகுனக் கடையா நெறியினைச் சிந்தித்தே னெனலும்,

ஓ பசுங்கிள்ளையே யானுன்னைப்பிடித்துக் கொன்று உன்னினியதசையைத் தின்று என்னைத்தளர வாட்டும் பசியினைத் தவிர்க்கவெண்ணிச் சிந்தையிற் பரவசம டைந்தேன் நீயோ வெளிவராமற் கள்ளத்தனமா யிம்மரப்பொந்திற்குள்ளாய் எத் தனைகாலம ஒளித்திருப்பா யென்று கேட்க அக்கிளியானது இப்பருந்தினைநோக் கி யான் எனதுயிர்க்காகப்பயந்தவளன்று எப்பொழுதும் உனக்குக் கொடிதாகிய ஈர கம் கிடைக்காதிருக்கும் வழியை யோசித்து இம்மரப்பொந்திற்றங்கி வசிக்கின்றே னென்றது. என்றவாறு (௩௮)

இது வியப்பாகு நீயெனக் கிரங்க லென்றிடுஞ் சேனமதறிய
ஈ தமுத மாதாங் கிள்ளைமுன் னுற்ற விதமெலா ஞானத்தால் விளம்பி
நதியணி பரமன் கோவிலிற் பிழைத்த கண்பநீ சேனமதானாய்
கதிதரு மிந்த முனியெதி ரென்னைக் காதிடில் ஈகு சாண்குவையால் .

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே அப்பருந்து ஆகா இது மெத்தவும் ஆச் சரியம நீ யெனக்காகவிரங்கும் நிமித்தம்யாதெனப்பூரணச்சந்திரனை நிகர்த்த முகால ங்காரமுள்ள சகிலையென்னுங் கிளியானது இப்பருந்தென்னும் புருடன் அறியும்படி முன்னடந்த விருத்தாந்தமெல்லாம பூர்வஞானத்தால் அறிந்துசொல்லிச் சந்திரசேக ரனுகிய தற்பரன் ஆலயத்தில் செய்த குற்றத்தால் என் கணவனுகிய நீ இப்பருந் தின உருவமடைந்தாய் நற்கதியைக் கொடுக்கவல்லவராகிய இம்முனிவரெதிரில் என்னைக்கொன்றால் நரகமடைவாய். என்றவாறு (௩௯)

ஆதலா லிரங்கிக் காந்தனை னெனுஞ்சொல் லருளுடை முனிவா னறிந்து
சீதபங்கயமாம் கிருபைசோ சோகநஞ் சேனத்தின் மீதுறச் செய்ய
வேதனை யொழிந்த சேனமு முன்னுள் வினையெலா ஞானத்தா லுணர்ந்து
பாதமென் போதிற் பணிந்தெனக்குசித பதமருள்வா யெனப்பகரும்,

ஆதலால் என்னுலுனக்குத் தீங்குசம்பவியாமல் இம்மரப்பொந்தில் ஒளித்திருக் கிறேனென்றது. இவ்வார்த்தையை அவ்விடமிருந்த கிருபைமிகுந்த உரோமசன்மர்

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

கேட்டறிந்து தம்மனங்குளிர்ந்த காயமரைகர்த்த கடைக்கட்கருணை பருந்தின்மேற் படியப்பார்த்தவுடனே அதன் தீவினைநீங்கி முன்னுளினடந்தவெல்லாம் ஞானத் தாலுணர்ந்து முனிவன் பாதாம்புயத்திற் பணிந்து துதித்து அடியேனுக்கு மேலா கிய பதவியைப் பாலிப்பீரெனச் சொல்லலுற்றது. என்றவாறு (௪௯)

பாலநேத்திரமார்பரம்பொருள் வதியும் பதியதாங்கோயிலிற் பிழைதான்
சாலவேயியற்றிப் புலைத்தொழி லுடையேன் சார்ந்தன னிவ்வுருவிந்தக்
கோலமதொழிந்து நற்பதம் பெறவே கூறுவா யருண்மொழி யென்னக்
காலனைக் கடிந்தோற் கிணையதா முனியுங் கருணையாற் கழறலுற்றனனால்.

ஓ முனிசிரேஷ்டரே நெற்றிக்கண்ணுடைய விஷ்களங்கப்பொருளாகிய சிவ பிரான் வசிக்கும் திருவாலயத்தில் மிகவும் கீழ்ப்பட்ட குற்றத்தைச்செய்த நீசஜெந்தி யயான் அப்பாதகத்தால் இவ்வுருவமடைந்தேன் இனியேனும் இவ்வுருவம் நீங்கி மேன்மையாகிய பதவியைப் பெறுதற்குத் தமது திருவாய்மலர்ந் தோரருள்வார்த்தை சொல்லவேண்டியதென்றவுடன் எமனையுதைத்த ஈசாக்கிணையாகிய முனீந்திரனும் கிருபையுடன் சொல்லலுற்றார். என்றவாறு (௫௧)

பாயிருள் பருகும்பரிதி முன்பூசை பரிவுடனி யற்றியே பணிந்த
தூயதற்றலமொன்றுண்டதி னுலுன் றுடக்கறு மென்றிடக்கங்கும்
ஆயவத்தலமியானறிந்திடவடிகளருள் புரிந்தாளுக வென்ன
நீயுநின்மனை யாந்தத்தையு மவாசி நெறிபடர்ந்தேகிடல் வேண்டும்.

உலகமுழுதும்பரவி மூடிய இருட்கூட்டங்களை யுண்டெழுஞ்சூரியன் பூருவம் ஆசையுடன் பூசைசெய்து வணங்கிய மிகவும் பரிசுத்தத்தலம் ஒன்றுளது அதனுல் உன் பாபம் நீங்குமெனு இதனைக்கேட்டபருந்து அவ்விதத்தலத்தை யானறிந்தடை யும்படி திருவாய்மலர்ந்தருள் செய்து ஆளவேண்டுமென்ன அதற்கம்முனிசர் பருந் துருவமாகிய நீயும் பைங்கிளியுருவாகிய உன் மனைவியும் தென்றிசைமார்க்கமாய்ப் பறந்துபோகவேண்டும். என்றவாறு (௫௨)

ஏகிடும் போழ்து பலநதித் திரள்க ளெதிரினுமது கடந்திடிற்பின்
சேகுறு மகிலு மாரமுமுருந்து செறிமயிற் பீலியும் பொன்னும்
நாகரன்மணியு மதமலைக்கோடு நளிரலைக்கரங்களால் வீசி
வேகமாய்ப்பெருகுங் காவிரியென்றோர் மெய்த்தவநதி புலப்படுமால்.

அவ்வாறு போகும்போதனேகவாறுகளெதிர்ப்படும் அவைகளையெல்லாங்கடந் து சென்றால் அதன்பின் வயிரமேறிய அகிலும் சந்தனமும் வெண்குருத்துடைய மயிலின் தோகைகளும் பொன்னும் நாகரத்தினங்களும் மதயானைக்கொம்புகளும் குளிர்ந்த அலையென்னுங்கைகளால் வீசியெறிந்து வேகமாகப் பெருக்கெடுத்தவ ரும் காவேரியென்ற ஓர் நதி காணப்படும். என்றவாறு (௫௩)

காவிரிநதிரும் சோழநன் னாட்டிற் கண்ணுதற வம்பலவுவற்றவர்
மேவினோர் கயிலை மேலுறச்செய்து விளங்குமை யாறதன்றெற்கு
ஓவிலநடிகைதஞ்சைமாநக ரொளிர்தருமதற்குதன்கீழ்ப்பால்
யாவவர் புகலுமி யோசனை யென்றி னுடவாம் பரிதிசேச்சரமே.

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

அக்காவேரி நதி சூழும் அழகிய சோழநாட்டிடத்து நெற்றிக்கண்ணுடைய
சின்மலன் வசிக்கும் தலங்கள் அநேகமுண்டு அவற்றுட்டன்னிடம வந்தடைந்தோ
ரைச் கைலையங்கிரி யேறச்செய்யும் ப்ரபாவத்தையுடைய திருவையாறென்னுந் தல
த்திற்குத் தெற்கு ஐந்துநாழிகை தூரத்தில் ப்ரகாசியாநின்ற தஞ்சைமாநகரமுண்டு
அந்நகரத்தின் தெனகிழ்ப்புறத்தில் ஓர்யோசனை தூரத்தில் பார்க்கலாம் பாவலர்கள்
பாடிப்பரவும் பரிதிமேச்சரத்தலத்தை. என்றவாறு (சச)

அத்தல மதுதான் பரிதிபூசனைக்காயருளுடன்வரங்கடந்தாண்ட
வித்தனுக்கிடமாங் கங்கையும் பாவநீங்குறப் படுவதாந்தீர்த்தம்
புத்தமுதத்தைப்பொருவ தாமிரண்டின் புனித நற்கரை யினில்வேத
வித்தகர் புராணம்விளம்புவர் கேட்கில வியப்புறு மென்பதந்தரு மால்

அப்பரிதிமேச்சரத்தலமானது சூரியன் செய்த அருச்சனைக்காய் அன்புடன்
வரங்களைத் தந்து ரட்சித்த சித்தனுகிய சிதாண்டவர்க்கிருப்பிடமாம் கங்கையுந் தனது
பாதகங்களை நீக்க மூழ்கிய தீர்த்தங்கள் புதிய அமுதத்தை நிகர்த்தது இரண்டுள்ளது
அம்மேன்மையாகிய தீர்த்தக்கரையில் வேதவித்தாகிய புராணிகர்கள் புராணஞ்
சொல்லுவார்கள் அதைக்கேட்கில் ஆச்சரியமாகிய மேற்பதவியையுதவும் எ-று (சரு)

சூடமதி யதனிற் சிவசிகன்றுட் குன்றினை வில்லதாய்வளைத்தோன்
றிடமுறு விளையாட் டோதிடும புராணஞ் செப்புவர் பூசுரர்தேவ
தடமதன் றென்பாலர சடியதனிற் சார்ந்து நீயொருமனதாகிக்
கடிகைதா னென்று கேட்கினு மேலாங்கதி யுறுமை யமதின்றே.

மாசிலாத சிவராத்திரி யென்னும் நற்றினத்தில் மேருமலையைவில்லாய்வளைத்
தவிமலனது திருவிளையாடல்களைச் சொல்லும் புராணங்கள காதீர்த்தத்தின தென்பு
றத்துள்ள அரசமரத்தடியில் வேதியரோதுவார்கள் நீங்களும் அவ்விடஞ்சேர்ந்து ஏக
சித்தர்களாய் ஒரு நாழிகை கேட்கினும் மேலாகிய கதியையடைவீர் இதற்குச்சந்தே
கமில்லை. என்றவாறு (சசு)

ஆதலா லிங்க னத்தல மடைத லழகென விடைகொடுத்தருளப்
பாதக மகற்ற வவ்விரு புள்ளும் பணிந்தமே கௌமதிதீர்
நீதற திருதமா லாநதி விட்டுத் தென்றிசை பறந்துமும மதியிற்
காதலாய்ப் பரிதி மேச்சரங் கண்டு களித்தன சிவன்முத் தரைப்போல்.

அப்படியிருப்பதால் நீங்கள் அம்மேன்மைபொருந்தியக்ஷேத்திரத்தைப்போ
ய்த் தெரிசிக்கில் உத்தமமென முனிசிரேஷ்டர் சொல்லி உத்தரங்கொடுத்தவுடனே
தங்கள் பாபங்களை நீக்குவதற்காக அவ்விரு பறவைகளும் அவரை வணங்கி யெழு
ந்து கௌதமநதி குற்றமற்ற விருதமாலாநதி இவ்விரண்டையுங் கடந்து தென்றி
சை நோக்கிப்பறந்து அதிஆவலாய் மூன்றுமாதத்திற்சென்று பரிதிமேச்சரத்தைக்
கண்டு சிவன் முத்தரைப்போலத் தெவிட்டா ஆனந்தமடைந்தன. எ-று (சஎ)

பரிதியி னுதயம் பார்த்து நற்சேனம் பசங்கிளி யோடெழுந் தரிய
சுருதி நாயகனை வலமதாய்ப் பறந்து சூரிய புட்கரிணியைத் தொழுது
பெருகிய தேவதீர்த்தத் தென்கரையிற் பேசிடுந் தலப்புராணத்தை
உரிமையா யாசிறுபா சிவைக்கனிருந் துணர்ந்தது சிவசிசி நாளில்

சேனத்தின் பாவந்தீர்த்தசருக்கம்.

அவ்விதங்கண்டானந்தமடைந்த பருந்தும் பசுங்கிளியும் சூரியோதயங்கண்டெழுந்து அரிதாகிய வேததாயகனென்னும் பரிதீசனை வலமாய்ச்சூழ்ந்து பணிந்து பறந்து சூரிய புட்கரணியை வணங்கி மேன்மைபொருந்திய காதீர்த்தத்தின் தென்கரையிலிருந்து வேதியர்களோதும் அத்தலமான்மியத்தை மிகவும் உரிமையாய் மன ஒருமையாய் அரசமரத்தின் உச்சிக்கிளையிலமர்ந்து சிவராத்திரியினன்று கேட்டுணர்ந்தது பருந்தும பசுங்கிளியும். என்றவாறு (சஅ)

அய்யரங் குரைத்த தலப்புரா ணத்தை யறிதரு சேனமுன் சுகமும்
வெய்யவ னனவே யிவ்வய தேக மேவியே களிப்பொடு தேவத்
துய்யதோர் விமான மேவியங் கரனைத் துதித்துமே லுலக முற்றதுதான்
ஐயமின் றென்னி லத்தலமகிமை யறைவதற் கெளியதோ வரிதே.

அங்கு வேதியரோதிய தலபுராணத்தின்மகிமையைக் கேட்டறிந்த பருந்தும் பசுங்கிளியும் அவ்வுருவொழிந்து சூரியனைப்போலொளிவிடும் திவ்யதேகமடைந்து ஆனந்தத்தோடு பரிசுத்தமாகிய ஒப்பற்ற தேவவிமானத்தேறி அவ்வீசனைத் துதித்து மேலாகிய பதவியைச் சார்ந்தன இவ்விதம் நடந்தது சந்தேகமற்ற உண்மையெனில் அத்தலத்தின் மகிமைகளைச் சொல்லுதற்கு எளிதோவென்றுர் சூதமுனிவரொன்றவாறு. (சகு)

ஆக சருக்கம் கூக்குக் கூடிய செய்யுள் ராகூ
சேனத்தின் பாவந்தீர்த்த சருக்கம்
முற்றிற்று.

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

வேதியன் சேனமான விபாமும் பரிதி போற்றுஞ்
சோதியா ரருளினலே தொடக்கற வின்ப முற்ற
தோதின மயோததி யாளு மோங்குசீர்ச் சிவியா மன்னன்
நாதனைக் கண்டு பூசை நடாத்திய திறமுரைப்பாம்.

பிரமசருமனென்னும் பிராமணன் பருந்தின் உருவமடைந்த விதமும் சூரியன் போற்றிய பரிதீசாருளினலே பாபங்களகற்றி இன்பமுற்றுப் பதவிபெற்ற விதமும் முற்றமுரைத்து முடித்தோம். இனி ஓங்கிய கீர்த்தியைத் தாங்கினவனுய்ச் சிறந்த அயோத்தியாபுரியையாண்ட சிவியென்னுமரசன் இப்பரிதீசனைக் கண்டு தொழுது திருப்பணி முதலிய பூசைகள் நடாத்திய விதத்தை விளம்புவாமென்று சவுனகருக்குச் சூதமாமுனிவர்சொல்ல ஆரம்பித்தனர்—என்றவாறு. (க)

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

அண்டமு மாக்கு கின்ற வயன்முதற் றேவ ராரும்
கண்டிடற் கருமை வைகுந்தக் கார்வண்ணன் புரக்க வாசை
கொண்டிட வளங்க ளோங்கிக் குலவுசீ ரயோத்தி யாளுந்
திண்டிறற் செங்கோல் வேந்தன் சிவியென்பான் சீர்த்தி மிக்கான்.

சகல லோகங்களையும் அமைக்கின்ற பிரமன் முதலிய தேவரும் மற்றியாவரும் காணுதற்கரிய வைகுந்தத்தில் வாழுங் கரியநிறக்கடவுளே மனிதாவதாரங் கொண்டு ஆளும்படி ஆசைகொண்ட சகல வளங்களோங்கிச் சிறந்த அயோத்தியை யாளும் திண்ணிய வல்லமைபூண்ட செங்கோலேந்திய அரசன் கீர்த்தியின் மிகுந்த சிபியென்பானிருந்தான்—என்றவாறு. (௨)

பொங்கலை வாரி சூழும் புவிப்பொது வகற்றி யொன்னார்
தங்களை வென்று வெற்றி தரித்தவே றாங்கி மன்னர்
சிங்கவே றென்னச் செங்கோல் செலுத்தியே நேமிகைக்கொண்
டங்கண்மா ஞால மெல்லா மாண்டன னரசர் போற்ற

மிகுந்த அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூலோகமுழுதும் பொதுநீக்கிச் சத்துருக்களை வென்று விஜயம்கொண்ட வீரவேல்தாங்கி அரசர்களெல்லாருக்கும் ஆண்சிங்கமென்னச் செங்கோல்செலுத்தி ஆக்ஞாசக்கரங்கைக்கொண்டு சக்கிரேஸ்வரனாய் இடமகன்றபெருத்த புவனமெல்லாம அரசர்போற்ற ஆண்டிருந்தான என்றவாறு (௩)

மாசறு பரிதி தேவன் மரபினுக் கணியாய்த் தோன்றித்
தேசொடு வளர்வோ னீதிசெப்பிய மனுநூ லாராய்ந்
தீசற்கு மிச்சு வாகு வெய்திய வரங்க னுக்கும்
பூசனை புரியும் பெற்றி பூண்டவ ன்புனித மன்னன்.

குற்றமற்ற சூரிய வமிசத்திற்கோர் ஆபரணம்போலுதித்து அழகுடன் வளரும் மாசில்லாதமன்னன் நீதிநூலென்னும் மனுசாஸ்திர முதலியதும பரிசோதித்து மன்றி ஈசனுக்கும் இட்சுவாகு அரசனால் இவ்வுலகில் வந்தமர்ந்த சீரங்கநாதனுக்கும் பூசனைசெய்யுந்தன்மையை மேற்கொண்டொழுகுவோன்—என்றவாறு. (௪)

காணுதற் கெளியன் யாதுங் கடுஞ்சொல் லொன்றில்லா னின்சொற்
பூணுறு பணியன் குற்றம் பொறப்பதிற் பூமிமாது
நாணிடு பொறையன் மிக்கோர் கட்பிற விடிக்குஞ் சொல்லைப்
பேணிமற் றோரை யாளும் பெற்றியி லுவகை யுள்ளோன்.

ஏழைகள்முதல் யாருங்கண்டு பேசுதற்கு எளியன் கடினமாகிய வார்த்தையில்லாதவன் மதுரவார்த்தைகளையே ஆபரணமாய்ப் பூண்பவன் பூமிதேவியுங் கண்டு வெட்கும்படியாகிய பொறுமையின் மிகுந்தவன் மேலோர் இடித்துச் சுடச்சுடச் சொல்லுஞ் சொல்லை அன்பாய்க்கேட்டுப் புத்தியென்று பாராட்டிக் காப்பாற்றி உலகிலுள்ள யாவரையும் ரட்சித்துச் சந்தோஷமிகச்செய்யும் தன்மைகளனைத்தையும் சாங்கோபாங்கமாய்ப் படைத்தவன்—என்றவாறு. (௫)

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

உவகையின் மிகுதியாற் சோர் வுற்றிடான் பிறர்தங் குற்றம்
அஃமெனக் கடிந்து சன்னை யடுத்திடுங் குற்றம் காண்பான்
தவறிலனீதி தன்னிற் சாய்ந்திடா னுளத்தெப் போதும்
பவமறு முயற்சி யுள்ளிப் பரமனைப் பத்தி செய்வான்.

தன் அரசாட்சியின் சந்தோஷப்பெருக்கால் எக்காரியத்தையும் மறந்து விடான் அன்னியர் குற்றத்தைப்பாராட்டிச் சொல்லுதல் பாபமென்ன நீக்கிதன்னிடத்தடுத்திருக்குங் குற்றங்களை யோசித்துப்பார்ப்பவன் குற்றமில்லாத நீதியில் பாரபட்சஞ்சொல்ல ஒரு புறமாய்ச் சாயாதவன் சதாகாலமும் தன்பாபங்கள் வேறற அருச்சிக்கும் முயற்சியை நினைந்து அப்பரமேசனைப் பக்திசெய்பவன்—எ று. (௬)

தீதறு கல்வி கேள்வித் திறநிறைந் தொழுகி யார்க்கும்
ஏதம துறுமற் காப்போ னிறையிரு மூன்றி லொன்று
நீதியாய்க் கொள்வோன் வேத விலைதவ றினுந்தன் னுவால்
ஓதிய சொற்ற வாத வுறுதியான் வாய்மை பூண்டோன்.

மாசற்ற கல்விகேள்விகளில் நிறைந்து சிறந்த வல்லவனாய் அவ்வழியாக நடந்து யாவருக்கும் யாதொரு குற்றம் வராமற் காப்பவன் ஆறிலொருகடமை நீதியாகக்கொள்பவன் வேதாகமநிலைகள் வழுவினும் தன்னுவாற் சொல்லியசொல் தவறாமல் நடக்கும் உண்மையானஉறுதியுள்ளவன் சத்தியவாய்மை மறவாமல் மேற்கொண்டொழுகுபவன்—எ று. (௭)

தேசிக வசிட்டர் தம்மைத் தெய்வமாய்ப் பேணி நாளும்
பூசனை புரிவோன் வேசம் புகல்மக மனைத்து மாற்றி
ஆசையெட்டினையுமேவென் றைம்புலச் சேட்டை மாற
வீசியே மேலதான விவேகமாம் விருத்தி பெற்றோன்.

குலகுருவாகிய வசிட்டரைத் தெய்வம்போலெண்ணிக்காப்பாற்றி அத்தியந்தமும் அர்ச்சனை செய்பவன் வேதாகமங்களிற் சொல்லிய யாகாதிகிருத்தியங்களைச் செய்து அஷ்டதிசையும் வென்று ஐம்புலச்சேட்டை கெட வீசியெறிந்து மேலான விவேகமென்னும் லாபத்தைப் பெற்றவன்—எ று. (அ)

உலகெலாம் விளங்கச் செய்யு முண்மையு நாளு மாசற்
றிலகுறக் கறங் கோராழி யிசைபெற நடத்த லானுங்
கலியிரு ளறநன் மார்க்கங் காட்டுத லானுந் தங்கள்
குலமுதற் பரிதி யொப்பக் குறைவிலா வின்பந்துய்ப்போன்.

சிலேடை - ஒருபாடற் கிரண்டு உரை.

பூலோகமனைத்தும் நீதியாற் பிரகாசிக்கச்செய்யும் சத்தியமும் எப்பொழுதும் குற்றமற்றுப் பிரகாசித்துச்சுழலும் ஏகசக்ரேசனென ஆக்ஞாசக்கரத்தை அழகுபெற நடத்தலாலும் வறுமை யென்னும் இருள் நீங்க நீதியென்னுங் கிரணத்தைக் காட்டுதலாலும் தன் குலத்திற்கிறைவனாகிய சூரியனையொத்து அளவற்ற இன்பங்களை அனுபவித்தனன் எ-று (௯)

இதுவும் மேற்பாடலின் உரை.

உலகின்கண்ணுள்ள சகல பொருள்களையும் பிரகாசிக்கச்செய்வது உண்மையாதலாலும் குற்றமற்றழகுபெறச் சத்திக்கும் ஏகசக்ரவிரதத்தைக் கீர்த்திபெற நடப்

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

பித்தலாலும் மூடியவிருளை நீக்கி நல்வழியைக் காட்டலாலும் சூரியனைச் சிவிக்கு ஒப்புச் சொற்றனர். (௯)

கட்டழ காலு மெல்லாக் காசினி காத்த லாலும்
மட்டவிழ் மலராள் சேரு மகிழ்வினுந் தேவர்க்கெல்லாம்
அட்டறவுணவ நீட்டித் தருதலா லாழியொன்ற
தொட்டிட லாலும்வாசத் துளபமாறன்னை யொப்பான்

இதுவும் - சிலேடை.

பெருத்த அழகினாலும் எல்லா உலகங்களையுங்காத்தலாலும் மதுநிறைந்த செந்தாமரைவாசியாகிய ஸ்ரீதேவிசேர்ந்திருக்கும் செல்வப்பெருக்கின் மகிழ்வினாலும் தேவர்களைவர்க்குங் குறைவறயாகாதிக்ருத்தியங்களால் அவிர்ப்பாகம் ஊட்டுதலாலும் ஆக்ஞாசக்கரம் உடைத்தாதலாலும் துளபமாலையணிந்த விண்டுவையொப்பான் சிவிஅரசன் எ-று

இதுவும் மேற்பாடலின் உரை.

திருமாலும் பெருத்த அழகனாதலாலும் முத்தொழிலிலொன்றாகிய காக்குந் தொழிலுக்குடையவனாதலாலும் திருமாது மகிழ்ந்து சேருவதாலும் அமரர்களைவர்க்கும் பாற்கடலை மதித்து அமுதனைவளித்ததாலும ஒப்பற்ற சக்ராயுத மேந்தலாலும் திருமாலைச் சிவிக்கு ஒப்புச்சொற்றனர் (௰)

கன்னவில்மதனு நாணக் கவினுற்றோ னுலகந் தன்னில்
மன்னுயி ரனைத்துந் தன்னை மருவிய வுயிர தாக
இன்னருள் புரிவா னீதிக் கெய்திய நிறைகோ லென்ன
நன்னெறி நடத்துஞ் செங்கோனாயகன் சியமன்னான்

கரும்புவில்லைக் கையிலேந்திய காமனும் நாணும் கட்டழகன் உலகின்கண் நிலைபெற்ற உயிர்களனைத்தையுந் தன்னுயிர்போலெண்ணி இனிய அருளுடன் ஆளப்பட்டவன் நீதியிற்றராசு முள்ளையென்ன நல்வழியிற் செங்கோல் நடாத்தும் நாயகன் சத்துருக்களுக்கு ஆண்சிங்கம் ஒத்தவன் எ-று (௰௧)

குலவரை முழுது மெல்லை குறித்தகல் லெனவே சால
இலகிய தவச மிட்டோ னெழிலுறு கவிகை யொன்றில்
அலகிலாப் புவன மெல்லா மடங்கவே யின்பந்துய்ப்ப
நிலைபெற மன்னர் மன்ன னிகரிலா வாழ்வு பெற்றோன்.

அஷ்டகுலபர்வதங்களையும் தானாளும்எல்லைக்குக்குறிப்பாய்நாட்டிய கல்லென்ன அதன்மேற்றன் வெற்றிக்கொடியை விளங்கநாட்டினோன் அழகிய தனது ஒப்பற்ற குடையொன்றில் சகல உலகங்களுமடங்கவடக்கி இன்பமநுபவித்தவன் தனக்கிணையில்லா வாழ்வுபெற்றுயர்ந்த அரசர்க்கரசன் எ-று (௰௨)

தேவரார் தருவு மாவுந் தியாகமா மணியுங் கேட்டோர்க்
கீவதா நிதியுங் கொண்ட லேழும் வெட்கிடவோரும்
பூவரு நார்களாதிப் புலவர்கண் மற்றோர் யார்க்கும
ஆவலா மினைத்து நல்கி யாதியாம் வண்மை பூண்டோன்.

தேவர்களின் பஞ்சதருவும் காமதேனும் சிந்தாமணியும் கேட்டோர்க்காவடங்கக் கொடுக்கும் சங்கநிதியும் பதுமநிதியும் மேகங்களேழும நாணும்படி சதாபூசரா முதல் புலவருக்கும் மற்ற யாவருக்கும் அன்புடன் கோரியதைக்கொடுத்து மூவேழுவள்ளலின் முதன்மையாகிய வண்மையைப்பூண்டோன்—எ-று. (௰௩)

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்,

மல்லாருந் திண்டோளான் மனுமுறையே யரசியற்றி வாழுங்காலை
வல்லூறும் பறவையொன்று வன்பசியா லிரைதேடி வானுலாவப்
பொல்லாத வதற்கெதிராம் புறுவொன்றைப் பற்றவே புலம்பியோடி
வில்லாரும் மணிமகுட வேந்தே நின் சரணமென்று வீழ்ந்ததன்றே

மற்போர் புரியாநின்ற வன்மை பொருந்திய புயங்களையுடைய சிபிச் சக்கரவர்த்தி மனுதர்ம சாஸ்திரப்படி அரசாட்சிபுரிந்து வருங்காலத்தில் ஒரு நாள் வல்லூறென்னும் பட்சி கொடிய பசியால் வருந்தியிரையைத்தேடி யாகாயத்தில் பறந்துவர அக்கொடிய வல்லூறுக் கெதிர்ப்பட்ட புறுவைப் பிடிக்கவே அது அதற்ககப்படாமற் றப்பிக் கூவிப்பறந்தோடி வந்து ஒளியை வீசுகின்ற அரதனமுடியுடையாய் யான் உன்னுடைய அடைக்கலமென்று விழுந்தது என்றவாறு (கச)

சரணநீ என்று வீழ்ந்த தனிப்புற வதற்கு மன்னன்
கருணையா யபய மீயக் கடியவல் லூறென் னூனைத்
தருகயான்பசியால் வெந்து தளர்வுற்றே னெனவாதாடப்
பருகவூன் வேறு நல்கிப் பருகென மன்னன் கூற

அரசே! உன் அபயமென்று விழுந்த அந்த ஒப்பற்ற புறுப்பறவைக்கு அரசன் கிருபை கூர்ந்து அபயமளிக்கக் கடினசித்தமுள்ள அவ்வல்லூறுனது எனக்கு உணவான எனது இம்மாமிசத்தைத் தந்துவிடுவாயாக நான் பசியினால் வெதும்பித் தளர்ச்சியடைந்திருக்கிறேனென்று அரசனிடம் வாதாடவே அரசன் வேறு மாமிசத்தைக் கொணர்வித்துக் கொடுத்து நீ உண்ணக்கடவாயென்று சொல்ல என்றவாறு (கரு)

மற்றவூ னுண்ணே னிந்த மணிப்புற வினைத்தா வென்னைப்
பற்றியே சரணடைந்து பரிந்தவிப் புறவை யீயிற்
குற்றமாமாத லானின் கொடும்பசி தணிக்க வேறான்
றெற்றென வுரையா யென்னத் தீவிழி வல்லூ றோதும்

வேறு மாமிசங்களை யான் புசிக்கமாட்டேன் இந்த மணிப்புறுவைத் தருவாய் என்று வல்லூறுகூற அதற்கரசன் நீயே கதியென்று ஓடிவந்து என்னிடம் அடைக்கலம் புகுந்த புறுவை நான் உன்னிடம் கொடுப்பது மகா பாதகமாகும் ஆதலால் உன்னுடைய கொடிய பசியைத்தணிப்பதற்கு வேறு மாமிசம் என்னவேண்டும்? அதைத் தெளிவாய்ச் சொல்லென்று அரசன்கூறஅதற்குக் கனலையொத்த கண்ணையுடைய வல்லூறுனது கூறும் என்றவாறு (கசு)

மன்னநின் னுடலி னூனை மற்றதற் கிணையாத் தூக்கி
நன்னய மாகவீயி னலிபசி தணியு மென்ன
அன்னதற் கிசைந்து மன்ன னறுத்துத் தன்றசையைத் தட்டில்
தன்னிக ரிலாப்புள் ளோடு சார்ந்திட நிறுக்குங் காலை

அரசனே! உன்னுடைய சரீரத்திலுள்ள மாமிசத்தை யறுத்தெடுத்து இந்தப்புறுவின் எடைக்குச் சரியாக நிறுத்துக் களிப்புடன் கொடுப்பாயானால்

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

என்னைவருத்தும் பசிப்பிணி யொழியுமென்ன அதற்கு அரசன் சம்மதித்துத் தன்னுடம்பின் தசையை யறுத்துத் தராசுத்தட்டில் வைத்துத் தனக்கு ஒப்பில்லாத புறாவை ஒரு தட்டில்வைத்து நிறுக்குங்காலத்தில் என்றவாறு (௧௭)

நிருபன்ற னுடலூன் யாவு நேர்ந்து கொய் திடவும்புள்ளின்
ஒருபுறத் தட்டேச் சற்று முயர்ந்திடா வண்ணங் கண்டன்
றருமறை முடிவுதேர்வுற் றறவழியொழுகியன்பு
பெருகுமவ் வேந்த னுள்ளம் பேதுறா னினைய சொல்வான்

அரசனது உடம்பிலுள்ளசதையனைத்தையும் மனமகிழ்ந்து அறுத்தறுத்து வைக்கவும் புறாவை வைத்திருக்கும் தராசுத்தட்டானது சிறிதளவுகூட உயர எழும்பாமலிருப்பதைப் பார்த்து அப்பொழுது வேதவேதாந்தங்களை யெல்லாம் அறிந்து தருமமார்க்கத்திலேயே நடந்து அன்பு நிறையும் அவ்வரசன் சிறிதும் மனந்தளராதவனாய் இவ்வாறு சொன்னான் என்றவாறு (௧௮)

நிலையிலாப் பூத வாக்கை நிலையென வெந்த நாளும்
மலைவிலாப் புகழா மாக்கை மாய்ப்பர் காணறிவிலார்கள்
கலைநிறைந் தறிவி னாக்கங் காண்பவர் புகழெக் காலும்
அலைவிலா திருக்கப் பூத வாக்கையை யழிப்ப ரன்றே

அறிவில்லாத மூடர்கள் நிலையற்றதாகிய இந்தப் பூதவுடம்பை நிலையுள்ளதாகமதித்து எந்த நாளிலும் அழிவில்லாததாகிய புகழுடம்பை அழித்துவிடுவர் தத்துவ சாஸ்திரங்களை யெல்லாங்கற்று அறிவு நிரம்பிய பெரியோர்கள் புகழுடம்பு எப்பொழுதும் அழிவற்றிருக்கப் பூதவுடம்பை அழிப்பார்கள் என்றவாறு காண்-முன்னிலையசை. (௧௯)

நம்பியே சரண மென்று நாடிவந் தடைந்த புள்ளின்
கம்பிதப் பயத்தை மாற்றிக் காத்திடா துடலை யோம்பி
இம்பரி லிருந்தி யான்று னிரும்பயன் றுய்ப்ப தெல்லாம்
வெம்பியே யுலகோ ரேச மிகுபழி யன்றி யுண்டோ

என்னையே சரணமென்று நம்பிவந்து அடைந்த புறாவாகிய பட்சியின் நடுக்கும் அச்சத்தை நிவர்த்திசெய்து அதைக் காப்பாற்றாமல் எனதுடலையே பேணி இவ்வுலகத்தில் பெரிய போகபோக்கியங்களை யநுபவிப்பதெல்லாம் உலகத்தோர் நிந்தித்துப்பழிக்கும் காரியமேயல்லாமல் வேறில்லை எ-று (௨௰)

என்னவே யோர்ந்து மன்ன னிருந்துலை புகவே கண்ட
பொன்னுல கத்தோர் வாழ்த்திப் பூமழை பொழிய யாரும்
பன்முறை வியப்பத் தெய்வப் பணைபல முழங்கத் தேவர்
முன்னரே வரக்க ளிய முதன்மையாம் வள்ளலானான்

என்று இவ்வாறு அரசன் ஆலோசித்துத் தராசுத்தட்டில்தானேயேறவும் இந்த அதியாச்சரியத்தைக் கண்ட தெய்வலோகத்திலுள்ள தேவர்களெல்லாம் வாழ்த்திப் புஷ்பமாரி பொழியவும் பூவுலகத்திலுள்ளோர் யாவரும் பலதடவை

வியந்து பேசவும் தேவதுந்துபி முழங்கவும் தேவேந்திராதி தேவர்களெல்லாம் அரசனுக்குவேண்டிய வரப்பிரசாதங்களை வழங்கவும் உலகத்து வள்ளல்களி லெல்லாம் முதன்மையான வள்ளலென்று பெயர்பெற்று வாழ்ந்து வந்தான் என்றவாறு (உக)

நீதிநூல் வழிய தாக நிகரின்றிச் செங்கோ லோச்சி
யாதிர மெட்டினுள்ள வையக முழுதுந் தாங்கிக்
கோதிலாக் குணங்கட் கெல்லாங் கொள்கல னாகவைகும்
போதினிற் சூழ்ச்சி யொன்று புந்தியி னினைக்க லுற்றான்

இராஜநீதி சாஸ்திரவழியாகத் தனக்கு ஒப்பாரு மிக்காருமில்லாமல் செங்கோல் செலுத்தி அஷ்ட திசைகளிலடங்கிய பூமிமுழுவதையும் தாங்கிக்குற்ற மற்ற நற்குணங்கட்கெல்லாம் கொள்கலமாகச் சிபிச்சக்கரவர்த்தி வாழ்ந்து வருங்காலத்தில் பின்வரும் உறுதிப்பொருளைத் தன் சிந்தையில் சிந்திக்கலானான் என்றவாறு (உஉ)

கண்ணினை யிமையு மெய்யைக் கவசமுங் காக்கு மாறுள்
ளெண்ணுந் தன்னமைச்ச ரோடு மினியநற் குரவரோடும்
விண்ணுளா மமுத மென்ன விளங்குநட் பாள ரோடும்
கண்ணகன் ஞாலங் காக்குங் காவலன் வினவ லுற்றான்

இடமகன்ற பூமி முழுவதையும் காத்துவருகின்ற அரசன் கண்களை யிமைகளும் உடம்பைக் கவசமும் காப்பாற்றுவது போலவும் அரசகாரியத்தில் எண்ணியொழுகும் தனது மந்திரி மார்களோடும் வசிஷ்டர் முதலாகிய இனிய குருமார்களோடும் தேவலோகத்திலுள்ள தேவாமிர்தம்போல் விளங்கும் நட்பாளர்களோடும் வினவத்தொடங்கினான் என்றவாறு [உ௩]

மாதொடு மக்களென்னும் வன்றளை பூண்டு மிக்க
தீதுறு விஷயமான செறிகிரு மிகள் மொய்த் துண்ணும்
வேதனை யோடிவ் வில்லாம் வெய்யதோர் சிறைக்கூடத்தில்
ஏதமுற் றிருப்ப தின்ன மெத்தனை யூழிக்காலம்

பெண்டுபிள்ளை பண்ட பதார்த்தங்களென்னும் வலிய விலங்கைப்பூண்டு குற்றமுள்ள விஷய வாசனைகளாகிற நெருங்கிய கிருமிகள் மொய்த்துப் புசிக்கும் துன்பங்களுடன் இவ்வில்வாழ்க்கையாகிய கொடிய ஒரு சிறைச்சாலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது இன்னும் எத்தனை ஊழிக்காலமிருப்பது என்றவாறு [உ௪]

வாழ்வெனுங் கடலில் வீழ்ந்து வருதிரைச் சுகதுங்காதித்
தாழ்வில்மொத் துண்டு கொங்கை தாங்கிய மாதர் மோகச்
சூழ்வளிச் சுழலிற் பட்டுச் சுறவெனும் புலன்கட் கஞ்சிப்
பாழ்பட லொழிய வுன்னும் பரிசது வவிப்ப தென்றோ

பொய்யான இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையென்றும் சமுத்திரத்தில் விழுந்து சுகதுக்கம் முதலாகிய ஓய்வில்லாத அலைகளால் மோதப்பட்டு ஸ்தனபார

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

மைத்தாங்கிய ஸ்திரிமோகமாகிய சுழலில்அகப்பட்டு ஐம்புலன்களாகிய முதலைகளுக்குப் பயந்து வீணாயழியாமல் நிரதிசயானந்தத்தைப் பெறுவது எப்பொழுதோ என்றவாறு [௨௫]

யாக்கைநீர்க் குமிழி யந்நீரலையதா மிளமை மற்றப்
பாக்கிய மோங்குஞ் செல்வம் பதித்தநீ ரெழுத்ததாகும்
நீக்கியிச் சுழலைத்தப்பி நெறிகண்டு துறந்தே யாசான்
றுக்கிய கமலப் பொற்றாள் சாரிலன் றோவின் பெய்தும்

இந்தச் சரீரமோ நீர்க்குமிழி போன்றதாம் இளமைப் பருவமோ அந்நீரில் தோன்றும் அலைகள் போன்றதாம் மற்றுள்ள பாக்கியம் பெருகும் செல்வமோ அந்நீரில் எழுதிய எழுத்துப்போன்றதாம் ஆகையால் இந்த நீர்ச்சுழியிலகப்படாமல் தப்பிப்போய் நன்மார்க்கத்தையறிந்து இவற்றைத்துறந்து சற்குருவின் பாதகமலங்களை யடைந்தாலன்றோ பேரின்பத்தைப் பெறலாகும் என்றவாறு [௨௬]

பாசமுற் றுடல்யா னென்னும் பரிவதா மகப்பற்றோடு
நேசமா யென்ன தென்னு நிறைபுறப் பற்றிரண்டும்
வீசிடிற் சீவபோத மேற்கொளா தொழியு முத்தி
தேசிக ரருள்செய்போதத் திடத்தினாற் பலிப்ப தாகும்

ஆசைகொண்டு உடல்யான் என்னும் அகப்பற்றோடு என்னதென்னும் புறப்பற்றும் முற்றும் அற்றுக்கெட நீக்கிடில் ஆசிரியாருளிய ஞானபோத வலிமையால் ஜீவபோதமேற்கொள்ளாது ஒழியும் அதன்பின் முத்தி கிடைப்பதாகும் என்றவாறு [௨௭]

இரவியின் மரபிற் றோன்றி யென்முனோ ரானமன்னர்
திருவொடு செங்கோ லோச்சச் சேயிடத் தரசு நல்கிக்
கானிலா வுளத்தோ ராகிக் கான்புகுந் தினியமுத்தி
கருதின ரதுபோ லியானுங் காண்பனென் றுளம் வலித்தான்

சூரிய வமிசத்திற்பிறந்த என்முன்னோராகிய மன்னர் அனேக செல்வத்தோடேகூடிய செங்கோல் நடாத்தும்படி தங்கள் புத்திரரிடத்து அரசாட்சியை ஒப்பிவைத்து வஞ்சனையற்ற மனத்தராய்க் காட்டிற்சென்று தவஞ்செய்து சிறந்த முத்தியைத் தேடினார்கள் யானும் அவரைப் போற்றிநாடிக் காண்பதற்கா வுள்ளங்கொண்டேனென்றான் என்றவாறு (௨௮)

அரசனை யனைத்துக் கேற்க வமைச்சரு மிசைய மன்னன்
விரைசெய்தார்த் திண்டோள் மைந்தன் வியன்புவிப் பொறையைத் தாங்கக்
குருமணி மகுடஞ் சூட்டிக் கோதிலான் றீர்த்தமாடிப்
பரிவுடன் மனக்கு விந்து பற்றறத் துறக்கவெண்ணி

இவ்விதஞ் சொல்லிய சிபியின் மனதிற்கேற்க மந்திரிகளும் மற்றோர்களும் இசைந்தவுடன் அரசனானவன் வாசனை மிகுந்த மலர் மாலைதாங்கிய

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

வலிய தோளையுடைய தன்குமாரனுக்கு மேன்மைபொருந்திய இம்மேதினிச் சுமையைத்தாங்கநிறம்பொருந்திய மணிகளழுத்தியமகுடஞ்சூட்டிக்குற்றமற்ற சிபியானவன் தானும் ஸ்நானம்செய்து ஆசையுடன் மனங்குவிந்து முழுதுந்துறக்க நினைத்தவனாய் என்றவாறு (உக)

தீர்த்தயாத் திரைக்குத் தங்க டேசிக வதிஷ்டர் வைத்த
மூர்த்தம தணுகக் கண்டு முனிவரர் சூழ வாரி
யார்த்துமேற் பொங்கிற் றென்ன வங்கமோர் நாலுஞ் சுற்றச்
சீர்த்திமன் ன வனெழுந்து தென்றிசை நடக்குங் காலை

தீர்த்தயாத்திரை செய்ய உத்தேசித்துத்தன துஆசாரியராகியவதிஷ்டர்நிய மித்த முகூர்த்தம்வந்தணுகக் கண்டு முனிவோர்கள்சூழ சமுத்திரஞ் சத்தித்து மேற் பொங்கிவருவதென்ன சதுரங்கசேனைகள் தன்னைச்சுற்றக்கீர்த்தியின் மிகுந்த மன்னனெழுந்து தென்றிசையைநோக்கி நடந்தான் அப்படி நடக்கும் போது என்றவாறு (நய)

பூரண கும்ப மான்பாற் பொற்குட மங்கலத்தின்
சேரணி மாதர் நல்ல தீங்கனி யலரின் மாலை
ஆரண ரிருவர் மற்ற வாகுநற் சகுனங் கண்டு
தோரணி சூழ மன்னன் றிருநதித் துறைகளாடி

பூரணகும்பம் ஆவின்பால் பொற்குடம் மங்கிலியஸ்திரீசள் இனிய கனிவர்க்கங்கள் மலர்மாலை இருபிராமணர்கள் மற்றுமுள்ள நற்சகுனங்கள் தனக்கெதிராகக்கண்டு ரதமுதலிய சதுரங்கஞ்சூழ மார்க்கத்துள்ள அனேக அழகிய நதிகளில் ஸ்நானஞ்செய்து [நக]

முத்தர்க ளுள்ள மென்ன முற்றிலுந் தெளிந்து மூவர்
நித்தமு மகிழ யாரு நின்மல ராகச் செய்யுஞ்
சத்தியுள் ளதுவு மன்றிச் சாற்றினோ ருன்னி னோரும்
சுத்தரா கிடவிளங்குஞ் சுரநதி படிந்தன் புற்றான்

முத்திக் குரியோர் மனதுபோல் முழுதுந்தெளிந்து திரிமூர்த்திகள் தினமுமகிழ்வனவாய் எவரையும் மலரகிதராகச்செய்யும் வல்லமையுள்ளது மன்றித்தன்பெயரைச் சிந்தித்தோரும் வந்தித்தோரும் பரிசுத்தராகச் செய்யும் மேன்மையுடன் விளங்கா நின்ற கங்கையின் மூழ்கி இன்பமடைந்தான் என்றவாறு [நஉ]

கங்கையிற் படிந்து பாசக் கட்டறுத் தவர்போ லின்பம்
பொங்கிட விசுவநாதர் பொன்னடி போற்றி செய்து
வெங்கச முகனையேத்தி விசாலாட்சி யம்மைபாதப்
பங்கயம் பணிந்து மன்னன் பரிவுடன் றுதிக்கலுற்றான்

கங்கையின் மூழ்கிப்பந்தபாசம் நீங்கிய பரமஞானியர் போலச்சந்தோஷ மீறிப்பூரிக்கக் காசி விசுவநாதரது பொற்பதங்களைப் போற்றி செய்துவேழ

சிவிச்சக்கரவர்த்தி பூர்த்த சருக்கம்.

முகவிநாயகரைத் துதித்து விசாலாட்சியம்மையின் பாதபங்கயம் பணிந்து சிபி யரசன் அன்புடன் தோத்திரஞ் செய்யலுற்றான் என்றவாறு [௫௩]

முனிவர் பங்கயன் சங்கேந்து முகுந்தற்கு மரியதான
தனிநிலைப் பொருளே யன்பு தழைத்துநெக் குருகிநாடி
மனமற நிற்போர் கண்டு மகிழ்ந்திடத் துரியா தீதத்
தினின்மணி விளக்காய்த் தோன்றுந் தெய்வமே சரணுனக்கே

முனிவருக்கும் முளரியாதனப் பிரமனுக்கும் சங்கமேந்துந் தாமோதரனுக்கும் காணுதற்கரிய தனிநிலைப்பொருளே ஆசைமிகுந்து மனம் வேறொன்றிற்செல்லாமல் நெக்குருகி நிற்போர்கள்கண்டு மகிழ்வெய்திடத் துரியாதீதத்தின் மணிவிளக்காய்த் தோன்றுங் கடவுளே உனக்குச் சரணம் எ-று [௫௪]

நன்னெறி யொன்று மில்லா நாயினேன் பிரமானந்த
இன்னமு தருந்தி யொப்பற் றெக்களித் திடவிப் போதுன்
றன்னருள் புரிந்து காக்கத் தக்கதே யன்றி மற்றார்
என்னையிவ் வுலகிற்காப்பா ரீசனாரின்ப வாழ்வே

ஈசனுக்கின்ப வாழ்வளிக்க வந்த விசாலாட்சியென்னும் அன்னையே நன்மார்க்கமென்பது யாதுமில்லா நாயினேன் பிரமானந்தமென்னும் இனிய அமுதுண்டு நிகரற்ற மிகுமகிழ்ச்சியடைய இக்காலத்து உன்னருள்புரிந்து காக்கவேணுமன்றி இவ்வுலகில் என்னைக் காப்பார் மற்றார் இருக்கின்றார் அம்மனீ எ-று [௫௫]

ஈசனார்க் கமுதன் னாய்மற் றெவற்றிற்கு மன்னா யுன்னைப்
பூசித்த வன்பர்பெற்ற புகழ்மிகு பயன்க டம்மை
வாசவன் கமலாப மாயவன் மறைவலோனும்
பேசிட லாகா தென்றன் பிதற்றலி லமையுங் கொல்லோ

ஈசனுக்கமுதன்னை நிகர்த்தவளே மற்றயாவர்க்குந்தாயே உன்னைப்பூசித்த அடியாரடைந்த கீர்த்தி மிகும்பலன்களை இந்திரனும் பதுமநாபப் பரந்தாமனும் பிரமனுஞ் சொல்லுதற்கடங்காதெனில் பித்தனையொத்த அடியேன் பிதற்றலின் அடங்குமோ அடங்காது என்றவாறு [௫௬]

களிமா மலரோனாதி கவின்றிடுஞ் சராசரங்க
ளொளிசெய வியக்க சத்தி யுதவிய சத்தி நீயாய்த்
தெளிவுறக் கண்டே னிந்தச் சிறியனா மடியனேனை
வெளியனைக் காக்கச்சத்த ரெவருனை யன்றி யெந்தாய்

தாமரைமலரின் வீற்றிருக்கும் பிரமன் முதலாகச்சொல்லும் சராசரங்களெல்லாம் பிரகாசிக்க வியக்க சத்தியாற்றரப்பட்ட சத்தி நீயேயெனத் தெளிவாகக்கண்டேன் இச்சிறிய அடியனை எளியேனைக் காக்கவல்லவர் உனையன்றி எவருளர் என்னன்னையே என்றவாறு [௫௭]

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

ஊனுமா யுயிருமாகி யுணர்வுமாயுணர்வுக் கெட்டா
மோனமாய் மோனனந்த மூர்த்தியாய் முத்தி நல்குங்
கோனுமா யொளியு மாகிக் குறிகுண மற்ற நின்னை
யானறிந் தோத வாக்கிற் கியையுமோ வமல வாழ்வே

ஊனாய் உயிராய் உணர்வாய் அவ்வுணர்வுக்கு மெட்டாமோனமாய் மோனானந்த மூர்த்தியாய் முத்தியைக்கொடுக்கு மிறைவனுமாய்ச் சோதியாய்க்குறியுங்குணமுமற்ற நின்னையானறிந்து புகழ்தற்கு எனதொருவாக்காற்பொருந்துமோ நிட்களங்க வாழ்வே எ-று [நஅ]

என்னமெய் யன்ப தாக விருகணீர் பெருகியோடத்
தன்னிக ரிலாதஞானந் தழைவிசா லாட்சி தன்னை
மன்னவன் றுதித்தைங் குரோச மாந்துறை படிந்தெப்போதும்
அன்னம தருளுமன்ன பூரணி யமலத் தாளில்

இவ்வாறு உண்மையாகிய அன்பால்இருகண்களின்நீரும் வெள்ளம்போற் பெருகியோடத் தனக்குத்தானே ஒப்பாகிய ஞானமிகுந்த விசாலாட்சியம்மனை மன்னவன்றுேத்தரித்து ஐந்து கூப்பிடுதூரமாகிய கங்கைத்துறையின் மூழ்கி எப்பொழுதுங்கோலுவோருக் கன்னங்கொடுக்கும் அன்னபூரணியின் குற்ற ம்ற்ற பாதத்திலென்றவாறு [நகூ]

தாதாரு மலர்கள் சாத்திச் சந்தத மின்ப வீட்டின்
மீதார்வத் தோடு மன்னன் மெல்லென நடந்தண்டங்கட்
காதார பீடமாக வடியாரை யாள வைகுங்
கேதார கௌரி பொற்றாட் கீழ்ப்படிந் தேத்தி யன்பாய்

மகரந்தப்பொடிகளுள திருமலர்களணிந்து சதாஇன்பத்தைக் கொடுக்கும் முத்திவீட்டின்மேல் ஆசைபூண்டவனாய் மெதுவாய் நடந்து சகல அண்டாண்டங்களுக்கும் ஆதார பீடமாய் நின்று அடியாரை ஆளும்படி வசித்திருக்கும் கேதாரீஸ்வரி பொற்பாதத்தின் கீழ் அன்பாய் வணங்கித்துதித்து எ-று [சய]

அருள்செயுந் தண்டபாணி யடியிணைக் கமலம் போற்றித்
தெருளுற விளங்கு மற்றத் தேவர்தம் பதந்துதித்துக்
கருமுகி னிறத்த தான கந்தக மேறிக் காத்து
வருநற்சீர் வடுகநாதன் மலரடி வணங்கிப் பின்னர்

அளவற்ற அருள்புரியுந் தண்டபாணியினது இருபாதாம் புயங்களையும் துதித்துத்தெளிவுடன் விளங்கும் மற்றத்தேவர்கள் பதத்தையுந்துதித்து கருத்தமேகத்தை நிகர்த்த குதிரையிலேறி உலகத்தைக்காக்கும் சிறப்புடைய வயிரவனது மலர்போன்ற பாதத்தைவணங்கி அதன்பின் எ-று [சக]

வேறு.

தாய ராமுமை விழிகளின் முக்குணச் சாயல்
மேய தென்னவே வாணியும் யமுனையு மிக்க

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்,

தூய கங்கையு மொத்துமும் மலத்தொடக் கறுக்கும்
ஆயதற்றுறை யாடினா னின்பத்து ளாழ்ந்தான்

உலகங்களிற்குத் தாயாகிய பார்வதாதேவியின் மூன்று விழிகளில் சாத்துவிகராஜசதாமதமென்னும் முக்குணங்களின் சாயலைப்பொருந்திய தொப்பநிறத்தைப்பெற்ற மிகவும் பரிசுத்தமாகிய சாஸ்வதி யமுனை கங்கையென்னும் மூன்று நதிகளுஞ்சேர்ந்த ஆணவம்மாயை காமியமென்னும் முச்சிக்கலையுஞ் சேதிக்குஞ் சிறந்ததுறையிற்படிந்து சந்தோஷத்திலழுந்தினான் எ-று [௪௨]

காசி யம்பதி மகிமையும் வளமையுங் கண்டு
மாசி லாமதி மன்னவன் மகிழ்ந்தோராண் டளவும்
நேச மாயுறை யருமறை யோர்க்கெலா நிதியால்
ஆசை நீக்கியவ் விடமகன் றேகயை யடைந்தான்

வாரணாசி யென்னுங் காசிப்பதியின் மகிமையையுஞ் சிறப்பையும் பார்த்தவனாய்க் குற்றமற்ற குணத்தையுடைய அரசன் மகிழ்ந்து ஓர்வருடம்வரையில் அத்தலத்தில் அன்புடன் றங்கி அவிடத்துள்ள வேதியரனைவர்க்கும்அளவற்ற தானஞ்செய்து அவற்றாலவர்கள் கொண்ட ஆசையை யொழித்து அப்பதியை நீங்கிக் கயையை அடைந்தான் எ-று [௪௩]

அந்த நற்பதி தன்னிலே தென்புலத் தவர்க்குச்
சிந்தை யின்புறச் செய்கடன் முடித்தமேற் சிறந்த
சந்து நந்திரை யெறிபிர யாகையு நலஞ்சேர்
சிந்து மாநதி நருமதை கண்டகி தீர்த்தம்

அவ்விதமடைந்த கயையில் பிதிர்களுக்கு மனமகிழச்செய்யும் கடன்களைச் செய்துமுடித்து அதன்மேல் சங்கங்களை யெடுத்தெறியும் அலைகளைப் பொருந்திச் சிறந்த பிரயாகையும் நன்மைபொருந்திய சிரேஷ்டமாகியசிந்துநதி நருமதாநதி கண்டகிநதி இதுவுமன்றி எ-று [௪௪]

கோத கற்றகோ தாவிரித் துறைகளுங் குலவு
சீத துங்கபத் திரைகவு தமைமுதலாய
பாத கங்களை யகற்றிடு நதிதொறும் படிந்தும்
ஓதருந்தல மூர்த்திக டரிசன முவந்தும்

குற்றங்களை யகற்றுங் கோதாவரி குளிர்ந்த துங்கபத்திரை கவுதமை முதலிய பாதகங்களை நீக்கும் நதிகள்தோறும் மூழ்கி ஆங்காங்குள்ள சொல்லுதற்கரிய மூர்த்திகளின் தரிசனங்கண்டு சந்தோஷித்தும் எ-று [௪௫]

அரவுடன் னருஞ்சகோ ரமுமென வுணவ ருந்தி
இரவுநண் பகலென்பதற்றே தவமி யற்றுங்
காவிலார் கிறைஸ்ரீசை லத்துமுக் கணனைப்
பாவிசைச்சிவசிவ மணியொலி செவிப்படுத்தி

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்,

சற்பமும் சக்ரவாகமும் போலக் காற்றையுங் கிரணத்தையும் உணவாக வருந்தியருந்தி இராப்பகலென்பது தமக்குத் தோன்றாமல் நவங்களையியற்றும் வஞ்சகமில்லா நெஞ்சகமுடைய மாதவர்களிறைந்து வசிக்கும் ஸ்ரீசைலமென்னும் மல்லிகார்ச்சுனத்தில் வாழும் திரிநேத்திரனாகிய சிவபிரானை வணங்கித் துதித்துச் சிவராத்திரியினன்று அவ்வாலயத் தபிஷேககாலத் தொலிக்கும் திருமணிச்சத்தத்தைச் செவிவழியாயேற்று எ-று [௬௬]

நிதியுமின் னுயிருந் தொழுதெய்வமு நிறைதன்
பதியையன்றி வேறின்றெனப் பரிவுறு கற்பின்
மதிமு கத்தவர் மனமெனத் தூயதாய் மன்னிக்
கதியை நல்குசித் தாச்சிர மதுதனைக் கண்டும்

தங்கள் பாக்கியமும் இனிமையாகிய உயிரும் தாம் வழிபடு குலதெய்வமும் அன்பு நிறைந்த தமது புருடரையன்றி வேறின்றென அவாய்குங் கற்பின் மிகுந்த சந்திரனையொத்த சுந்தர முகத்தையுடைய மாதர்கள் மனதைப் போற் பரிசுத்தமாய் நிறைந்த முத்தியைக்கொடுக்கும் சித்தாச்சிரமமென்னுந் தலத்தைத் தரிசித்து எ-று [௬௭]

தெக்க ணத்திசை நோக்கியே செல்லுழிச் சிறந்த
முக்க ணாயக னுமையொடு முகமலர்ந் திடத்தன்
பக்க முற்றிடப் பெற்றது கயிலையாம் பதிக்குத்
தக்கதாயகா ளத்தியாம் வரையடிச் சார்ந்தான்

தென்றிசையை நோக்கிச் சென்றிடும்போது சீர்பொருந்திய திரிநேத்திரதாரியாகிய சிவபிரான் பார்வதாதேவி முகமலர்ந்து தன்னிடது பாகம் பொருந்தப்பெற்றதும் கைலாயகிரிக்குச் சமானமானதுமாகிய ஸ்ரீகாளாஸ்தகிரியின் அடிவாரத்திற் சார்ந்தான் எ-று [௬௮]

மதிக்கொ [illegible]ந்துசேர் கருமுகில் குழுறலை மதந்தாழ்
கதித்த வே [illegible] மென் றெண்ணிக்கண் டீரவம் பாய
மதிக்குங் கானவர் மயிலைத்தன் மாதெனச் சிலையின்
றுதிச்ச ரந்தொடா மலைவளங் கண்டன னேற்போன்

வெள்ளிய மூன்றாம்பிறை சார்ந்த கருமேகங்களானது கர்ச்சனையிடுவதைக்கேட்டு மதம்பாய் சுவட்டையுடைய பெருத்தகறுத்த யானையென்று இதயத்தெண்ணி சிங்கங்கள் அம்மேகங்கள் மேற்பாயவும் யாவருமதிக்கும் வேடர்கள் மயிலைக்கண்டு தங்களினமாதரென்று தாம்வளைத்தவிற்கண்கூர்மை பொருந்திய சரங்களை விடாமல் மலைவுகொள்ளும்படியாகிய மலைவளங்களை கண்ணுற்றான் என்றவாறு [௬௯]

பிடியி னூடலை யகற்றுவான் பெய்ம்மத வேழம்
வெடிம லர்த்துணர்த் தேனளா யருந்திடும் வெற்பிற்
கொடியி டைக்குறச் சிறுர்வரை கூயது கேட்டு
முடிது ளக்குவார் கின்னரர் மாதர்கண் முற்றும்

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

மும்மதங்களைப் பெய்யும் முகில்போன்ற ஆண் யானைகள் பெண்யானைகளின் பிணக்கைத் தீர்க்கவேண்டி மலர்ந்த மலர்க்கொத்துகளின் தேன்களைத் தழைகளிற்றோய்த்து அருந்தக்கொடுக்கும் அம்மலையில் கொடியை நிகர்த்த சிறிய மருங்குலையுடைய குறச்சிறுமியர் கூவியதைக்கேட்டு நமக்கிவ்வித இனிய குரலோசை யில்லையென்று கந்தர்வ மாதர்களனைவரும் தங்கள் தங்கள் சிரங்களை அசைப்பார்கள் எ-று [௫௰]

தேனிரு ளுடைந் திழிதருந் தேறலைச் சிறுகண்
யானை தன்னையே யருந்தியிப்பேர ராவென்ன
வானிமிர்ந் துகைசுருண் டிடவாய் வெரீஇ யருவிக்
கானி ழிந்தகல வரையினைக் கண்டனன் கண்ணுதல்

தேன் கூடுகளுடைந்தொழுகுந் தேனின் தாரைகளைக் கண்ட சிறியவிழிகளையுடைய யானைகள் தங்களையெடுத் துண்பதற்காய் இப்பெரிய சர்ப்பங்கள் வருகின்றனவென்றெண்ணித் தங்கடுதிக்கைகளை வானெட்ட நீட்டிச்சுருட்டு வாய்விட்டுக் கதறி அஞ்சி அருவியாறுடுங் காட்டைவிட்டு நீங்கும வளப்பம் வாய்ந்த அக்காளத்தி கிரியைக்கண்டான் எ-று [௫௧]

கான வச்சிறார் வளர்க்கின்ற விரலையின் கன்றை
வானி லூர்மதிக் கலையொடு வருமமா பழக்கித்
தேன ருந்திடுமே பலவளஞ் சிறந்திடுங் குன்றைக்
கோன திர்துகை சிரமிசைக் குவித்தனன் குறித்தே

வேடச்சிறுவர் தாம் வளர்க்கின்ற மான்கன்றை ஆகாயத்திற்றவழும் சந்திரன் மத்தியிலுள்ள கலையுடன் முட்டவிட்டுப் போரிற்பழக்கித் தேன்முதலிய கொடுத்தருந்தும் பலவளமைகளாற் சிறந்த அக்குன்றத்தின் சிறப்பைச் சிவியறிந்து செங்கரங்களைச் சென்னிமேற் குவித்து எ-று [௫௨]

கரியமாமழை சூழ்ந்திடு காலையிற் கரியி
னுரியணிந்திட லொத்திடும் வெண்முகில் சூழிற்
திருவெணீறணிந் திலகுவ தொக்குமெய்ப் போது
மானதாருரு வாகுமச் சயிலமே யடைந்தான்

கடலினீருண்ட கரியமேகங்கள் கவிந்தபொழுது பரமசிவன் யானையின் சருமத்தைப் போர்த்ததுபோலும் நீருண்ணு வெண்மேகங் கவிந்தபொழுது அப்பரமசிவன் வெண்ணீறணிந்ததைப் போலும் இரண்டுருவச் சாயலையுங் கொடுக்கும் அம்மலையிடத்துச் சென்றான் எ-று [௫௩]

யானையின் மதவாரி கடலைப்பெய்தே யாறுய்த்
தானிழிந்த திற்கமழ்வது மான்மதஞ் சார
தேனி ருதனின் மதிதவழ் திறத்திலுஞ் செந்தேன்
வான காடரு ளமுதநற் சுவைதனை வழங்கும்

யானைகளின் மதமென்னும் வெள்ளங்கள் ஒன்றாய்ச்சேர்ந்து நதியைப் போலிறங்க அதிற்கஸ்தூரியுஞ் சேர்ந்து பரிமளிக்க அதனுடன் சாரலினின்

றொழுகுந்தேனுடன் சந்திரகிரணமும் பாய்வதால் அத்தேன் சொர்க்கவாசிகளாகிய தேவர்களுண்ணும் அமுதத்தைப் போலினிய உருசையைத்தரும் என்றவாறு [௫௪]

குஞ்சரங்களு மடங்கலு வேங்கையுங் கொடிய
நஞ்ச ராக்களு மாக்கம யூரமு நவிலு
மஞ்சு கங்களுந் தவமுயன் றசைவிலா முனிவர்
நெஞ்சுவந்திடப் பணிசெயும் வரையினி னிருபன்

யானைகளுஞ் சிங்கங்களும் புலிகளும் கொடிய விஷமுள்ள சர்ப்பங்களும் அழகிய மயில்களும் இனிய சொற்களையுடைய கிளிகளும் அசைவின்றித் தவஞ்செய்யும் முனிவர்களின் மனமகிழப் பணிவிடை செய்யும் அம்மலையினிடத்துச் சிபியாகிய மன்னவன் எ-று [௫௫]

உள்ளதீர்த்தங்க ளாடியே வுளங்கனிந் துருகிக்
கள்ள ருமலர் கண்ணுத லடியினிற் கவின
வள்ளலானவ னருச்சனை புரிந்துமே வணங்கி
யுள்ள மின்புறக் களித்தன னும்பரும் வியக்க

இருக்கும் தீர்த்தங்களின் முழுகி மனக்கனிவுடனுருகிச் சிவபெருமான் திருவடிகளில் அழகுபெறத் தேன்கணிறைந்த மலர்களிட்டருச்சனைபுரிந்து வணங்கி வள்ளலாகிய சிபிதேவருமதிசயிக்கத் தனதுள்ளமின்பமீறச் சந்தோஷித்தான் எ-று [௫௬]

வாய தேதிரு மஞ்சனக் கலசமா மயிர்ச்சிக்
காய சென்னிபூப் புட்டிலாய்ப் பற்களட் டில்லாய்
நேயதோலடி கைகளாய்க் கண்மலர் நேர்ந்து
தூய பூசைசெய் துயர்ந்தகண் ணப்பரைத் தொழுதான்

தனது திருவாயே அழகிய திருமனக்குடமாய் மயிர்ச்சிக்குகள் நிறைந்த சிரமேமலர்ப்புட்டிலாய்த் தந்தங்களே மடைப்பள்ளியாய்ச் செருப்பணிந்த காலேகைகளாய் ஆவலுடன் மனமொப்பிக் கண்மலரைப் பறித்துவைத்துப் பரிசுத்தமாகிய பூசைசெய்துயர்ந்த திண்ணியரெனுங் கண்ணப்பரை வணங்கினான் எ-று [௫௭]

வளியின் றன் னுருக்கா ளத்தீச் சுரனென மண்ணோர்
தெளியக் காட்டிய தீபத்த னொளியையுஞ் சிறகா
ரளிகள் மூசுபூந் தாரணிந் தன்பரா னவருக்
கெளிய ளாயருள் செயுமுமை பதத்தையு மேத்தி

இவ்வுலகத்தவர் காளத்தீச்சுரம் வாயுவினுருவமெனச் சொல்லித் தெளியக்காட்டிய திருத்தீபத்தினொளியையும் இறகுள்ள வண்டுகள் மொய்க்கும் பூமாலையணிந்து அடியாருக்கெளியளாய் அருள்புரியும் ஞானப்பூங்கோதையென்னும் அன்னையின் அடிகளையுந் துதித்து எ-று [௫௮]

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

அத்தலங்கடந் தரசர்கோன் றென்றிசை நடக்கச்
சித்தர்மாமுனி தேவர்கள்செழுங்கம லத்தா
முத்தனுஞ் செலவரிய பாற்கட றயின் முயலும்
வித்தகன் னிலைப்பதிய தாம்வேங்க டங்கண் டான்

அத்தலத்தைக் கடந்து மன்னர் மன்னனாகிய சிபிதென்றிசையில் நடந்து சித்தர் முனிவர் தேவர்செறிய கமலாசனப் பிரமன் முதலியோர் போகுதற் கரிய பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரந்தாமன் நிலைபெற்று வாழும்பதியாகிய திருவேங்கடத்தைக் கண்ணுற்றான் எ-று [௫௯]

இந்தநற்புவி தனிலுறு மடியரு மெளிதாய்க்
கந்தமாமலர்ப் பதங்களைப் பணிந்துமே கனிவாய்ப்
பந்தமற்றவீ டடையவே பயோததி துறந்து
வந்தநாயகன் சேர்திரு வுடனுறை வரையே

நன்மை மிகுந்த இப்பூமியின்கண் வாழும் அன்பர்க்கெளிதாகத் தனது வாசம் வீசுமலர்ப்பாதங்களைப்பணிந்து மனக்கனிவுடன் பாசபந்தமற்று முத்தியடையும் வண்ணம் பாற்கடலைத் துறந்துவந்த பரந்தாமன் திருமகளுடன் சேர்ந்து வாழும் திருமலையானது திருவேங்கடம் எ-று [௬௰]

நம்புமன்பராஞ் செறுபயிர் கலிவெயி லலைய
வெம்பி வீழ்வதற் றின்பமாத் தழைத்திட மிகவே
யம்பு மாரிபோ லருண்மழை பொழியவக் கடல்விட்
டிம்பர் வண்டோய் முகில்பட ரினியவேங் கடமே

தனதிரு பாதாம்புயங்களை நம்பி அடுத்த அடியார்களென்னும் சிறிய பயிர்கள் துன்பமென்னுங் கோடையால் வருந்திவெம்பி வாடிவிழாமல் இன்பந்தழைக்கும்படி மழையைப் பெய்யுமேகம்போல் மிகுந்த அருண்மழை பொழியும் வண்ணம் அப்பாற்கடலைவிட்டு இவ்வுலகினிடத்து வளமைபொருந்திய துளபமாலையணிந்த மேகம்பரவி நிலைபெற்று நின்றது திருவேங்கடம் என்றவாறு [௬௧]

இருபயோதர மருமமுற் றீரறு மெழின்மின்
றிருவாத் தமைத்தலை கொளாமுய்த்திடத் திகழு
மொருபயோ தரந்துறை யிடம்பாணி காலுப்பிற்
பெருவியப் புணரச வேங்கடமெனும் பிறங்கல்

இரண்டு தனங்களை மார்பிற்பெற்ற முடிவில்லா அழகின்மிகுந்த இலக்குமியை மென்மையாகிய தனது மார்பிற்பொருத்தி உலகெல்லாம் பிழைக்கப் பிராசிக்கும் பாற்கடலை உறைவிடமாகக் கொள்ளுதலை நீக்கி கடல் நீர்க்கிய லவணம் நற்கடல் சீரிலுஞ் சிறந்ததைப்போல் அதனிலும் இஃது சிறந்ததென்று அத்திருமால் நிலைபெற்றுநின்றது திருவேங்கடம் எ-று [௬௨]

ஆவின்மீ தரிவில் கண்டக மகிழ்வுற்றுப்
பாவி யேத்திடுந் தேவரும் வியப்புறப் பணியாக்

சிவிச்சக்கரவர்த்தி பூ[illegible] சருக்கம்.

திரியின் மரவொடு சேழ்கிளர் பூவையீனி றத்தான்
வரமளித்திட நிற்பது வேங்கட வரையாம்.

சேஷசயனத்தின்மீது திருமால் திருக்கண் வளர்தலைக்கண்டு மனமகிழ்வுற்று வணங்கியேத்திடுந் தேவரும் அதிசயம்பெற அவ்வனந்தனே இவ்வுருவாயதால் சேஷாத்திரியென்னும் பெயர்பூண்ட இதனிடத்து இலக்குமியுடன் சாயாம்பூவண்ணனை யாவருக்கும் வரங்கொடுக்க நிற்பது திருவேங்கடமாம் என்றவாறு [௬௩]

பிடியதாமெனக் கன்றுகள் பெருங்கரு முகிலைத்
தொடருமத்துடி யடியெனக் கொண்டலின் றணியை
நெடிய கைகளாற் கரிணிகள் வளைத்திடு நிவந்து
வெடிகொள் பூம்பொழில் சூழ்திரு வேங்கட வெற்பில்

மேலோங்கி வளர்ந்து கொம்பர்களோறம் பரிமளமலர் மலர்ந்த அழகிய சோலைகள்சூழ்ந்த வேங்கடாசலத்திடத்து யானைக்கன்றுகள் தங்களது தாயென அம்மலையிற்சூழ்ந்த கருமேகத்தைத்தொடர உடுக்கைபோன்ற அடியுடைய கன்றுகளென்று அப்பெட்டை யானைகளென்னுந் தாய்கள் தமது நீண்ட துதிக்கைகளால் மேகத்துண்டங்களைப் பிடித்து வளைக்கப்போம் எ-று [௬௪]

மாசிலாக் கதிரவன் பகன் மின்மினிமான
வீசுபேரொளி யாவிர வகற்றியே விளங்கு
மாசுணப்பெரு மணியொளி வைகுந்த மாடத்
தேசத்தொத்திடுந் திருமலை வேங்கடச் சிறப்பு

குற்றமில்லாச் சூரியன் கதிர்பகலின் மின்மினிபோல் மழுங்க நாகரத்தினங்களினின்று வீசும் ஒளியால் இரவைநீக்கிப் பிரகாசியாநிற்கும் வைகுந்த நாட்டின்கண் பெருத்தமணிகள் பதித்த உப்பரிகையை யொத்த சிறந்த திருமலையென்னும் வேங்கடமென்றவாறு [௬௫]

வேதனூர்பதி தனிலலர் விரையர விந்தப்
போதினுளமாய்ப் பசுங்கழைப் போத்துகள் புறம்போந்
சீதரன் திரு மகளுடன் சிறந்துநல் வரங்கள்
போதவன்பருக் குதவிடும் வேங்கடப் பொருப்பில்

பிரமனது சத்தியலோகத்தின் மலர்ந்து மணத்த தாமரைப்புட்பத்தின் கட்டளை வழியாய்ப் பசியமூங்கிலிற்படர்ந்த சண்பகம்மேற்போம் சீதேவியுடன் மாதவனமர்ந்து மிகுந்த நல்வரங்களை அடியார்க்குதவும் அத்திருவேங்கடமென்னும் மலையினிடத்து எ-று [௬௬]

புனங்கள் காத்திடுங் கொடிச்சியர் விளிகளும் புளகத்
தனங்க ளுஞ்சொலுஞ் சாயலுங்கண்டுநாண் சார்ந்து
கனங்கொள் மாநகர் குயில்கிளி மயிலெலாங் கார்ந்து
வனங்கள் புக்கலா வழிவிலா வேங்கட வளனே

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

தினைப்புனங்களைக்காக்கும் புளகமிகிய தனங்களையுடைய குறப்பெண்கள் ஆயாலோட்டிக் கூவுதலையும் பேசுதலையும் சாயலையுங்கண்டு வெட்கங்கொண்டு காமிருந்த நகர்க்கணுள்ள குயில் கிளி மயில் இவையெல்லாம் ஒளித்து வனங்களிற் சேர்ந்ததால் அழிவில்லா வளப்பமுடையது திருவேங்கட மென்றவாறு [சுஎ]

ஊசல்வேங்கடத் தாடிய கொடிச்சிய ருருவைத்
தேசுலாவிய தேவர்கள் கண்மடிற் றிகைத்தே
யாசைமீறிநம் மழகினை வெறுப்ப ரென்றமரர்
நேசமாதர்த நெஞ்சமு மூசலா டிடுமால்

வேங்கடத்திருந்து ஊசலாடும் குறப்பெண்களின் அழகைத் தேசுமிகுந்த தங்கணவராகிய தேவர்கள் காணுவராகில் மயங்கி ஆசைமிகுந்து நம்மழகினை வெறுத்து விடுவார்களென்று அத்தேவரது அன்பிற்குகந்த மாதர்களது மனமும் ஊசலாடும் எ-று [சுஅ]

நாகமா மணிச்சுட ரெழுந்தந்த ரயந்து
வேகமாச் செலுமிரவி தேர்ப்பரி வயினெய்த
மாகமுற்றது மடங்கலென்பார் மலைகடந்து
போகத் தேருவார் வேங்கடத் துறைதரும் பொருப்பர் .

அவ்வேங்கடத்துறையும் வேடர்கள் நாகரத்தினத்தின் சோதி எழுந்து ஆகாயமார்க்கமாய்ச் சீக்கிரமாயோடும் சூரியனது தேரிற்கட்டிய குதிரைகளினிடத்துச் சென்றதை நோக்கிச் சிங்கமானது ஆகாயமார்க்கத் தெழும்பிய தென்று தாமும் மேற்செல்ல வெண்ணுவார் எ-று [சுக]

வெள்ள ராவுறை வேங்கட முனிவர்பால் வேதந்
தெள்ளி தாயுணர் கிள்ளைகள் தெருட்டிடக் கற்றுக்
கள்ள றாதவைந் தருக்கிளி கனிவொடு பாட
வுள்ளமேவியக் தமரர்கோன் முடி யசைத்தவக்கும்

சேஷாசலமாகிய அத்திருவேங்கடத்துறையும் முனிவரிடத்துத் தெளிவாக வேதங்களையுணர்ந்த கிளிகளானது சொல்லக்கேட்டுக் கற்றுக்கொண்டு தேன்பொழிய மலர்கள்விரிந்த ஐந்தருக்களின் வசிக்கும் கிளிகள் மனக்களிவுடன்பாட அதைக்கேட்ட இந்திரன் உள்ளம்வியந்து தனதுசிரத்தை அசைப்பான் எ-று [எ௰]

பரிசித்தோர் பிணியகற்றல் சஞ்சீவி யின்பரிசாம்
தரிசித் தன்னினோர் கேட்டபேரும்பிணி தணிந்து
துரிசற்றே பவத்தொடக் கறுத்தின்ப வீடெய்தும்
பரிசுத்தம்பெற வேங்கடமே பவனருளும்

தன்னைத்தொட்டவரது தேகவியாதியை நீக்குதல் சஞ்சீவியின் றன்மை சேவித்தோரும் நினைத்தோரும் கேட்டோரும் நோய்தணிந்து குற்றமற்று

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

பாவக்கட்டையறுத்து இன்பவீட்டை யெய்தவைக்கும் பரிசுத்தம் பெற்ற திருவேங்கடமே கோரிய பலனைக்கொடுக்குமென்பது எ-று [எக]

ஆயிர மிரண்டாகிய நாவுடைய நந்தன்
றூய வேங்கட வளங்களைச் சொல்லிட மிக்க
வேயமுற்றினுக் காலுண வாய்த்தவ நேரி
ளுயினே னுளர் புன்சொலுக் கமையுமோ நாடில்

ஆயிரம் வாயுமிரண்டாயிரம் நாவுமுள்ள ஆதிசேடனே பரிசுத்தமாகிய இத்திருவேங்கடமலையின் வளப்பத்தைச் சொல்லவேண்டி மிகவும் அவாக் கொண்டவனாய் இன்னுமகாற்றினையே உணவாகவுண்டு தவஞ்செய்வானாயின் அடியேனுளரும் அற்பச்சொல்லினுக்குள அவ்வளங்கள் அடங்குமோ அடங் காது எ-று [எஉ]

கண்டமால்வரை யடைந்தவன் கனிந்துநா ரணன்ரு
டண்டரும் பெருந் தீர்த்தமாம் சாமிபுட் கரணித்
தெணடி ரைப்புன லாடியவ் வயின்சி றப்போங்
குண்டுநீர்ச்சுனைப்பொய்கைகள் படிந்துளங்குளிர்ந்தே

இவ்வாறு கண்ட திருமலையைச் சிபியானவனடைந்து மனங்கனிந்து நாரணன்பதமபோற் குளிர்ச்சியைத்தரும் பெருந்தீர்த்தமாம் தெளிந்த அலை கள்வீசும் சலம்நிறைந்த தெய்வத்தன்மை பொருந்திய புட்கரணியின் முழுகி பின்னும் அவ்விடத்திற் சிறப்புற்றோங்கி யாழமாகிய நீர்கொண்ட சுனைப் பொய்கைகளினு மூழ்கி மனங்குளிர்ந்து எ-று [எங]

செய்விந்தத் தலர்கண்ணனுந் திருமறு மார்பன்
வைகுந்தப் பதிவிரசையை யொக்கு மாமறைநேர்
வைகுர தக்க கோனேரியிற் றோய்ந்து வைகறையில்
வைகுந்தக் காமன்னவன் மகிழ்ந்தனன் மாதோ

விளைநிலத்தலர்ந்த தாமரைநிகர்த்த கண்ணனாகிய சீதரனது வைகுந்தப் பதியின் வழியினுள்ள விரசாநதியை யொத்துவேதத்தைப்போல் அவண்டங் கிய தக்கமேன்மை பொருந்திய கோனேரித்தீர்த்தத்தின் விடியற்காலையின் மூழ்கிக் கூரியவேற் சாத்தனாகிய மன்னன் மகிழ்ந்து எ-று [எச]

பூந்து ழாய்முகில் பொற்புறு மலரடி பூண்டு
காந்துமா மணிக்குவைகள் பொற்குவைகள் காணிக்கை
யீந்தரும் மகிழ்வோ டளித்துள்ள நெக்குருகச்
சாந்தனுக்குவிந்தன்பொடு சாற்றலுற் றனனால்

அழகிய துளபமாலையணிந்த மேகவண்ணனது எழில்பெற்றபாததாமரை யைப்பணிந்து பிரகாசம்பொருந்திய ரத்தினராசிகள் பொற்குவியல்கள் அடங் கற்கரிய ஆசையோடு காணிக்கையாகக் கொடுத்து உள்ளம்நெக்குருகி சாந்த சீலனுக்குவிந்த அன்புடன் துதிக்கலுற்றான் எ-று [எரு]

சிவிச்சக்கரவர்த்தி பூர்த்த சருக்கம்.

வேறு

ஆதிமுக் குணமா யமலமுச்சுடரா யடைவுடன் முத்தொழிலியற்றும்
சோதிமூ வுருவாய்த் தொடக்கறு மவளாய்த் துளங்கிய காலொடு கனலாய்ச்
சீதமார் புனலாய்த் திண்புவி யதுவாய் நிகழ்தருமொருத் முதலான
நாதனை யுன்னை நாயினே னுதிக்க நாவொருகோடி பெற்றிலனே

ஆதியாகிய முக்குணமுமாய்க் குற்றமற்ற முச்சுடராய் அடைவுடன் முத்தொழிலையு மடாத்துஞ் சோதியாய் அத்தொழிற்கேற்ற மூவுருவாய்ப் பாசக்கட்டறுத்தவனாய் அசைந்து வீசுங்காற்றாய்க் கனலாய்த் தண்ணிய புனலாய் வலிய புவியாய்ப்பிரகாசிக்கும ஒப்பற்ற முதலான நாதனே உன்னை நாயினுங் கடையேன் துதிக்க ஓர்கோடி நாவுகளைப்பெற்றிலேன் எ-று [எசு]

குஞ்சரமென் றழைத்திடவே குரற்செவிபுகாமுனமெழுந்தே
யஞ்சிறைக் கலுழனேறி மேருவினி லழகிய கருநிறமலையொன்
றஞ்சலென் றோடி வருவதெனப்பவமேற்று வையாழி யாற்கராவைத்
துஞ்சிடவென்று கரியினைக்காத்த தூயவுன் னருளையென் சொல்கேன்

முதலையிடத்திலகப்பட்ட மும்மதயானை மனங்குழைந்தழைத்த குரல் செவியில்விழு முன்னமெழுந்து அழகிய சிறகையுடைய கருடன் மீதாரோகணித்து மகாமேருவின் சிகரத்தில் கருநிறமேகம் நின்றதுபோல் அஞ்சேலென் றோடி வந்தமேற்றுக் கூரிய சக்கரத்தால் அம்முதலையைச் சாகவென்று ஆனையைக்காத்த பரிசுத்தனே உனதருளை யாதென்று புகழ்வேன் எ-று [எஎ]

அருட்கட லியென் றியாவருமறிய வாடகன் மகனழைத் திடவுட்
கருத்தறு முன்னஞ் சியமாய்த் தோன்றிக் கடியதா னவனுரங் கடிந்த
செருப்புய மூழிக் கையனே திருவினேயனே வேங்கடமென்றும்
பொருப்பில்வந் தடியார் புன்மைதீர்த் தருளும் புனிதனே புதியதெள்ளமுதே

நீயே கருணைக்கடலென்று யாவருமறியும் வண்ணம் இரணியன் குமாரனாகிய பிரகலாதனன் உன்னைக் கூப்பிடக் குறிக்குமுன்னம் நரசிங்கமாய்த் தோன்றி அக்கொடிய அரக்கனது மார்பகத்தைக் கீண்டவனே அக்கினிக்கும் ஆழிக்கரத்தனே அலர்மேல் மங்கைநேயனே வேங்கடமென்னுந் திருமலையிலெழுந்து அடியர்களது சிறுமையைத் தவிர்த்தாண்டருளும் புனிதனே புத்தமுதத்தை யொத்தவனே எ-று [எஅ]

சனகரோ வாமதேவரே முதலாம் தொன்முனிவோர் குழுவுக்கும்
அகமெனு மமதையற்ற மெஞ்ஞானத் தற்புதர்க்குஞ் சிசுவன்பிற்
திகழுநல் லறிவு தழைத்தவர் தமக்குஞ் சீரருள் புரியுநீ மாலா
விகபரமிதென் றறிந்திலா வடியேற் கின்னருள் புரியுநா ளுளதோ

சனகமுனிவர் வாமதேவர் முதலிய பழைய முனிவரது கூட்டங்களுக்கும் நானென்னு மமதையற்ற மெய்ஞ்ஞானியர்க்கும் நல்லறிவு தழைத்தோர்களுக்கும் சிறுவன்பர்க்கும் சிறந்த அருள்புரியும் நீ உண்மயக்கத்தால் இகபரம இஃதெ

சிவிச்சக்கரவர்த்தி பூசித்தசருக்கம்.

ன்று அறியுந்தெளிவிலா அடியேனுக்கு இனிய அருள்புரியும் நாளும் ஒன்றுளதோ நாராயணனே எ-று [எகூ]

பங்கய வனமசழ குறவலர்ந்து பச்சைவில்லிட் டிருபாலுந்
திங்களோ டிரவிசேர்ந் தொளிதாவித் திகழுமோர் சோதிமின் ளுெகோர்
மங்குல் போற்கிரி மேல் வருவதே பொருவவந்து மெய்யன்பர் மேலருளைப்
பொங்கிய மழையாப் பொழியுநீ யெனையும் புரப்பது பாரமோ புகலாய்

தாமரைக்காடு அழகுபெறப்பூத்து இருபக்கத்தும் இந்திரவில்விட்டு இந்திரவி இருவருஞ்சேர்ந்து பிரகாசந்தாவி ஒளிவிடுஞ் சோதிமின்னலுடன் கரிய மேகம் பொன்மலைமேல் வருவதை யொப்பவந்து அடியர்மேல் மிகுந்தஅருண் மழையைப்பொழியும் நீ அடியேனையும் பாலிப்பது பாரமாமோ சொல்லக்கடவாய் எ-று [அ0]

இன்னுழைக் கதிர்சூழ் நுண்ணணுத் திரளினெண்ணிலா வண்டங்க ணிறைந்த
நின்னையோ ரண்டத் துறைகுவர் துதித்தல் நீள் சினையத்தியின்க னிக்குள்
மன்னிய கொதுகின் புழுவிலொன் றந்த மாத்தியல் புரைத்த வாமலர்வாழ்
மின்னுட னிலகு மேகமேபொழிலார் வேங்கடத் தமர்ந்தவச் சுதனே.

இந்திரவி-சந்திரசூரியர்-தாமரைக்காடு-முகம்-கண்-கை-பாதம் உந்தி-முதலிய அவயங்கள்-இந்திரவில்-துளபமாலையும்-கவுஸ்த்துவாபரணமும்-சந்திரசூரியர்-சக்குசக்கரம்-மின்-இலக்குமி-மேகம் உருவம்-பொன்மலை-கருடன்-இவை உபமானாலங்காரம்

வீட்டின் சாளரங்களினுழையும் சூரிய கிரணத்துத்தோன்றும் அற்பமாகிய அணுக்கூட்டங்கள்போல் அளவிலா அண்டங்கடோறும் நிறைந்துறையும் நின்னை ஓரண்டத்துள்ளும் வாழும் எம்போலியர் துதித்தல் நீண்ட கிளைகளிற்பொருந்திய அத்தியின் கனிக்குள் நிறைந்த கொசுக்களினுளுண்டாகிய டேத்தியொன்று அவ்வத்திமரத்தின் றன்மையையுரைக்க முயல்வதுபோலவன்றோ தாமரை மலரில்வாழும் இலக்குமியென்னு மின்னுடன் பொருந்திய மேகமே சோலைகள் சூழ்ந்த திருவேங்கடத்து வாழும் அச்சுதனே எ-று [அக]

புகன்றிடலெனது குரவரா முன்னோர் போற்றிட வவருளந் தனைவிட்
டகன்றிடாத் துரிய மணியதா யொளிரு மரங்கனி யாதலா லெனையுந்
திகழ்ந்திடச் செய்தே யாளுவாயென் று சித்தம துருகியே பணிந்து.
மகிழ்ந்ததோரிராஜ ராஜனுந் தென்பால் மாதராய் வந்தனன் மாதோ

சொல்லப்புகுங்காலத்தில் அடியேனதுவமிசத்தாராகிய பூருவத்தர்போற்றிசெய்ய அவர்களித யாசனத்தைவிட்டு நீங்கா சுத்தநிலைக்கணித்தாய்ப் பிரகாசிக்கும் அரங்கப்பெருமான் நீயாதலால் அடியேனையும் ஆதரனைசெய்தாளுவாயென்று மனமுருகிப் பணிந்துமகிழ்ந்து அரசற்கரசனுகிய சிபிதென்பாரிசத்தைநோக்கி அன்பாய்ப் புறப்பட்டான் எ-று [அஉ]

அன்னவேங்கடத்தோன் றன்னை வந்தடைந்த வடியருக்க ருடரும் வாங்க
டன்னை நாயடி யேற்கருள்க முக்கண்ண தற்பரசச்சிதானந்த

என்ன நாடோறுந் தோத்திரமது செய்திறைஞ்சிடுந் தனிமுதலான
பன்னகாபரணன் வதிதருகச்சிப்பதியக மடைந்தனன் பரிந்து.

இவ்விதமாகத் திருவேங்கடத்தானை வந்தடுத்த அடியார்களுக்கு அருள்புரியும் வரதனை அடியேனுக்குத் தாம்அருள் செய்யவேண்டும் முக்கண்ணனே தற்பரனே சச்சிதானந்தனே-என்று-அநுதினமும் அடியார்துதித்து வணங்கும் ஒப்பற்றமுதல்வனும் சர்ப்பாபரணனுமாகிய சிவபிரான்வசிக்கும் கஞ்சி நகரிடம் அன்புடன் சிபி அடைந்தான் எ-று [௮௩]

கம்பைநீ ராடி மாவடி வதிந்த கண்ணுத லாருமே கம்ப
ரும்பருமறியாப் பதமலர் பணிந்தே யுலகெலா மருட்டிடு மோரைந்
தம்பனை யெரித்தோன் வடிவினில் வளைக ளழுந்திய வடுவொடு தனமாங்
கும்பமூர் வடிவமமைந்த காமாட்சி குளிர்மலர்ப்பதம் பணிந்தனனே.

அக்கஞ்சி நகர்க்கணுள்ள கம்பாநதியிற்படிந்து தேவர்களாலும் அறிதற் கொண்ணாத நெற்றிக்கண்ணராகும் ஏகம்பநாதர் இருபாதமலரைப் பணிந்து உலகங்களையெல்லா மயக்கும் ஐங்கணையனுகிய மன்மதனையெரித்த அச்சிவபிரான் தேகத்துதனதுத் கை வளைகளழுந்திய வடுவோடு பொற்குடத்தை யொத்தனத்தின் வடிவையும் பொருந்திய காமாட்சியம்மனது குளிர்ந்த மலர்ப்பாதங்களையும் பணிந்தான் எ-று [௮௪]

கல்வியின் பெருக்குஞ் செல்வமு மகவுங் காணியும் புதுமையதான
பல்வளச் செருக்கு மரசியன் முதலாம் பாக்கிய மனைத்துங்கடை விழியா
லல்லிடுங் கருணை வாரிதி யுலக நாயகி யானகா மாட்சி
மெல்லடி பணிந்து காமகோடியதாய் விளங்கிய பீடமுந் தொழுதான்

குறைவில்லாப் பெருக்கமாகிய கல்வியும் செல்வமும் மகவும் காணியும் நூதனமாகிய பற்பலகளிப்பும் அரசாட்சி முதலிய பாக்கியங்களும் கடைக்கண்பார்வையாற் பாலிக்கும் கிருபாசமுத்திரியாகிய உலக நாயகியென்னுங் காமாட்சி நாயகியது மெல்லிய பாதங்களைப்பணிந்து ஒளிமிகுங்காமகோடி பீடமுந்தொழுதான் எ-று [௮௫]

தேசிக னொருமா மறைச்சிறு வனுக்காய்ச் செந்தமிழ்ப் பாடிட விரங்கி
மாசறு கனக மழைமுகில் பெய்ய மகிழ்ந் தருள்புரிந்த செந்திருவின்
வாசமா மலர்த்தாள் போற்றியே யத்தி வரையிருந் தரசியல் செலுத்துங்
கேசவ வரத ராஜமா முகிலைக் கிளர்ச்சியா வருச்சனை புரிந்தான்.

ஆசிரியனாகிய ஒருவன் ஓர் பிராமணச் சிறுவனுக்காகத் தன்மேற்பாடிய பாடலுக்கு மனமிரங்கி குற்றமற்ற மேகமானது பொன்மழை பெய்யக்கிருபை செய்தருளிய மகாலட்சுமியின் வாசம்பொருந்திய மலர்ப்பாதத்தைத் துதித்து அத்திகிரிக் கதிபதியாகிய மேகநிறக் கேசவ வரதராஜனை அன்பால் வணங்கி அருச்சனைபுரிந்து எ-று [௮௬]

சிருமு முத்தா நதிப்புன லாடிச் சிவிதனிச் செருட்டியின் முதலில்
வாரிதி யலையிற் குரனி படைத்து மற்றது நின்னிதா யசைவற்

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

நேசொடு விளங்கத் தான்முது கிரியா யெய்திய சிவனடி யிறைஞ்சித்
தாரணி பெரிய நாயகி யருளாஞ் சலதியிற் சந்ததங் குளித்தான்

சிபியானவன் சிறந்த முத்தாநதியிற் ஸ்நானஞ்செய்து ஒப்பற்ற ஆதி சிருட்டிகாலத்தில் உலகத்தைப்படைத்துக் சடலின லைகளால்உலகமசையாமல் வலிவுற்றிருந் தழகொடுவிளங்கும் பொருட்டுத் தானே விருத்தாசல ரூபமாகிய பரமேசன் பாதம்வணங்கி மலர்மாலையணிந்த பெரிய நாயகியினது கருணைக் கடலில் அத்யந்த மூழ்கினவனாய் எ-று [அஎ]

கனைத்துவண் டிமிருங் கொன்றையந் தாரான் கதழெரி வரையுருவாகி
அனத்தொடு வராக மாயய னரியு முடியடி யறிகிலா துயர்ந்து
நினைத்தவர் முத்தி பெறவரமருளு நிர்ம்மலத்தலம் வலம் வந்து
மனப்பாப் பறவண்ணா மலைபரையுண்ணா முலைத் தாயையும் வாழ்த்தி

வண்டுகள் சத்தித்துச் சூழுங்கொன்றை மாலையணிந்த சிவபிரான் சிறந்த அக்கினி மலையுருவாகி அயனும் அரியும் அன்னமும் பன்றியுமாய் முடியுமடி யுங்காணுமற்றிகைக் கவுயர்ந்து தன்னை நினைந்தவர் முத்தியடைய வரத்தைக் கொடுக்கும் பரிசுத்தத்தலமாகிய அருணாசலத்தை வலம்வந்து சித்தச்சுழற்சி நீங்க அண்ணாமலையாரையும் உண்ணாமுலைத்தாயையும் வணங்கி எ-று [அஅ]

வடமசைந் திலகு மங்கையர் புளக வனமுலை யெனத்திரண் டடரும்
தடவிரு கும்பக் கடகளி றிவுளித் தானையு மிரதமுங் குடையுங்
கொடிகளு நெருங்க வழிகொடு சென்று குவலய மடங்கலு மிறைஞ்சும்
இடபமா மலையைக் கண்டு பூசித்துமெய்புளகரும்பின னிறைவன்

முத்துவடங்களசைந்து பிரகாசிக்கும் மாதர்களது பூரித்து அழகிய தன மெனத்திரண்டு விசாலமாகிய விருகும்பஸ்தலங்களுடைய மதத்தயானைகளும் குதிரைப்படையும் ரதமுங்குடையுங்கொடியும் நெருங்கவழிக்கொண்டு நடந்து உலகமுழுது மிறைஞ்சும் நந்திமலையைக்கண்டு பூசித்துப் புளகாங்கனானன் சிபி என்றவாறு [அக]

கானவர் வலையுட் பட்டமா னென்னக் கவலுறு வோர்பய மகற்றத்
தேனமர் ஜெம்பு நாவற்கீ ழுறைந்த சிவபெரு மான்றனைப் பணிசெய்
தானையின் காவி லமர்ந்தகி லாண்ட மனைத்தையு மாளுமென் னனையை
மோனமந் தரத்தாற் றுதித்தடி பரவி மூழ்கின னின்பவா ரிதியில்

வேடர் வலையிற்சிக்கிய மானைப்போலத் துன்பமுறுவோரச் சத்தைநீக்கத் தேன்பொருந்திய ஜம்புநாவற் றருவினடியிலமர்ந்த சிவபெருமானைப்பணிந்து அத்திருவானைக்காவில்வசித்து அகிலாண்டங்களையு மிரட்சிக்குந்தாயாகிய அகி லாண்டநாயகியை மோனமந்திரத்தாற் றோத்தரித்துப் பாதம்பணிந்து ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கினான் எ-று [கூ0

பொன்னி நீராடிப் பொன்மதிற் புரிசை பொற்புறு மரங்கமா ளிகையிற்
பொன்னென வுமின்னே டிலகிடும் பசிய பூந்துழாய்க் கொண்டலின் புதிய

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

பொன்னலப் பாத பங்கயம் பணிந்து புளகம தரும்பிநின் றாடிப்
பொன்னிற வசுரன் மகனெனத் தேவர் புகழ்ந்திட வின்பமாய்ப் பொலிந்தான்

காவிரிநதியிற் படிந்த அழகிய எழ்மதில் சூழ்ந்தலங்காரமுற்ற திருவரங் கப்பெருங்கோவிலிலுள்ள திருமகளென்னு மின்னோடு வசித்துப்பிரகாசிக்கும் பைந்துழாய் மாலிகாபரணனாகிய மேகநிறவாச்சனது மெல்லியபுதிய பொன் போன்ற விகசித ஸ்ரீபாதமலரை வணங்கி உரோமபுளகாங்கனாய்த்தேவரனை வரும் இவன் இரணியகுமாரனாகிய பிரகலாதனுக் கிணையெனப் புகழ்ந்திட ஆனந்த பரவசனாய்ப் பொலிந்தான் எ-று [கக]

தாயதா யொரு பெண் சஞ்சலந் தவிர்ந்த தாயுமா னவர்மலர்த் தாளிற்
றூயமா மலரா லருச்சினை புரிந்து தொல்லுல கனைத்தையு மீன்ற
றாயாற் றாயா மட்டுவார் குழலி சீர்ம்மல வருள்பெறீஇ யின்ப
மீயுயர்ந் தாடிப் பாடியானந்த வெள்ளமேற் கொண்டனன் விறலோன்

ஓர் செட்டிப்பெண்ணுக்காக அவள் தாயுருவங்கொண்டடைந்து அவட் குற்றகர்ப்பவேதனைச் சஞ்சலத்தை யொழித்ததாயுமானவர் சச்சரோருகத்தாளில் பரிசுத்த மலரால் அருச்சனை புரிந்து பழமையாகிய உலகங்களனைத்தையும்பெற்ற அன்புள்ள தாயாகிய சுகந்தகொந்தளாம்பிகையின் பரிசுத்த அருள்பெற்று இன்பமிகுந்து ஆடிப்பாடி ஆனந்தமேற் கொண்டவனானன் வல்லமையின் மிகுந்த சிபியரசன் எ-று [கஉ]

எல்லையி றேவர் முனிவருமாலு மீரிரு முகமுள வயனும்
சொல்லுதற் கரிய பெருமையும் வளமுந் தூயதன்மையுமிகுந் தோங்கும்
தில்லையம் பதியிற் போந்து மெய்ஞ்ஞானந் திகழ்சிவ கங்கையிற் படிந்து
தொல்லை நான் மறைமூ வாயிரர் பதங்க டொழுதனன் சுமுகனு மன்னன்

அளவில்லாத்தேவர்களும் முனிவர்களும் மாலும்அம்மான் மகனாகிய நான்முகனும் அளவிட்டுச் சொல்லற்கரிய பெருமையும் வளமையுந் தூயதன் மையும் மிகுந்தோங்கும் சிதம்பரஞ்சேர்ந்து உண்மையாகிய ஞானத்தை நல் குஞ்சிவகங்கை யென்னுந் தீர்த்தத்திற்படிந்து பழமையாகிய நான்மறை களுணர்ந்த தில்லைமூவாயிரவர் பதங்களைத் தொழுதான் சுமுகனாகிய சிபி என்றவாறு [கங]

அகிலமா மாக்கை யிதயநற் கமல மாகிய சிதம்பர வெளியிற்
சகமுறு சச்சி தானந்த நடனந் தொடுத்தொரு பதமலர் தூக்கிச்
சகமுழு தாடச் சங்கர னாடுந் தமனியச் சபையெதிர் கண்டு
சுமுக னுமிக் கண்கணீர் பனிப்ப நரபதி பரவச முற்றான்

சர்வலோகங்களுந் தேகமாய்த்தான் இருதய கமலபீடமாய் நின்ற சிதம்பர மென்னும் ஆகாயவெளியில் சுகமுறுஞ் சச்சிதானந்தத் திருக்கூத்தாடவாரம் பித்து ஓர் பாதமலரை மேற்றூக்கி உலகங்களெல்லாம் அசைந்தாடும்படி சங் கரனாடா நின்ற கனகசபையை யெதிர்கண்டு மகிழ்ந்த முகத்தை வகித்தவ

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

ணுய்க் கண்களினின்றும் ஆனந்த நீர்கசிய நரபதியாகிய சிபி பரவசமுற்றான் என்றவாறு [கச]

நாட்டமொத் ததனி லையறி வடங்க நாற்கா ணுதியு மொடுங்க
வாட்டமு மகிழ்வும் வரவொடு போக்கு மறத்தலு நினைத்தலு மான
கூட்டமுங் கூடாக் குணங்களு மற்றுக் குறிகுண மிலாத நிர்க்குணமாய்
நீட்டியதண்ட மெனவிழுந் திறைஞ்சி நின்றன னிருபர்க ணிருபன்

தனது குறிப்பையொத்து அவ்வழியே ஐம்பொறியடங்க நாற்கரணங்களும் ஒடுங்கத் துன்பமும் இன்பமும் வரவும் போக்கும் மறப்பும் நினைப்புமான சங்கங்கள் அணுகாத குணங்களும் அற்றுக்குறியுங் குணமுங் கடந்த நிர்க்குணமாய் நீண்ட தண்டமென விழுந்திறைஞ்சி எழுந்து நின்றனன் அச்சக்கரசன் எ-று [கரு]

வாக்கொடு மனதிற் கெட்டிடா வின்ப மயமதா யுட்புறமெங்கும்
நீக்கற நிறைந்த பூரண மாகி நிஷ்கள மாயருளமுதைத்
தேக்கிய கடலாய்ச் சிற்சுட ராகித் திகழுமெய்ப் பொருளைச் சிந்தித்தே
ஆக்கமாஞ் சச்சி தானந்தி பொற்றா ளன்புடன் பணிந்தன னரசன்

மனோவாக்குக்கெட்டாத அதீதமாய் இன்பமயமாய் உள்ளும்புறமுமாய் எங்கும் நீங்காது நிறைந்த பூரணமயமாகி நிஷ்களமாய் கருணாமுதம் நிறைந்த கடலாய்ச்சிற்சுடராகிப்பிரகாசிக்கும்மெய்ப்பொருளைச்சிந்து செல்வம்போன்ற சச்சிதானந்தத்தின் பொற்றாளை அன்புடன் பணிந்தான் எ-று [கசு]

சுத்தமாந் துரிய வெளியெனப் பசும்பொன் றலங்குற வியற்றியதான
சித்திரக்கூடத் தில்லைக் கோவிந்தன் றிருப்பத மலர்முடி சேர்த்துப்
புத்தமு தத்தி னுருவதாந் திருவின் பொன்னடி மலர்கள் பூசித்துப்
பத்தரிற் சிறந்த பார்த்திப னின்பப் பரிசுபெற் றுயர்ந்தன னன்றே

சுத்தமாகிய துரியவொளியைப்போல் பசும்பொன்னால் இலங்கச்செய்த தான சித்திரகூடத்தில் வசிக்கும் தில்லைக்கோவிந்தன் இருபாதபத்மங்களை முடிமேற்சேர்த்திப்புதியஅமுதத்தினை யொத்தவுருவம் வாய்ந்தஇலக்குமியின் பொன்போன்ற பாதமலர்களைப் பூசித்துப் பத்தர்களுட்சிறந்த சிபி ஆனந்தமென்னும் ஊதியத்தைப்பெற்று உயர்ந்தனன் எ-று [கஎ]

கவுணிய ரென்னு மகவழ விரங்கிக் காஞ்சன வள்ளத்தி லமுதம்
உவகையாய் ஞானத்துட னூட்டுவித்த வரிய தாயையு மொளிர் முத்தின்
சிவிகையுந் தாளப் பந்தரு மீய்ந்த ஜெயமெலா முனக்கெனத் தேற்றுஞ்
சிவபெரு மான்ற னடியிணைகளையுஞ் சென்னிமேற் சூட்டியேத் தினனே

திருஞான சம்பந்தரென்னுந் தன்புத்திரனழக் கண்டு மனமிரங்கிப்பொற் றின்னைத்தில் அமுதுடன் ஞானத்தையுங் கூட்டியூட்டிவைத்த அன்பிற்குரிய சிவகாமித்தாயையும் முத்தின் தண்டிகையும் முத்துப்பந்தரும் அச்சம்பந்தருக்

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

ளுக்கொடுத்து ஜெயமுழுதும் உனக்குடையக் கடவதென்று தேற்றியாற்றிய சிவபெருமான் இருபதாம்புயங்களையும் சிரசின்மேற் சூட்டித்துதித்தனன் என்றவாறு [௧௮]

மக்கடம் பிணிக்கு மருந்துக ளருத்தி மாபிணி தவிர்த்திடச் செய்த
றக்கதாய் தந்தைக்குரியதென் பதுதான் சகமெலா முணர்ந்திட மாந்தர்
துக்கம துறநோய் வினையெலா மகற்றத் தொல்வயித் தியப்பெயர் தரித்த
முக்கணா யகனைக் கண்டுவே ளூரில் மும்மலத் தொடர்பறுத் தனனே

தம்பிள்ளைகட்கடைந்த நோய்கட்குத் தக்க அவுடதங்களைப் புகட்டி அப் பிணியை நீங்கச்செய்வது தாய் தந்தையர்க்குரிய கடமை யென்பதுபோல் ஜகமெல்லாமறிய மக்களாகிய மானிடர் துக்கப்படவந்தடையும் வினைநோய் சகலத்தையுமாற்ற வயித்தியனென்று பேர்தரித்த முக்கண்நாயகனை வேளூரிற்கண்டு மலமூன்றின் பந்தங்களை அறுத்து இன்புற்றான் எ-று [௧௯]

தீவினை யகல்சித் தாமுத மதனிற் றீர்த்தம தாடியே பவத்தோர்
நோவினை யறுக்குந் தையனாயகிதன் னுவலரு பதமலர் வணங்கி
மூவினை புரிய முற்றிடு மசுரர் முடித்தலை துணித்துவா னவர்கள்
கோவினுக் கரசு சூட்டிய முத்துக் குமாரவேளடிமுடி பூண்டு

கொடிய தீவினைகளைத் தீர்க்கும் சித்தாமுதமென்னுந் தீர்த்தத்திற்படிந்து பாவத்தையுடையவரது நோவினையகற்றும் தையல்நாயகியின் சொலற்கரிய சோபிதமாகிய பாதாம்புயம் பணிந்து முத்தொழில்களையும் செய்யவேண்டுமென்று முயலும் அசுரர் முடித்தலைகளைத்துணித்து இந்திரனுக்கு முடிசூட்டிய முத்துக் குமாரவேளின் பாதாம்புயத்தைச் சிரமீதணிந்து எ-று [௨௰]

நெஞ்சக மகிழக் கௌரிமாயூர நிலையடைந் தத்தல மமர்ந்த
செஞ்சடா டவியின் மதியணி கடவு டிருவடித் தாமரை போற்றி
அஞ்சினேன் பவத்தக் கடியனே னென்ன வறைதரு மன்பருக்கிரங்கி
அஞ்சிடே லென்றே யருளப யம்பா ளலர்பதம் வணங்கின னரசன்

தன்மனங்களிக்கப் பார்வதி வசிக்கும் மாயூரத்தலத்தைச் சார்ந்து செவந்த சடாரணியத்தின் வெள்ளிய சந்திரனைபணிந்த சதாசிவனது உபய பாதாம்புயங்களைப்போற்றி அடியேஞ்செய்த பாபங்களுக்கு அச்சமுற்றே மெனத் துதிக்கும் அன்பருக்கிரங்கி அஞ்சிடேலென்றருள்புரியும் அபயம்பாளினது அரவிந்தப்பாதம் வணங்கினான் எ-று [௨௰௧]

ஆவடு துறையி லணுகியே மூலரடி யிணை யுளத்தமைத் தழகார்
மாவடு வகிரி னிணைவிழி யொப்பில் வனமுலைக் கிசைந்தொளி வீசும்
பூவடி மாசி லாமணி யான புனிதனார் தனைப்பணிந் திறைஞ்சி
நாவடி தழும்பத் தொழுதறத் துதித்து நடித்தன னின்பமா நடனம்

திருவாவடுதுறையிற்சேர்ந்து திருமூலர்இருபாதத்தையும் உள்ளத்திருத்தி பருத்தவழகிய மாவடுவை நிகர்த்தவிழியும் நிகரில்லா விளமைதங்கிய தனத்

சிவிச்சக்கரவர்த்தி பூசித்த சருக்கம்.

துக்கிசைந்து ஒளியும்வீசும் மாசிலாமணி யீசனது மலர்போன்ற பாதம்பணிந் திறைஞ்சி அடிநாத்தழும் பேறத்துதித்து இன்பக்கூத்தாடினன் எ-று [௩௨]

காவலன் சோடிக் காவலைக்கண்டு கண்களி கூர்ந்துமே யுள்ளத்
தாவன மீதூருமையொரு பாகத் தழகரை யருச்சனை புரிந்து
தேவர்கள் மகுட மணித்திர ளிடறிச் சிவந்த சீர்ப்ப தந்தனைச் சென்னிப்
பூவணி யெனவே சூட்டியுண் மகிழ்ந்து பொருவிலாத் துதிபல புகலுரன்

பின்னும் சிபியென்னும் அரசன் திருக்கோடிக்காவைக்கண்டு கண்களி கூர்ந்து அன்னப்புள்ளையுகைக்கும் உமையைப்பாகந் தமைத்த அழகரை அருச்சனைபுரிந்து தேவர்களது மோலியிலணிந்த மணிக்கூட்டஞ் சிந்திச் செவந்த திருப்பாதத்தைத் தனது முடிக்குப் பூமாலையாய்ச் சூட்டி உள்ளமகிழ்ந்து ஒப்பில்லாத பலவிதத் துதிகளைப் புகன்றனுக எ-று [௩௩]

இரவொடு பகலற் றினியரன் பூசை யிருந்தசை வின்றியே யியற்றுங்
கரவிலா மறைமார்க் கண்டருக்காகக் காலனைக் கடிந்தவர் கழலாம்
பொருளொடு கருணை பொழியபிராமி பொற்பத முஞ்சிரம் புனைந்து
தெருளொடு திருச்செங் காட்டினிற் சிவனைச் சிந்தனை களிப்புறத் துதித்து

இரவொடு பகலென்று தோன்றாது அசைவின்றி இனிதாகிய பூசைகளைப்புரிந்த கள்ளமில்லா உள்ளமுடைய மார்க்கண்டனுக்காகக் காலனையுதைத்த பாதத்தையுடைய பரமசிவனோடு அருள்பொழியும் அபிராமியினது பொற்பாதங்களும் சிரசின்மேற்புனைந்து மனத்தெளிவுடன்றிருச் செங்காட்டிற்பணிந்து அச்சிவன்மனம் மகிழத்துதித்து எ-று [௩௪]

திருநிறை வெண்காட் டிறைபதந் தொழுது செழித்துயர் கூவிள வனத்தில்
அருளொடு நிறைந்த வடிகளை வணங்கி யாலயா வனத்தினி லமர்ந்த
குருமணி விளக்கைக் கொண்டுதா னுளத்திற் கொழுஞ்சிவக் கொழுந்தினைக் [குறித்து
மருமல ரணிந்து திருக்கள ரிதனினடித்த தாண்மலர்களை வணங்கி

அழகு நிறைந்த திருவெண்காட்டி லுறையும் ஈசன்பாதத்தைத் துதித்துத் தொழுது செழுமையுடன் உயர்ந்த வில்வவனத்தில் அருள் நிறைந்துறைந்த கடவுளை வணங்கித் திருவாலங்காட்டின்கண் அமர்ந்த நிறம்பொருந்திய ரத்ன தீபத்தைத் தனதுள்ளத்திற்கொண்டு அச்சிவக்கொழுந்தைக் குறித்துவாசம் வீசுமலரணிந்து பொதுவில் நடித்த பாததாமரைகளை வணங்கி எ-று [௩௫]

கடலலை கொழிக்கு நாகையிற் காயா ரோணர்தாட் கமலமதிறைஞ்சிக்
கடிமண மலரா லருச்சனை புரிந்து கண்ணிக ரன்பர்தங் கண்முன்
சுடருநீ லாய தாட்சியைத் தொழுது சோதியாஞ் சவுந்தர ராசர்
மடலவிழ் கமலப் பதமலர் வணங்கி மகிழ்ந்தனன் மன்னவர் மன்னன்

நாற்புறத்துங் கடலலைகள் சூழும் நாகபட்டணத்தில் வாழும் திருக்காயாரோணர் சீர்பாதமிறைஞ்சி வாசமிகு மலர்களார்பூசித்துத் தனதுகண்களை நிகர்த்த அடியார் முன்றோன்றும் நீலாயதாட்சியம்மனையுந் தொழுது சோதிசொரு

சிவிச்சக்கரவர்த்தி பூர்த்த சருக்கம்.

பமாகிய சவுந்தராஜேசர் இதழ்விரிந்த பாதகமலம் வணங்கி மகிழ்ந்தனன் அரசர்க்கரசனாகிய சிபி எ-று [எசு]

வெண்ணிற முத்த மரும்புபுன் னைக மிசைதகிற் கொடியது படரத்
தண்ணுறஞ் செய்ய தாமரை மலரிற் சங்குக ளித்தில முயிர்க்கும்
உண்ணிறை கடலின் புலவறக் கைதை யொளிமலர்த் தாதுசளு குக்கும்
எண்ணரும் வளஞ்சேர் கடற்றுறையாடி யெய்தின னுன்மறைக் காட்டில்

வெண்மை நிறத்த முத்தையொத்த புட்பங்களையுற்ற புன்னைமரத்தின் மீது பவளக்கொடிகள் படரக் குளிர்ந்து மணந்து செவந்த தாமரைப்புட்பங் களிற் சங்குகளோயினும் நிறைந்த கடல்நீரின் புலால் நாற்றத்தைப் போக்கப் பிரகாசிக்குந் தாழைமலர்கள் மகரந்தங்களுதிர்க்கும் அளவற்ற வளமுற்ற கடற்றுறையிற்படிந்து வேதாரணியமடைந்தான் எ-று [எஎ]

கருங்கடல் பருகிச் செந்தமிழ்க் கடலாற் காசினி விளங்கிடக் காட்டும்
பெருங்குட முனிவர் கண்டுபே ரின்பம் பெற்றிடத் திருமணக் கோலம்
ஒருங்குடன் காட்டு மடிகள்பொற் றுளை யுளங்களிந் திறைஞ்சியா னந்த
இருங்கடல் குளித்த விறைவனுண் மகிழ்வோ டெய்தினன் கமலையாலயமே

கருத்த கடல்நீரை யுட்கொண்டு செவ்விய தமிழ்க்கடலை வெளிவிட்டு விளக்கக்காட்டிய அகத்திசர்கண்டு பேரானந்தமடைந்திடத் தனது திருமணக் கோலத்தைத் தெரிசிக்கக்காட்டிய பரமசிவன்பாதாம்புயத்தை உள்ளங்கனிந்து பணிந்து ஆனந்த சாகரத்தமுழ்ந்திய அரசனாகிய சிபி அதிகமகிழ்ச்சியோடு திருவாரூரைப்போய்ச் சேர்ந்தான எ-று [எஅ]

கமலையிற் படிந்து கனிவுட னுரூர் கண்டு வன்மீகமா யிலிங்க
நிமலர் பொற்றுளி னேமமாய்ப் பரவி நிறையுல காண்டுசெங் கோலின்
அமைதிய துலக மறிந்திட நடாத்தி யருளிய தியாகராஜரையும்
உமையையும்பணிந்து கமலையியுலுதித்தா ளுவந்திடப் பணிந்தருள் புனைந்தான்

இலக்குமியானவள் வீடுகடோறு இன்புற்றமர்ந்த அவ்வூரைக்கண்டு புற்றினிடம் லிங்கமூர்த்தமா யெழுந்தருளிய புராந்தகன் பொற்பாதத்தை நியமமாய்வணங்கித் தனதுசெங்கோற்குள் நிறைந்த வுலகங்களனைத்தையும் அமைந்தடங்கிட அரசாட்சி நடத்தியருளத் தியாகராஜரையும் தேவியரையும் பணிந்து * கமலையி லுதித்தவளு மகிழப்பணிந்து அருளைப்பெற்றுன் எ-று [எக]

வாஞ்சைக ளொழிய மாயுமெவ் வுயிரும் வலச்செவி மேலதா மரிக்கும்
வாஞ்சியமென்னுஞ் சிவபதி யணுகி மாசறு குபதாங் கையினிற்
காஞ்சன தான மளித்தினி தாடிக் கண்ணுத லடிபணிந் தறுகோய்
தேஞ்சிட வுமையின் சீரடியேத்தித் திருக்கண்டீச்சுரந் தொழுதிறைவன்

---

* கம் வெண்மை-அலைகடல் இவை கமலை என்றாயின.

வெண்கடல்-பாலசமுத்திரம்-அதிலுதித்தவள்-இலக்குமி.

ஆசைகளனைத்தும் நீங்கி இறக்கும் எவ்வுயிர்களும் தமது வலச்செவியை மேலாகவைத்து மாளும் மகிமைபெற்ற திருவாஞ்சியமென்னும் சிவதலத்திற் சேர்ந்து குற்றமற்ற தீர்த்தத்துட் படிந்து சொர்னதானங்கள் வீசக்கொடுத்து, மூக்கண்களையுடைய முதல்வன் அடிபணிந்து தனக்குற்ற நோய்களனைத்தும் தேய்ந்தொழிய அத்தலத்தின்தேவியினது சீர்பாதத்தைத் துதித்துத்திருக்கண் டீசுர தலத்தையுங் கண்டுதொழுதான். [௱ய]

கருங்கலாற் கடலைக் கடந்தவாகீசர் கழறிய பாடலின் சுவையிற்
கிரங்கியே தானுயிபற்றிய பரமனிருக்கையாந் திருப்புகலூரைக்
கரங்குவித்தேத்தி வணிகன்றன் விடத்தைக் கடிந்துமேன் மணம்புரிவித்துந்
திரங்கொடு சாட்சிசெப்பிட வெழுந்ததிரமது ரேசரைத்தொழுது.

சமணர்கள் கட்டிவிட்ட கருங்கல்லே தெப்பமாய் மிதக்கக் கடலைக்கடந்த திருநாவுக்கரையர் சொல்லியபாடற் குள்ளமிரங்கித் தானாக நிருமித்து அப்பா மன்றன் திருக்கையா யமர்ந்த திருப்புகலூரைக்கண்டு கரங்குவித்தேத்தி ஒரு செட்டியைப் பாம்பு தீண்டியிறக்க அவ்விடத்தைத் திருஞானசம்பந்தர் நீக்கி உயிர்ப்பித்து மணம்புரிவித்தபின் அவளுக்கு சாட்சிசொல்ல வன்னிமாமுங் கிணறும் இலிங்கமும் வந்தமதுரேசனைத் தொழுது என்றவாறு. [௱யக]

பூசனை புரியு மருச்சகன் வார்த்தை பொய்யுறு வகைதிருச் சிரத்தில்
வாசனை கமழுஞ் சவரியை நிகராய் வளர்சிகை காட்டிய மாலின்
நேசநற் பதியாந் திருக்கண புரத்தி னித்திய மின்னணிந்திலங்குங்
கேசவ சவரி ராசமாமுகிலைக் கீர்த்தனஞ் செய்தடி பணிந்தான்.

தனக்கர்ச்சனை செய்யும் நம்பி சொல்லிய வசனம் அபத்தமாகாதபடி தனது சிரத்திற் பரிமளம் வீசும் சாமரை நிகர வளர்ந்த தனது குடுமியைக் காட்டிய விண்டுவிற்கு ஆசைமிகுந்த தலமாகிய திருக்கண்ணபுரத்தில் அனுதினம் சிதேவியுடன் கலந்திலங்கும் சவரிகேசப்பெருமானைத் துதிசெய்து அடிபணிந்தான். எ-று (௱யஉ)

வந்தமன் னவன்ற னின்பமாந்தேறன் மகிழ்ந்துமேற் பொங்கியே வழியுஞ்
சிந்தா யிலகுமிடை மருதினிலே திகழ்தருஞ் சிவபெருமானைக்
கந்தவா ளக வம்பிகையுடனே கண்டுமே கண்கணீர் வாரப்
புந்தியின் புறவே பூசனை புரிந்து புகழுடன் குடந்தையிற் புக்கான்

இவ்விதமாகவந்த சிபி சந்தோஷமென்னுந் தேனுனது மேற்பொங்கி வழியும் சமுத்திரம் போன்றவனைப் பிரகாசிக்கும் திருவிடைமருதூரிற் சென்று அவ்விடத்தமர்ந்த சிவபெருமானை மனத்து நீண்ட அளகமுள்ள அம்பிகையுடன்சேவித்துக் கண்களினின்று நீருக மனமகிழப்பூசனை புரிந்து கீர்த்தியுடன் கும்பகோணஞ் சேர்ந்தான். எ-று (௱யங)

எய்திய மன்னன் மாமகப் பொய்கை யின்பமாய்க் குடைந்து நீராடி
கொய்த நல்வாச நாண்மலர் கொண்டு கும்பலிங்கேசரைப் பூசை
செய்து தாயினுஞ் சீர்சிறந்தருள்புரியுந் தேவியா மம்பிகை பாதச்
செய்ய தாமரைகட் கருச்சனை புரிந்து தேவரி னுயர்ந்தனன் செம்மல்,

அவ்விதஞ்சேர்ந்த மன்னன் மாமகதீர்த்தத்தில் மகிழ்வாய்ப் படிந்து நீராடி பறித்த சுவாச நாண்மலரைக்கொண்டு கும்பலிங்கேசரைப் பூசனைபுரிந்து அன்னையினுஞ் சிறந்த அருள்புரியும் தேவியாகிய அம்பிகையின் அடிமலர்களை அருச்சனைபுரிந்து தேவரினு முயர்ந்தான். எ-று (௱௯௪)

தாதொடு கமழும் பைந்துழாய் மாலைத் தமனியப் பாவை சேரலை
மீதுற வணிந்து பணியணை யதனில் விமலநல் லறிதுயிலமரு
காதலு மாரா வமுதனைக் குடந்தைநகர் நடுக்கண்டு பூசித்து
வேதனே டமரர் தொழுநலூ ரடைந்தான் வேந்தர்கள் பணிபத வேந்தன்

இலக்குமிசேரும் மார்பின்மீது மகரந்தத்துடன் பரிமளிக்கும் பசிய துழாய்மாலையணிந்து குற்றமற்ற சர்ப்பவணையில் அறிதுயில்கொள்ளும் காதலுகிய ஆராவமுதைக் கும்பகோணத்திற் கண்டு அர்ச்சித்து தேவருடன் பிரமனும் பணியும் திருநல்லூரிற் சேர்ந்தான். அரசர்கள் பணியும் பாதத்தை யுடைய அரசன் என்றவாறு. (௱௯௫)

பூவிரி பொழிலின் மயிலின மகவப் புளினமி திருந்தன முவக்குங்
காவிரி யாடிப்பஞ்சநதிசர் கடிகமழ் கமலமென் பதத்தி
லாவியோ டாக்கை யுருகிடப்பூசித் தருச்சனை புரிந்தறம் வளர்க்குந்
தேவநா யகியை யன்புடன் துதித்துத் திருக்கண்டி யூர்வலம் வந்தே.

மலர்கள் விரியுஞ் சோலையினிடத்து மயில்கள் கூத்தாட அன்னங்கள் மணற்குன்றின் மேலிருந்து கண்டுமகிழும் காவிரிநதியிற் படிந்து பஞ்சநதீச்சுரர் மெல்லிய பரிமள பாதாம்புயத்தில் உடலு முயிரு முருகப்பூசித்து அருச்சனைபுரிந்து அறம்வளர்க்குந் தேவநாயகியைக் கண்டு அன்புடன் துதித்து திருக்கண்டியூரை வலம்வந்து. எ-று (௱௯௬)

கண்டியூரதனிற் கண்ணுதற்பாத கமலங்கள் கண்டுபூசித்து
வண்டிமிர் தண்டார்ப் பைந்துள வணிந்த மழைமுகிற் பாதமும் வணங்கித்
தெண்டிரையமுதக் கடலினிற் பிறந்த செந்திருச்சந்ததம் வாழுந்
தண்டருங் கனகக் கமலமதாருந் தஞ்சைமா நகரினை யடுத்தான்.

கண்டியூரிலுள்ள முக்கண்ணன் கமலபாதங்களைக்கண்டு பூசித்து வண்டுகள் சத்திக்கும் குளிர்ந்த பைந்துளப மாலையணிந்த மேகநிறத்த பரந்தாமன் பாதமும் வணங்கித் தெளிந்த அலைகளையுடைய பாற்கடலிற் பிறந்த இலக்குமியானவள் அனுதினமும் அகலாமல் வாழும் குளிர்ந்த பொற்றாமரைப் பீடமொத்த தஞ்சைமா நகரையடைந்தான். எ-று (௱௯௭)

தொன்மையார் தொண்ட மண்டலத்துள்ள தூயநற் றலங்களுந் தொழுது
தன்னிக ரில்லாச் சோழநன் னாட்டுத் தலமெலாந் தொழுது மின்புற்ற
மன்னவன் தஞ்சை யருகில்வந் திறப்ப மணியொடு கனகங்கள் வழங்கும்
பொன்னியாற் றணியுந் தஞ்சையின் வளமும் புகலுவன் சிற்சில மாதோ.

பழமையாகிய தொண்டமண்டலத்துள்ள பரிசுத்த தலங்களனைத்தையும் தொழுது தனக்கிணையில்லாத சோழ நாட்டுத் தலங்களையுந் தொழுது மகிழ்

வுற்ற சிபி மன்னன் தஞ்சையருகில் வந்துசேர ரத்தினங்களுடன் கனகங் களைக்கொழிக்கும் காவிரியின் வளப்பமும் தஞ்சைமாநகரின் சிறப்பும் அறிந்தவளவிற் சிற்சில சொல்லுவாம் என்றவாறு. (௱௰அ)

வேறு.

பொன்னொடுமா மணியீந்து திருநிறைவாய்ப் பாவமறப் புனிதமாக்கி
மன்னுயிரை வளர்க்கின்ற தாய்முலைப்பா லொக்குமென வந்துந்தெய்வப்
பொன்னி புடை சூழ்ந்திடவே மூர்த்திதலந் தீர்த்தமது பொலியச்சீர்சேர்
தன்னிகரிலா ஞானச் சதுரர்களுங் கண்டு மகிழ்தனிச் சோணாடே.

பொன்னோடு ரத்தினங் கொடுத்துச் செல்வநிறைவாய் பாவங்களை நீக்கிப் புனிதமாக்கி நிலைபெற்ற வுயிர்களை வளர்க்கின்ற தாயின் முலைப்பாலொக்க வந்து தெய்வத்தன்மை பொருந்திய காவேரி சுற்றுஞ் சூழ்ந்திட மூர்த்தி தலந்தீர்த்தமென்னும் மூன்றும் பொருந்திச் சிறப்புடைத்தாய்த் தன்னிகரில்லாத ஞானவிற்பன்னருங்கண்டு சந்தோஷிப்பது ஒப்பற்ற சோணாடு என்றவாறு. (௱௰௯)

பூங்காவும் பூகமுடனிக்குமது கரங்கிளை பொன்னார் காளந்
தேங்காலு மலர்கயல்கள் செறிந்தெங்கு மிகமிகவே திகழ்தலாலே
பாங்கான கொலுமேடை கவரிசிலை நாண்புரவி படைகள் சின்ன
நீங்காத சரந்துவச மிருப்பிடமே மதன்காணி நிலைசோணாடே

அழகிய சோலையும் கமுகும் கரும்பும் வண்டுகளும் கிளிகளும் மாதர்களும் தேன்களைக் கக்கும் புட்பங்களும் கயல் மீன்களும் நெருங்கியெங்கும் பிரகாசிப்பதால் அழகிய மன்மதனுக்குக் கொலுமண்டபம், சாமரை, வில், நாண் குதிரை, சேனை, எக்காளம், அம்பு, கொடி இவைகளெல்லாம் பெற்றிருப்பிடமாகிக் காணியாட்சியை ஒத்து நிலைபெற்றது என்றவாறு. (௲௨௧)

வெள் வளையின் முத்தோடு நளினமுத்துஞ் சுவைவேழம் வெடித்தமுத்துப்
வெள்ளநில வினைக்காலுங் கழனிவிளை நெற்பொலியில் விரைந்துநாளு
மள்ளரல காற்சால முத்தொதுக்குஞ் சோணாட்டில் வாழ்வோர் முன்னை
வள்ளலெலாமுலோபரெனவருளுடையார்கல்விநலம்வளர்ப்பர்மன்னோ.

வெள்ளிய சங்கின் முத்துடன் தாமரையின் முத்தும் உரிசை மிகுங் கரும்பின் கணுக்களில் வெடித்த முத்தும் கூட்டமாகிய நிலவின் சோதிகளைக்கக்க அம்முத்துகளைக் கழனிகளிடத்து விளையும் நெற்பொலிவினிறைந்த மள்ளர்கள் விரைந்துசென்று கலப்பைகளிலொதுக்கும் வளப்பமுள்ள சோணாட்டில் வாழ்வோர் பூர்வ வள்ளல்களனைவரும் உலோபர்களென்று அருளுடையவர்களாய்ப் பொருளீந்து கல்வியின் வளர்ந்தோங்க வளர்ப்பார்களென்றவாறு. (௱௨௧)

தங்கநிறச் சண்பகப்பூஞ் சோலையினிற் படிந்து பைம்பொற் றுதனாவு
மங்குலது வாய்மடுப்பக் கடற்புலவு மாறிமிகு வாசமுற்றுப்
பங்கமிலா நற்குடியிற் பிறந்து கசடறக் கற்ற பரிசிற் சேர்ப்பப்
பொங்கமுற்றோர் தனைச்சார்ந்தோர்பெற்றபெருநலமென்னப் பொலியு மாதோ.

பொன்னிறத்த சண்பகங்காச் சோலையில் மேகங்கள் சேர்ந்து பசியபூந் தாதுகளைத் திமிர்ந்து கடலினிடத்துச் சென்று அந்நீரைப்பருக அக்கடலின் புலால் நாற்றம் நீங்கி மிகுந்த சுவாசமுற்றுக் குற்றமற்ற வமிசத்திற் பிறந்து பிழையறக்கற்ற தன்மைக்கேற்பச் சற்குணமுற்றோரைச் சார்ந்தவர் அடைந்த நலத்தைப்போலப் பொலியும் என்றவாறு. (௱௨௨)

வேறு.

மதுகாமதுவுண் செங்கழு நீரின் மலரினைக் கண்டுதன் றோழி
மதர்விழியெனவே பிரசமுண் கடைச்சி மகிழ்வொடு புதைத்தலும் வசன
மிதனைமைத்தேடி வந்ததன் றறுகா லின்புறுங் கழனிசூழ்நாடா
மதிமுக மாதின் மங்கலவணியாய் வயங்கிய தஞ்சைமா நகரே.

கள்ளுண்ணுமள்ளப்பெண்கள் வண்டுகள் தேன்களையுண்ணும் செங்குவளை மலரைக்கண்டு தம்பாங்கியரை மதர்த்தகண்களென்று தமது கண்களைப்புதைக்கவும் அவர் வசனத்தைக்கேட்ட அறுகால் வண்டுகள் இது நம்மைத்தேடிவந்ததென்று மகிழ்வுறுங் கழனிகள் சூழ்ந்துறையும் நாடென்னும் மங்கைக்கு அழகிய மங்கிலியம்போற்பிரகாசிக்கும் தஞ்சைநகரம் எ-று. (௱௨௩)

வேதமு னன்பாத் துதிசெயுஞ் சைவ விதத்தொடு மால் சமயங்க
ளோதிய மூர்த்தி யனைத்துமேபேத முற்றிடா தொளிர்தஞ்சை நகர
மாதலும் பொருளொன் றுகுமேயதற்கு நாமங்கள்பலவென நாட்டும்
போதராய் விரோ தத்தர மறிஞர் புந்தியை யொத்துமே பொலியும்.

வேதங்கள் அன்பாய்த் துதிக்கும் சைவசமயத்துடன் வைணவ சமயமும் இவைகளிற்சொல்லும் மூர்த்திகளனைத்தும் பேதம் பொருந்தாது கடவுளென்றும் பெயரொன்று அதற்குப் பெயர்கள் பலவிதமென ஸ்தாபனை செய்து நாட்டும் போதத்தைப்பெற்ற விரோதமில்லா விவேகிகள் மனதைப் போலப் பொலிவுற்றிருக்கும் ஒளிபொருந்திய தஞ்சைமாநகரம் எ-று. (௱௨௪)

திருப்பதி களிலுஞ் சிவதலங்களிலுந் திகழ்கின்ற மூர்த்திக ளருளா
லிருப்பதினாலே யெழினகர் தஞ்சையினைவலம் வந்திடிற் புவியை
விருப்பமாய் வலவந்தது நிகராகும் வெள்விடைப் பிரகதீசுரர்தம்
பெருப்பதக் கோவிற் சிகரம்பொன் னுலகிற் பிறங்கிடுந் தேவருந் தொழவே.

வைணவ தலங்களிலும் சிவஸ்தலங்களிலும் ஒளிர்கின்ற மூர்த்திகள் கிருபையுடன் வீற்றிருப்பதினால் இத்தஞ்சையென்னும் அழகிய நகரை வலம் வரில் ஆசையுடன் பூப்பிரதட்சணஞ் செய்த பலனைக்கொடுப்பதாகும். இதுவுமன்றி வெள்ளிய ரிஷபவாகனத்தையுடைய பிரகதீசருடைய பெருத்த கோவிலின் சிகரம் தேவர்களுந்தொழப் பொன்னுலகளவும் போய்ப் பிரகாசிக்கும் என்றவாறு. (௱௨௫)

களிற் கச்சி யினிதென யாருங் நவிலுவ ரதனினுஞ் சிறந்த
கோபுரங்க ளொடுவளம் பொருந்தித் திகழுமா நகரிது வெனவே
மகிழ்ந் தருளாய்க் கஞ்சிகாமாட்சி யாலயங் கொண்டிடக் கருதிற்
கமதி லிதனுக் குவமையொன்றுளதோ சாற்றலாஞ் சிறிதுபொன்னுலகே.

நகரங்களனைத்தினுங் கஞ்சி சிறந்ததென்று சகலருஞ் சொல்லுவர். அக் கஞ்சி நகரத்தினு மேன்மையாகிய சிகர கோபுரங்களுடன் வளப்பங்கொண்டு பிரகாசிக்கும் இனிய நகர் இத்தஞ்சையேயென அக்கஞ்சியில் வாழுங் காமாட்சி மனமகிழ்ச்சியுடன் இந்நகராலயத்திருந்து வாழ எண்ணுவாளாகில் இப்பூவுலகத்தில் இதற்கொப்பாகச் சொல்லுதற்கு வேறொரு நகருண்டோ ஆனால் சிறிது பொன்னுலகிற்குவமை சொல்லத்தகும் என்றவாறு. (௬௨௬)

வடவிளந் தளிரி லறிதுயிலமரும் வள்ளல்தனுந் தியை நிகர்க்குந்
தடநகர்த் தஞ்சை மாடமாளிகைகள் தனியவண்ணநவ மணியின்
வடமதை நிகரு மன்னவன் கோவில் வளரொளி யரன்கடைமதிபோற்
புடவியிற் பொலியு மழகதா லன்றோ புகலுவரள கையென் றம்மா.

விசாலம் பொருந்திய தஞ்சைமாநகரம் இளமையாகிய ஆலிலையிற் பள்ளி கொள்ளும் விண்டுவின் நாபிக் கமலத்தையொக்கும் அவ்விடத்துள்ள மாளிகைகள் அவர் மார்பினணிந்த நவமணிக்கோவை வடத்தையொக்கும், அரன தாண்மனையானது சிவபிரான் சடாபாரத்தணிந்த ஒளிபெற்ற சந்திரன்போற் இப்பூமியின்கண் பொலிந்து தோன்றும் இவ்வழகினலல்லவோ இந்நகரை அளகையென்று யாவருஞ்சொல்வர் என்றவாறு. (௬௨௭)

விண்டொடு மாடக் கொடிகள்செங் கதிரோன் மேவியே பவனிசெய் திடநற்
றண்டருஞ் சாலை யமைத்ததென் கேனோ தடவிரதந் தனிநடத்துந்
திரண்டிறலருணன் றிகைப்பற வேகால் செய்திடச் சமைத்ததென் கேனோ
வண்டினஞ் சுழல்கற் பகம்படர்காம வல்லியின் கொழுகொம்பென் கேனோ.

ஆகாயமளாவிய உப்பரிகை மீதாடுங் துகிற்கொடிகள் சூரியனானவன் உலாவப்போதற்காக நிருமித்த குளிர்ச்சியைத்தரும் சாலையின் வரிசையென்பனோ, அல்லது அவனது விசாலமாகிய ஒப்பற்ற தேரை நடாத்தும் வலிய சாரதியாகிய அருணன் இளைப்பாறக் காற்று வீசும்படி நாட்டியதென்பனோ வண்டின் கூட்டங்கள் சூழுங்கற்பகத்தருவின்மீது ஓங்கிப்படரும் அழகிய கொடிகட்காக நாட்டிய கொழுகொம்பென்கெனோ யாதென்று சொல்வேன் என்றவாறு. (௬௨௮)

மின்னிடை நடங்கும் பேதையர் வளங்கொண்மென்மறு கிழைத்திடுஞ் சிற்றி
னன்மணி யொளியா லெல்லியும் பகலாய் நாடொறு மிலகுவ தஞ்சை
யன்னலார்பதமாரகமாடங்க ளமர்ந்திட னளினங்க டோறும்
பொன்னினி தந்த வுருவமைந்தமரும் பொற்பது காட்டுவ கடுக்கும்.

மின்னலையொத்த மருங்குல் துவளும் பெண் பிள்ளைகள் வளப்பம் பொருந்திய வீதிகளிடத்துச் செய்து விளையாடும் மணற்சிற்றில்களின் ஒளியால் இரவானது பகல்போற் பிரகாசிக்கும் அப்பெண்கள் பதுமராகங்கள் பதித்த உப்பரிகையின்மீது பொருந்தியிருத்தல் தாமரை மலர்கடோறும் இலக்குமியே அப்பெண்களினுருவமைந்து பொருந்திய யொத்த அழகைக் காட்டும் என்றவாறு. (௬௨௯)

பலபலமணியி னிறமதா வொளிரப் பத்திசெய் மாடங்க டோறு
மிலகிய குழையி லிடறிய வடிவே லெனமிளிர் மதர்விழிக் கிடைகார்த்
திலகவாள் முகத்தார் வதிந்திடுங் காட்சி திகழ்விமா னங்களி லிவர்ந்து
நிலவுணும் புட்கள் களித்திடக்கோடி நிறைமதி யுதிப்பதை நேரும்

பற்பல மணிகளின் நிறங்கள் பிரகாசிக்க வரிசையாயியற்றிய உப்பரிகைகள்தோறும் ஒளிருங்காதணிகளுடன் பொரும் வடித்தவேல் போலும் மதர்த்த இருவிழிகட்கு மத்தியில் கறுத்த திலகமணிந்த ஒள்ளிய முகத்தையுடைய மாதர்கள வாசஞ்செய்யும் காட்சியானது நிலவையே ஆகாரமாயுண்ணும் சகோர பட்சிகள் மகிழ்வெய்த விமானங்களிலேற்றிக் கோடாகோடி பூரணச்சந்திரர்களுதித்ததுபோலாம் என்றவாறு. (௱௩௰)

வளங்கெழு தஞ்சைப் பொன்னனார் வதன வனப்பினுக் கிணையலே மென்ன
வுளங்கனன் றிட்டுக் கன்றிய திதுதானுட்பொருள்வெளி யுறவிளக்கும்
பளிங்கெனயாரு மறிந்திடத் தோற்றும் பரிசுகண் டுடுபதி யகத்திற்
களங்கமுண் டென்று புகலுவார் கறுத்த காரணமறிகில ரம்மா.

தஞ்சை நகரில் வாழும் இலக்குமியை யொத்த மாதர்கள் முகங்களின் அழகிற்கு யான் இணையல்லவென்று உளம் வருந்திச் சுட்டதினுற் கன்றியது. இது உண்மையாகிய பொருளென்று வெளியாக விளங்கும் கண்ணாடியைப்போல எவர்களும் அறியும்படி காட்டும் தன்மையைக்கண்டும் சந்திரனிடத்துக் களங்கம் உளதென்று சொல்லுவார்கள். கறுத்த காரணத்தை யிஃதென அறியார்கள் என்றவாறு. (௱௩௰௧)

கன்னலஞ் சிலைவேள் செங்கரங்கூப்பக் கவின்குடி கொண்டிடுங் கொங்கை
யன்னமென் னடையா ராடலும்யாழு மமுதமு மெனுமொழி யார்தம்
நன்னயப் பாடற் சுவையையு முணர்ந்து நாணியன்றோ வரம்பையரா
மின்னிடையாரும் வீணைவல்லவரு மேதினி காணுதன் மறந்தார்.

கருப்பு விற்காமன் கண்டு தன் செங்கை குவிக்கும்படியாக அழகு குடிகொண்டிருக்கும் தனபாரமும் அன்னம்போல் மெல்லிய நடையுமுடைய மாதர்களது ஆடலும், யாழும், அமுதம்போன்ற மொழியும் படைத்த அன்னவர் நன்னயமாய்ப் பாடும் பாடலும் இவைகளில் உரிசையும் அறிந்து நாணங்கொண்டன்றோ மின்போன்ற இடையாராகிய அரம்பையரும் வீணையில்வல்ல கந்தருவரும் மாதரும் இப்புவியைக் காணும் ஆசையை மறந்தன ரென்றவாறு. (௱௩௰௨)

முத்தரும் வியந்து நன்றிதென் றிடவே முதலவன் றனைத்துதித்தன்பாய்ச்
சித்தமதுருகக் கண்பனித் தரோமஞ் சிலிர்த்திடப் பரவச மாகப்
பத்தர்கள் பசனைசெய்வது கண்டு பரிந்துகொங் கணரொனு முதிர்ந்த
சித்தரு மிவ்வூ ரகன்றிடேமென்று சிறந்துறை தஞ்சைமா நகரே.

முத்திக்குரிய மகான்களும் அதிசயித்தே நன்றென்று மெச்சும்படிக் கடவுளைத் துதித்து அன்புடன் மனமுருகக் கண்ணீரும்ப உரோமஞ்சிலிர்ப்பப் பரவசமாய்ப் பக்தர்பஜனை செய்வதைக்கண்டு ஆசைகொண்டு கொங்

ணமென்னும் ஓர் பெரிய சித்தரும் இவ்வூரைவிட்டகலாது என்றுந் தங்கியிருப்பது சிறந்த தஞ்சைமாநகரம் என்றவாறு. (௱௩௩)

திங்களும்பதும ராகமும் வளையுஞ் செங்கரும் புங்கொடி மின்னும்
பொங்கொளிர் வதன மிதழ்களந் தோள்கள் பொற்புறு மிடையெனவமைத்தே
யங்கதின் காருங் கடிதுவெண் மையும்பா கதனையஞ் சலஞ்சலமதையும்
பங்கமி லளகந் தனநகை சொற்சட் பதித்ததாம் பாவையருருவம்.

சந்திரனை அழகிய முகமும், பதுமராகத்தை இதழும், சங்கைக் கழுத்தும், கரும்பைத்தோளும் கொடிமின்னை இடையும், ஆகச்செய்து சந்திரனுடன் களங்கத்தைக் கூந்தலிடத்தும், பதுமராகத்தின் வன்மையை முலையிடத்தும் சங்கின்வெண்மையைத் தந்தங்களிடத்தும் கரும்பின் பாகைச் சொல்லினிடத்தும் ஆகப்பிரித்துப் பதித்தது போலாகும் அத்தஞ்சைமாநகரப் பெண்கள் உருவமென்றவாறு. (௱௩௪)

மைம்மலையெனக் கைம்மலைக் கணமுலவ மதமிழிந் தாறதா யாலம்
பெய்மத னனைய வாடவ ராடலிடுபரி நடத்தலிற் சேறாய்
நெய்ம்மருவியவேல் வீரர்த மிரத நெருக்கலா லுலர்ந்திடு மிதமு
மையிரு நூறு தரமதாமாறு மணிநகர்த் தஞ்சையா வணமே.

கறுத்த நீலகிரியன்ன யானைக்கூட்டங்களுலவ அதன் மதமொழுகி ஆறாய்ப் புட்பபாணமெய்யும் மன்மதனையொத்த புருடர்கள் ஆட்டக்குதிரைகளை நடத்தச் சேறாய் நெய் பூசிய வேலாயுதமேந்திய வீரருந் தேரின் நெருக்காலுலர்ந்து நித்தம் ஆயிரந்தரமாக மாறி மாறித்தோன்றும் தஞ்சையின் அழகிய கடைவீதி என்றவாறு. (௱௩௫)

தருமசுல் விதங்க ளனைத்தையு முணர்ந்து தாமதை நடத்தலும் பொருள்செய்
மருமமீதென்று தீவினையுறுமல் வளர்கிதி யீட்டலுங் காமப்
பெருமித முறலு மிதிற்கரந் தின்பப் பிரம வித்தினி திருப்பதலும்
திருமலி தஞ்சை வள்ளுவ ரருளிச் செய்த நூற் கிணையதாத் திகழும்.

தருமங்கள் செய்யும் வகையையறிந்து தாம் நடத்தலும் பொருளைப் பெருக்கும் உபாயமிதுவென்று பாவஞ்சாரா வழியாய்ப் பொருளைச் சேகரித்தும் இன்பந்தரும் பிரமவித்துப் பொருந்தியிருப்பதால் காமத்திற் பிரியமுற்றும் அழகிய தஞ்சை அறம்பொருளின்பமெனு மூன்றையுமருளிச்செய்த வள்ளுவரது குறளுக்கிணையாய்ப் பொலியும் திருத்தஞ்சை நகரம் என்றவாறு. (௱௩௬)

இன்னதன் மையதாஞ் தஞ்சையி லெய்தி யெழிலுற வளமெலாங் கண்ட
நன்னெறி தவறு மன்னவன் சிவிதா னிராஜரா ஜேஸ்வர நண்ணிச்
சன்னிதி பொலியுந் தஞ்சைபு ரீசர் சரண்பணிந் தின்பமி தார
வன்னையா னந்த வல்லிபொற் றாள்கள கத்தினிற் கொடுமகிழ் வடைந்தான்.

இவ்வித வளப்பம்பொருந்திய தஞ்சை நகரிலடைந்து அழகிய வளமெல்லாங்கண்ட நன்னெறி தவறாச் சிபியென்னும் ராஜேந்திரன் சென்று ஆலயத்

தமர்ந்த தஞ்சைநகரீசர் பாதம் பணிந்து இன்பமிகுந்து அன்னையாகிய ஆனந்தவல்லியின் பொற்பாதங்களை மனதிற் சிந்தித்துப் பதித்துத் துதித்து மகிழ்வடைந்தான் என்றவாறு. (௱௩௭)

தஞ்சையின் றளிகைச் சங்கரனடியைத் தாழ்ந்துமே வசிட்டமா முனிவர்
நெஞ்சக மகிழ வருச்சனைபுரிந்த நிறைகரு கூலநாதரையுந்
தஞ்சமென்றவருக் கஞ்சலென்றருளுந் தயாபரி பதங்களுந் தொழுதா
னஞ்சிறைப் புறவுக் காய்த் துலைபுக்கி யரும்புகழ் படைத்தநல் லரசன்.

தஞ்சைநகராலயத்தமர்ந்த சங்கரன் பாதம் வணங்கி வதிஷ்ட முனிவர் மனமகிழ்ந்தருச்சித்த சருகூல நாதரையும் தஞ்சமென்றவருக்கஞ்சேலென்று கருணைபுரியுந் தயாபரியின் பாதங்களுந் தொழுதான். அழகிய சிறையுள்ள புறவினுக்காகத் தனது தசையையரிந்து தராசினேறிப் புகழ்பூண்ட சிபி என்றவாறு. (௱௩௮)

செம்பியன் றனக்கு மாருதியருளுந் திறமதை யுணர்ந்துமே தருவி
யம்புவி யதனிற் கண்டுபூ சிக்க வற்புத வரங்களை யுதவுஞ்
சம்புவாம் பிரகதீ சரைப்பணிந்து தண்ணறு மலரொடுத் தருச்சித்
தும்பரும் வியக்கப் பரவியின்புற்றா னுலகெலாம் பொதுவறப் புரப்போன்,

சோழ ராஜனுக்கு அனுமார் சொல்லிய தன்மையறிந்துதேடி அழகிய புவியிற்கண்டு பூசிக்க அதனால் அச்சோழனுக்கு வேண்டிய அற்புத வரங்களைப்பாலித்த சம்புவாகிய பிரகதீசரைப்பணிந்து குளிர்ந்த புட்பங்களாலருச்சித்துத் தேவரும் வியக்கத் துதித்து இன்பமடைந்தான் பூமி முழுவதும் பொதுவறக்காக்கும் சிபி என்றவாறு. (௱௩௯)

அட்டமாசித்தி யடைந்துமே தேக மழிவிலா நித்தியம் பெற்றுக்
கட்டதாம் பாச மறுத்துமேல் வீடு கண்டுமே சுடரொளி யுருவாய்
நிட்டைசா தித்தே யறுவரைத் தாண்ட நின்மலக் கொங்கணர் பூசை
யிட்டமாப் புரியுங் கொங்கணேச் சுரரை யிறைஞ்சியே கனிந்துபூ சித்தான்.

அட்டமாசித்தி யடைந்து தேகம் அழிவில்லா நித்தியத்தைப்பெற்று பாசபந்தங்களையறுத்து மேல்வீடுகண்டு சுடரொளியுருவாய் நிட்டை சாதித்துக் காமக்குரோதாதி ஆறுபகைகளைக் கடக்கப் பரிசுத்த சித்தராகிய கொங்கணர் இட்டமாகப் பூசை புரிந்த கொங்கணேசரை வணங்கி மனங்கசிந்து பூசித்தான் என்றவாறு. (௱௪௰)

சீதமா மதிசேர் செஞ்சடையானுந் திருநெடு மாயனும் வேறும்
பேதமென் றியானை கண்டவந்தகர் போற் பேதுறு மய்யம தொழிய
வேதசங்கரனா ரணப்பெய ருடனே யோருரு வாகியே விளங்கு
நாதனைப்பரவி நல்லருள் பெற்று நயந்தனனா னிலம் புரப்போன்.

குளிர்ந்த சந்திரனமர்ந்த செவ்விய சடையையுடைய சிவபிரானும் அழகிய நெடுமாலும் பேதமென்று வேறு வேறாக யானையினுறுப்புகளைத் தடவிக்கண்ட அந்தகர்போல் ஐயங்கொள்வோரது சந்தேக நிவர்த்தியாகச் சங்கரநாராயணப்பேருடன் ஒருருவாய் விளங்கும் நாதனை வணங்கி அருள்பெற்று மகிழ்வடைந்தான் நாற்றிசைப்புவியையும் பரிபாலிக்கும் சிபி என்றவாறு. (௱௪௧)

குழைபொரு நெடுங்கணருண்மழைபொழியக் குருமணி கவுஸ்துவத் தோடு
விழைவுடன் கமலை விரும்பிவீற் றிருக்கு மேன்மைசே ரகலமுந் தோளுங்
கழைமதன் றந்தை யிவனென வெழில்தான் காட்டிடக் கவின்குடி யிருக்கு
மழகிய சிங்க முகுந்தனைப் போற்றி யன்புடன் றுதித்தன னரசன்.

காதணியுடன் அமர்செய்யும் நீண்ட விழியின் அருள் மழை பொழிய அழகிய கவஸ்துப மணியோடு அன்புடனிலக்குமி வீற்றிருக்கும் மேன்மை பொருந்திய மார்பும் தோளும் கரும்பு வில்லையுடைய மன்மதன் றந்தை யிவனே யென்ன அழகாய்க் காட்ட அழகே குடியிருக்கும் நரசிங்கப் பெருமானையும் போற்றி அன்புடன்றுதித்தான். (௱௪௨)

ஆலையினிற்கா வைம்புலா திகளா லடலுறு மன்பருக் கிரங்கிக்
காலமாமாரி யெனவருள் சொரியக் கருணையுற் றெழுந்தசே தஞ்சைக்
கோலநன் னகரில் வம்புலாஞ் சோலைக் கோயில்கொண் டினிதமர்ந் திருந்த
நீலமேகத்தி னடியிணை பரவி நெஞ்சக மகிழ்ந்தன னிருபன்.

கரும்பாலையைப்போல் ஓர் பால் நிற்காமற் சுழலும் ஐம்புலன்களாற்றுன் புறும் அடியர் மீதிரங்கிக் காலத்திற் பெய்யுங் கருமேகம்போல் கருணை பொழிய அழகிய தஞ்சை நகரில் வாசமிகுஞ் சோலைகள் சூழ்ந்த ஆலயத்தின் கண் இனி தெழுந்தமர்ந்திருக்கும் நீலமேக ரூபனது பாதம் பணிந்து மன மகிழ்ந்தான் சிவி. (௱௪௩)

கஞ்சனுமமரர் தலைவனு முனிவர் கணங்களும்வேதமோர் நான்கும்
பஞ்சரித்திரங்கி யேத்தியே போற்றப் படருமஞ் ஞானமா மிருடா
னஞ்சியே யோட வவிரொளிக் கிரண மருள்கரு ஞாயிறதான
தஞ்சைமா மணியை நெஞ்சுறப் பணித்து தாண்டின னிடரெனுங் கடலே.

பிரமனும் இந்திரனும் முனிவர் கூட்டமும் நான்கு வேதங்களும் சஞ் சரிப்பதுபோல் இரங்கி யேத்தித் துதிக்க வளர்கின்ற அஞ்ஞானமென்னும் இருள் அஞ்சியோட ஒளிமிகுங் கதிர்களை வீசம் கறுத்த சூரியனைப் போன்ற தஞ்சையின் வசிக்கும் மரகதமணியான திருமாலை மகிழ்ந்து பணிந்து துன்பக் கடல் தாண்டினன் சிவி. (௱௪௪)

வேறு

ஆலை யம்பல வாருஞ் சிவத்தலஞ்
சால வேயுள தஞ்சைநகரினைச்
சீல மாய்வலம் வந்துசிவியென
ஞால மேத்து நரபதி யேகினன்.

திருக்கோவில் களனேகமுள்ள சிவஸ்தலங்கள் சூழ்ந்த தஞ்சை நகரை அன்பாய் வலம்வந்து புவி முற்றும் போற்றுஞ் சிவியரசன் அவ்விடம் விட்ட கன்றான் (௱௪௫)

தெற்க தான திசையிலோர் காவதம்
மிக்க கோடை வெதுப்புற வேயெய்தித்
தொக்க கானத்தி லுள்ளொரு சோலையிற்
புக்கிருந்து புழுக்கும தாறினன்.

தெற்குத் திசையை நோக்கி ஓர் காத தூரஞ் சென்று மிகுந்த கோடையானதவெதப்பக் காட்டிலுள்ள நெருங்கிய ஓர் சோலையிற் புகுந்திருந்து கொண்டு வெப்பம் ஆறினான் என்றவாறு. (௱௬௬)

அத்தி தேரொடு மாடற்புரவிகள்
சுத்த வீரர்ச் சோலையிற் றங்கியே
புத்த நல்ல முதிற்சுவை போனகஞ்
சித்த மின்புறச் செய்ய லுற்றாரோ.

ரதகஜதுரகபதாதிகளென்னும் நால்வித சேனைகளும் அச்சோலையிற் றங்கிப் புதிய அமுதத்தை நிகர்த்த அன்ன முதலிய நற்சுவை மிகுந்த பதார்த்தங்கள் அன்புடன் செய்வதற்கு ஆரம்பித்தார்கள். (௱௬௭)

மன்னர் மன்னன்றன் மந்திரி மார்தமை
நன்னயம்பெற நோக்கியே நாமின்று
பொன்னி தழ்க்கொன்றை பூண்டபு ராந்தகன்
சன்னிதித்தொழச் சார்ந்தில மேயென்றான்.

அக்காலையில் அரசர்க்கரசனாகிய சிவி யரசன் மந்திரிமார்களை அன்புடன் நோக்கி நாம் இன்றையத்தினம் பொன்போன்ற இதழ்கள் பொருந்திய கொன்றைமாலை சூடிய புராந்தகன் ஆலயத்தை வணங்கச் சேர்ந்தில மென்றான். (௱௬௮)

ஈசன்சேவையி லாம விடருறும்
மாசில் மன்னன் மனக்குறிப் போர்ந்தவர்
தேசர் சாரண ரைக்கண்டு நீள்சுடர்
தேசலாவுஞ் சிவாலயந் தேடினார்.

இவ்வாறு ஈசனாலயத் தெரிசனை கிட்டாமல் துன்புறுங் குற்றமற்ற அரசன் மனக்குறிப்பை யறிந்து மந்திரிகள் தூதரைவிட்டுத் தேசின் மிகுந்த சிவாலயம் அவ்விடத்தெங்குள்ளதென்று தேடினார்கள் என்றவாறு. (௱௬௯)

இன்ன ணம்மிங் கிருந்திடு மேல்வையிற்
றுன்னியே தொழு தேயுடற் சோர்வுடன்
மன்ன னையடை வுக்கோர் மேட்டிற்புல்
என்னி ருக்கரத் தெற்றின னெற்றலும்.

இவ்விதம் மந்திரி முதலானோர் நெருங்கித் தொழுமன்னன் சோர்வுற்றிருக்குங் காலத்தில் ஓர் குதிரைப் பாகன் ஓடிவந்து நெருங்கித் தொழுது மனச்சோர்வுடன் ஓ அரசனே யான் என் இருகரத்தால் குதிரைக்காக ஓர் மேட்டிற் கண்ட புல்லை வெட்டினேன் அப்படி வெட்டிய உடன். (௱௭௰)

பைம்புல் வெட்டும் படைபடப் பாரினிற்
செம்புன லெங்குஞ் சிந்திடக் கண்டிலும்
வெம்பி நெஞ்சம் விதிர்விதிர்த் தன்னனி
நம்பி வந்தன னன்பிழை செய்திலன்.

பசும்புல் வெட்டும் கருவி பூமியிற் பட்டவுடன் செவந்த இரத்தம் எழுந்து எவ்விடத்துஞ் சிந்திச் சிதறக் கண்டேன் அவ்வாறு கண்டதால் வாடி மனந் துடிதுடித்து யாதோர் குற்றமுஞ் செய்யா யான் உனது கிருபையை நம்பி இதைப் புகல வந்தேன் என்றான் என்றவாறு. (௬௧)

என்று கூறிட வேந்தவி யப்புட
னன்று நன்றிவ னுவுரை யென்னவே
சென்று நோக்கித திகைத்துளஞ் சிந்தியாக்
கன்றி யேயுடன் கம்பித்துக் கூறுவான்.

இவ்விதமாகக் குதிரைப் பாகன் சொன்னவுடன் வேந்தன் அதிசய மடைந்து இவனது நாவினின் றெழுந்த வசனம் நன்று நன்றென்று தான் நேராய்ப் போய்ப்பார்த்துத் திகைத்து எண்ணுதெல்லாமெண்ணி மனங் கன்றி யுடலந் துடித்துச் சொல்லுவான் என்றவாறு. (௬௨)

எந்தக் காலத்து மிந்தவுற் பாதந்தான்
வந்த தென்று வழங்கிடக் கேட்டிலே
னந்த னுக்கின்று சென்மத்தி லெய்திய
மந்த னூர்பல னேவென மாழ்கினன்.

எக்காலத்திலும் இவ்விதக்கொடுமை வந்ததென்று சொல்லக் கேட்டிலேன் அடியேனுக்கின்று ஜன்மத்தில் சேர்ந்த சனியின் பலனேவென்று மயங்கினன் என்றவாறு. (௬௩)

பூதத் தின்கமும் புன்செய லோவன்றி
நாதன் சோதனை நாடிடுஞ் செய்கையோ
வேதென் றுன்னுவ தெவ்வகை செய்குவ
தோதென் றோதவு ணர்ந்தி து வோதுவார்.

இவ் ஆரணியத்தில் வசிக்கும் பூதங்களின் அற்பமாகிய கொடுஞ் செயலோ அன்றி எனது கடவுள் எனைச்சோதிக்கச் செய்யுஞ் செய்கையோ ஏதென்று நினைப்பது யாது செய்வது சொல்லுவீர்களென்றரசன் கேட்க யாவையு முணர்ந்தோர் இவ்வாறு சொல்லுவார் என்றவாறு. (௬௪)

ஆபத் பாந்தவ னயஞ்ச லென்றிடுந்
தீபச்சோதி திருவரு ளுண்டெனிற்
றூப வெவ்வினை யாவுந் தவிர்ந்திடும்
சோப நீங்கத் துருவல் கடனென்றார்.

ஆபத்பாந்துவாய் சகாயனாய் அடைந்தோரை அஞ்சவென்றுதரிக்கும் தீபச்சோதி போன்ற சிவபிரான் திருவருளுடையதாயிருக்கில் துன்பஞ்செய்யப் புகும் தீவினையனைத்தும்நீங்கும் ஆகினும் உபதையும் நீங்க இதைத்தோண்டிச் சோதிப்பதே நன்மையாகிய கடன் என்றார் என்றவாறு. (௬௫)

தெள்ளி நின்றுணர் மந்திரி செப்புத
லுள்ளங் கொண்ட வுலம்பொரு தோளின

னள்ளிப் பார்சொரிந் தங்கையி னானிலம்
கிள்ளிக் கிள்ளியே கீன்றுது ருவலும்.

தெளிந்த குணத்தையுடைய மந்திரி முதலோர் சொல்லியதை மனங் கொண்ட திரண்ட கல்லையொத்த இரண்டு புயத்தை வகித்த சிபியரசன் ஆவின் பாற் சொரிந்து அழகிய கரத்தாற் கிள்ளிக் கிள்ளிக் கீண்டு தோண்டித் தேடினான்அப்படித் தேடும்பொழுது என்றவாறு. (௱௬)

வேறு

இந்திரன் முனிவர் வானோ ரெண்ணருஞ் சித்தராதி
மந்திர மோதிமிக்க மாதவஞ் செய்து காணாச்
சுந்தரச் சோதியான சுயம்பதா மிலிங்கந் தன்னைக்
கந்தனுக் கிணையா மன்னன் கண்களாற் றெரியக் கண்டான்.

இந்திரன் முனிவர் தேவர் அளவில்லாத சித்தர் முதலோர் மேலாகிய மந்திரங்களைச் செபித்து மிகுந்த தவங்களைச்செய்தும் காணுதற்கொண்ணாத அழகிய சோதி மிகுந்த சுயம்பு லிங்கந்தோன்றத் தனதிரு கண்களாற் றெரிசித்தான் முருகனை யொத்த அழகின் மிகுந்த சிபியரசன் என்றவாறு. (௱௭)

கண்டன னிலிங்கந் தன்னிற் கடியவெவ் வுழவா ரத்தாற்
கொண்டதோர் வடுத்தான் திங்கட் கொழுந்துபோல் விளங்க மன்ன
னண்டர்நா யகனுக்கென்னா லடுத்திந்த வடுவுண்டாகத்
தொண்டனேன் பிழைத்தே னென்னத் துயரமாங் கடலிற் றாழ்ந்தான்

இப்படிக் கண்ட அரசன் அவ்விலிங்கத்துச்சியில் வன்மையாகிய உழவாரந் தாக்கிய வடுவானது மூன்றாம் பிறையைப் போற்றோன்ற தேவர் நாயகனுக்கு இவ்வடையாள மாம் வடுவுண்டாக அடியேன் அபகாரஞ் செய்தேனென அடங்காத துயரக் கடலுள் ஆழ்ந்தான் என்றவாறு. (௱௮)

கண்கணீர் பனிப்பத் தேகங் கம்பித்தப்புளக மூடித்
தண்கிளர் தாளமென்னத் தனித்தனி வெயர்வரும்பப்
புண்கணோர் நிவேவிட்டுப் போழ்வது போல வுள்ளத்
திண்கணோஞ் சுடையே னென்று திகைத்தள மழுங்கி நின்றான்.

கண்களினின்றும் நீரரும்பத் தேகம் நடுங்க உரோமஞ்சிலிர்த்து முத்துகள் போல் ஒவ்வொன்றாய் வேர்வை நீருதிர நெருப்பிற் காய்ந்த வேலாயுதத்தைப் புண்ணிவிட்டுப் பிளப்பது போவத் துடித்து வலிய நெஞ்சமுடையேன்யானென்று தியங்கி மயங்கி நின்றான் சிபியரசன் என்றவாறு. (௱௯)

சமரினி லொன்னார் கைவேறைத்த தோரிரணந் தன்னைக்
குமாரனுந் தொழுநன் மெய்யிற்கொண் டிடக்கண்ட கற்பின்
அமருநன் மடவாள் காணா வகந்துடி துடிப்பவேங் கிக்
குமிழிநீர் கண்கள் சோருங் கொள்கைய தான மன்னன்.

போர்க்களத்திற் பகைவர் தகையிலேந்தியவேலாயுதந் தைத்து அதனா லுண்டாகிய ரணத்தினின்றும் ரத்தம் ஒழுக வந்த வாலிபனாகிய புருடனைக்

கண்ட கற்புடைய பெண்கள் மனந் துடி துடித்தேங்கிக் கண்களினின்றெழுகு நீரிற் குமிழிகளெழச் சோருந் தன்மையை யொத்தான் என்றவாறு. (௱௬௰)

உளமது வுருகியிங்ங னுற்றவிச் சுயம்பின் மூலந்
தெளிவுறக் காண்டு மென்று தீஞ்சுவைப் பால் பெய்தேமண்
ணளிரதாய்ப் பங்கமெய்த வினைத்தக்கை கைத்தாற் கேழ்த்தே
வளவுற வாழ்க்து பார்க்குளகழ்ந்துமே பார்க்குந் தோறும்.

இங்ஙனம் மனமுருகி மெய்க்குக் கிடைத்த இச் சுயம்பு லிங்கத்தின் அடியைச் சந்தேகமறத் தெளிவுறக்காண வேண்டுமென்கிற ஆவலுடையோன் மதுரமாகிய பாலைப்பெய்து மண் குளிர்ந்து சேருகும்படி செய்து கைகைத்தாற் றோண்டு இவ்வள வாழத்துடையதென்று அகழ்ந்து பார்க்கு மளவில் என்றவாறு. (௱௬௧)

அவனியு ளீரேழான வாதார பீடமட்டுஞ்
சிவனுருக் கண்டு மூலந் தெரிந்திலா னினிச்சோதிக்கி
ல்வமெனத் துருவ லின்றி யக்காரந் தேன்பால் மிக்க
குவிதரப் பெய்தபூமி கோதறச் சமன்செய் திட்டான்.

பூமிக்குள் ஆதாரமாகிய பதினன்கு பீடம் வரையில் அச் சிவலிங்கத்தின் ரூபமாகவே கண்டு அடி தோன்றாமலிருந்ததால் இனிச் சோதிக்க வெண்ணுவது வீணெண்ணமே நம்மால் முடிவதன்றென்று தேடும் ஆசையை வெறுத்து நிறுத்திச் சர்க்கரை தேன் பால் இவைகளைச் சேர்த்துப் பெய்து அப்பூமியைக் குற்ற மறச்செய்த. (௱௬௨)

பந்தரொன் றமைத்து நெஞ்சிற் பரிவொடு பூசித்தேத்தி
வந்திச் சுயம்புலிங்கம் வரலாறு தெரியோமென்று
சிந்தையுட் கவலையுற்ற சிவியெனு மரசன் கேட்ப
வந்தர வாணிமிக்க வன்புடன றைந்ததம்மா.

அதன்பின் அவ்விலிங்கத்தின்மேல் நிழல் செய்யப் பந்தலிட்டு மன அன்போடு அர்ச்சித்துத் துதித்து இச்சுயம்புலிங்கம் இவ்விடத் துதித்த காரணம் அறிகிலோமென்று மனக் கவலையுற்றிருக்கும் காலத்தில் அச்சிபி யரசன் கேட்க ஆகாயவாணி மிகுந்த அன்போடு சொல்லலுற்றுள். (௱௬௩)

அயன்புவி யாக்குங்காலை யவிரொளிப் பரிதிதேவ
னியமமாய்ப் பூசைசெய்த நின்மலச் சுயம்பிதேநம்
மயமிது பரிதிநேம மாகுமித் தலங்கண் ணுற்றோர்
பயன்மிகப் பெறுவாரின்னும் பகருதல் கேட்டி வேந்தே.

பிரமதேவன் இப்பூலோகத்தைச் சிருட்டிக்கும்போது பிரகாசிக்குங் கிரணமுடைய சூரியனல் நிருமித்து அருச்சனை செய்த குற்றமற்ற சுயம்பு லிங்கம் இதுவே நமது ரூபம் இதன் பெயர் பரிதி நேமமாகும் இத்தலத்தைத் தரிசித்தோர் வேண்டிய பலன்களைப்பெறுவார் இன்னுஞ் சொல்வேன் கேட்பாயாகவென்று அசரீரி சொல்லலுற்றனன் (௱௬௪)

தாழ்விலா விங்கலிங்கந் தரணியில் வளர்தல் காணு
ஊழிக டோறும்வெய்ய வொளிதரும் பரிதிவந்து
பாழியா தாரபீடம் பதித்தப் பூசித்தமிக்க
வாழியாம் வரங்கள் கொள்ள வளந்தருமூர்த்தி யீதாம்.

குறைவானதில்லாமல் இவ்விலிங்கம் பூமியில் வளர்வதைக்கண்டு யுக முடிவுகள்தோறும் வெப்பமாகிய கதிரைத்தரும் சூரியன் வந்து வன்மையாகிய ஆதார பீடம் நிருமித்துப் பதித்து அருச்சித்துத் தான் வாழும்படி வரங்களைக் கொள்ள வளர்ந்து வரங்களைக் கொடுக்கும் மூர்த்தியிதுவாம். (௱௬௫)

கங்கையும் பாவந்நீரக் கருதிவந்தாடுகின்ற
துங்கமாந் தீர்த்தமிந்தச் சூரியபுஷ்கரிணி யாகும்
பங்கமி லாததேவர் பங்கயக் கரத்தாற்றோட்ட
திங்குள தீர்த்தந்தேவ தீர்த்தமென் றிதனினாமம்.

கங்கையுந் தனது பாபந்தீர வெண்ணியடைந்தாடுகின்ற பரிசுத்தமாகிய தீர்த்தம் என்பது இச்சூரிய புட்கரணியாகும் தோஷம் நீங்கிய தேவர்கள் தமது தாமரை நிகர்த்த கைகளாற் றோண்டியது இங்குள்ள தீர்த்தம் இதன் பெயர் தேவதீர்த்த மென்றவாறு. (௱௬௬)

இத்தல மூர்த்தி தீர்த்த மேதமெல் லாமகற்றி
முத்திவீ டளிக்குமென்று முன்னனு பவங்களெல்லாஞ்
சித்தம துணர்ந்து நன்றாத் தெளிவுற விரித்துரைத்த
வத்தனு காயவாணி யரசனுக் கருளு மின்னும்.

இவ்விதமாகிய தலம் மூர்த்தி தீர்த்த மூன்றும் குற்றங்கள் யாவையும் நீக்கி முத்திவீடு கொடுக்குமென்றும் பூர்வ அனுபவாதி சரித்திரங்களெல்லாம் மனத்திலோர்ந்து நன்றாய்த் தெளிவா யெடுத்து விரித்துரைத்த கடவுளாகிய ஆகாயவாணி அரசனுக்குப் பின்னுஞ் சொல்லும் என்றவாறு. (௱௬௭)

பத்தகேள் நமதுகண்ணும் பரிதிபூ சித்தலாலே
யித்தல நமது நேத்ர மென்பதற் கையமின்றே
சித்திகள் செல்வஞ் செல்வச் சிறப்புடன் சீர்த்திமேலா
முத்தியும் வேண்டினோர்கண் முயலுமித் தலங்காணன்றே.

அன்பனே கேட்பாயாக நமது கண்ணாகிய சூரியன் பூசித்தபடியால் இச் சேத்திரம் நமது நேத்திரம் என்பதற்கு யாதோரையமின்று சர்வசித்திகளும் செல்வமும் செல்வச் சிறப்புடன் சீர்த்தியும் மேலாம் முத்தியும் வேண்டு மென்று கோரினோர்கள் முயன்று தரிசித்துப் பூசிக்கும் தலம் எ-று. (௱௬௮)

தில்லைந மிதயத்தானஞ் சீர்பெறு பரிதிநேமம்
சொல்லரு நயனத்தானந் துளக்கமின் முத்திமிய
வல்லதாந் துவாதசாந்த வளங்கெழு மாலவாயா
மல்லதோர் தலங்களெந்தன் வயமாகுமென்றே.

நமது இதையஸ்தானம் சிதம்பரமாம் சொல்லுதற்கரிய சீர்த்திமேவிய நயனஸ்த்தானம் இப்பரிதி நேமமாம் அசைவில்லாத முத்தியைத்தரவல்லது துவாதசாந்தமென்னும் வளம்பொருந்திய மதுரையாம் ஈதல்லாது மற்றைய ஸ்தலங்களெல்லாம் நமது அவயவமாகும்—என்றவாறு. (௱௬௧)

உன்குலத் தலைமை பூண்ட வொளிகெழு பரிதிதேவ
னன்புடன் பூசிக்கின்ற வற்புதச் சுயம்புக்கன்பாய்ப்
பொன்மதி லாலயங்கள் புதுக்கிப் பூசிப்பதுந்தன்
றன்கடனுதலாலே தகுந்திருப்பணிநீ செய்வாய்.

உனது வமிசத்திற்கு முதன்மையாகிய அதிகாரம் பூண்ட ஒளி மிகுந்த சூரியதேவன் ஆசையுடன் அர்ச்சிக்கின்ற அற்புதமாகிய இச்சுயம்புலிங்கத்திற்குக் கனகமதில் சூழந்த ஆலய முதலிய திருப்பணிகள் விருப்பமுடன் செய்து பூசிப்பது உனது கடன் ஆகலாலே எனது கட்டளையின்படி இப்பணியைச் செய்வாயென்று அப்பண்ணீசன் அருளினரென்றவாறு. (௱௭0)

அசரீரி யாகவீச ரருளிய மொழிகள் கேட்டின்
பசரீரி யாகமன்னன் பரவச முற்றுநற்றே
வசரீரி யென்னுஞ்சித்தர் மாதவர் முதலோர்க் கெட்டா
நிசரீறி லர்தார் வாக்கு நேர்ந்ததெத் தவமோவென்றே.

அசரீரியாக ஆகாய மார்க்கத்தில் நின்றருளிச்செய்த அப்பரமேசன் வார்த்தையைக் கேட்டவுடன் மன்னவன் இன்ப சரீரியாகி பரவசமுற்று உத்தமதேவ சரீரமுடையாரென்னும் சித்தர் முனிவர் முதலோர்கட்குமெட்டாத உண்மையாளரும் அந்தமில்லாதவருமாயமர்ந்த கடவுளின் திருவாக்கு அடியேனுக்குக் கிடைத்தது யாது தவமோவென்று—என்றவாறு. (௱௭௧)

எதிர்வருஞ் சகுனத்தாலே யெய்திய பயனோ தீர்த்தம்
விதிமுறை யாடிவந்த மெய்த்தவப் பயனோ புள்ளுக்
கெதிரிலா வாக்கையீய்ந்த வேசறு பயனோ வன்றிக்
கதிரவன் குலத்தெம் முன்னோர் கடுந்தவப் பயனோ காணேன்.

அடியேன் சுயதேசத்தைவிட்டு யாத்திரைக்காக வெளிப்பட்டபோது எதிர்கண்டநற் சகுனங்களாலடைந்த பயனோ ஆங்காங்குள்ள திவ்ய தீர்த்தங்களில் நியம முறை தவறாது மூழ்கி வந்ததாலடைந்த மெய்யாகிய தவப்பயனோ இணையில்லா என் தேகத்தைப் புறாவினுக்கீய்ந்த குற்றமற்ற பலனோ அல்லது சூரிய குலத்துதித்த எனது முன்னோர்கள் செய்த தவப்பயனோ அடியேன் அறியேன். (௱௭௨)

இந்தநற்றலத்தி லீச னெய்தவு மருள்செய்தன்பாய்
மந்திர முரைத்தவாக்கால் வசனித்து மகிழ்செய் துற்ற
பந்தமதற்றுமேலாம் பாக்கியம் பெறவு மென்னைச்
சொந்தமா யடிமைகொள்ளச் சுதினம தெய்திற் றன்றே.

இவ்விதப் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஈசன் வரவும் ஆசையாயென்மீதருள் புரிந்து நால்வர்க்கிரகசியமருளிய வாக்கால் வார்த்தையாடி மகிழச் செய்து

எனையடைந்த பாசபந்தத்தை நீக்கி மேலாம்பாக்கியம் பெறவும் அடியேனைச் சேர்ந்த அடிமையாக்கிக்கொள்ள இன்றளே கண்ணாயிற் றல்லவா. (௱௭௩)

கண்ணிலாப் பிறவியந்தர் கண்கள்பெற் றதுபோ லுந்நீண்
மண்ணில்வ றியோன் மிக்க வானிதி பெற்றாற்போலு
மெண்ணறுஞ் சமரில் வென்றே யெதிர்வருங் கொழுநற் காணும்
பெண்ணல முடையார்போலும் பிறங்கியே துதிக்கலுற்றான்.

கண்களில்லாப் பிறவிக்குருடன் கண்பெற்றதுபோலும் நீண்ட புவியிற் றரித்திரத்திலுழன்ற ஏழை மிகுந்தபாக்கியம் படைத்தாற்போலும் அளவில்லாப் படைகள் சூழ்ந்த போர்க்களத்திற் சென்று நின்று வென்று தனதெதிரில் வீரவிஜயத்துடன் வரும் புருடனைக்காணும் பெண்களைப்போலும் மனவெழுச்சியுடன் ஒலித்துத் துதிக்கலுற்றான்—என்றவாறு. (௱௭௪)

வேறு.

எங்கள் குலத் தலைவனின்ப முறவே பணியுந்
திங்களணி வேணிபுனை தேசோ மயசிதியுன்
பங்கயத்தா ளாயினேன் பரிந்தேத் தவுமுனது
செங்கனிவாய் விண்டமொழி செப்பிடவும் பெற்றேனே,

அடியேன் வம்சத்திற்கு முதல்வனாகிய ஆயிரங்கிரணச் சூரியன் அன்புடன் வணங்கும் அம்புலிப்பிறைதாங்கிய சடாபாரனே தேசோன்மய சிதியே உனது தாமரை நிகர்த்த சரணங்களை ஆவலாய்த் துதிக்கவும் உமது கோவைக் கனியை நிகர்த்த செவ்வாயைத் திறந்து வசனிக்கவும் பெற்றேன்-எ-று. (௱௭௫)

அளியுருவா யம்பிகைதா னன்பாய்த் தழுவவமென்
புளகமுலை யால்வடுகள் பூத்தநறு மேனிதனி
லுளவாரம் பாய்த்ததிர மோடுதல் கண்டும் விழிகள்
களையாதிருக்கின்ற கன்னெஞ்ச னானேனே.

கருணையே ஒருருவாகிய பார்வதாதேவி பரிவுடனுனைத்தழுவ மென்மையுடன் பூரித்ததனங்களால் வடுக்களுண்டாகிய அழகிய மேனியில் உழவாரம் பட்டு உதிரம் பீறிட்டோடுதல் கண்ணாற்கண்டுமே கண்ட அக்கண்ணைப் பிடுங்கியெறியாக் கன்னெஞ்சனானேன்—என்றவாறு. (௧௭௬)

கொலைத் தொழிலே நற்றொழிலாய்க் கொன்று புசிக்கும் வேடக்
குலத்தலைவ னின்கண் குறிப்பறிந்து தன்விழிக
ளலைத்தக் களைந்துவைத்த வன்புகண்டு மேயாவி
தொலைக்கநினை யாதவென்போற் றொண்டருண்டோ சொல்லுவீர்.

கொல்லுந் தொழிலையே குணமுள்ள தொழிலாய் மேற்கொண்டு கொன்று கொன்றதைத்தின்று இதே நன்றென்று திரிந்துழலும் வேடர்குலத்தலைவனாகிய திண்ணனார் உனது கண்களின் குறிப்பைத் தெரிந்து பரிந்து தனது கண்களை யிடந்து வைத்த அன்பைக் கண்டும் யான் இங்ஙன் செய்த குற்றத்திற்காய் ஆவிவிட நினையாத என்போல் ஒரு தொண்டரேனுமுண்டோ உரை செய்வீர் என்றவாறு. (௱௭௭)

தொண்டரெல்லா நீயியற்றுஞ் சோதனைக்கெல் லாந்துளங்கா
விண்டொடுகற் போற்றுணிந்து மேலாம் பதமடைந்தார்
தெண்டிரைசூழ் வையகத்திற் றேடரும் பேதைக் குணத்துப்
பண்டைவினை யேனுமந்தப் பரிசுறப்பா வித்தனையே.

உனதடியார்களெல்லாம் நீ செய்த சோதனைகட்கெல்லாம் அசையாது ஆகாயமளாவிய மலையைப்போல் நின்று மனத்துணிவுற்று மேலாம்பதவியடைந்தனர்கள் தெளிந்த அலைகடல் சூழுமிவ்வுலகத்தில் தேடற்கரிய மூட குணம்லகித்த பூர்வ வினையுடைய ஏழையேனையும் அத்தன்மையாகச் செய்து ஆண்டருளினை. (௱௭௮)

பரிகலத்துக் கேயிமையைப் பார்வையொடு வால்குழைத்துத்
தெரியமுக நோக்கிநிற்குஞ் சிறுநாய் தமனியத்தி
னரியசன மேறவன்பா யருளியநின்பேருள்ளப்
பரிவிற் கிணையுளதோ பாரேழும் பார்க்கினுமே.

எச்சிற்கலக் கேமாக்தஇமையைப்பார்வையோடு எப்பொழுதிவரென்று வாலையாட்டித் தன்பசியை இடுவோரறிய முகம்பார்த்து நிற்கும் அற்பநாயை பொன்னாற் செய்த சிங்காசனத்து ஏறவைத்ததுபோல் ஆசையோடு மடியேனுக்கருளிய உனது பெருத்த உள்ளன்பிற்கு ஈரேழுல கெங்கும்பார்க்கினும் இணையுளதோ. (௱௭௯)

வேறு.

இவ்வண்ணந் துதித்துவானி லெழுந்தவாகாய வாணி
செவ்வையாம் பொருள்கடன்னைத் தெரிந்துளங் கண்டு நின்ற
அவ்விய மில்லா மன்ன னுலய மியற்றவெண்ணிக்
கொவ்வைவா யுமையைநாடிச் சோதறக் கண்ணுற் கண்டான்.

இவ்வாறு துதிசெய்து ஆகாயவாணி வானிலெழுந்து சொல்லிய திவ்விய சொற்களை உளத்திடத்தோர்ந்து நின்று பொருமையற்றுப் புகழ்முற்றுமுற்ற மன்னன் திருக்கோவில் நியமிக்க வெண்ணங்கொண்டு கோவைக் கனியை நிகர்த்த செவ்வாயையுடைய குற்றமற்ற மங்களாம்பிகை யம்மனது விக்கிரகத்தைத் தேடிக் கண்டான். (௱௮௰)

குஞ்சர முகனை வைவேற் குமரனை யேனையோரை
யெஞ்சலிலாமற்றேடி யினிதுடன் கண்டபின்னர்
செஞ்சக மகிழ்ந்துமிக்கநிதிகளை நேர்ந்து கோயிற்
கஞ்சனும் வியக்கக் கட்டிக் களித்தன னின்புற்றன்றே.

ஆனைமுக விநாயகனை கூரிய வேலேந்துங் குமாரக்கடவுளை மற்றுமுள்ள தேவ விக்கிரகங்களைத் தேடிக் கண்டபின் மனமகிழ்ந்து அனேக திரவியங்களைச் செலவிட்டுச் சிருட்டி கர்த்தனாகிய திசைமுகனும் கண்டதிசயிக்கத் திருக்கோவிற் கட்டி அதிக ஆனந்த பரவசனானான், என்றவாறு. (௱௮௧)

கங்கைவேணியற் கும்பாகங் கலந்தவம்பிகைக்கும் பொன்சே
ரங்கணர் தமக்கு ஞானவைங் கரன்றனக்கும்வெற்றித்

துங்கவேற் கந்தனுர்க்குஞ் சூழ்பல தேவருக்குந்
திங்களின் சுதையிதென்னத் திகழ்ந்திடுங் கோயிற் கண்டான்.

கங்கையைச் சடாபாரத்திற் ருங்கிய சிவபிரானுக்கும் அவனதிடப்பாகம் பெற்ற மங்களாம்பிகைக்கும் இலக்குமி நாதனுகிய திருமாலுக்கும் ஞானம் மிக்கும் நாயகனுகிய விநாயகற்கும் வெற்றி மிகுந்த வேலாயுதக் கடவுளுக்கும் மற்றுஞ் சூழ்ந்த பற்பல தேவர்க்கும் சந்திரனிடத் ததித்த அமுதமிஃதே யெனப் பிரகாசிக்கும் ஆலயங்களும் இயற்றினுன் என்றவாறு. (௱அ௨)

ஆலயஞ் சமைத்துச்சுற்றி யைம்மதிற் பிரகாரங்கள்
சாலவே யழகாச் செய்து சந்திரன் சுதிதனக்கு
மேலதாங் கோபுரங்கள் விதிவழி யமைத்துச் சித்ரக்
கோலமண் டபங்களெங்குங் குறைவற வியற்றினுனே.

இவ்வித ஆலயங்களனைத்தும் புதுக்கி இத்யாதிகளைச் சூழப் பஞ்சப் பிரகாரங்கள் அழகு பெறச் சமைத்துச் சந்திர மண்டலத்திற்கு மேலாக நீண்ட கோபுரங்கள் சிற்ப நூல் விதியாய்ச் செய்து குறைவற்ற சித்ர மண்டபங்களும் எங்கும் நிறையும்படி செய்தானென்றவாறு. (௱அ௩)

தொல்வினை தனையும் போக்குந் தூயநீர்த் தத்தடங்கள்
பல்வள மாயியற்றிப் படித்துறை யழகதாக்கிச்
செல்படிந் துலவுஞ்சோலைத் திருமலர் நந்தனங்கள்
ஒல்லையி வியற்றியின்ப மோங்கிய மன்னனின்னும்.

பூர்வ வினைகளனைத்தும் போக்கும் தூய்மையாகிய தீர்த்தக் குளங்கள் பலவளப்பத்துடன் செய்து அதன் படித்துறைகளும் அழகாய்ச் சமைத்து மேகங்கள் தங்கி யுலாவும் சோலைகளும் அழகிய பூந்தோட்டங்களும் நியமித்து இன்பமோங்கிய மன்னன்—பின்னும் என்றவாறு. (௱அ௪)

மாசினை யகற்றுந் தீர்த்த மாகிய தடங்கள் சுற்றும்
பூசித்து வச்சுவத்தம் பொதும்பர்செய் தழகதான
பாசிலை வடமும் வைத்துப் பரனடி யார்கட்கெல்லா
நேசமா மடங்கள்கட்டி நேர்ந்தன னன்னதானம்.

குற்றத்தை நீக்கும் தீர்த்தமென்னும் தடாகங்களைச் சூழ அரசமரச் சோலைகள் செய்து அழகிய பசிய இலைகளையுடைய ஆலமரங்கள் வைத்துச் சிவனடியாரனைவர்க்கும் அன்புடன் சத்திரங்கட்டி அன்னதானஞ் செய்தான். (௱அ௫)

சத்திரம் பலவுங் கட்டிச் சதுமறை யோர்கட் கெல்லா
நித்தியம் பாலக்கார நெய்கனி வருக்கத்தோடு
சுத்தமாம் போனகங்கள் சுதையென வருத்தியார்க்கும்
வித்தமா மாடையோடும் வேண்டிய துதவிப்பின்னர்,

அனேக மடங்கள் கட்டி அவற்றில் நான்கு வேதங்களும் நன்குணர்ந்த பிராமணர்கட்குப் பிரதிதினமும் பால் சர்க்கரை நெய் பழவர்க்கத்தோடு

சுத்தியாகிய அன்னம் தேவாமுதம்போற் படைத்து அவர்கள் யாவர்க்கும் ஆடையும் பொருளும் கோரியபடி கொடுத்து அதன்பின்புஎன்றவாறு.(௱அசு)

சங்கரன் கோவிறன்னைச் சார்ந்தமேற் பக்கமாகத்
தங்கநான் மறையோர்க்கெல்லாந் தூயவக்கிரகாரங்கள்
சிங்கலிலாமற் செய்து தெருக்கண்மற் றோர்க்கொழுங்கி
சங்கொடு மேளதாளச் சங்கீதர் மறுகுஞ் செய்து.

ஈசன் ஆலயத்தைச் சார்ந்த மேற் பாரிசத்தில் பரிசுத்த மிகுந்த பார்ப்பனர்க்கும் அக்கிரகாரங்கள் குறைவின்றிச் செய்து ஏனையோருக்கும் ஒழுங்காகத் தெருக்களியற்றி மேள்தாள சங்காத சங்கீதர் வாழும் வீதிகளுஞ் செய்வித்து. (௱அஎ)

உருப்பசி யரம்பையோடு முத்தம வணங்கனுரும்
விருப்புடன் மெச்சிவேட்கை விளைதர வுருவு வாய்ந்து
பொருப்பிரண் டதனைத் தாங்கிப் பூங்கொடி நின்றதேய்க்குஞ்
சுருப்பிமிர் கூந்தற் செவ்வாய்ச் சூளையர்மறுகமைத்தான்.

உருப்பசி அரம்பை முதலிய தேவ் மாதர்களும் உத்தமகுணம் வகித்த இத்தரையின் மாதர்களும் மெச்சி விரும்பி ஆசை விளைக்கும் அழகிய உருவமடைந்து இரண்டு மலைகளைத் தாங்கிப் பொற்புறும் பூங்கொடி நிற்பதையொக்கும் வண்டுகள் மொய்த்த கூந்தலும் செவ்வாயும் உடைத்தாகிய வேஸ்சியர் வீதிகளும் நியமித்தான். (௱அஅ)

பண்டுநம் பரிதி தேவன் பரிந்தவாதனஞ்செயன்பு
கொண்டதே வளர்வதாலே குறித்தது தவிர்நீ யென்று
விண்டவா காயவாணி விதிப்படி யபிடேகாதி
யண்டநா யகற்குப்பூசை யமைவுட னடத்தலுற்றான்.

பூர்வம் நமது சூரிய தேவன் நிருமித்த பீடத்தின்மீது அன்புகொண்டு கடவுள் தங்கி அமர்தலால் அஃதொன்றினை மாத்திரம் நூதனமாகச் செய்யாமல் விடக் கடவையென்று சொல்லிய ஆகாயவாணி சொற்படி விடுத்து மற்ற அபிஷேகாதி அர்ச்சனைகளெல்லாம் வேதாகம விதிப்படி சிவபிரானுக்கு அடக்க ஒடுக்கத் துடன் நடத்தலுற்றான். (௱அக)

காலந்தப்பாமலாறு காலமும் பரிதீசற்குச்
சீலமா யாகமத்தின் றிறப்படி யேனனன்கு
சாலநல் லுபசாரங்கள் சதிருடன் செயவமைத்தே
யாலமுண் டோன்சொற்கேற்க வணிவிழா நடத்த வெண்ணி

காலந் தப்பாது ஆறு காலமும் வேதாகமத்தின் மொழியும் வழியாய் பரிதீசருக்குச் சோடச வுபசாரமும் அழகுபெறச் செய்யும்படி நியமித்து ஆலால முண்ட அரன் கட்டளைப்படியாய் ஆகாயவாணி சொல்லிய சொற்படி திருவிழாக்கள் நடத்த வெண்ணினவனாய். (௱கூ)

மேடமாந் திங்கடன்னில் மிருகசீரிடமா ளோர்ந்து
தேடருந் துவசநாட்டித் திருவிழாத் தொடங்கி யாரு
நாடியே யின்புற்றேங்க நடாத்தியே யத்தநாளிற்
பீடுறும் பரிதி தேர்ப்போற் பிறங்கிடு மிரதமேற்றி.

சித்திரைமீ மிருகசீரிட நட்சத்திரத்தில் கொடியுயர்த்தித் திருவிழா செய்ய ஆரம்பித்துக்கண்டோர் யாவரும் ஓங்கிய இன்பங்கொள்ளும்படி நடத்தி அஸ்த நட்சத்திரத்தில் பெருமை பெற்ற சூரியன் ரதத்தைப்போற் பிரகாசிக்கும் தேர்மீதி லாரோகணிக்கச் செய்து என்றவாறு. (௱௧௧)

இம்பரோ டும்பர்போற்ற விரதமா ரோகணித்து
மும்பலை யுரித்தமூர்த்தி யுவந்தமே யின்பமெய்தக்
கம்பமால் யானைவேந்தன் களித்திட வரங்க ணல்கிப்
பம்பியே வியங்களார்ப்பப் பைம்பொனா லயத்துட் புக்கார்.

பூலோகத்தவரும் மேலோகத்தவரும் போற்ற ரதமீதாரோகணித்து ஆனையையுரித்ததனைப்போர்த்த முக்கண் மூர்த்தி மகிழ்ந்து கட்டுத்தறியிற் கட்டும் பெரிய பட்டத்து யானையையுடைய வேந்தன் ஆனந்திக்கப் பல வரங்களைக் கொடுத்து வாத்தியங்கள் நெருங்கிச் சத்திக்கப் பரிதீச்சுரன் கனகமய வாலயத்துட் புகுந்தான். (௱௧௨)

சித்திரைப் பருவந்தன்னிற் சிறந்ததோர் தீர்த்தவாரி
பத்தியா நடத்திமன்னன் பரிவுடன் மகிழ்ச்சிகூர்ந்து
முத்தனைய் மூவாண்டாங்கு முயன்றுமே வைகுநாளி
லத்தனார் கனவிற்றோன்றி யன்புட னருளலுற்றார்.

சித்திரா பௌர்ணமையில் ஒப்பற்றுச் சிறந்த தீர்த்தவாரித் திருவிழாவும் பத்தியுடன் நடத்தி சிபியரசன் மிகவு மகிழ்வுகூர்ந்து முத்திக் குரித்தானவனைய் மூன்று வருஷம் வரையில் இத்தலத்தில் வசிக்கும்போது ஒருநாள் கடவுள் அவன் கனவிற்றோன்றி அன்புடன் அருளிச்செய்வான் என்றவாறு. (௱௧௩)

வேந்தனி பரிதிபோல மேதகு பத்திவாய்ந்த
சாந்தனைய் நம்மைப்பூசை சந்ததம் புரிந்ததாலே
நீந்தரு மகிழ்ச்சியுற்றே நீயுமின் னயோத்தி தன்னிற்
போந்துமே யின்பமுற்றுப் பொருந்தநம் பதத்தில் வாழ்வாய்.

ஓ சிபியரசனே நீ முன்னம் எனைப் பூசித்த சூரியன்போலே மேன்மையாகிய பத்தியடைந்த சாந்த சீலனாய் அனுதினமும் நம்மைப் பூசித்ததால் நாம் அளவற்ற ஆனந்தமடைந்தோம் இனி நீ உன் நகராகிய அயோத்தியிற் சென்று இன்புற்று வாழ்ந்து முடிவில் நமது பதத்தை அடைவாயென்றார் என்றவாறு. (௱௧௪)

என்னவே விழித்துமன்ன னிருகணீ ருகுபாயத்
தன்னிகரிலாதவின்பந் தலைக்கொள விதிர் விதிர்த்தே

முன்னமெத் தவஞ்செய்தேனோ முத்திதந் தாளுமீசர்
என்னெதிர்த் தோன்றிவார்த்தை யியம்புற வென்றின் புற்றான்.

இவ்விதம் கடவுள் கனவிலெழுந்தருளிச் சொல்லியதை விழித்தபின், அம் மன்னவன் ஓர்ந்து இருகண்களிடத்தும் அருவிபோல் நீர்வடியத் தனக்கு நேரில்லாத ஆனந்தம் அதிகரித்துத் தேகம் விதிர் விதிர்த்து அடியேனுக்கு முத்தி தந்தருளுமீசர் என தெதிர் தோன்றி வசனிக்கப் பூர்வம் யாது தவம் நோற்றிருந்தேனோ வென்றியம்பி இன்பமடைந்தான் என்றவாறு. (௱௬௫)

தாடரவந்து நின்ற சங்கர ருருவமான
தேடரும் பருவந்தன்னைச்சித்தத்திற் பதியவைத்தே
யாடினன்பலகாலுந்தா னன்புடன் கனிந்துகீதம்
பாடின னின்பமென்னும் பயோததி படிந்திட்டானே.

தனது பாதாரவிந்தத்தாட்கொள்ளக் கனவின்கண் வந்து நின்ற சங்கர தேவனுருவத்தையும் தேடுதற்கரிய பருவத்தையும் தனது மனதுட் பதிய வமர்த்திப் பலதரம் ஆடினான் புளக மூடினான் மனங்கனிந்து கீதம்பாடினான் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினான் என்றவாறு. (௱௬௬)

முத்துமா மணியிரை முதலிய பணிகள் பைம்பொற்
சித்திரத்துகில்கோடி செம்பொனின் குப்பையோங்கும்
மத்தமா மதத்தவேழம் வாம்பரி நிரையின்கூட்டம்
சத்திரஞ் சிவிகைமுத்தின் சாமரை பலவுந் தந்தான்.

முத்து முதலிய நவமணி யாரங்கள் பூஷணங்கள் பசிய பொன்னாற் சித்திரித்த வேலைகளையுடைய பீதாம்பரங்கள் கோடி யென்றளவிடும் திரவியக் குவியல்கள் மதத்தயானைகள் தாவுங் குதிரைக் கூட்டங்கள் குடை தண்டிகை முத்தின் கவரி இவைகளனைத்துந் தந்தான் என்றவாறு. (௱௬௭)

அருட்கட லாகிநிற்குமம்பிகைக் கன்பதாகத்
திருக்கிளர் மணிகுயிற்றிச் செய்தகற் பணிகளோடு
குருக்கிளர் செய்யபட்டுங் கோதறு பொன்னுமுத்தும்
விருப்புட னீய்ந்துமற்ற வேணபல் வரிசை செய்தான்.

கருணைக் கடலென்னும் மங்களாம்பிகை யம்மனுக்கு அன்புடன் அழகிய ரத்தினங்கள் பதித்துச் செய்த பலவித பூஷணங்களோடு செவ்விறப்பட்டும் குற்றமற்ற பொன்னும் முத்தும் ஏராளமாய்த் தந்ததுமன்றி இன்னும் வேண்டிய பற்பல வரிசைகளும் செய்தான் என்றவாறு. (௱௬௮)

வேறு.

கவரிகடங் கன்றுள்ளிக் காலுகின்ற தீம்பாலுங்கனியாகிற்குஞ்
சுவையுறவா ழைக்கனியும் பலவீன்ற குடக்கனியுஞ் சூழ்ந்ததேமா
நவையறுமா நற்கனியி னிரதமுமே கலந்தோன்றாய் நாளும் பாயத்
தவமிகுமா ஞானிகட மெய்ப்புளக மெனப்பயிர்க டழைக்கும் பேரூர்.

தாமீன்ற கன்றுகளை நினைத்து எருமைகளின்மடியினின்று சோரும் தித்திப்பாகிய பாலும் கனிந்து மதுரமிகுந்து நிற்கும் வாழைக்கனியும் பொற்குடத்தைப் போன்று பெருத்த பலாக் கனியும் அதைச் சுற்றி யமர்ந்த குற்றமற்ற நல்ல மாங் கனியும் இவைகளின் ரசங்கள் கலந்து சந்ததம் ஊற்றைப் போற் பாய்ந்தோடத் தவத்தின்மிகுந்த ஞானிகளது தேகம்புள குற்றதெனப் பயிர்கள் தழைத்தோங்கும் பெரிய ஊர்களும் என்றவாறு. (௱௯௯)

பாசமதை யறுத்தகலும் பானடியா ரெனவலையைப் பாய்ந்துபீறி
வீசிவெடி போங்கயலா லுதிர்தெங்கின் கனி கமுகின் மிடற்றிற்றூங்கி
மாசிலாப் பழமுதிர்த்து வருக்கை பீறிக் கதலி வனமதான
பாசொளியின் குலைமுறிக் கும்பழனங் கணிறைந்து திருப்படரும் பேரூர்.

பாசபந்தமாகிய உலக வாழ்க்கையை இகழ்ந்து அறுத்தெறிந்து நீங்கும் ஈசனது அடியவரைப்போல் வீசிய வலையைப் பாய்ந்து கிழித்து வெளியிலெழும்பிப்போம் கயல்மீன்களின் விசையால் உதிரும் இளநீர் பாக்கு மரங்களின் கழுத்திற்றூங்கி அக்குற்றமற்ற பழங்களை யுதிரச்செய்து பலாமரத்தைச் சாடிக் கூட்டமாய்ப் பசிய நிறம் பொருந்திய வாழைகளின் குலை முறிபடவீழ்க்கும் வயல்கள் நிறைந்த அழகு பெறும்பெரிய ஊர்களும்—என்றவாறு. (௨௱)

சச்சிதா னந்தமுறு சிவயோகி விழியின் பஞ்சார்ந்த கண்ணீர்
நிச்சலுமே ததும்பியுதிர் நேர்மையென வழவர்கழை நெடுங்கைக் கொள்ளா
அச்சமுறப் படடிக்கத் தெறித்தமுத்தம பங்கயத்தி னலரினின்றும்
உச்சிதமா யுதிர்ந்துடுக்களரும்பியவிண் ணெனக் கழனி யொளிர்நன்னாடு

சச்சிதானந்தத்தைச் சார்ந்த சிவயோகிகளின் திருவிழிகளினின்று நிதமும் ஆனந்தக் கண்ணீர் ததும்பி யுதிருந் தன்மைபோல் மள்ளர்கள் தமது நீண்டகரங்களில் கரும்பை யொடித்தேந்திப்பயங்கொள்ள எருமைக்கடாக்களை யடித் தோட்டும்போது அக்கரும்பின் கணுக்களினின்று தெறித்தமுத்துக்கள் தாமரைப் புட்பத்திற் றங்கி அவ்விடத்திலிருந்து அழகாக வுதிர்ந்து நட்சத்திரங்கள் உதித்த ஆகாயத்தைப் போற் றோன்றும் கழனிகள் சூழ்ந்து பிரகாசிக்கும் நல்ல நாடுகளும். (௨௱௧)

அமலமாய் நிருவிகற்ப மண்டர்ந்தமுத்த ரபரிமிதா னந்த மீறித்
தமதெனக் கொள்ளுதல் விடுதெ விரண்டுமேறச் சுசாதிதஞ் சாய்ந்த தேய்ப்பக்
குமுதமலர்த் தேனிரவிற் கொள்ளைகொண்டு புலரியிலே கோதி லாத
கமலமலரது தேக்கி வண்டுறங்க வளம்பெருகு கழனி நாடு.

நிர்மலமாய் நிருவிகற்ப சமாதியைச் சார்ந்த முத்தர்கள் அளவற்ற ஆனந்த மீறி தமதெனக் கொள்ளுதலும் தள்ளுதலும் இரண்டு மற்று இராப்பகற் றோன்றாத மேல் லோகத்தைச் சார்ந்ததை யொப்ப வண்டுகள் இரவில் மலரும் ஆம்பல் மலர்த் தேனைக் கொள்ளைகொண்டும் வைகறையில் தாமரை மலர்த்தேனைத் தெவிட்டவுண்டும் கண்ணுறங்காநின்ற வளம்பெறுங் கழனிகள் சூழ்ந்த நாடுகளும். (௨௱௨)

நித்தியமின் றுக்கையிது நிற்கையிலே சிவபோக நிறைத்துக் கொள்ளச்
சித்தமது வலித்துமிக வுடலொறுத்துப் பரமசுகந் தேடுகின்ற

முத்தரெனக் கரும்பாட்டி யடு புகையை முகிலெனவே முழக்கி மஞ்ஞை
தத்தியுளங் களித்தாட வளங்களெலா நிறைவுறவே தழைக்குநாடு.

சாசுவதமல்லாத இத்தேகம் அநித்தியமன்றி நித்தியமன்று ஆதலால் இத்தேகம் நிலைத்திருக்கும்போதே சிவபோகத்தை நிறைத்துக் கொள்ள வேண்டுமென்று தமதுசித்தம் இழுக்க அதனால் தேகத்தை வாட்டிச்சிவத்தில் சித்தத்தை நாட்டியோட்டி வாட்டமற்ற பரம சுகத் தேட்டைத் தேடு கின்ற முத்தரைப்போல் ஆலையிலிட்டுக் கரும்பின் சாரத்தைக்கொண்டு அச் சாற்றைக் காய்ச்சும் புகையை மேகமென்று வாய் முழக்கிட்டு தத்தித் தத்தி மயிற் கூட்டங்கள் மகிழ்ந்து தமது மரகத நிறத் தோகைகளை விரித்தாடும் வளங்கள் தழைத்த நாடுகளும். (உாந)

மன்னுயிர்தன் னுயிர்போல நினைந்து சிவயோக மதின்மகிழ்ச்சி யாகி
இன்னமுத மெனயார்க்கு மின்பமுற மொழிகின்றோ ரியல்பி தென்னக்
கன்னலிர தச்சுவையின் கனியுதிருந் தேமாவிற் களித்திருந்து
நன்னயமாய்க் குயில்கூவும் பொதும்பர் சூழ்ந்திட வளங்கனல்குநாடு.

உலகின்கண் நிலைபெற்ற சகல ஜீவராசிகளையும் தனது ஜீவன்போற் பாவித்துச் சிவ யோகத்தின் மகிழ்ச்சி மீறி இனிய தேவாமுதம்போல் யாவர் செவியும் மனமுங்குளிர வசனிப்போர் தன்மையையொப்பக் கரும்பின் ரசம் போற் சுதை மிகுந்த கனிக ளுதிரும் மாமரங்களின் மகிழ்ந்திருந்து நயமாகக் கோகிலங்கள் கூவும் சோலைகள் சூழ்ந்திருந்த வளங்களைக் கொடுக்கும்—நாடு களும். (உாச)

இந்தவளம் பெருகுநாடு களிலொரு நூறுகா டெழில்வே லேந்து
கந்தனை யீன்றபரி தீசர் பூசனைக்காய்க் கனிந்து நாளுஞ்
சொந்தமா னியமாகத் தொகுத் தீய்ந்தா னிரவிகுலத் தொல்லோர்க் கெல்லாம்
முந்துகீர்த் தியும்படைத்து முழுதுலகும் பொதுவறவே முறையிற் காப்போன்

இவ்வித வளம்மிகுந்த நாடுகளில் நூறுகாடு அழகிய வேலேந்திய கந்தனை ஈன்ற பரிதீசர் அர்ச்சனைக்காய் சூரிய குலத்துதித்த பூர்வ அரசர்க்கெல்லாம் கீர்த்தியை யுண்டாக்கி எல்லா உலகங்களையும் தன் வசமாக்கி நீதி முறையிற் பரிபாலனஞ் செய்யும் சிபியரசன் மனங்கனிந்து எந்நாளும் சொந்த மானிய மாக விருக்கும்படி சேர்த்துக் கொடுத்தான்—என்றவாறு. (உாரு)

இப்பெருநா டொருநூறும் பரிதீசர் பூசனைக்கா மிதுபிழைத்தோர்
அப்பணியுஞ் சடையானை யறுமுகனை யாகமத்தையரும் வேதத்தைத்
தப்பிதமாய் நிந்தித்தோ ரெய்தியமீ ளாநரகஞ் சார்வா ரென்று
செப்புப் பட்டயத் தெழுதிச் சந்நிதியில் வைத்திறைஞ்சித் திகழ்ந்தான்மன்னே

இவ்வாறு வளப்பம் பொருந்திய நாடுகள் நூறும் பரிதீசர் அர்ச்சனைக்காக நியமித்துக் கொடுக்கப்பட்டது இதற்குத் தீங்கெண்ணினோர் கங்கை தங்கிய சடாபார சதாசிவனை ஷண்முகனை சாஸ்திரங்களை வேதங்களை எண்ணாது நிந்தித்தோர் அடைந்த திரும்பொணா நரகிற் சேர்வாரென்று செப்புப் பட்டயத்திற் சித்திரித்துத் திருக்கோவிலில் வைத்திறைஞ்சினன் அழகிய மன்னனாகிய சிபி—என்றவாறு. (உாசு)

பூசிக்குமாதி சைவர்தங் களுக்கு மீரைந்தூர் பொலிவ தாக
நேசித்துக் கொடுக்கின்றோன் சங்கரற்குச் செயும்பரிசை நிகழ்த்த லென்னோ
மாசற்றபரிதி தடத்தருகினிலே சோட சமா தானத் தோடு
தேசுற்ற நவமணிகண் மலைகளெனக் குவித்தளித்தான் சீர்த்தி மிக்கான்.

அர்ச்சனை செய்யும் ஆதி சைவர்களுக்கு அழகிய பத்து ஊர் அன்புடன் கொடுத்தான் இவ்வாறு அர்ச்சகர்க்கே தந்த சிபியரசன் சிவபிரானுக்குத் தந்த வரிசையின் பரிசை அடியேன் சாற்றுவதென்னோகுற்ற மற்ற சூரிய தீர்த்தத் தருகில் பெருத்த பதினாறு வித தானங்களோடு ஒளி மிகுந்த நவரத்தினங்களை யும் மலைகள் போற் குவித்து விரித்த கையாற் கொடுத்துக் குவித்த கையால் வணங்கினான் சீர்த்தியின் மிகுந்த பார்த்திபன்—என்றவாறு. (௨௱௭)

அன்னமிடு சத்திரங்க ளனந்தமமைத் தெக்காலு மழிந்திடாத
மின்னலதாத் திசைமுழுதும் புகழ்சிறுவிக் கொடைமுரச மிக்கவார்த்துச்
சொன்னமழைச் சோனைமழை யாச்சொரியு முகிலனைய தோன்றலீய்ந்த
நன்னயதா னப்பெருக்க மளந்தறிந்து கூறுவதென் னுடுக்காலே.

அன்ன சத்திரங்களனேக மமைத்து மேகத் தொளியு மின்னலைப்போல் எக்காலு மறையாத கீர்த்தியென்னு மின்னலை எண்டிசை நிலவ நிறுத்தி தானமென்னும் பேரிகையை இடியைப்போல் சத்தித்துச் சொர்னமென்று மழையைச் சோனையாகப் பெய்யும் மேகத்தையொத்த சிபியரச றந்ததானப் பெருக்கத்தை இவ்வளவென்றள வறிந்து சொல்லுங்காரண மென் னுடுருவ உள்ளத்தின்கண் யோசிக்குங் காலத்து—என்றவாறு. (௨௱௮)

தன்னுயிர்போன் மன்னுயிரைப் புரப்பனிவ னென்பதற்குச் சான்றதாக
வன்னமணிப் புறவினுக்குத் தலைபகுந்து கீர்த்திபெற்ற மன்னர் மன்ன
னின்னமுதஞ் சிந்துதல்போற் பரிதீசர் தனைத்துதித்தே யிறைஞ்சி யேத்திப்
பொன்னணிகண் மணிப்பணிகள் காணிக்கை யாகவைத்துப் புளகம்பூத்தான்.

தன்னுயிரைப்போலமன் னுயிர்களையுங் காப்பவன் என்பதற்குச்சாட்சியாக அழகியமணிப்புறவின் பொருட்டுத் தராசிலேறிக்கீர்த்திவகித்தஅரசர்க்கரசன் இனிய அமுத்தாரைகள் சிந்துவதுபோல் பரிதீசரைத் துதித்து வணங்கி பொற் பூஷணங்களும ரத்ன பூஷணங்களும் காணிக்கையாக வைத்து உள்ளம் பூரித்தான் வள்ளலாகிய சிபி என்றவாறு. (௨௱௯)

விடையேறிப் பவனிவரும் பரிதீசர் பெருங்கருணை விடைபெற்றன்பாப்
படையேறுங் கரதலத்துப் படையேறி முன்னடக்கப் பனைக்கைவேழ
மடையேறிக் கரையுடைத்துப் பாய்புனல்போன் மதம்பெருக மணித்தேரேறிக்
குடையார நிலவெறிப்ப வழிகொண்டு நகரடைந்தான் கொற்றவேந்தன்.

ரிஷபவாகனமேறிச் சாரிவரும் பரிதீசரது கருணையின் உத்தரம்பெற்று ஆசை மீறினவனும் ஆயுதங்களேறிய கரதலங்களையுடைய சேனைகள் ஆண் சிங்கங்கள்போல் முன்னடக்கத் துதிக்கையுடைய யானைகளின்கவுளினிடத்து மடையின் மிருந்தேறிக் கரையைச்சாடிப் பாய்ந்தோடும் வெள்ளம்போல் மதப் பெருக்கெடுத்தோட அழகியரதத்தின்மேலேறி மேற்பிடித்ததவளச்சத்ரக்குடையின் குச்சுகளின் முத்துகள் நிலவை வீச வழிகொண்டு அயோத்தி நகரையடைந் தான் வெற்றிமிகும் வேந்தனாகிய—சிபி—என்றவாறு (௨௱௰)

மன்னன் வரவினைக்கண்ட மந்திரிமார் தம்மோடு மற்றோரோடு
நன்னய மாய்த்தான்கண்ட புதுமைகளுந் தீர்த்தமகி மைலமுஞ் சொல்லி
பன்னன்வரும் பரிதீசர் தரிசனமுந் தானடைந்த பரிசும்வாயா
லின்னமுதம் போலுரைத்துச் சந்ததமு மறவாம லிருந்தானன்றே.

இவ்வாறு வரும் மன்னவன் வரவைக் கேட்டெதிர்கொண்டு வந்த மந்திரிகளோடும் மற்றோரோடும் அளவளாவி முகமனுடன்தான் கண்ட அற்புதங்களும் தீர்த்த மகிமைகளுஞ் சொல்லிச் சொல்லற்கரிய பரிதீசர் தரிசனமும் தானடைந்த பலன்களும் வாய்திறந்து இனிய வமுதுகுவதுபோற் சொல்லிச் சதாகாலமும் பரிதீசர் பாதாம்புயங்களை மறவாதிருந்தான் என்றவாறு. (உ௱௰க)

சந்ததமு மறவாமற் பரிதீசர் தனையுன்னிச் சலதி பொங்கி
வந்ததென வருஞ்சச்சி தானந்தந் தனிற்படிந்து வருடந்தோறுஞ்
சுந்தரமாம் பொற்றுகிலும் பசும்பொன்னுந் தந்தனுப்பிச் சுரர்கள் வாழ்த்த
இந்திரன்போல் வாழ்ந்திருந்தான்சிவிச்சக்கிரவர்த்தியெனவிசைகொள்வேந்தன்

இப்படிச் சந்ததமும் பரிதீசரை மறவாமல்நினைந்து கடல்பொங்கி வந்தது போல் சச்சிதானந்த சுகத்தின் முழுகி நிகழும் வருடந்தோறும் அழகிய பீதாம்பரமும் திரவியங்களும் தவறாமற் றந்தனுப்பிக்கொண்டு தேவர் முதல் யாவரும் வாழ்த்தப் பூலோக இந்திரன்போல் புகழ்மிகி வாழ்ந்திருந்தான் சிபிச் சக்ரவர்த்தி யெனப் பெயர்பூண்ட அரசன்—என்றவாறு. (உ௱௰௨)

சிவிச்சக்ரவர்த்தி பூசித்த சருக்கம்

முற்றும்.

ஆகச் சருக்கம்—ஏழிற்குக் கூடிய கவிகள்—௨௱௰௨.

தனதத்தன் பேறுபெற்ற சருக்கம்.

கோசலைக் கரசாகிய சிவியெனுங் கோமான்
வீச லைத்திரு நதிகளிற் படிந்து மேவியுவா
ஈச னும்பரி நீசரை வணங்கிய திசைத்தேம்
தேசு வாவிய வணிகன்றன் பேறையுந் தெரிப்பாம்

கோசலையென்னும் அயோத்தியா நகர்க் கரசனாகிய சிபி அலைகள் வீசும் அழகிய கங்கையே முதல் திவ்ய நதிகளின் மூழ்கி யடைந்ததும் பரிநீசரைக் கண்டு வணங்கி வரங்கள் பெற்றதும் புகன்றோம் இனி அழகிய தனதத்த னென்னும் வணிகனடைந்த வரங்களையுந் தெரியும் வண்ணம் புகல்வாம் என்றவாறு, (க)

தந்தியின்மருப் போடகில் சந்தனக் கோடும்
உந்தி யேகரை யொதுக்கிய கௌதமி யென்னும்
சந்த வார்புன லாற்றரு காமுகில் கதுவச்
சிந்து தேமலர்ச் சோலைக ணீடுவ சிறந்து

ஆனைத் தந்தங்களுடன் அகிலங் கட்டை சந்தனக் கட்டைகளையும் அடித்துக் கொண்டுவந்து இரு கரைகளிலும் ஒதுக்கா நின்ற வாசம் வீசுங் கௌதமியென்ன நீண்ட ஜலமோடும் நதியருகில் மேகங்கள் நீங்காது கதுவத் தேன் பொழியு மலர்ச் சோலைகள் சிறந்து நீண்டு வளரும்—என்றவாறு. (உ)

பூவ லர்ந்திழி தேறலிற் புவிநனைந் திடலாற்
கா வெ லாந்தழைத் தோங்கியே கவினுறவிளங்கித்
தேவ ரூரெலாங் கமழ்தரச் செழுமல ரரும்பி
ஓவி லாதொளிர் பொழிற்கிணை யுலகில்வே றுளதோ

புட்பங்கள் மலர்ந்தொழுகுந் தேன்களாற் பூமி நனைந்து சோலைகள் தழைத்தோங்கி அழகுபெற விளங்கிச் சொர்க்க முழுதும் பரிமளிக்கச் செழிய புட்பங்களரும்பி நீங்காது ஒளியைச்செய்யும் அச்சோலைக் கிணை உலகில் வேறில்லை. (ங)

புன்னை செண்பகம் பாடலங் குங்குமம் புரைதீர்
பொன்னர் தாருசெருந்தியும் பூநிறை பிண்டி
வன்னி சந்தனந் திலகமுங் குரவமும் வாசந்
துன்னு மௌவலுஞ் சாதியும் படருமச் சோலை

புன்னை சண்பகம் பாதிரி குங்குமம் குற்றமற்ற பொற்ப்ரகாசமுள்ள மகரந்த முதிர்க்கும் செருந்தி மலர்கணிறைந்த அசோகம் வன்னி சந்தனம் மஞ்சாடி மருதோன்றி வாசமிகும் முல்லை தேக்கு முதலியவைகளுள்ள சோலையாம் என்றவாறு. (ச)

வீரச் சண்பகச் சினைபடர் மௌவலக் கொடிதான்
நேச நாதனைப் பிரிந்திடாக் குலமக ளிகரும்
மூசி யுண்டுதே னற்றபூத் தனைவிட்டு முயன்று
வேசி மாதர்போற் சுரும்பினம் மறுமலர் விரும்பும்

மண்மிகுஞ் சண்பகக் கிளைகளிற்றழுவிப் படரும் முல்லைக்கொடிகள் தன் நேச அன்பனை நீங்காக் கற்புடைய மாதரையொக்கும் சுற்றிக்கொண்டு தேனை யுண்டு அம்மலரை விண்டு தேனுள்ள வேறு மலரை யிச்சித்து தேனுண்ண முயன்று விரும்பி யேறும் வண்டுகள் வேசை மாதரை யொக்கும் என்றவாறு. (௫)

வந்த நல்விருந் தோம்பிமேல் வருவிருந் தழைப்பச்
சந்து போக்கிய வில்லறத் தாரெனத் தருக்கள்
சிந்து தேனளி யினங்களுக் களித்துநாற் றிசையும்
முந்துமாமணத் தாற்சுரும் பழைத்திடு முறையே

தமது வீடு தேடிவந்த விருந்தினரை யுபசரித்து இனிவரும் விருந்தினரை எதிர்கொண்டழைக்கத் தூதாட்களை விடுக்கும் இல்லறத்து நல்லவர்கள்போல் தருக்கள் தம்மிடஞ் சிந்திய தேன்களை வண்டின் குழுக்களுக்கீய்ந்து மற்றும் நாற்றிசையும் மலர்களின் வாசனை யென்னுந் தூதாட்களை யனுப்பி வரு விருந்தாகிய வண்டினங்களைத் தம்மிட மழைப்பிக்கும்—என்றவாறு. (௬)

அஞ்சு கங்குயில் முதலிய புட்களு மின்பு
மிஞ்சு கற்புடை யாரென மானமே பொருளா
யெஞ்சு கந்திடு கவரிமா வுழைமுயனெறிகூர்
இன்சொ லன்பர்தம் மனமெனச் சுகமுறு மின்கா

அழகிய கிள்ளை கோகில முதலிய பறவைகளும் கவரிமான், மான், முயல் முதலிய மிருகங்களும் அன்பு மிகுந்த கற்புடைய மாதரென்ன மானத்தையே பொருளாய் மதித்துப் புறம் போகாமல் இனிய சொல்லையுடைய தமதன்பர் மனமென்னச் சுகித்திருப்பது அவ்வழகிய பூங்காவனம்—என்றவாறு. (௭)

பிணிய கற்றுசஞ் சீவியென் றெவர்களும் பேசக்
கணித மிக்குள புதவிறை காவினி லியல்பாப்
பணியி ழைத்திடு பன்னக சாலையுண் டதனிற்
றணிவி லாவகிற் றூமமே சந்ததங் கமழும்

நோய்களை நீக்குஞ் சஞ்சீவி யென்றி யாவருஞ் சொல்ல அளவில் மிகுந்த பூக்கள் நிறைந்த அப்பூங்காவில் மேற்கண்ட பறவை மிருகங்கள் இயல்பாக ஏவிய பணிவிடைகளைச் செய்ய ஓர் பன்னசாலையுண்டு அதனிடை நீங்காது அகிற் புகையின் வாசனையே பரிமளிக்கும்—என்றவாறு. (௮)

கோமி யங்கொடு தின்றின் மெழுகியே கொதுகீ
பூமிடஞ் செல்லெறும் பெலாம் போக்கியே செந்நீர்
தாமுண் வெய்யவாய்க் கிருமியு மின்றியே தணித்துக்
காம மற்றவ ருளமெனத் தூயதாங் காணில்

கொசுகு, ஈ, பூமியிலுண்டாம் புழுக்கள், செல், எறும்பு முதலியவும் போக்கி இரத்தங்களைப் பருகும் வெவ்விதாகிய புழுக்களில்லாது நீக்கிக் கோமயத் தெளித்து மெழுகிக் காண்பதற்கு மோகமற்ற முனிவர்கள் மனம் போல் பரிசுத்தமான தலமாம்—என்றவாறு. (சு)

வேறு

கலையுரி புலியதள் கரகந் தண்டுடன்
இலகிய சாலையி லினிய மெய்த்தவம்
நலமுறப் புரிபவன் ஞானகா ட்டனென்
றலகில்கா லங்களை யகற்று மாற்றலான்.

இவ்விதமாக வொளிரும் பன்னசாலையில் நன்மைபெறற்பொருட்டு இனிய மெய்த்தவம் புரிபவன் மான்றோல் புலித்தோல் ஆசனத்துடன் தண்டுக மண்டல மேந்தியவன் அளவில்லாக் காலங்களைத் தவத்தாற் கடந்த வல்லமையுடையவன் ஞான காட்டனென்னும் முனிவன்—என்றவாறு. (ம)

நித்தியா நித்திய நிலைமை தேறியே
சுத்தனு யிகபரத் தொடக்க தும்வெறுத்
தத்திரம்புலன் விடையாதி தன்னையே
நத்திடா வகையறி வான நடத்தவான்.

நித்திய அநித்தியமென்னும் நிலையை அறிந்து தேறி பரிசுத்தனாய் இகம் பரம் என்னும் இரண்டாசையும் வெறுத்து அதுபோல் ஐம்புலன்களை விஷயாதிகள் வழியில் இச்சியாத வண்ணமறிந்து நடத்திவைப்போன்—என்றவாறு. (கக)

புலன்வழி மனமது புக்கு றுமலும்
நலனில்பொய்யுலகினை நாடி டாமலும்
அலமுறு மிதமகி தாகி கட்பினால்
மலர்தலுங் குவிதலு மாற்று மாட்சியான்.

ஐம்புலாதிகள் வழி மனஞ் செல்லாமலும் நன்மையே யில்லாமித்தையாகிய உலகின்பங்களை நாடாமலும் துன்பத்தைக் கொடுக்கும் இதம் அகிதமென்னும் ஆசையால் அம்மனம் மலர்தலும் குவிதலும் வாராமல் மாற்றும் பெருமையுடையான். (கஉ)

மெய்ம்மறை யுணர்ந்ததை மிக்க சிந்தனை
செய்பவன் குருமொழி தனிற்சி ரத்தையாய்
ஐயம தற்றுமே லமல வீடுறத்
தெய்யவ ஞய்த்தவந் தொடங்கி நின்றவன்.

மெய்யாகிய வேதப் பொருளை யோர்ந்து அதையே மிகவுஞ் சிந்திப்பவன் ஆசிரியன் மொழியிற் சிரத்தையாய்ச் சந்தேகமகன்று மேன்மையோடு அமலமாகிய முத்தி வீட்டைப் பெறப் பரிசுத்தனாய்த் தவத்தைத் தொடங்கினான். (கங)

தத்துவ சோதனை தனிலொன் றொன்றதாய்
நித்திய மற்றதை நியதி நீக்கியே
சுத்தமா நிட்களச் சோதியானதே
முத்தர்க ளறிவுறு மோன மென்றனன்.

தத்துவ சோதனைகளை ஒன்றொன்று யாய்ந்து நித்தியமில்லாத வஸ்துவை நீக்கிச் சுத்தமாய் நிட்களச் சோதியானதே முத்தர்க ளறியப்படும் மோனமென்றெண்ணினவனாய் என்றவாறு. (௰௪)

மிக்கதா கியசிவ யோக மீதெனுந்
தக்கதா ரகவழி சார்ந்து சோதியுட்
புக்கம னற்கமே பொருந்தி யோகமா
முக்கியா னந்தத்தின் முழுகுஞ் சீர்த்தியான்.

மேன்மையாகிய சிவயோக மிஃதென்று தாரகவழியிற் சார்ந்து சோதியுட் புகுந்து மனம் கலந்து பொருந்தி முக்யமாகிய யோகானந்தத்தில் முழுகும் சீர்த்தியை யுடையவன் என்றவாறு. (௰௫)

யானென தென்மன மடுத்துத் தோன்றிடு
மானதற் போதமா மாசொழிந் தொளிர்
தானவனாய்மன தற்றுச் சந்ததம்
தேனுறு சுவை யெனத் திகழு வானரோ.

யான் எனது எனமனத்தி னடுத்துத் தோன்றும் குற்றத்தை யொழித்துப் பிரகாசிக்குந்தானே யவனாய் மனம்போக்குவரவற்று அனுதினம் தேனும் அதன் சுவையுமெனச் சேர்ந்து பிரகாசிப்பான்—என்றவாறு. (௰௬)

நினைப்பொடு மறப்பற நிருவி கற்பமா
யனைத்துமே தானதா மமல ஞானமாங்
கனத்தினன் ஞானமா காட்ட னென்றுபே
ரினத்தவ ரிட்டன ரேது நோக்கியே.

நினைப்போடு மறப்பும் அற்று விகற்பமில்லாது அனைத்துந் தானேயாகி மேன்மையுற்றுக் குற்றமற்ற ஞானத்தொன்றி நின்றவனாதலால் இக்காரணத்தை நோக்கியே முனிவர்கள் ஞானகாட்டனென்று அவர்க்குப் பெயரிட்டனர். (௰௭)

வேறு

இவ்வித ஞான காட்ட ரிருந்தவ மியற்றுங்காலை
அவ்விய பாவ நீக்கு மருங்கவு தமியின் பாங்கர்
செவ்வைசேர் மணிகளாலுஞ் சீர்சிறந் தோங்கலாலும்
பவ்வவா ரிதியை யொக்கும் பாடலி புரமொன் றுண்டால்.

இப்பிரகாரம் ஞானகாட்ட முனிவன் றவஞ் செய்யும்போது அரிய பாபங்களை யொழிக்கும் கவுதம நதியின் பக்கத்துத் திவ்விய மணிகளாலும் சிறப்பின் மிகுந்தோங்கலாலும் நுரைகளையுடைய சமுத்திரத்தை யொத்த பாடலிபுரமென்றொரு நகரமுண்டு என்றவாறு. (௰௮)

பல்வளஞ் செறிந்தே யோங்கும் பாடலிபுரத்தில் வாழ்வோ
னல்லளத் தனதத் தப்பேர் நாயகன் வணிகர்தம்மிற்
சொல்வல மெத்தால்யூகச் சூழ்ச்சியாற் கொண்டு விற்றே
யெல்லையில் கோடிசெம்பொ னீட்டியே வாழுங்காலை.

பல வளமும் பெருகி வளரும் அப்பாடலிபுரத்தில் வசிப்போன் மிகுந்த வளம் பொருந்திய தனதத்த செட்டி யென்போன் அவ்விடத்துள்ள வணிகர்கட்குள் சொல் வன்மையாலும் யுக்தியாலும் பல பண்டங்களை வாங்கியும் விற்றும் கோடியின் மீதும் எண்ணிக் கையில்லாப் பொருள்களைச் சம்பாதித்து வாழும்போது. (௰௯)

அன்னவன் குமரன் மிக்க வழகுமெய் வனமும்பெற்றுக்
கன்னியர் மோகமீறிக் கலங்கியே கணிகைமாதர்
பொன்னெனத் திதலைபூத்த புணர்முலைப் போகம் வேட்டுப்
பொன்னொடு மணியுமுத்தும் போதவே நல்கலுற்றான்.

அத்தனதத்தச் செட்டியின் குமாரன் மாரன் போலழகும் வாலப்பருவமும் அடைந்து மாதர்களின் மையல்மீறி மனமயங்கி வேசையர்களது பொன்போன்ற தேமற் படர்ந்த இரு முலைகளின் போகத்தை யிச்சித்து பொன்களும் ரத்தினங்களும் முத்துக்களும் மிகவாகக் கொடுக்கத் தலைப்பட்டான். (௨௰)

பாடிய விறலிமார்க்கும் பதம்பெயர்த் தபிநயத்தோ
டாடிய மாதரார்க்கு மணிமணி பணிகளீய்ந்து
வாடிய விடைதள்ளாட வளர்முலைப் போகந் துய்த்துக்
கூடியன்னோர்களிக்கக் குறையறப் பொருள்களீய்ந்தும்.

விறலிகளென்னும் பாடன் மகளிர்கட்கும் பரதாகம விதிப்படி பாதத்தைப் படியிற்படிய வெடுத்தெடுத்து வைத்தபிநயத்தோடாடு மாதருக்கும் அழகிய ரத்னாபரணங்கள் தந்து மருங்குல் தளர்ந்து தள்ளாடிச் சகியாது வாட மார்பின்கண் இறுமாந்து பூரித்து வளர்ந்த தனபாரத்தின் போகத்தை மோகத்தோடனுபவித்தும் அவ்விதங்கூடிய அன்னோர் மகிழக் குறைவில்லாப் பொருள்கள்தந்தும். (௨௧)

தனமலையொரு முங்கப்புல்லித் தனமலை யீய்ந்து முத்த
மனமிரங்கித் தாவென்று மணிமுத்தவாரநல்கி
யனநடையார்களல்குலரவின் மென்பணத்தைக்காணத்
தினந்தினம்பொற் பணங்கள் செலுத்தியே சுகிக்கலுற்றான்.

அழகிய மலையை நிகர்த்த அம் மாதர்து தனங்களை யழுந்தச் சேர்ந்து அதற்குப் பிரதியாகத் தான்சம்பாதித்த மலை நிகர்த்த தனமென்னும் பொருளைத் தந்து உமது மனமிரங்கி வாய் முத்தந் தாருமென்று அதற்குப் பிரதியாய்த் தனது அழகிய முத்தாரந் தந்தும் அன்ன நடையை வாய்ந்த அவரது நிதம்பமென்னும் பாம்பின் படமாகிய பணத்தைக் காணத் தினந்தினந் தனது பொற்பணங்களைக் கொடுத்தும் அற்ப சுகத்தை ஆனந்தத்துடன் அனுபவிக்கலுற்றான். (௨௨)

மாதர்கள் கடைக்கண் வீசம்வலையினிற்சிக்கி மோசப்
பேதையாய்ச் சுழன்று வேண்டும் பெருநிதியங்கை கொள்ள
வாதாமுள்ள வேசையருளியபடியே மற்றோர்
நீதிலா நகரஞ் சேர்ந்தான் றெரிவையர் தங்களோடே.

இவ்வேசை மாதர் ஆசை மீற வீசுகின்ற கடைக்கண் வலையிற் சிக்கிச் சோக்கி அறிவில்லான்போற் சுழன்றுழன்று அவ்வன்புள்ள வேசையரின் சொற்படி வேண்டிய பொருள்களைக் கைக்கொண்டு அவர்களோடு குற்றமற்ற வேறொரு நகரத்திற்போய்ச் சேர்ந்தான்—என்றவாறு. (உரு)

தனமிகத்தேடி வைத்த தனதத்த னிராசை பூண்டு
கனமுறு விதேகந்தோன்றக் கதிதரும் பரமபத்தர்
இனமதைப் பூசித்தேத்தி லெய்தும்வீ டெனவலித்துத்
தினமுமெய் யடி யார்பூசை செய்தவனொருகு நாளில்.

இவ்விதமானபின் பொருளைக்காக்கும் பூதம்போல் அளவற்ற திரவியந் தேடிவைத்த தனதத்த செட்டி யென்பவனுக்கு நல் விவேகம் பிறந்து அத் திரவியத்தின் மீதும் வேசையர் மீதும் ஆசை நீங்கி முத்தி கொடுக்கவல்ல பத்தர்களைப் பூசித்துப் பணிந்து துதிக்கில் பதவியடையலா மென்றெண்ணிப் பிரீதியுடன் பிரதிதினமும் அடியவரை வலுவிலழைத்துப் பூசித்து வருங்காலத்தில்—என்றவாறு. (உச)

ஞானநாட் டப்பேர்பூண்ட நற்றவன் வரவுநோக்கித்
தேனிமிர் நளினங்கண்டு சென்றுவீழ் சுரும்பையொப்ப
மோனமா முனிவன்பாத முளரியில்வீழ்ந்து தண்ட
மானதொத் தசைவிலாம லவசமாக் கிடந்தானன்றே.

நற்றவத்தின் மிகுந்த ஞானநாட்ட முனிவர் ஓர் நாள் தனதெதிரில் வரநோக்கினவனுய் தேன் நிறைந்த தாமரை மலரைக் கண்டவுடன் மனமகிழ்ந்து போய்விழும் வண்டினம்போல அம்முனிவரது பாத தாமரையில் தண்டம் போல் விழுந்து தண்டஞ்செய்து அசைவற்றவனாயும் பரவசமுற்றவனாயும் கிடந்தான். (உ௬)

அஞ்சலென் றபயமீய்ந்த வருண்முனி தன்னைப்போற்றி
வஞ்சகமற்றநெஞ்ச வசியன்றன் வாழ்மனைக்குச்
செஞ்சொலா வழைத்துப்பீடஞ் சேர்த்தியே புளகமூட
வஞ்சிநின் றவன்றனுள்ள வாதா மொழியலுற்றான்.

இவ்வாறு கிடந்தவுடன் அஞ்சவேண்டாமென்று அபயவார்த்தை கூறிய அருள்மிகிய முனிவனைத்துதித்து வஞ்சம் நீங்கிய நெஞ்சந்தாங்கிய வணிகன் இனிய வசனங்களோதித்தான் வாழுமனைக்கழைத்துப்போய்ஆசனத்தமர்த்திப் புளகாங்கனுய் அஞ்சுதலோடும் நின்று தனது மனதுட்டங்கிய குறைகளை முறையிடலானான். (உ௭)

உலகெலா மகங்கை யாமலகமென வுணரும் வல்லோய்
நலமுறு காலமூன்று ஞானத்தா லறிவாயைந்து

பலனரு ட்ருவுமானும் பணிசெய்வா னந்தத்தி
விலகிய வடிகளிங்க ணெய்தவெத் தவஞ்செய் தேனே.

உலகின்கண் நிகழுங் காரியமனைத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் உணரவல்லாய் கால மூன்றையும் ஞானத்தாலுணரவல்லாய் கோரிய பலனைத்தரும் ஐந்தருவும் காமதேனுவும் ஏவிய பணிகளைச் செய்யப் பரமானந் தத்தட் படிந்திருக்கும் சுவாமிகளே தாங்களிங்ஙனம் வர எத்தவஞ் செய் தனன். (உஎ)

விண்டபே ரெல்லா மேலாங் கதிபெறு வதற்கும்பாதத்
தண்டரும்பதுமந் தீண்டுந் தாணியும் புனிதமாகக்
கொண்டுநீர் சஞ்சரிக்கக் குறித்தது குணுங்கர் நாய்நேர்
தொண்டனுக்கே நல்லின்பந் தோன்றிடப் பலித்ததன்றே.

தெரிசனங் கண்டோரெல்லாம் மேன்மையாகிய முத்தி பெறுவதற்கும் குளிர்ந்தபதுமம் போன்ற பாதச்சுவடு படப்பட்ட பூமியும் புனிதமாக உட் கொண்டு தாங்கள் சஞ்சரிக்கக் குறித்தது பேயும் நாயும் நிகர்த்த பேதையாகிய தொண்டனுக்கே இன்பம் கிடைக்கக் கிடைத்தது என்றான். (உஅ)

பங்கினைப் பசியுளோரைப் பலபிணி யுழக்கின்றோரைப்
பங்கம தறவேசெய்யப் பரிந்திங்கு வலுவிலெய் தங்
கங்கையுஞ் சுதையுநான்கு கரணியு மெனயானுற்ற
தெங்கெனத் தேடிவந்தே யினியபே ரின்பமீந்தீர்.

சனியெனும் ரோகத்தாலுண்டாகிய துன்பத்தையும் பசியையும் பலபிணி களையும் கொண்வேருந்தவோரை அத்தீங்கு நீங்கச்செய்தற் பொருட்டு கங் கையுந் தேவாமுதமும் சஞ்சீவகரணி முதல் நான்கு மருந்தும் வந்ததாமென அன்பு மிகுந்த அடியேனுற்றவிடம் யாங்கென்று தேடி வலுவில் வந்து இனி தாகிய பேரின்பந்தந்தீர்—என்றவாறு. (உகூ)

என்பொரு ளொப்பமற்ற வேதிலார் பொருளுமெண்ணிட
வன்பொருள் செட்டேசெய்தல் வசியர்த மறமென்னுமற்
கன்மன மாந்தே னீப்பொற் கனதன மீட்டிவைத்தேன்
நன்முக மாவறந்தா னுட்டிலே னுலோபத் தாலே.

தனது பொருளைப்போலப் பிறர் பொருளையும் எண்ணி அதில் இச்சை வையாமல் நிலைபெற்ற பொருளைச் செட்டாய்ச் செலவு செய்தல் செட்டிகளா கிய வைசியரது குலதர்மமென்றெண்ணுமல் கற்போன்றமனிதனுய்ப்பிறர்க்கு மனமகிழ் வுடனீயாத தேனீக்களைப்போலப் பெருந்தனத்தைச் சம்பாதித்து வைத்தேனன்றி உலோப குணத்தால் முக மகிழ்ச்சியுடன் தரும முதலியதைச் செய்து எனது பெயரை நிலைநிற்க நாட்டியவனல்லேன். (௩௰)

விருந்தினர் தம்மைக்கண்டால் வெருவியே விடுப்பன் யார்க்கும்
பரிந்தொரு காசுநல்கேன் பாவலர் வரவுகேட்டாற்
காந்திட வல்லேன் றொண்டர் கண்ணுறின் முகமன் கூறிப்
பொருந்தியே தொழுதுபோக்கிப் பொருண்மிக வீட்டினேனே.

வீட்டைத்தேடி விருந்தாளிகள் வரில் பயந்தோடும்படி விபேப்பேன் யாவர்க்கும் ஆசையுடன் மனதார ஓர் காசுங்கொடுக்கேன் வித்துவர்ன்கள் வந்தனரென்று கேள்விப்படில் ஒளித்துக்கொள்ளுவேன் அடியர்கள் கண்களுக்கெதிராய்த் தோன்றில் தொழுது வீணாகிய நல் வார்த்தை சொல்லிப் போக்கிவிடுவேன் இவ்விதமாகச் செய்து அளவற்ற பொருளைத் தேடினேன். (௩௧)

என்றுதன் வரலா றெல்லா மியம்பியே வீட்டினாசை
யொன்றுமே யன்றியிந்த வுலகினி னிராசையுற்று
நின்றனின் றரிசனந்தா னின்மல மாக்கியாண்டு
நன்றதாம் கதியானெய்த நாதனே யருடி யென்றான்.

இவ்விதமாகத் தனது வரலாறெல்லாஞ் சொல்லினவனாய் இனி முத்தியின் மேலாசையல்லது இவ்வுலக வாசையில் நிராசையுற்றவனாய் நின்றேன் ஆதலால் தமது தெரிசனத்தால் அடியேனைப் பரிசுத்தனாக்கி ஆண்டுகொண்டு நற்கதியை நானடையும்படி நாதனே கருணை செய்யவேண்டுமென்றானே.(௩௨)

தவமுயன்றிடவு மியோகந் தனைப்புரியவு நின்னாலே
யவனியி லேலாதென்ப தறிந்தன முந்தனுள்ளக்
கவனமே நன்றதென்று கழறியே ஞான காட்டர்
சிவ தரிசனத்தால் முத்தி சேரலா மென்றுசெப்பி.

இவ்வார்த்தையைக்கேட்ட ஞானகாட்டமுனி தவஞ்செய்யவும் யோகஞ் சாதிக்கவும் இவ்வுலகினிடத்துன்னாலாகாது என்று செவ்வையாயறிந்தனம் ஆகினும் உன்னுள்ளக் குறிப்பு நன்றென்றும் சிவதரிசனத்தால் முத்தியடையலாமென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுவார் என்றவாறு. (௩௩)

பங்கயன் றுதிக்குமிக்க பத்ரகே தாரங்காசி
கொங்குலா ணைமிசங் நற்குருட் சேத்ரம வந்திவேத
புங்கவர் தொழும்விருத்த பூதரந் தில்லைமுத்திப்
பங்கதாம் பரிதிநேமம் பாரிலித் தலங்களொன்றில்.

பங்கயாதனனாகிய பிரமனுந் துதிக்கும் பெருமைமிகுந்த பத்திரை கேதாரம் காசி மணம் வீசும் நைமிச வனம் குருக்ஷேத்திரம் அவந்தி வைதிகர் வணங்கும் விருத்தாசலம் தில்லைபணிவோர்கள் பங்காக முத்தியைச் சேர்க்கும் பரிதி நேமம் என்ன இப் பூமியிலுள்ள தலங்களில் ஒன்றிடத்து. (௩௪)

பத்திசெய் தீசன்றன்னைப் பரிவுடன் பரிந்துபோற்றின்
முத்தியெய் திடலாமென்று முனிவானினிதுகூற
அத்தனே யவற்று ளொன்றை யருளிலத் தலத்தைச்சேரச்
சித்தமுற்றன னென்றேரதத் திருஞான காட்டர் சொல்வார்.

ஈசனைப் பத்திசெய்து ஆவலுடன் பணிந்து தோத்தரிக்கில் முத்தி வீடடையலாமென்று இனிதாகிய முனிவன் கூற இதனைக்கேட்ட வணிகன் முனி சிரேஷ்டரே தாம் மேற்கூறிய தலங்களுள் மேன்மையாகிய ஒன்றைத் திருவாய்மலர்ந்தருளில் அத்தலத்தைச் சேர்ந்து வணங்கச் சித்தமாய்ச் சித்தமுற்றேனென்று சொல்ல அம்முனிவர் சொல்லுவார் என்றவாறு. (௩௫)

பரிதிபூசிக்கவின்பம் பாலித்த சயம்புந் தெய்வத்
திருவரு முனிவர்சித்தர் செய்த வத்தலமுங் கங்கை
மருவியே படியப்பாவ மாற்றிடுந் தீர்த்தத் தோடே
யொருவழி கூடிமிக்க வுயர்ந்தது பரிதிநேமம்,

சூரியன் பூசித்ததால் இன்பமீறும் வரங்களைகொடுத்த தெய்வத் திருவுருவாகிய சயம்புலிங்கமும் முனிவர் சித்தர் இவர்கள் தவஞ்செய்த தலமும் கங்கையானவள் தேடிவந்து மூழ்கப் பாவந் தீர்த்த தீர்த்தமும் இவைகளெல்லாம் ஒரேவிடத்திற் கூடி மிகவும் உயர்ந்தது பரிதிநேமம் என்றவாறு. (கூசு)

அத்தலந் தன்னிலெய்தி யரியதா மிருதீர்த்தத்த
நித்திய மாடியந்த நிமலமாஞ் சுயம்பைப்போற்றிப்
பத்தியாய்ச் சதாசிவத்தின் படிவமுஞ் சாட்சரத்தைப்
புத்தியுட்செபிக் கின்முத்தி பொருந்துத லய்யமின்றே.

இத்தன்மையாகிய தலத்திற் போய் அருமையாகிய தீர்த்தத்தில் அனுதின மூழ்கி சுத்தமாகிய சுயம்பு லிங்கத்தைப் போற்றி அன்புடன் சிவபிரானுருவமாகிய பஞ்சாட்சரத்தை ஜபிப்பையாகில் முத்தி யடைவதற்கி யாதோரைய்யமில்லை. (கூஎ)

ஞானமில்லாமலந்த நாதரா லயங்கண்டாருந்
தானொருர் செல்வோரந்தத் தலத்தினை மிதித்தாரேனும்
பானஞ்செய்தாருந் தீர்த்தம்படிந்து வெயர் வகற்றினரும்
மீனமற்றமலமாவா ரெனிலதை யியம்பலென்னே.

தெரிசிக்க வேண்டுமென்றசிரத்தையில்லாமல் அப்பரிதீசன் ஆலயத்தைத் தெரிசித்தாரும் ஓர் ஊர்க்குச் செல்லுவார் அகஸ்மாத்தாய் அத்தலத்தை மிதித்தாரும் அத்தீர்த்தத்தைத் தாகசாந்திக்காயுட்கொண்டாரும் வழி நடந்து வந்த விடாய் தீர அதின் முழுகி வெயர்வையகற்றினரும் குற்றமற்ற பரிசுத்தராவரெனில் இனி அதன் சிறப்பையான் விஸ்த்தரித் துச் சொல்லுவதென்ன என்றவாறு. (கூஅ)

என்னலும் வசியன்கேட்டே யிதவியப் பஞ்ஞானத்தால்
மன்னினுங் கதியுண்டாமோ வென்னவு மகிதலத்திற்
றன்னிக ரில்லாயோக தற்பர ஞானகாட்டான்
அன்னவன்றன்னை நோக்கி யன்புட னருளலுற்றார்.

இப்படியாகச் சொன்னவுடன் அவ்வணிகன் வினவி—இஃது மிகவும் ஆச்சரியம் தெரிசிக்கவேண்டுமென்கிற சிரத்தையில்லாத அஞ்ஞானத்தால் அவிடஞ் சேர்ந்தாலும் கதியுண்டாமோவென்று கேட்டதும் உலகின்கண் தனக்கிணையில்லாத யோகேசுரன ஞானகாட்டமுனி அவனைப்பார்த்து அவனுடன் சொல்லலுற்றார். (கூகூ)

சகரர்தான் ஞானத்தாலே சானவியாடினரோ
தவிலா ரென்பா ரேனுஞ் சார்ந்திடக் கங்கைசேர்த்துப்

புரகத்திடுதெவிந்தப் புவியறியாதோ நீயென்
றகமதி லெண்ணாது நீண்டிலது சுடாதிருப்ப தண்டோ.

அறுபதினாயிரம் பேராகிய சகரர்கள் வேணுமென்ற சிரத்தையினால் கங்கையின் மூழ்கினர்களோ தக்கவரல்லாரெரினும் சார்ந்து மூழ்குவாராகில் அவர்களைக் கங்காநதி சேர்த்தாதரித்துப் பாபங்களை நீக்குதல் இப்பூவுலகில் அறியாததோ இதை அறியாதவர்கள் எவர் நீயென்று வெண்ணாது நீண்டினாலும் சுடாதிருப்பதுண்டோ. (சங)

பூதியோ டுருத்திராக்கம் புத்தி பூருவமதின்றி
மீதுறப் பெறினு மேன்மைவிளைததிடு மெனவும்வாயா
லோதிட வேண்டுமென்னு முணர்விலார் மொழிகட் குள்ளே
தீதறு நாமமெய்திச் சீர்தருந் தன்மை போலும்.

புத்தி பூருவமாக இவைகளின் பலனுண்டென்றறறியாமல் விபூதியோடு ருத்திராக்ஷம் மேனியின் மீதணிந்தாலும் மேன்மையைக் கொடுக்குமென்பதை வாய் திறந்துஞ் சொல்லவேண்டுமோ புத்தியற்றவராடும் வார்த்தைகளுள் குற்றமற்ற சிவநாமம் அவரைத் தேசன்றுமல் வரினும் சிறப்பைத் தருந் தன்மைபோலாம். (சச)

செங்கதிர்ப் பரிதிதேவன் சிரத்தையா யுளங்கனிந்து
கொங்கலர் சாத்தியன்பு கூர்ந்துபூசித்தேயின்பம்
பொங்குமத் தலத்திற் புத்தி பூருவமின்றியேனுந்
தங்குவோர் முத்திசேருந் தகைமைய ராவர் மெய்யே.

செவந்த கிரணங்களையுடைய சூரிய தேவன் சிரத்தையாய் மனங்கனிந்து மணமுள்ள மலர்களைச்சாத்தி அன்புடன் பூசித்தின்பமடைந்த அத்தலத்தில் புத்தி பூர்வமில்லாதாகிலும் தங்கி வசிப்போர் முத்தி சேருந் தன்மையை யாவர் சொல்லத் தக்க வல்லமையுடையவர் இது சத்தியம் என்றவாறு. (சரு)

ஆதலா லத்தலத்தி லணுகினி சிவபெம்மானைக்
காதலாப் பத்திசெய்யிற் கடக்கலாம் பவத்தையென்னப்
பேதையேன் சனனவேலை பிற்படப் புணையாத் தோன்று
மாதவக் கொழுந்தே யென்று மலரடி வணங்கிச் சொல்வான்.

ஆதலால் நீ மேன்மை பொருந்திய அத்தலத்திற் சார்ந்து அன்பாய்ச் சிவபெருமானைப் பத்தி செய்வையாயின் உனது பாபத்தை யொழிக்கலாமென்று முனிவன் சொல்ல வணிகனனவன் அறிவே யில்லாப் பேதையை நிகர்த்த அடியேன் சனனமென்னுஞ் சமுத்திரத்தைத் தாண்டிக் கடப்பதற்கு ஓர் தெப்பம்போற் றோன்றி யெழுந்தருளிய மாதவக் கொழுந்தேயென்று மலரடியில் வீழ்ந்து வணங்கிச் சொல்லுவான்—என்றவாறு. (சசு)

பொன்னையே தெய்வமென்று போற்றுதலன்றி மற்றோர்
நன்னெறி யறியாவேழை நாயினே னுய்யும்வண்ணஞ்

சொன்னவப் புனிதபூமித் தொல்குறி தெரியக்கூறி
யென்னையீ டேற்றியான்வீ ரென்றடி யிறைஞ்சலோடும்.

சென்ற இந்நாள்வரையிற் பொருளையே குலதெய்வமென்று பூசித்துப் போற்றிக் காப்பாற்றி வாழ்ந்ததல்லது வேறொரு சன்மார்க்கத்தை அறியாது கெட்ட ஏழையாகிய பாமரன் பிழைத்தீடேறும்படி தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய பரிசுத்தத் தலத்தின் அடையாளத்தை அறியும்படி புகன்று இருதார்த்தனுகச செய்தீடேற்றி ஆளுவீரென்று பாதத்திற் படிந்து பணிந்தான்—என்றவாறு (௪௪)

அருளுட னிரங்கிஞான வைந்தெழுத் தினைப்போதித்துத்
தெருளுற நெறியுஞ்சொல்லித் தேடரும் பொன்னிநாட்டு
திருபனு டஞ்சையென்று நிகரிலா நகர்த்தென் கீழ்பாற்
பரிதிமா வனமுண்டந்தப் பதிமுன்யாம் பகர்ந்ததாகும்.

இப்படிக் கேட்டுப் பணிந்தவுடன் மனக் கனிவுடனிரக்கங்கொண்டவராய் ஈனத்தை நீக்கி ஞானத்தை நல்கும் பஞ்சாக்ஷரத்தை யுபதேசித்து அதை யுச்சரிக்கும் வழியுஞ் சொல்லி தேடுதற்கரிய சிறப்போங்கிய காவிரி நாட்டுக் கதிபன் அரசாட்சி செய்யும் நிகரற்ற நகரத்திற்குத் தென் கீழ்ப்பாரிசத்தில் அப்பரிதி வனம் உண்டு அந்தத் தலமே முந்தி நாம் மொழிந்ததாகும் என்றவாறு. (௪௫)

பாரினிற் கூற்றைவென்ற பாலனோடகந்த யோகர்
சீரொடு தவஞ்செய்கின்ற திருப்பன்ன சாலைகாண்பா
யேகுறச் செல்வாயென்னு விசைத்துமே விடைதந்தன்பாம்
வாரிதி சாலைபுக்கி மாதவமியற்றுங்காலை.

இவ்வுலகத்தில் எமனை வென்ற மார்க்கண்டருடன் மகிமை பெற்ற அநேக யோகிசர் சிறப்போடிருந்து தவத்தை நடாத்திய அழகிய பன்னசாலைகளையும் அவிடத்திற் காண்பாய் இன்பத்துடன் இப்பொழுதே போகக்கடவாயென்றியம்பி விடைகொடுத்துத் தயா சிந்துவாகிய ஞான காட்ட முனிவர் தமதிடஞ் சென்று தவத்தைச் செய்திருந்தனர் அக்காலத்து என்றவாறு— (௪௬)

ஞாலவா ஞானகாட்டர் குளிர்மலர்ப் பாதந்தன்னை
யிருதயத் திருத்தித் தன்பா லிருந்தபொன் னனைத்தும்பண்டி
பெரியவொட் டகங்கடம்மிற் பெட்புட னேற்றிக்கொண்டு
பரிதிமா வனம்வந்துற்றான் பந்தமற் றின்பமுற்றான்.

பந்தபாசத்தைப் பறக்க அடித்துச் சொந்தமாகச் சுகத்தையடைந்த வணிகன் தனதாசிரியரான ஞானகாட்டரது தண்ணிய மலர்ப்பாதத்தை எண்ணி மனத்திருத்தித் தன்னிடமிருந்த பொன்னனைத்தையும் பண்டிகளிலும் பருத்த ஒட்டகங்களிலும் எடுப்பித்துக்கொண்டு பரிதி வனம் வந்து சேர்ந்தான் என்றவாறு. (௪௭)

பாசபந்தங்களற்றுப் பரமமாம் பதிபெற்றுர்போ
லீசனுரன்பான வெழிற்றன தத்தர்முத்தம்

வீசலைத் தேவதீர்த்த மென்கரை யிருந்தரோம
மாசினைக் களைந்து மூழ்கி மன்னியே பரிதிதீர்த்தம்.

ஆசையென்னுங் கட்டுகளை அறுத்தெறிந்து பாமபதத்தைப்பற்றினவர் போலச் சதாசிவனுக் கன்பனாகிய தனதத்தன் மூத்தக்களை அலைகளெடுத்து வீசாநின்ற உத்தமமாகிய தேவ தீர்த்தக் கரையின் மேவிருந்து சௌளகர்ம முடித்து அத்தடத்தின் முழுகி அதன்பின் சூரிய தீர்த்தத்திற் சென்று என்றவாறு. (சஅ)

ஆடியே சேத்ரபிண்ட மன்புடன் றென்புலத்தோர்
வாடிய வாட்டந் தீர்த்து மகிழ்ந்திட வளித்து மெண்ணீர்
நீடிய தருப்பணுதி நேர்ந்துமே தசதானங்க
டேடி நான் மறையோருள்ளந் தெவிட்டிடச் செய்தபின்னர்.

அத் தீர்த்தத்தின் மன அன்புடன் முழுகித் தென் புலத்தரென்னும் பிதிர்கள் வாடிய வருத்தந் தீர்ந்து மகிழும்படி க்ஷேத்திர பிண்டக் கொடுத்து எள்ளுடன் நீர் சேர்ந்த தருப்பணுதிகள் விடுத்து முடித்து வேதியர்களைத் தேடி அழைத்துவந்து அவர்கள் உள்ளந்தெவிட்டத் * தசதானங்கள் செய்து அதன் பின்பு. (சக)

கால்புலன்களை யுமந்தக் கரணமுங் கடந்தஞானச்
சீலகன் மார்க்கண்டேயர் திருவடிக் கமலம்போற்றிச்
சாலவுமவர்கண்ணேட்டச் சலதியில் மூழ்கிவெய்ய
வாலமர் கண்டரன்ப ரருளடைந் தின்பமெய்தி.

காற்றைப்போற் பறக்கும் ஐம்புலன்களையும் நாற் கரணங்களையும் கடந்த ஞான சீலராகிய மார்க்கண்டேயர் திருவடிக் கமலங்களைத் துதித்து அவரது திருக்கண்ணேக்கக் கடலின் முழுகிக் கொடியவிஷம்பொருந்திய நீலகண்டராகிய அம்முனிவரரருளடைந்து இன்பமுற்று—என்றவாறு. (ருய)

அன்பதா மாவேசத்தோ டழுதடி பரவிவிம்மி
யென்பு நெக்குருகக் கம்பித்திருக ணீரருவிபாய
நன்பதிதனிலே யீசர் நடித்தநாட் கமலம்பெற்றே
யின்பது பெற்றே னென்று வெந்தைதா ளிறைஞ்சிநின்றான்.

அன்பென்னுஞ் சன்னதமீறி அழுதுபாதாம் புயந்தொழுது துதித்து விம்மி என்புகளும் நெக்குருகத்தேகம் கம்பித்து இரு கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் அருவிபோலொழுக அப்பதியில் நடித்த பரமேசன் பாதகமலவருட் பெற்று இன்பமுற்றேனென்று இறைவனுகிய எந்தையடியில் இறைஞ்சி நின்றான். (ருக)

இரங்கியே இருகண்முத்த மிறைக்கத்தீ யிழுதாவுள்ளங்
கரைந்திடக் கனியாவிந்தக் கடையனுந் தொண்டரோடு
நிரந்தரங் கூடியாடி நிறைந்த பேரின்ப மெய்தப்
புரந்திடக் கடனிங்கே புண்ணியா வெனத்துதித்தான்.

*தசதானம்—உப்பு—எள்—நெய்—நெல்—பசு—பூமி—பொன்—வஸ்திரம் பொன் வெள்ளி

இவ்விதமாயிரங்கி இருகண்களி னின்றும் முத்தைப்போல் நீர்வடியத்தீயி லிட்ட மெழுகுபோல் உள்ளங்கரைந்து மனக் கனிவிலாத இக்கடையேனுகிய அடியேனுந் தமது தொண்டருடன் கூடி அனுதினமும் ஆடிக் கொண்டாடி நிறைந்த பேரின்பமடைய‌க் கடைக்கணித்துக் காக்கக் கடனுனக்கே புண்ணி யனே தண்ணியனே யென்று துதிக்கத் தொடங்கினுன்—என்றவாறு. (௩௨)

அத்தனேபோற்றியெந்த னரும்பவப் பிணியையோட்டுஞ்
சித்தனே யுமையோர்பாகம் சேர்ந்தமெய்ச் சுடரேபோற்றி
புத்தமு தாகவன்பு பூத்தகற்பகமேபோற்றி
முத்தனும் பரிதியேத்த முன்னின்ற முதலேபோற்றி.

கர்த்தனே போற்றி யெனது பாவப்பிணியை யோட்டும் மனத்தனே போற்றி பார்வதியை யோர்பாகத்திற் கொண்ட மெய்யாகிய சோதிச்சுடரே போற்றி புதிய அமுது போன்ற கற்பகமே போற்றி அன்புபூத் தொளிரும் கற்பகமே போற்றி தேவனுகிய சூரியன்றுதிக்க அவன் முன் னின்றருளிய முதல்வனே போற்றி என்றவாறு. (௩௩)

அமலவா னந்தமீயு மற்புதச் சுடரேபோற்றி
கமலான் முகனுங்காணுக் காரணுபோற்றிதுன்பத்
திமிர சூரியனே போற்றி தேடருஞ் சுடரேபோற்றி
யெமையுமோர் பொருளாக்காக்கு மீசனே போற்றிபோற்றி.

அகளங்கமாகிய ஆனந்தத்தைத் தரும் அற்புதச் சுடரே போற்றி கமல வாசியாகிய நான்முகனுங் காணுக்காரணப் பொருளே போற்றி துன்பமென் னும் இருளை நீக்கும் சூரியனே போற்றி தேடுதற்கரிய சுடரேபோற்றி அடியேனையுமொரு பொருளாயெண்ணிக் காக்கும் அரகரமகேசனே போற்றி போற்றி. (௩௪)

போற்றியென் றடியில் வீழாப் புரண்டுசாட் டாங்கமாக்
மாற்றரு மின்பமல்கி மனத்த வனவசமாகி
நாற்றிசை வியப்பதெய்த நடிப்பவன் கண்ணுற் காணத்
தோற்றியோர் சோதியந்தச் சயம்பினிலடங்கிற் றன்றே.

போற்றியென்று பாதகமலங்களில் வீழ்ந்து புரண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்து நீங்கற்கரிய இன்பமீறி மனமடங்கிப்பரவசனுகித்திசைகள் நான்கும் அதிசயிக்க ஆனந்த நிர்த்தமிடும் வணிகனது கண்காணச் சிவபெருமான் ஓர் சோதியாகத் தோன்றி அச்சயம்பு லிங்கத்தன் அயிக்கியமானுர்—என்ற வாறு. (௩௫)

சோதியா யீசனென்முன் றோன்றிய தாலேயென்றன்
மீதுறு வினைகளெல்லாம் வேரறு மமலமான
வாதியாஞ் சிவக்கொழுந்தி னருளுமுண் டெனத் தெளிந்து
போதவர் னந்தமெய்தப் புளகமுற் றவனைபெற்றான்.

அடியேன் முன் சிவபெருமான் சோதி சொருபமாய்த்தோன்றியபடியால் எனது பூருவ வினைகளனைத்தும் வேருடன் அற்றுப்போம் அதனுற் பரிசுத்த

ஞுவேன் ஆதியாகிய சிவபிரானருளுமுண்டாம் எனத் தெளிவுற்றவனுய் மிகுந்த ஆனந்தமடைந்து புளகமுற்று உவகையைப்பெற்ருன் தனதத்தன் எனறவாறு. (ருசு)

பூரித்தே யைங்கரத்துப் புதியதெள் ளமுதைப் போற்றிச்
சீருற்ற சண்முகத்துச் செய்யவேள் பாதமேத்தி
யேருற்ற வுமைபொற் பாத மிறைஞ்சியே யுளங்கனிந்து
காரொத்துக் கண்பனிப்பக் கருணையங் கடலு ளாழ்ந்தான்.

இவ்விதம் பூரித்து ஐந்துகைகளையுடைய விநாயகக் கடவுளென்னும் புதிய தெளிந்த அமுதம் போன்றவனைப்போற்றிச் சிறந்த ஆறு முகங்களை யுடைய செவ்வேளென்னும் சுப்பிரமணியர் பாதத்தை வந்தித்து அழகு பொருந்திய பார்வதியின் பொற்பாதம் வணங்கி மனம் கனிந்து மேகம்போலக் கண்ணீரரும்ப கருணையென்னும் கடலில் அழுந்தினுன்—என்றவாறு. (ருஎ)

வேறு.

தொண்டு பூண்டுமெய் யன்பாத் தொழும்புசெய்யுந் திலவசிய
னண்டர் போற்றும் பரிதீசர்க் கான பணியு மணிவடமும்
புண்டரிகப் பதவுமைக்குப் பொற்று சொளிரும் புதுவணியுங்
கொண்டலெனவே பொற்காசுங் கொடுத்தா னெவரும் வியப்புறவே.

தொண்டுத் தன்மையை வகித்து உண்மையாகிய அன்போடு பணிவிடை செய்யும் வசிய குலதிலகனுகிய தனதத்தன் தேவர்கள் துதிக்கும் பரிதீசருக் குகந்த ஆபரணங்களும் முத்து வடங்களும் தாமரைபோன்ற பாதங்களை யுடைய உமைக்குப் பொன்னுடைகளும் புதிய பூஷணங்களும் எவரும் வியக்கக் கொடுத்தான். (ருஅ)

பூசைக்கான பொருளனைத்தும் பொருந்தவுதவிக்கவினதுதான்
வீசக் கோவிலது புதுக்கி வேணபடியே வேதியர்க
ணேசித்தருந்தச் சத்திரங்க ணீரின்பங் தரடியாரைப்
பூசித்தூட்டு மடமுதலாப் புனிதவறங்க ளியற்றினனுல்.

பின்னும் பூசைக்குதவியாகும் பொருள்களுங்கொடுத்து அழகுபொருந்திப் பிரகாசிக்க ஆலயங்களைச் சீர் திருத்தி வேதப் பிராமணர்கள் வேண்டியபடி விருப்பங்கொண்டருந்தும் அன்ன சத்திரங்கள் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்தும் அடியார்களைப் பூசித்து அறுசுவையோடமுதூட்டும் மடங்கள் முதலிய குற்றமற்ற நற்றருமங்கள் பலவுஞ் செய்தான்—என்றவாறு. (ருகூ)

பருவமிசைந்த நாட்களிலே பரமன்பூசை யினிதியற்றிப்
பரிதிதீர்த்தக் கரையதனிற் பாங்கா யிந்நூற் பகர்ந்தபடி
யரியதானம் பலவியற்றி யவன்றன் பிதிர்க ளனைவர்களு
மருவிக் கயிலை காணியதா வாழச் செய்தே மகிழ்வுற்ருன்.

பௌரணை சேர்ந்த நாட்களிலே பரமேசன் பூசனை முதலியது முடித்துச் சூரிய தீர்த்தக் கரையில் இந்நூலிற் சொல்லியபடி, பலவித அரிய தானங்

களைச்செய்து தனது பிதிர்க்களனைவரும் கைலாயங் காணியாட்சியாய்க் கொண்டு வாழும்படி செய்து மனமகிழ்வு உற்றான்—என்றவாறு. (௬௰)

தானமொரு பதாறுகச் சாற்றுநூலின் றருநியதா
வானநாடும் வியந்திடவே வழங்கித்தேவதீர்த்தமதி
லானவடபா னந்தவன மமைத்தா னரிய கூவிளமுந்
தேனார் துளவுமல் லிகையுஞ் செவந்திசாதி மருமுல்லை.

சாஸ்திரங்களிற் சொல்லியபடி வான நாட்டமாருங் கண்டு வியப்பெய்த சோடசமகாதானமுஞ் செய்து தேவ தீர்த்தத்தின் வடபுறத்தில் நந்தன வன மமைத்து வில்வமும் துளசியும் மல்லிகையும் மருவும் முல்லையும்—என்றவாறு. (௬௧)

அலரிநந்தி யாவர்த்த மரியவிதழிமந்தாரச்
திலகங் குரவம் பொற்கோங்கு செருந்தியசோகந் திகழுமுகை
யலருஞ்செஞ் சண்பகத் தோடுமெழ கதளிக்கு மாதவியு
மிலகக் கமழுமாமணிகளிழைத் தாலென்ன வியற்றினனால்.

அலரி நந்தியா வட்டம் கொன்றை மந்தாரம் மஞ்சாடி குரவம் கோங்கு செருந்தி அசோகம் சண்பகம் குருக்கத்தி இவைகளனைத்தும் பரிமளம் பொருந்தி நவமணிகளின்பிரகாசம்போல் மலர்ந்தொளிரச்செய்வித்தான். (௬௨)

புன்னையர சற்கெழின் முல்லைப் பொன்னைப் புணர்த்தித் தந்தையுட
னன்னையறல் பெய்வதுபோல் வசோகோ டணியார் சண்பகமுந்
தன்னித்தேற லதுபெய்யத் தோன்றியோ மச்சுடர்க்கனலா
மென்னவழகார் நந்தனம் போலிவனும் பூத்தானு வகைத்தே.

புன்னையென்னும் அரசனுக்கு முல்லையென்னும் பெண்ணை மணம்புரிந்து தந்தையுந் தாயும் நீர் வார்ப்பதுபோல் அசோகும் சண்பகமும் நெருங்கித் தேன்களைப் பொழிய செந்தோன்றிப் புட்பங்கள் ஓமகுண்ட அக்கினியென்ன அழகிய நந்தவனம் பூத்ததுபோல் இவனும் சந்தோஷம் பூத்தான்—என்றவாறு. (௬௩)

அளியாம் பண்செய் வயிரியருக் கலர்கணற வுபரிசியு
மளியைக் கண்டு தருக்கள்சிர மசைப்பதறிந்து வியப்பிதெனு
வெளியாச் சுகங்கள் பூவையொடு விளம்பக்கேட்டு மெய்யன்பர்
களிசேர்ந்திடு நன்னந்தவனங் கண்மெகிழ்ந்தார் கற்றோரே.

ராகத்தைச் செய்யும் வண்டெனென்னும் பாடகர்களுக்குப் புட்பங்கள் தேன்களை வெகுமதியாகக் கொடுக்கும் கருணையைக் கண்டு இஃதாச்சரியமென்று விருட்சங்கள் தலையசைப்பதைக் கண்டு வியந்து கிள்ளைகள் நாகணவாய்ப் பறவைகளோடு சொல்ல அதனைக்கேட்டு மெய்யடியார் விருப்பங் கொள்ளும் நந்தன வனத்தைக் கற்றபேரும் கண்டு களிகூர்ந்தார்—என்றவாறு. (௬௪)

குயில்கள் மணந்து கோங்கலர்கள் குடைந்தாடியதா தாஞ்சுண்ணம்
வெயிலைமறைத்து மண்ணுலகைமேலா மூலகதா விளங்கும்

சயிலை யுறையுந் தேவர்களுங் காதலாகிக் காவெய்தி
யயர்வ தகற்றுவா ரென்னி லறையத் தகுதியா வதுவே.

கோகிலங்கள் சேர்ந்து கோங்குப் புட்பங்களைக் குடைய அதில்நின்றும் விழுந்த மகரந்தப்பொடிகள் சூரிய கிரணத்தை மறைத்து இவ்வுலகைச் சொர்க்கலோகம்போல் விளங்கச் செய்யும் கைலாயகிரியில் வாழுந் தேவர்களும் ஆசையோடு இம் மலர்ச்சோலையிலடைந்து தத்த மிளைப்பை யாற்றுவா ரென்றால் அதன் வளமைகளைச் சொல்லத் தக்கதோ என்றவாறு. (கூடு)

மலர்களரும்புங் காவமைத்தவசிய திலக தனதத்தன்
புலரியெழுந்து விருதீர்த்தப் பொய்கைபடிந்து பூவாய்ந்து
நலமதுறவே சங்கரர்க்கு நல்கியடியார் பூசனையு
மிலகுமறையோர் பூசனையு மியற்றி யாறுகாலத்தும்.

இவ்வித மலர்கள் விரியும் பூங்காவன மமைத்த வைசிய குல திலகனாகிய தனதத்தன் வைகறையிலெழுந்து இரு தீர்த்தத்தினும் படிந்து குற்றமற்ற புட்பங்களைப் பரிசோதித்துப் பறித்து நன்மைபெறும் பொருட்டு நாயகன் அர்ச்சனைக்குச் சமர்ப்பித்து அடியார் பூசையும் அந்தணர் பூசையும் ஆறு காலத்தும் அன்புடன் செய்தவனாகி என்றவாறு (கூசு)

பரமஞானச் சுடரொளியாப் படருஞ் சுயம்பைப் பணிந்துபெருந்
தருணத் துதவியாக் கூற்றைத்தடுக்கும் பஞ்சாட் சரமோர்ந்து
மிருமை துறந்து நிராசையதா விருத்திப்புலனை வென்றுநித
மொருமை மனதாய்ப் பரமபதமுறவே வேட்கையுற் றிருந்தான்.

ஞானப் பரஞ்சுடராய்ச் சோபிக்கும் சுயம்பு லிங்கத்தை வணங்கி உயிர் போந்தருணத் துதவியாகும் பஞ்சாட்சரத்தைச் செபித்து இம்மை மறுமை யென்னும் இரு துன்ப வாழ்வைத் துறந்து நிராசையாய் ஐம்புலனையும் வென்று தத்தம் நிலையிலிருத்தி மனதை யொருமைப்படுத்திப் பரமபதத்தைச் சேர விருப்புற்றிருந்தான். (கூஎ)

முத்திவிரும்பிப் புலனேய முயலும்வசி யன்கனவதனி
லத்தர்விடை மீதெழுந் தருளியன்பதாகச் சிவநிசியிற்
பத்தர்பரிவாய்ப் பூசைபுரி பாங்கர் நாலாமியா மத்திற்
சித்தமு வந்து கயிலையினந் திருவோலக்கங் காண்குவையால்.

முத்தி வீட்டைவிரும்பி ஐம்புலச் சேட்டைகள் ஒழிய வென்று முயன்று வருந் தனதத்தன் சொற்பனத்தில் கடவுள் ரிஷபவாகன ரூடரா யெழுந்து அன்பர்கள் ஆவலாகப் பூசைபுரியும் சிவராத்திரியின் நாலாஞ்சாமத்து மன அன்போடு நீ கயிலைக் கெழுந்துவந்து நமது திருவோ லக்கங் காணக் கடவாய் என்றவாறு. (கூஅ)

என்றுபரமசிவ பெருமா னிசைக்கப்பழைய வினைப்பகையை
வென்றவசியசிகா மணிதான் விழித்துக் கனவின்பொருளாய்ந்து
நின்றகடிய சிறைச்சாலை நீங்க விடைபெற் றவன்போல
நன்று நன்றதருள் பெற்றேனையேனெனவே நவிலுவனால்.

இவ்வாறு பரமசிவன் சொற்பனத்தெழுந்தருளிச் சொல்லப்பழ வினையின் பகையை வென்ற வைசிய சிகாமணி விழித்துச் சொற்பனத்தின் பயனைச் சோதித்தறிந்து கொடிய சிறைச்சாலையில் நின்றும் விடை பெற்றவன் போல நன்று நன்று இன்று கொன்றை வேணியோ னருளைக் கூடினே னென்று நின்று சொல்லலுற்றான். (௬௯)

நசையோடென்பு பொலிந்தமலச் சகதியான புழுக்கும்பி
யிசையுந் தோற் கூடாஞ் சிறையுளிடருற்றழுங்கும் புலைநாயின்
வசைகளொழியவருட் பார்வைவைத்துக் கயிலைதனை யளித்தோன்
வசமதானே னெனவின்பம் வளரப்புளக மருவினனால்.

நசையும் என்புஞ்சார்ந்து புழுக்கள் நிண்டும் மலச்சேறான நரசத்துடன் பொருந்திய இத்தோற்கூடாம் உடற் சிறையுளிருந்து துன்பமுற்று மயங்கும் மதியற்றநாயினேன் கொண்ட நிந்தைகள் நீங்கக் கருணா கடாக்ஷம் வைத்துக் கைலையைக் காணியாக என் வசயாய்ச் செய்த கடவுளின் கைவசமானே னென அன்பு வளரப் புளகாங்கதகனானான்—என்றவாறு. (௭௰)

புளகம்பூப்பத் திருமேனி பூரித்திதயங்கனிந்தகனிந்
திளகக்கண்ணீ ராறாக விருந்தமெழுந்து மதிவேணிக்
குளகனருளை விழுந்திறைஞ்சிக் கூத்ததாடிப் பரவசமேற்
கொளவே புலரிக் காலமதிற் கோவிலெதிரே குறுகினனால்.

புளகம் பொடிப்ப உடல் பூரித்து ஆரவாரித்து இதயம் பழுத்து இளகக் கண்ணீர் ஆறாக இருந்தும் எழுந்தும் சந்திர ஜடாதரனாகிய அழகனது அருளை ரோடி வீழ்ந்து தாழ்ந்து வணங்கி இணங்கிக்கூத்தாடிக் குதிகுதித்துப் பரவசமேற் கொண்டு விடியற் காலையில் கோயிலினெதிரிற் போய்க் கூடினான் என்ற வாறு. (௭௧)

கனவிலரனார் வெளியாகிக் காட்சிகொடுத்துக் கழறியதை
யினமா மடியா ரியாவர்க்கு மியம்பி யியம்பி மகிழ்வுறுங்காற்
றினமா மாகச் சிவநிசி நாட் சேரவிருந்த தனமெல்லாங்
கனமாமெனவே வீசியதோர் காரணத்தாற் பெயரிசைந்தான்.

தனது மனது பூரிக்கக் கனவின்கண் வெளியாகி ஒளியாகிய காட்சி கொடுத்துக் கர்த்தன் சொல்லியதைத் தன் இனமாகிய அடியர்கட்கெல்லாஞ் சொல்லிச்சொல்லி மகிழ்வுகொள்ளுங் காலத்தில் சிவன் குறித்த தினமாகிய சிவராத்திரியுஞ்சேரத் தன்னிடத்திருந்த தனத்தைத் தத்தமாகத் தனதத்தன் மேகம்போல் வீசிய காரணத்தால் அவன் கொண்ட பெயர்க்குத் தக்க கீர்த்தியை வகித்தான். (௭௨)

உள்ளபசும்பொன்னனைத் தினையுமும்பர் நாதனடியவர்க்குத்
தெள்ளித் தெளிந்த மறையவர்க்குஞ் சிந்தைமகிழ வேயுதவிப்
புள்ளுறத விருதீர்த்தம் புகுந்து படிந்தநீ றணியா
வுள்ளமதனிற் சிவத்தியான முற்றே பஞ்சாட்சரஞ் செபித்து.

தன்னிடத்துள்ள திரவியமனைத்தையும் தெய்வ நாயகனாகிய சிவனடியார்க்கும் வேதந் தெளிந்த மறையவர்க்கும் மனமகிழக் கொடுத்து மலர்களிடத்துவண்டுகளகலாத இரண்டு தீர்த்தத்தும் முழுகித் திருநீறணிந்து உள்ளத்திற் சிவத்தியான மறவாது பஞ்சாட்சரஞ் செபித்து என்றவாறு. (எங)

கங்காதரனார் சன்னிதிமுன் கமலாசனத்தில் வடமுகமாச்
சங்கற்பத்தோடே விகற்பஞ்சாரா நிருவிகற்பமதா
லங்க மசையாதிருந் திடுங்காலரனார் நிசியிற் சாமமது
பங்கமறவே நான்கினிலே பளிதச் சுடரேந்திடு மளவில்.

கங்காதரன் சன்னிதி முன்பாகக் கமலாசனத்தில் வீற்றிருந்து வடமுகம் நோக்கி நியமமாய் வேற்றுமையில்லா நிருவி கற்பஞ் சார்ந்து தேகம் அசையா திருக்கும்போது குற்றமற்ற சிவராத்திரியின் நான்காஞ் சாமத்தின் சுக்கிரோதயமான வளவில் என்றவாறு. (எச)

உதையவருக்கனெனத் தேவரூரும்விமானம் பலர்காண
நிதிதத்தப்பேர்ப் புண்ணியன்மு னிற்க வவனு நின்மலமாய்ப்
புதியவொளியா மாக்கையொடு புகுந்து கயிலையெனும் பதந்தன்
பதியாக்கொண்டு சந்ததமும் பரமனடிக் கீழ்ப்பதிந்தனனால்.

சூரியோதயம்போற் பலருங் காணத் தேவர்களேறிச் செலுத்தும் விமானம் தனதத்தனென்னும் புண்ணியன் முன் வந்துநிற்க அவனும் சித்தசுத்தனாய் நூதனமாக வொளியிடுந் தேவ தேகத்தோடு அவ்விமானத்தாரோகணித்துக் கைலையங்கிரியைச் சுதேசமாகக் கைக்கொண்டு அனுதினமும் பரமேசன் பாதார விந்தத்து இரண்டற ஒன்றாகக் கலந்து நின்றான்—என்றவாறு. (எரு)

தனதத்தன் பேறுபெற்ற சருக்கம்

முற்றிற்று.

பாதகந் தீர்த்த சருக்கம்.

சங்கரற்குறு மன்பதாற் றனதத்த வசியத்
துங்க மாதவன் ஞெடக்கறக் கயிலைசேர் சூழ்ச்சி
யிற்குரைத்தனம் பூழியனமைச்சன்சேய்க் கிசைந்த
பங்கமாகிய பாதக மகன்றது பகர்வாம்.

சிவபெருமான் மீதுடைய அன்பால் தனதத்தனென்றும் வைசியன் பரிசுத்தமாகிய சிறந்த தவத்தால் துன்பங்கள் நீங்கிக் கயிலையைச் சேர்ந்ததை மேலுரைத்தாம் இனிச் சேர ராஜன் மந்திரி குமாரனுக்கடைந்த குற்றமாகிய மாபாதகம் நீங்கிய தன்மையைக் கூறலுற்றாம் என்றவாறு. (௧)

சேரமண்டல மன்னவ னமைச்சரிற் சிறந்த
வார மார்பனோ ரந்தண னருமக வதற்குப்
பேரழைத்தனன் பதுமலோ சனனெனப் பிறர்தாங்
காரணப்பெய ரென்பரச் சிறுவன்றன் கவினால்.

சேரமண்டலத்தை யாளும் அரசனது மந்திரிகளின் மேன்மையாகிய முத்தாரமணிந்த மார்பையுடைய ஓர் பிராமணனுக்கு அருமைக் குமாரனொருவனுண்டு அவன் பெயர் பதுமலோசனன் அழகின் மிகுதியைப்பெற்று இருப்பதால் காரணப் பெயராக இட்டதென்று கருதி யாவரும் அப்பெயரைக் கொண்டே அழைப்பார்கள். (௨)

மதிக்கொ ழுந்தபோல் வளர்வுறு மறிவலான் சிறுவன்
விதிக்கும் வேதமோ டங்கமு மரியவா கமங்க
ணிதிக்கும் விததா மனுமுறை நீதிநூன் முதலா
வுதிக்குஞ் சூரிய னிவனென வுணர்ந்தறி வுணர்வான்.

நாள்தோறும் மூன்றாம் பிறைச் சந்திரன்போல் வளர்கின்ற அப்பாலன் விவேகியாய் வேதமும் வேதாங்கமும் அருமையாகிய சாஸ்த்திரங்களும் மனு நீதி முறைகளும் அச்சூரியனைப் போல அறிந்து அறிவின் மிகுந்தவனாய் என்றவாறு. (௩)

பரதநாடக காவியம் படித்தலங் கார
விரதமாதியு மிக்கவ னுய்நதற் கண்சேர்
வரத னெதிர் சென்றிடா மதனிவ னென்னல்
சரத மென்றிட வனப்பொடு விளங்கினன் றக்கோன்.

காவியாலங்காரங்களும் பரத சாஸ்த்திரமுங் கற்று விரத சிலனாய் மிகுந்த சிறப்பினை வகித்து நெற்றிக் கண்ணுடைய நிமல னெதிர்சென்று நீறாகாத மன்மதனே இவன் இது சத்தியமென்று யாவரும் புகழுமழகோடு விளங்கினான். என்றவாறு. (௪)

கருப்பு வில்லுட னலர்க்கணை யேந்திடிற் காமன்
விருப்ப மேவியே பெண்மையை விழைவுறு மெனிலப்
பொருப்பெ னப்பணைத் தெழிலுறு தோளினன் பொற்பை
யருப்பு மென்முலை மாதர்கண் டாற்றவர் கொல்லோ.

இவன் கரும்பு வில்லுடன் புட்ப பாணங்களுமேந்துவானாகில் அக்காமனும் காமங்கொண்டு மாதருருவைக்கொள்ள வாஞ்சிப்பானாகில் மகமேருவெனப் பெருத்து அழகிய தோளையுடைய காளையாகிய இப்பதுமலோசனன் அழகைப் பார்த்த அரும்பிய மெல்லிய முலையையுடைய மாதர்கள் மயங்காமல் தாங்கள் கொண்ட மையலை மாற்றுவரோ மாற்றுதற்கரியார் என்றவாறு. (ரு)

அழகிற் கல்வியிற் கேள்வியி லாதியா மனுநூற்
பழகப் பற்றலர் பற்றினர் பிறரெனப் பாரா
வொழுக லாகிய வோரமற் றொத்திடு முணர்விற்
பிழையி லாவிவன் பெருமைகேட் டரசர்த மரசன்.

அழகினாலும் கல்வியாலும் கேள்வியாலும் உயர் வெய்தியதுமன்றித் தொன்று தொட்டு வரும் மனுநீதி நூலிற் பழகிய சாதனத்தால் பகைவரென்றுந் தன்னவரென்றும் அன்னியரென்றும் பார்த்து நடப்போர் போலல்லாமல் நடு நிலையாய்ப் பட்சபாதமற்று ஒத்து நடக்கும் புத்தியுள்ளவனாய் இருத்தலால் குற்றமற்ற இவன் பெருமையை அரசர்க்கரசனாகிய சோராஜன் கேள்வியுற்று என்றவாறு. (சு)

தந்தை யாகிய மந்திரி தந்திர மான
புந்தி தன்னிலு மவன்மகன் போதவும் பொலித
லெந்தனுக்கழ கெனமகிழ்ந் தரசர்கோன் வரிசை
தந்து மெச்சிடுங் காலையி லோர்விடன் சார்ந்து.

நமது மந்திரியாகிய தந்தையினுந் தந்திரோபாயங்களின் மிகுந்து அவன் மகன் தகுந்த சிறப்புற்றிருப்பது மிகவும் அழகென மகிழ்ந்து சோ மகாராஜன் வெகுமான முதலியதுந் தந்து மெச்சியிருக்குங் காலத்தில் ஓர் தூர்த்தன் அவனிடம் சினேகன் வந்து சேர்ந்து—என்றவாறு. (எ)

பாலி னற்குணங் கெடுத்துத்தன் பருங்கொலைக் குணத்தை
மேலி டக்கலந் திடுங்கொடு விடமென மிக்க
சீலமந்திரி மகன்குணஞ் சிதைத்திடச் சேரும்
கால னென்னவே நட்டனன் காமுகத் திலகன்.

பாலினது நற்குணத்தைக் கெடுத்துத் தன்னிடத்துள்ள கொல்லுங் குணத்தையே மேலாகச் செய்யும் கொடிய விஷத்தைப்போல் மிகுந்த நற்குணமுடைய மந்திரியின் மகன் குணத்தைக் கெடுக்க எமனைப்போல் வந்து சினேகித்தான் துஷ்டரென்னுந் தூர்த்தர்களுக்குத் திலகம் போன்றவனென்றவாறு. (அ)

காமு கன்றனை நட்டதாற் கடுஞ்சுழற் காலாற்
பூமரத்திய வழிவது போலவே புந்தி

நேமமற்றுநல் லறிவுளுப் புன்மையே சேரக்
காம னுமைக் கற்றனன் கலைகளை மறந்தே.

இவ்விதக் காமுகனைச் சினேகித்த தன்மையால் கொடிய் சூறைக்காற்றால் மலர்ந்த மரத்தின் அழகு அழிவது போலத் தனது நல்லொழுக்கமாறிப் புன்மை மிறி அறிவு மயங்கி முன்னம் கற்ற சாஸ்திராகமங்களைக் கைவிட்டுக் காமமாகம மென்றுங் கொக்கோக முதலியவைதக் கற்றுணர்ந்தான் பதுமலோசனன். (க)

தீயின் சேர்க்கையா லறநெயுந் தீக்கிடுஞ் செயல்போற்
றீயினத்தினு லிவனுமே தீத்தொழிற் சிறந்தே
யாயு நல்வினைத் துறந்தயன் மாதரை யணைவா
னேய முற்றதற் கேற்றதோர் யூகங்க ணினைந்தான்.

நெருப்பின் சேர்க்கையால் நெய்யுந் தீய்த்து முறியுந் தன்மையைப்போல் துற்சன சகவாசத்தினால் நற்செய்கை முறிந்து தீச்செய்கை சிறந்து நல்லோரினத்தை விடுத்து சாரியரை யடுத்து அணையக்கோரினவனாய் அதற்கேற்ற தந்திர யுக்திகளைச் சிந்தித்தான் என்றவாறு. (ய)

பொன்னு மாமணிப் பணிகளு மீயந்துமே புணர்ந்து
மன்ன மாதரை மருவிடச் செய்விக்கு மவரை
நன்ன யத்தொடு நட்புறச் செய்துநால் வருணக்
கன்னி மாதரைக் கற்பழி வலிமையாற் கலந்து

பொன்களும் பொருள்களும் நவரத்ன பூஷணங்களும் கொடுத்தும் அன்னிய மாதர்களைப் புணர்ந்தும் அவ்வித மாதரைச் சேர்ப்பிக்கும் செய்கையுடையவர்களைச் சினேகித்தும் நான்கு வருணத்தினுமுள்ள கன்னியர்களின் கற்பழிய வலிமையிற் புணர்ந்தும்—என்றவாறு. (யக)

எதிலார்மட வார்களை யிச்சையாய்ப் புணர்ந்து
தீதறுஞ்செயல் செய்துநற் கனிவிலா விருத்த
மாத ராவையும் வலிகொடு மருவியே மகிழ்ந்து
மேத முற்றன னிதிற்பல பெண்கொலை யிய.

ஏழைப் பெண்களை இச்சையாய்ச் சேர்ந்தும் பாவச்செய்கைகளைச் செய்த்து மன்றி அழகொழிந்த கிழவிகளையும் அணைந்து மகிழ்ந்து குற்றமுற்றவனாய் அநேக ஸ்த்திரிகளும் அத்திகளும் ஏற்றுக்கொள்ளும்படி என்றவாறு. (யஉ)

கருவ ழித்திடும் பாவமுங் கணக்கிலா தியற்றி
வெருவி டாவகை வெவ்வினை புரிவதா லமைச்சன்
உருகி மாய்ந்தன னவன்மனைக் குரியவ டியின்
மருவி மாய்ந்திட மகிழ்ந்தனன் மந்திரி மகனும்.

கருக்களையழித்தும் கணக்கில்லாப் பாதகங்களைச் செய்தும் அச்சமின்றித் தீவினைக்குள்ளாய்ச் செழித்துக் களித்துத் திரிவதை மந்திரியாகிய தந்தை ய்ந்து மனமுருகி ஏக்கங்கொண்டிறந்தான் அவனுக்குரிய மனைவியாகிய விச்

சண்டாளனென்றயும் புருடனுடன் றீயிற் பாய்ந்திறந்தாள் அதன் பின் பதும லோசனன் மிகவு மகமகிழ்ந்தவனாய்—என்றவாறு. (௰௩)

பாரி கழ்ந்திடப் பழிபுரி பதுமலோ சனப்பேர்ச்
சீரிழந்தவன் மனைவியுந் தாயகஞ் சேர
வாரிழிந்திட விம்மிய முலைமட வார்க்குச்
சேர வேபொரு ளீவதிற் றிருக்கிலா ஞனன்.

உலகத்தாரிகழப் பழித் தொழிலையே நாடோறுஞ் செய்து சிறப்பிழந்ததால் இவன் மனைவியுஞ் சகியாதவளாய்த் தாய் வீடுபோய்ச் சேர்ந்தாள் அதன் பின் கச்சற விம்மிய கனதனம் படைத்த கன்னியர்களைச் சேருதற்குக் கலக்கமில்லாதவனாய்த் தன் பொருளனைத்தையுஞ் செலவழிப்பதில் திடச்சித்தனானன். (௰௪)

வலியி னுவ்வெகு கற்புடை மாதரை வலிப்ப
நலியு மற்றவ ரிணங்கிடா துயிர்விட நாடி
மெலியு மாந்தர்கண் முறையிட வேந்தனு மந்தக்
கலிய னைக்கடிந் திடுமெனக் கட்டளை புரிந்தான்.

தனது வல்லமையினுல் அநேக கற்புள்ள மாதரை வலிந்து சேர முயன்ற போது அவர்களிணங்காமல் உயிர் விட்டதைக் கண்டபேர்கள் மனமெலிந்து சேர ராஜனிடத்துச் சென்று இவன் சேதிகளனைத்தையுஞ் சொல்லி முறையிட அவ்வரசன் சினந்து அக்கொடியவனைக் கொன்றுவிடக் கட்டளையிட்டான் (௰௫)

வேந்தி னுணையிற் கஞ்சியே வேறொரு நகரிற்
போந்து வேசையர் புணர்முலை யழுந் குறப்புல்லிச்
சாந்து மான்மதக்குளம் பணிந்தலர் முடித ரித்துக்
காந்து மாமணி வடமவர்க் கீந்துளங் களித்தான்.

இவ்விதங் கட்டளையிட்ட அரசன் ஆக்ஞைக் கஞ்சி மற்றொரு தேசத்திற் சென்று அவ்விடத்தும் வேசையர்களது இரு முலையு மார்பகத் தழுந்த அணைந்து ஒளிவிடு மணி வடங்கள் கொடுத்துச் சந்தன சவ்வாது கலவைகள் திமிர்ந்து புட்ப முதலியவைகள் முடித்துப் புளகாங்கனாய் மகிழ்ந்திருந்தான். (௰௬)

பொருளு ளானிவ னென்பதைப் பூவையர் கருதி
மருட ருங்கொடு மருந்துக ளூட்டியே மயலைப்
பெருகு வித்திவ னிதியெலாம் பெற்றன ரிவனும்
கரும வெம்பிணிபெற்றனன்கணக்கிலா வகையே.

அவ்வேசையர்கள் இவன் செல்வத்தின் மிகுந்தவனெனச் சிந்தித்து வந்தித்து மனத்தைப் பந்தித்து மையல் மூட்டி மருந்துகளூட்டி மயக்கிப் பாக்கிய மனைத்தையும் பறித்துக் கொண்டனர் அதன்பின் அளவற்ற பிணிகளடைந்து மனமுடைந்து போகியென்பது போய் ரோகி யென்ன ஆயினன். (௰௭)

தொண்டி யாரடித் தொண்டனு மிவன்றனைத் தூரக்
கண்ட பேர்களுங் கடோர கடைந்திடு கருமந்
திண்டிறற் கொடு செய்தவன் றீப்பிணி பலவும்
மண்டி மீறிட வெந்துய ருழந்தமே மாழ்கும்.

வேசையருக்கடித் தொண்டனுகிய இவனைத் தூரத்தின் வரக் கண்ட பேர்களும் நரகடைந்திடுங் கருமத்தைச் செய்தவனென்று இகழும்படி கொடிய வியாதிகள் நிறைந்து மீறிய துன்பத்திலுழன்று சோகமுற்று என்றவாறு. (௰அ)

மேக குலையுமிரணம தொடுதொழு நோயு
மாக மானதை வருத்திடுங் குன்மமுமழன்று
தாகமேற்றிடுங் கொடுமையாஞ் சயமுதற் பிணிக
ளேகமாகவி னவிந்திட வினைத்தன னெம்பி.

மேகமும் குலையும் ரணமும் அதனுடன் குட்டமும் உண்டாய்த் தேக முழுதும் வருத்த அதனுடன் உண்டாகிய குன்மத்தால் அயர்ந்து எரிச்சல் மிகுந்த கொடுமை மிகுந்த இருமல் முதலாகிய பிணிகளும் ஏகமாய்ச் சேர்ந்து இடர்செய்ய எம்பி இளைத்தான். (௰௯)

எம்பிக் கைப்பொரு ளற்றமை யறிந்தபின் னிணையாங்
கோங்க ரும்பெனக் கொங்கையுங் கொடுவினைப் பொய்யுந்
தாங்கு வேசையர் தள்ளின ருவருத் தவனுஞ்
சோங்கு டைந்திடச் சுழிபடு வோரெனச் சுழன்றான்.

மன வெக்கங்கொண்டு கைப் பொருள்களுங் கரைந்து போனதை யறிந்த பின்பு இரண்டாகிய கோங்கின் அரும்புகள் போன்ற குயங்களையும் பொய்யை யும் வினையையும்தாங்கிய வேசையர் அருவருத்து வெளியிற்றள்ளிவிட அதன் பின் அவன் கப்பல் உடைந்தவுடன் கடற் சுழியிற் சிக்கினவர் போற் சுழற் சியை யுற்றான். (௨௰)

சுழன்று மாசுண வாய்ப்படு தேரைபோற் றுன்பத்
தழுந்தித் தீதில்ரோவெனக் கேட்பவ ரற்று
விழுந்துமே புரண்டங் கொருபொது மடமேவி
யழுங்கு வான்மறை யோரகத் தன்ன மேற்றுண்பான்.

இவ்வாறு மனஞ் சுழன்று பாம்பின் வாயுகப் பட்ட தேரை போற்றுன் பத்தழுந்தி தீதின்றி நன்மை பெற்றிருக்கின்றனையோ வென்று விசாரிப்பவ ரற்று நோயின் கொடுமையாற் பூமியில் விழுந்து புரண்டு யார்க்கும் பொது வாகிய சத்திரத்திற் போயடைந்து வேதியர் வீதிகடோறும் பிச்சையெடுத் துண்போனயினன். (௨க)

மாதராசையால் மாசுறுஞ் சிறுமைகண் மருவ
வேதமாக செய்தவரென்று முன்னோர்க

ளோது நூற்கிவன் சான்றெனப் பலர்மொழிந் தோதுங்கப்
பாதகம் புரிந்தவன் றுயரெய்தியே பதைப்பான்.

பெண்களாசையாற் குற்றமூற்ற சிறமையும் வறுமையு மடைவதன்றி நரகத்தும் வீழ்வாரென்று முன்னோர்கள் சொல்லியிருக்கும் சாத்திரங்களுக்கு இவன் காட்சியாகிய சாட்சியாமென்று பார்த்தவர்கள் பலரும் பழித்து ஒதுங்கப் பாதகங்கள் புரிந்த விவன்றுய ரடைந்து பதை பதைப்பான் என்றவாறு. (உஉ)

கற்றகல்வியுங் கேள்வியுங் குலமுறைக் கடனும்
பெற்றசெல்வமும் பெண்மயலா லறப்பிணிக
ளுற்றபாதகப் புலையனைக் காத்திட வுளத்திற்
சற்றிரங்குயோவிட மமுதெனக் கொளுந்தாணு.

தாம் கற்ற கல்வியுங் கேள்வியும் குலாசார மேன்மையும் அடைந்த செல்வமும் மாதர் மோகத்தால் நீங்க நீசனாய் நிறைந்த பல பிணிகளால் நெஞ்சத் திடுக்கிட்டலறு பாதகனைக் காப்பதற்குக் கொஞ்சமேனு மிரங்கு வரோ நஞ்சை யமுதாய்க் கொண்ட நாதன். (உங)

வீணதாகவே விழலெனும் புற்குமுத் துலையாற்
பேணியே புனற்பாய்ச்சிய பேதையை நிகர்த்து
நாணமின்றியே புலைத்தொழிற் செய்தகானின்பங்
காணவே யருள்புரியுமோ கருணையங்கடலே.

விருதாவாக யாதொன்றுக்கு முதவியற்ற விழலென்னு மோர் விதப் புல் வளர வேண்டி மூன்று தலை நாட்டி நீர்பாய்ச்சி ஓம்பிய மூடனைப்போல் வெட்க மின்றி வேசையர்களாசை வலையிற் சிக்கிச்சோக்கிப் புன்றொழிலைச் செய்த கான் ஈடேறி இன்பமடைய இரக்கங் கொண்டருள் புரிவரோ ஈடிலாக் கருணைக் கடலாகிய ஈசன் என்றவாறு. (உச)

என்று வெய்தயிர்த் திருகணீ ரொழுகிட விடரி
னின்று மாழ்கிடு மேல்வையங் கொருநிறை மறையோன்
குன்றிலேயுதித் தெழுஞ்சுடர்க் கொதுங்கியே குறுகிச்
சென்று மப்பொது வடைந்தனன் சிவனிவனெனவே.

என்று நினைந்து நெடு மூச்செறிந்து இரு விழியிலும் நீரொழுகத் துன் பத்தில் நின்றும் ஒன்றுந் தோன்றாது மயங்குங் காலத்தில் உதயகிரியினின் றெழுஞ் சூரியன் வெப்பத்தா லுடல் வெதும்பி யொதுங்கக் கருதி ஓர் ப்ராமணன் அச்சிவனே இவனென்னும் படியாகச் சத்திரத்தில் வந்தடைந் தான் என்றவாறு. (உரு)

பூதி சாதனத் தடனுருத்தி ராக்கமும் பூண்ட
வேதவித்தினைக்காண்டலு மெல்லெனவெழுந்து
பாதமே தொழு தெப்பதி யுள்ள நீர்பரியா
வேதுகாரண மென்கண்மு னெய்திய தென்றான்.

விபூதியினையுடையாளத்தோடு உருத்திராக்ஷமும் பூண்டு அவ்விடம் வந்தருளிய வேதவித்துப் போன்ற வேதியனைப் பார்த்தவுடன் மெல்ல வெழுந்து பாதத்தில் விழுந்து செக்கொழுந்து போன்ற நீர் எவ்வூரின் வசிப்பவர் எது காரணமாக இவிடத்து அடியேன் அன்புடன் றரிசிக்க அடைந்தது—என்றான் என்றவாறு. (உசு)

பொன்னி நாட்டினிற் குடந்தையிற் பொருந்தியே நினைக்க
வன்னயத்தொடு கழிப்பவ னதிபலவாடி
யின்னகற்பதி யெய்தின னிழலி லின்புறவே
மன்னி யிப்பொது மடமரு கடைந்தனன் மறையோய்.

அதற்கப் பிராமணன் காவேரி சூழ்ந்த நாடாகிய கும்பகோணத் திருந்து காள் கழிப்பவன் அவ்வூரையகன்று தீர்த்த யாத்திரைகள் செய்து இவ்வூரில் வந்து சூரியன் வெப்பத்தால் நொந்து இப்பொழுதிந்த நிழலைக் கண்டின்பமடைய இம்மடத்தில் வந்து சேர்ந்தேனென்னச் சொல்லினான் என்றவாறு. (உஎ)

நீயொ ரேழையாய்ப் பிணிகளா லுழன்றுமே நெஞ்சந்
தீயநோவுறு முன்வரலாறுக டெரிய
சேயமாகினே னென்றிடப் பதுமலோசனன்றான்
றூய நன்மர புதித்ததுந் தொடர்ந்ததுஞ் சொலுமால்

இவ்விதஞ் சொல்லிப் பின்னும் அம்மறையோன் பதுமலோசனனைப் பார்த்து நீ யாவன் ஏழையாய் நோயில் வருந்தி மனந் திகைத்திவ் விதத்துன்பப் படுகின்றாய் உன் வரலாற்றைத் தெரிய விரும்பினேனென்று கேட்கப் பதும லோசனன் தான் மேன்மையாகிய வமிசத் துதித்ததும் அதன்பின் றனக் குற்றதும் சொல்லத் தொடங்கினான்.

(உஅ)

நிலத்தி னற்குண நீர்திரிந்தா லெனவென்றன்
குலத்தி னற்குணஞ் சிற்றினஞ் சேரலாற் குறைந்தே
யலத்தகத்தடி மாதர்மேல் வேட்கையா வனந்தம்
வலத்தபாதகஞ் செய்தன னிருமையுமறந்தே.

நிலத்தின் குணத்தியற்கையால் நீர் கெடுவதை யொப்பஎன் மேம்பட்ட குலத்தின் குணம் நீசரினச் சேர்க்கையால். சிறந்த நற்குணங் குறைந்து செம்பஞ் சூட்டிய பாதத்தையுடைய ஸ்த்ரீகளதாசையால் அனந்தானந்த வலிமையாகிய பாதகங்கள் இருமையும் மறந்து இயற்றினேன்—என்றவாறு ()

புண்ணியம்பல வியற்றுத லினுமயற் பொருவேற்
கண்ணிமென்முலை காதலியா திருந்திடவே
யெண்ணி லாவற மென்பதை யறிந்திருந் தெளிலார்
பெண்ணி னின்பமே பெரிதெனப் பேதையேன் சுழன்றேன்.

அநேக புண்ணியங்களைச் செய்வதிலும் வேல் போன்ற விழியையுடைய அயன் மாதர் மெல்லிய தனத்தைச் சேர விரும்பாதிருப்பதே சிரேஷ்ட

புண்ணியமாமென யான் அறிந்திருந்தம் அழகிய பெண்களது ஆலிங்கனவின்பமே சிரேஷ்டமென்று பேதையாகிய யென் மனஞ் சுழன்று என்றவாறு. (௫௰)

வேறு.

விழியால் விரக சன்னதந்தான் விளைக்கு மடவார் சிற்றின்பம்
பழியும்பகையு மிகக்கொடிய பாவந்தருவதன்றிப்பொன்
னழியச்செய்து பல பிணிகளடையச் செய்து மரபதனை
யிழியச்செய்யு மெனுநூலுக் கியானே சான்றாயிருந்தனனே.

கண்களினாற் காமாவேசத்தைக் களிப்பிக்கும் கன்னியரது சிற்றின்பம் கொடிய பழியும் பகையும் பாவமுங் கொடுப்பதல்லது பொருளையு மழியச் செய்து பல பிணிகளு மடையச்செய்து குலத்தின் றன்மையையும் இழியச் செய்யுமெனுஞ் சாத்திரத்திற்கு நானே சாட்சியாயும் அத்தாட்சியாயும் நின்றிருந்தேன். (௫௧)

மலமுஞ் சலமுங் கிருமிகளு மலியுந் தோற் கூட்டினை யழகா
விலகாநின்ற பெண்ணென்றே யிச்சைமீறிப்பொருளீய்ந்து
பல காலமுமே குற்றேவற் பண்ணிப் பணித்த பரிசெல்லாஞ்
சொலவோ வூழி சென்றாலுஞ் சுருங்குகசொல்லோ வென்றவனும்.

மலமும் மூத்திரமும் புழுவும் நிறைந்திருக்கும் சரீரமென்னும் சருமக் கூட்டை அழகாலொளிரும் பெண்ணென்றெண்ணி புத்திமாறிப் பித்தமீறி காமமிகுந்து கைப்பொருள் தந்து பல காலமும் விலகாமல் நற்றேவரென்று குற்றேவல் செய்து மனந் துணிந்து தினம் பணிந்து பாழாகிய பரிசெல்லாம் சொல்ல வேண்டில் ஊழி காலஞ் செல்லினும் முடியுமோ முடியாது—என்றவாறு. (௫௨)

தன்னாலியன்ற கொடும்பாவத் தன்மையெல்லாங் கரவாமற்
சொன்னான் சொல்லி யிக்கருமத் தொடக்காற் றொடர்ந்த பிணிகடமைப்
பன்னாட்பொறுக்க வெவராலாம் படியிலிதனைத் துடைப்பதற்கு
நின்னாலறிந்த சூழ்ச்சியுண்டே னிகழ்த்திக் காப்பா யெனமறையோன்

தன்னாற் சம்பவித்த கொடிய பாபத்தின் றன்மையெல்லாம் ஒளியாமற் சொல்லி இப்பாவ சம்பந்தத்தைத் தொடர்ந்தடர்ந்த நோய்களைப் பலநாள் பொறுக்க வெவரால் முடியும் இவ்விடத்திதனை நீக்குவதற்கு யோக்கியமாகிய உத்தியுமக்குத்தோன்றுமேன் அதனைச் சொல்லி அடியேனை ஆதரிப்பீர் என்றான். (௫௩)

எதிலார்க ளேயாய்தன்னே யென்று கருதியுள மிரங்கான்
றீதிலாத வுணர்வினனாய்ச் சிவனார்க்காளாந் திறமுண்டோ
வாதலாலிவ் வாடவனை யடரும பிணிகளகன்றோட
வேதவிது தானென நினைந்தே யியம்பக் கேளென் றிசைத்திடுவான்.

இஃதனைத்தையுங்கேட்ட மறையோன் அன்னியர் துயரைத்தன்னுடைய துயரென்றெண்ணி மனமிளகாதவன் குறைபட்ட அறிவால் சிவனுக்காளாகும்

திரமுமுண்டோ ஆதலால் இம்மனிதனைப் பிடிக்கும் பிணிகளொழிக்கேதேற் றதேயுபாயமென் றெண்ணினவனாய் பதுமலோசனனைப் பார்த்து யான் சொல்வதைக் கேட்கக் கடவையென்று சொல்லலுற்றான் என்றவாறு. (௯௪)

ஒளிரும் பரிதி பூசனைக் கேயுவந்தே வரந் தந்திடுஞ் சுயம்பும்
அளறகற்று முனிக்கணங்களரிய தவஞ் செய்திடுந் தலமுந்
தளிரி னடிசாளை விமாசுதவீரப் படியுந் தடமு மொன்று
யுளதுபொன்னி நாடதனி லும்பர்பரவும் பரிதிவனம்.

உலகினிடத்துப் பிரகாசிக்கும் சூரியன் செய்த பூசனையை யேற்று உளமகிழ்ந்து வரந்தந்த சுயம்புவாகிய மூர்த்தியும் நரக வேதனையை நலியச் செய்யும் முனிக் கூட்டங்கள் முயன்றருமையாகிய தவஞ்செய்யும் தலமும் மாந்தளிர்போன்ற பாதங்களையுடைய கங்கை தன் பாபந் தீர முழுகிய தீர்த்தமும் ஒரே யிடத்துள்ளது காவேரி நாட்டில்தேவாதியரும்பரவும் பரிதி வனம் என்றவாறு. (௯௫)

அந்தத்தலத்தில் வாசமதா யனுகியிரு தீர்த்தமுமாடிப்
பந்தமகற்றும் பரசிவனைப்பணியப் பெற்றா யாகிலுனக்
கிந்தப் பிணியும் பாதகமு மெல்லா மகலுமெனக் கூற
எந்தன் வினையும் பிணிக்குழுவு மேகுங்கொல்லோ வெனக்குரவன்.

அவ்விதத் தலத்தில் வாசமாய்ச் சேர்ந்து சூரிய தீர்த்தம் தேவ. தீர்த்த மென்னும் இரண்டினு மூழ்கிப் பந்த பாசங்களை நீக்கும் பரமேசனைப் பணிவா யாகில் உனக்கு இப்பலவித பிணியும் பாதகமும் அகலுமெனச் சொல்ல அதற்குப் பதுமலோசனன் எனது பாபமும் நோயும் நீங்குமோவென்று கேட்க அம்மறையோன் பின்னுஞ் சொல்லுவான்—என்றவாறு. (௯௬)

இதுவோ வரிது வேதமறை யினிய வாசகங்களையும்
மதிசூடிய வெஞ்சங்கரனை மதியாதிகழும் பாதகமு
முதய பானுவரக் கண்டேயோடி மிருளையொத் திடுமெப்
பதியைக்காணி லென்றிடலும் பதறியெழுந்து பணிந்துநின்றான்.

உனக்கடைந்த பாவத்தையும் பிணியையுந் தீர்ப்பதோ பெரிது இனிய கருமங்களையும் சசிசேகரனாகிய சங்கரனை எண்ணாது இகழும் பாதகமும் சூரியோதயத்தைக்கண்ட இருளையொத்து ஓடும் அப்பதியைக்கண்டவுடன் என்று சொன்னவுடன் அப்பதுமலோசனன் இதைக்கேட்டுப் பதறியெழுந்து பணிந்து நின்றான்—என்றவாறு. (௯௭)

உள்ளந் தனிலே பரிதீச ருபய பாதந்தனையுன்னி
யள்ளித் திருநீ றளித்திடவு மவனுமன்பா யதுவாங்கிக்
கொள்ளு மளவிற் பலபிணியுங் குறையக்காணு வவன்மகிழ்வாம்
வெள்ளந் திளைத்து நடையுற்று வியந்து பணிந்து விளம்புவனால்.

அப்பொழுது அம்மறையோன் மனதின்கண் பரிதீசரிருபாதத்தையும் நினைந்து விபூதியை யள்ளிக்கொடுத்தவுடன் பதுமலோசனன் ஆசையுடன் வாங்கி வைத்துக்கொண்டவுடன் தன்னிடஞ் சேர்ந்த பல நோய்களுங்

கொஞ்சக் குறையக்கண்டு சந்தோஷ சாகரத்தின் மூழ்கினவனாய் நடக்குந் திராணியைப் பெற்று ஆச்சரியமடைந்து வணங்கிச் சொல்லுகிறான் என்றவாறு. (௩அ)

உய்யு நெறிக ளில்லாம லுழலுமென்கண் ணெதிராக
அய்யநீயே சிவனுருவ மாகத் தோன்றி நீறருளக்
கையுங் காலுமுட னீங்கக் கண்டேனெனையப் பதிசேர்த்துத்
துய்யனாக்கி யுன்னடிமைத் தொண்டுபுரிவே னென்னலுமே.

ஓ ஐயனே பிழைக்கும் வகையில்லாமற்றுன்புறுமென்கண் காண அச்சிவன்போலெழுந்தருளி வெண்ணீறு கொடுத்தவுடன் கைகால் முடக்கநீங்கத் திருஷ்டாந்தமாய்க் கண்டேன் ஆதலால் அடியேனை அத்தலத்திற் சேர்த்துப் பரிசுத்தனாக்கில் உன்னடித்தொண்டு செய்வேனென்றான் அவ்வாறு சொல்லியவுடன் என்றவாறு. (௩௯)

அன்பதுடையா ரென்பு முரித்தாகும் பிறருக் கெனலறிந்த
நம்பரடியா ரிரங்காம லடப்பர் கொல்லோ நலிவுற்றோ
னின்பமுற வேயவன் றந்தை யென்ன வருத்தமறக் கொடுபோய்
முன்புபுகன்ற பரிதீசர் முன்றிலருகே விட்டங்கண்.

அன்புடையோர் பிறர்க்காபத்து வந்த காலையில் தம் தேகத்தையன்றி என்பையும் அவர்க் குரித்தாகச் செய்வரென்றதை யுணர்ந்த சிவனடியார் மனமிரங்காதிருப்பரோவென்று நினைந்து துன்பமடைந்தோன் இன்பமுறும்படி அவன் றந்தைபோல மன வருத்தங்கொள்ளாமல் அழைத்துக்கொண்டு போய் முன் சொல்லிய பரிதீசர் ஆலயத்து விடுத்து அவ்விடத்து என்றவாறு. (௪0)

இருதீர்த்தத்து நீராட்டி யிறைவர் கோயிற் கழைத்தேகிப்
பொருவி றந்தை யிருநிதியைப் புதல்வன்றனக்குக் காட்டுதல்போற்
குருவினுருவாஞ் சிவயோகி குமரன்றனக்குச் சுயம்பதனைத்
தெரியக் காட்டி நியமவிதி செப்பிச் சிவனாமமு மருளி.

தேவ தீர்த்தத்திலும் சூரிய தீர்த்தத்திலும் முழுகச்செய்து ஈசன் ஆலயத்துள் அழைத்துப்போய் இணையில்லாத் தகப்பன் தான் புதைத்து வைத்த பொருளைப் புத்திரனுக்குக் காட்டுவதுபோல் குரு மூர்த்தமா யெழுந்தருளிய மறையவன் பதுமலோசனனுக்குச் சயம்புலிங்கத்தைத் தெரியும்படி காட்டி அவரை அர்ச்சிக்கும் நியமவிதிகளும்சொல்லிச் சிவநாமத்தை யுச்சரித்து என்றவாறு. (௪௧)

தொண்டுபுரிநீ யரனருளாற் சுகமதுறு வாயென வவரும்
பண்டைப் பதியை யடைந்திடவும் பதுமலோ சனப்பெயரோன்
வண்மைதுவுணிருபொய்கை மருவிப் புலரிநீ ராடி
யண்டர்பெருமா னடிபரவியன்பாய்க் கோயில்வலம் வந்தே.

இவ்விதமாக வெற்பணிசெய்து வருவையாகில் கடவுள் கருணையால் பிணி முதலிய துன்பம் நீங்கிச் சுகமடைவாயென உபதேசித்து அவர் தான்

வசிக்கும் நகரஞ் சென்றபின் பதும லோசனன் வண்டுகள் தேனுண்ண மலர்கள் மலர்ந்த அவ்விரு தீர்த்தத்தும் வைகறையிற் சென்று மூழ்கி அன்புடன் தேவநாயகனைத் துதித்து ஆலயம் வலமாய் வந்து என்றவாறு. (௪௨)

ஆதிநாதர்க் கபிடேகமான புனலு மம்பிகைதன்
பாதப்புனலு முப்போதும் பருகிப் பரிதிவாரத்திற்
கோதற் றிடவே யிரவூணுங் குளிர்மா மதிநாட் பகலூணு
நீதியாக வெறுத்திந் நியமம் பிடித்து தினதினமும்.

சிவபிரானுக்கபிஷேகமாகிய தீர்த்தமும் அம்மன் பாத தீர்த்தமும் முப்போதும் தப்பாது உட்கொண்டு குற்றமற்றிடும்படி ஆதிவாரத்தில் இரா சோமவாரத்துப் பகலுண்டியும் வெறுத்து இந்நியமத்தை யுறுதியாய்க் கடைப்பிடித்துப் பிரதிதினமும்—என்றவாறு. (௪௩)

அந்தணாளர் கடமிலைய மேற்றுப் பசியாற்றி
யிந்து நிலவுஞ் செஞ்சடில ரிருதா ளிதயமல ரிருத்தி
பந்தமகற்றுஞ் சிவநாமம் பரிவாய்ச் செபித்தன் மறவானா
யெந்தையடிக் கன்புற்றவனா யிருக்குங் காலத்தோ ராண்டில்.

பிராமணர் வீட்டிற் பிச்சையெடுத்துப் பசியைத் தீர்த்துச் சந்திரன் பிரகாசிக்கும் செவந்த சடிலச் சிவபிரானிருபாதத்தையும் இதய மலரிலிருத்தி ஆயாசத்தை நீக்குந் திருநாமங்களை அன்பாய்ச் செபித்து மறவாத தன்மையனாய் எம்பிரான் பாதத்தன்புடையவனா யிருக்கும் நாளில் ஒரு வருஷ காலத்தன் என்றவாறு, (௪௪)

புடமிட் டெடுத்த பொன்போலும் புனிதப் பரிச வேதையினாற்
சுடருற் றோங்கு மயம்போலுந் தொடர்ந்து விழுங்குங் கருநாகம்
விடம்விட் டொளிரு மதிபோலு விமலனருளால வினையகல
வடலுற் றிலகும் வேலவன்போ லழகு வாய்ந்தா னுடவனும்.

புடத்தில் வைத்தெடுத்த பொன்னைப்போலவும் மூலிகைகளின் வல்லபத்தால் பிரகாசித்துச் சொலிக்கும் இரும்பைப்போலவும் விழுங்கிய பாம்பின் விஷம் நீங்கி ஒளிரும் சந்திரன் போலவும் சிவபெருமானருளால் தீவினை நீங்க வல்லமையுடன் அழகும் பொருந்திய முருகன்போல் அழகுடன் புருஷத் தன்மையுமடைந்தான். (௪௫)

கருமப்பிணிக ளகன்றிடத்தன் காயத்தொளியைக் கண்ணுற்றே
யுரிய வறியோர்க் கினியலமுற்ற தென்ன மகிழ்வோங்கி
யொருமை மனதாய்ச் சங்கரர்மு னுறப் பணிந்து மிருகண்ணீர்
பெருகப் புளகித்தே தேம்பிப் பிதற்றித் துதிப்பான் பிறப்பற்றான்.

கரும வசத்தாலடைந்த நோய் நீங்கி அழகோங்கித் தேகத்திலுண்டாகிய பளபளப்பைப் பார்த்துத் தரித்திரனுக்குத் தனங்கிடைத்ததுபோல் மகிழ்வுமிகுந்து ஒருமைப்பாடுற்ற மனதாய் சங்கரன்முன் சேர்ந்து தாழ்ந்து பணிந்து இரு கண்களினின்றும் நீர் பெருகப் புளகாங்கிதனாய்த் தேம்பிப் பித்தப்பிடித்தவன்போற்றன்னை மறந்து துதிக்கத் தொடங்கினன்—என்றவாறு. (௪௬)

ஆமா வென்னவுட லகிதி யனைத்துங் கவரு மரிவையருக்
காமா மிவனே யடிமையென வலைந்துசுழ லாவவமாகிப்
போமாறுழன்ற புலைநாயைப் புரந்தா யினியுன் பொன்னடிக்கா
ளாமா றருளாய் பரிதிவனத் தரனே யரனே யளியோனே.

இலக்குமியே அழகுக்கிணையாமென அலங்கரித்துத் தமையடைந்தோரை மயக்கித் தேக வலலமையையும் திரவியத்தையும் அபகரிக்கும் வேசையருக் கிவனே அடிமையாமென்றனைவருஞ்சொல்ல அலைந்து திரிந்து அவலமாகிப் போம்படி யுழன்றபுன் நாயினைப்போன்ற புலைத்தன்மையுடைய கடையேனை ஆதரித்து ரட்சித்தாய் இனியுனது பொற்பாதங்களுக்காளாகும்படி அருள் செய்யாயா பரிதிவனத்தமர்ந்த அரனே கருணையுடையோனே என்ற வாறு. (சஎ)

வில்லிற்றொடுத்த கடுங்கணையும் வேலும் வாளும் வெவ்விடமுங்
கொல்லுங் கூற்றுமுக நாணக்கொலை கள்பயிலுங் கோலவிழி
மெல்லியல்லார்க் காளாகி வீணேமெலிந்த வினையேனுக்
கல்லலோடு பிணிதவிர்த்த வரனே யடியார்க் காரமுதே.

வில்லிற் பூட்டிவிட்ட அம்புகளும் வேலும் வாளும் வெவ்விய விடமும் கொல்லவெழுந்த எமனும் முகங்கவிழ்த்து வெட்கக் கொலைத் தொழிலையே பழகும் அழகிய விழியையுடைய பெண்களுக்காளாகி விருதாவாய் மெலிந்த வினையையுடைய எனக்குத் துன்பத்தோடு நோயையும் நீக்கிய அரனே அடியார் கூட்டத்துக் கமுதமே. (சஅ)

கும்பமுடைத்து மதயானைக் கொம்பையிறுத்து மேருவரைக்
கும்பீடாய நாண்பூட்டி யொளிரும் புளகமுலை யார்கைப்
பம்பரத்துக் கிணையாகப் பாரிற் சுழன்றேன் பவமகலக்
கம்பக்களிற்றை யுரித்தோனே காத்தா யிதற்கென் காரணமே.

குடத்தை கிகரல்லவென்றுடைத்து மதயானைத் தந்தத்தை யிணையல்ல வென்று ஒடித்து மேரு வரையினும் வலியதாய் மங்கியமென்னுங கயிறைப் பூண்டு பிரகாசிக்கும் பூரித்த முலையையுடைய பெண்கள் கையிற்கொண்டாடும் பம்பரத்துக்கொப்பாய் உலகினிடத்துச் சுழன்ற அடியேன் பாவம் நீங்கக் கட்டுத்தறியை முறிக்கும் மதத்தயானையின் தோலையுரித்துப் போர்த்தோனே இரட்சித்தாய் இது யாது நிமித்தமோ—என்றவாறு. (சகூ)

பொய்யின்கடலா யரும்பிணிகள் பொலியுமக மாவினைவிளையுஞ்
செய்ய சாலமுறு கலமாய்ச் சிறிற்பிரசம் பெய்குடமாய்
வெய்யமனத்துக் கணிகையர்தம் வேட்கை விடமுண் டுழல்வேனைத்
தய்யனுக்கி அடிமைகொளத் துணிந்தாய் கொல்லோ சுயஞ்சுடரே.

அபத்தத்திற் களவிடாச் சமுத்திரமாய் அரியநோய்கள் தங்கும் இடமாய் தீவினைக்கொருவிளை நிலமாய் மாயவித்தைக்கொரு கப்பலாய் சிறப்பற்றகள் நிறைக்குங் குடமாய் கொடிய மனத்தையுடைய பரத்தையாது காமமென்னும் விடமுண்டு திரியுமென்னைப் பரிசுத்தனுக்கித் தொண்டுகொள்ள மனத்துணிவு கொண்டனை சுயஞ்சுடராகிய சோதிப்பொருளே. (ரு௦)

கடைக்கண் வலையை வீசியுளங் கவர்ந்து மிடியா மனைசேர்த்தி
நடிக்கும் பிணியா முலைமுழுங்க நன்றாய்ப் பிணித்துக்கடு நரகில்
விடுக்கு நாகப் படங்காட்டி விடமா மதரமது வருத்திக்
கெடுப்பார்க் குழல்வேற் கரனேயுன் கிருபைக் கடலுங் கிட்டியவே.

கடைக்கண்ணென்னும் வலையை வீசி உள்ளத்தைத் தமது வசமாயப கரிக்கப்பேசித் தரித்திரமென்னும் வீட்டிற் சேர்த்து மெய்போல் நடித்துக் கைச்சரக்காட்டிய முலையழுத்தக் கட்டிக்கொடிய நரகத்தில் விடும் நாகப் படத்தைப்போன்ற பகத்தைக் காட்டி விடம் போன்ற அதரபான மூட்டி மோகமூட்டிக்கெடுப்பாராகிய பெண்களால் உழலுவேனுக்கு அரனே நினது கிருபைக் கடலுங் கிட்டியதே—என்றவாறு. (௬௧)

பொருளையெல்லாங் கவர்ந்து பிணிபோத வருளிப் புறங்கடையில்
வெருளத்தள்ளி மகிழ்கூரும் வேசைக்காளாங் கொடியேன்றன்
மருளையகற்றி யன்பருடன் மகிழச்செய்த நின்னுடைய
வருளுக் கிணை தானுண்டு கொலோ வரனே யடியா ரிருநிதியே.

திரவியங்களனைத்தையும் கவர்ந்து அதற்கெதிராய்த் தீராப்பிணியைத் தந்து தமது வெளிக் கதவிற்கப்புறம் வெருளத்தள்ளி எள்ளி அதன்பின் மகிழ்வுமீறும் விலைமாதருக்காளாகிய வீணனது மயக்கம் நீக்கி அன்பருடன் கூடி ஆனந்திக்கச் செய்த உனது கருணைக்கொப்புமுண்டோ அரனே அடியார்கட்குச் சங்கநிதி பதும நிதியை நிகர்த்த கர்த்தனே—என்றவாறு. (௬௨)

என்றுபரவி யன்பருட னினிதாய்க்கூடிப் பரவசமாய்
நின்று நடித்துச் சிவநாம நிகழ்த்திப்பண்க ளெறிபாடி
நன்றுதிகழப் பூழியனார் நாடக்கனவிற் சித்த னெனக்
குன்றைவளைத்துப் புரமெரித்த கோமான் றோன்றிக் கூறுமால்.

என்று இவ்வளவு துதித்த இனிய சிவனடியாரோடு கூடிப் பரவசமாய் நின்று கூத்தாடிச் சிவநாமம் புகன்று இராகத்தோடிசையைப் பாடி இவ்வாறிக் கனே இவனிருக்க மேரு மலையை வில்லாய் வளைத்துத் திரிபுரதகனஞ்செய்த சிவபிரான் முன்னம் இப்பதுமலோசனன் அரசனாகிய சேரன் காணும்படி அவன் சொற்பனத்தில் சித்த ரூபமாய்த் தோன்றிச் சொல்வார்—என்றவாறு. (௬௩)

பரிதிவனத்தி னுள்ளுறைவோம் பதிதர்பரி சுத்தமதாக
உரவேயருளுஞ் சித்தறிமோ முன்றனமைச் சன்மகன் விடனாய்த்
திரியுந் தொழிலி லீட்டிய வெந்தீமை முதலாம் பாதகங்க
ளரிய பிணிக ளகன்றிடவே யமலமாக்கி யருடந்தேம்.

நாம் பரிதிவனத்தில் வசிப்போம் குலம் சமைய முதலிய ஒழுக்கத்திற்ற வறினோரைப் பரிசுத்தமாக்கிப் பாலிக்கும்படியாகிய சித்தகளறிவோம் உன் மந்திரியின் குமாரன் காமுகனாய்த் திரிந்த தொழிலால் விர்த்தி செய்த தீவினை முதலிய பாதகங்களும் பிணிகளும் தீர்த்தருள் புரிந்து குற்றமற்ற வனாக ஆக்கினோம். (௬௪)

அவனையழைத்து னமைச்சுரிமையாக்கி யரசா ளுதியென்று
சிவனாருரைத்த மொழிகேட்டுத் திடுக்கிட் டெழுந்து பாணர்நிதிக்
குவைதான் பெறுக வென்முன்னோர் குறித்த கனவிற் றோன்றிய நீ
தவமொன்றறியேன் கனவினிலுந் தந்தாய் பொற்றாளென் றேத்தி.

அவனை அழைத்து வந்து உனது மந்திரிப் பட்டத்திற்குரியவனாய்ச் செய்து அரசாண்டிருக்கக் கடவையென்று சிவபிரான் சொல்லிய வார்த்தையைக்கேட்டுத் திடுக்கிட்டெழுந்து யாழ்ப்பாணரொருவர் திரவியக்குவியல் பெறும் பொருட்டு எனது முன்னோர்கள் கனவிற்றோன்றி யருளிய நீயாதொருதவப்பேற்றையு மறியாத அடியேன் கனவிலுந் தோன்றி உனது பொற்பதத்தைத் தந்தருளினாயெனத் துதித்து என்றவாறு. (௫௫)

அங்கம்புளகித் தவசமதாயற்றை யிரவு தகற்றியெழுந்
தங்கோர்தலைவன் வசமாக வணிபொற் றுகில்க ளருநிதியந்
தங்கக் கவிகை சிவிகையொடு துணைவெண் கவரியீய்ந்தமகிழ்
பொங்கவிடுத்தான் றன்னமைச்சன் புதல்வன்றனைக் கொண்டெய்தெனவே.

தேகம் புளகித்துப் பரவசமாய் அன்றிரவை நீக்கி விடிந்தெழுந்து ஒரு சேனாபதியின் வசமாக ஆபரணம் வஸ்திரம் பொருள் குடை தண்டிகை வெள்ளிய இரட்டைக் கவரி இது முதலியதுந் தந்து ஆனந்தமீறி எனது மந்திரி குமாரனை அழைத்துவாவென்று அனுப்பினான் என்றவாறு. (௫௬)

சேனைத்தலைவன்விடை கொண்டு சென்று பரிதிவன மணுகி
யீனமகற்றி யொளிர்கின்றோ னிணைத்தாள் பரவி யுனதரச
னானசேர பூபால னமைச்சர் தலைமையுனக் கீய்ந்து
மானமியற்றினா னீயும் வருவாயெனவு மாசற்றோன்.

அச்சேனாபதி அரசன் கட்டளையைச் சிரமேற்கொண்டு சென்று பரிதிவனஞ்சேர்ந்து குற்றமகன்று பிரகாசிக்கும் பதுமலோசனன் பாதங்களின் வணங்கி உனது அரசனாகிய சேர மகாராஜன் மந்திரத் தலைமை யுனக்குந் தந்து இதுகளை வெகு மானமா யனுப்பினான் ஆதலால் நீ யவிடம் வருவா யென்றழைத்தவுடன் பரிசுத்தவானாகிய பதுமலோசனன்-என்றவாறு. (௫௭)

நானே யரசனெனப் பூவினடிக்கு மெனையாளரனன்றி
மான வரசருண்டு கொலோவந்தோ வெனவே வாழ்வனைத்து
மீனமெனவே யருவருத்தங் கிருக்குங்காலைப் பரிதீசர்
தானுமுமையும் விடைமீதாய்ச் சார்ந்தாரவன்றன் கனவினிலே

நானே உலகங்கட்கெல்லா மரசனென்ன ஆனந்தக்கூத்தாடும் அரனல்லது எனக்கும் வேறு தலைவனாகிய அரசருமுண்டோ ஐயோ என்று உலக வாழ்வனைத்தும் நிலையற்றதென்ன அருவருத்திருக்கும்போது பரிதீசர் உமையுடன் ரிஷபவாகன ரூடராய் அவன் கனவிற் சார்ந்தவராய்—என்றவாறு. (௫௮)

உந்தன்பாவப் பிணிகளெல்லா மோடத் துறந்தோ நீ சேரன்
சொந்தவமைச்சனாய்ப் போகந்துய்த்துப் பலவாண் டினைக்கழித்து

வந்தேம் பதத்தில் வாசமதா மகிழ்வா யென்னத் திருவருடான்
தந்தே மறைய மறையோனுந் தனிச்சிற் சுகத்திற் சார்ந்தனனால்.

உனது பாவமும் பிணிகளும் ஒழிம்படி நீக்கினேம் நீ இனிச் சேராஜ னது சொந்த மந்திரியாய் அமைந்திருந்து இன்பானுபவங்களை அனுபவித்து பல வருஷங்கள் கழித்து எமது பத மடைந்து மகிழ்வாயெனத் திருவருள் புரிந்து மறைய மறையவனாகிய பதுமலோசனன் ஒப்பற்ற சிற் சுகத்திற் சார்ந்தவன் போலாகினான்—என்றவாறு. (ருக)

அருளின்கடலா முமைபாகமாக வமலன் றிருவுருவாம்
பொருளைக் காணக் கிடைத்ததெனப் பொங்கிப் புளகமது போர்ப்பத்
தெருளுஞ் சிவயோகியர் போலச் சிறந்தநின் பாலுனுமேனக்
குருளையோ நானமைச்சுரிமை கொள்ளப்பரம்ம குருமணியே.

கருணைக் கடலாகிய குற்றமற்ற பார்வதி பாகன் அழகிய திருவுருவமென்னும் பொருளைக் காணக்கிடைத்த எனது பாக்கியமே பாக்கியமென்று பூரித்து புளகம்போர்ப்பத்தெளிந்த சிவயோகியர்போல மகிழ்ந்து யான் உனது பாலுண்ட பன்றிக்குட்டியோ மந்திரித் தலைமைபூணப் பாத்திரனோ சிறந்த ரத்தினம் போன்ற பரமனே என்றவாறு. (சுய)

வேறு

நீயே குருவாகி நின்மலஞான மருளச்
சாயாம லன்னிலையிற் சார்ந்ததிரு வாதவூர்த்
தூயோனே வானமைச்சுச் சூழ்ச்சி செயவேயறியா
நாயேனுக் கவ்வமைச்சு நாட்டியிட ஞாயமென்னே.

நீயே குருமூர்த்தமாய் நிர்மலமாகிய ஞானோபதேசஞ்செய்ய அந்நிலையினின்றும் பேராமல் நின்ற பரிசுத்தனாகிய மாணிக்கவாசகனே நான் பெருத்த மந்திரித் தன்மையை நடாத்தும் சூட்சியறியா அடியேனுக்கு அம்மந்திரிப் பட்டம் நாட்டிவைக்க ஞாயம் யாதோ அறியேன் என்றவாறு. (சுக)

காவலர்க்கு மந்திரியாய்க் கனவாழ் வெனுஞ்சேற்றின்
மேவியுழன் றிடுங்கால் வெவ்வினையான் செய்யாமன்
மாவலவனாகி மதுரையினில் வாம்பரிதான்
மூவநடத்தும் தேவேதற்காப்பதுன்கடனே.

அச்சேர மகாராஜனுக்கு மந்திரியாய்ப்பெருத்த செல்வமென்னுஞ்சேற்றில் விழுந்து அழுந்தி வருந்தும்போது முன் செய்த தீவினையை மற்றுஞ் செய்யாமல் குதிரைப்பாகனாகி ஆலவாயென்னு மதுரையில்தாவுங்குதிரைகளைநடாத்தி வந்த தேவனே அடியேனை சம்ரட்சணை செய்வது தமது கடன். (சுஉ)

பாசப் பிணிப்பும் பஞ்சிறையும் விட்டகன்றோ
ராசையறப் பற்றிப்பி னச்சிறையிற் சேர்ப்பதுபோ
லீசனே மாயை யிழந்தனது தான்சேர்ந்த
நேசனையு மவ்வமைச்சா நியமித்த மாயமென்னே.

ஆசையென்னுங் கட்டும் துன்பமென்னும் சிறையும் விட்டு நீங்கி னோரை எங்கும்படி பின்னும் பிடித்து ஆசை பொருந்த அச்சிறையிற் சேர்ப்பதுபோல் ஓ பரமசிவனே மாயையை யிழந்து உனது பாதம்பற்றிய அன்பனையும் மந்திரியாகும்படி நீ யேற்படுத்திய மாயம் யாதோ—என்றவாறு. (சுச)

காவலனஞ் ஞானங் கழன்று பதம்பெறுக
மேவலர்க ளேறும் விறன்ஞான சம்பந்த
நாவலனைக் கூட்டுமெருணல் லகுலச் சிறையோ
தேவர்தேவா நாயேன் றேர்ந்தமைச்சு செய்திடவே.

பாண்டியனது அஞ்ஞானம் விடுபட்டு உன் பதத்தைப் பெறும் பொருட்டுச்சமணர்களென்னும பகைவர்களுக்கு ஆண் சிங்கம்போன்ற வலிமை மிகுந்த திருஞான சம்பந்தரைச் சேர்ப்பித்த அருள்மிகுந்த குலச்சிறைநாயனுரென்னும் அப்பாண்டியன் மந்திரியோ தேவ தேவா அடியேன் அம்மந்திரித் தன்மையை வகித்து நடாத்துதற்கு—என்றவாறு. (சுரு)

அழகோடிளமை யருநிதிய மெங்காளு
மழியா தெனக்கருதி யாணவத்தான் மாதர்மயற்
பழியாமென் றெண்ணுமற் பற்றுமெனை யொன்னலர்கள்
பழியாம லாண்டபரனே பரம்பொருளே.

அழகும் இளமையும் செல்வமும் எக்காலத்தும் அழியாது ஸ்திரமாயிருக்குமென நினைத்து அகங்கரித்து மாதர் மையலாற் பாவமும் பழியும் வருமென்றெண்ணுமல் அவராசையைப்பற்றி நின்ற அடியேனைப் பகைவர் நகையாடிப் பழியாவண்ணம் ஆண்டபரனே பழம் பொருளாகிய பரம்பரனே என்றவாறு. (சுசு)

தலைபுழுத்த நாயதுபோற் சந்ததமும் வெம்பிணியா
லுலைவுற்றேனைக் கரவா வுன்னடியார் நல்லவையி
லிலகியிடச் செய்தாண் டிருமைப் பயனீய்ந்த
தலைவனே யுன்பெருமை சாற்றற் கமைந்திடுமோ.

நாய்க்கு நாவெட்டுமிடத்திற் புண்ணிருந்தால் நக்கியொழிக்கும் தலையிற் புண்ணுய்ப் புழுத்த நாயைப்போலத் தீராப்பிணியாய்ச் சந்ததமும் சிந்தை நொந்து தவித்தேனை நீங்காத நினதடியார் கூட்டத்திற் பிரவேசிக்கச்செய்து ஆண்டருளி. இம்மை மறுமையென்னும் இருமைப் பயனுமளித்த இறைவனே உனது மகிமையை யுரைப்பதற் கடங்குமோ என்றவாறு. (சுசு)

வேறு

என்னவே பணிந்து போற்றி யிருகணீ ராறதாக
இன்னமு தருந்தினுன்போ லீசனுர் விடைமருமற்
பொன்னெடு பணிகைக்கொண்டு பூந்துகி லுடுத்திச் சேர
மன்னவனிவனே யென்ன வயங்கினுன் மறைவலாளன்.

இவ்வாறு பணிந்து போற்றி இரு கண்களினீராய்ப் பெருக்கெடுத்தோட இனிய தேவாமுதமுண்டவன்போலக் கடவுளிட்ட கட்டளையை மறவாமல் அரசனனுப்பிய பொன்னையும் பூஷணத்தையுங் கைக்கொண்டு அழகிய பட்டாடையுடுத்துச் சோ மகாராஜனிவனே யெனும்படி சோபித்தான்—என்றவாறு. (சுஎ)

காலத்திற் செய்தவன்றி கடுகேள வெனினுமிந்த
ஞாலத்தை விற்குமென்னு நன்மொழி யுணர்ந்துமெய்தச்
சீலநற் றருமங்கேடு செய்யினு முய்வருய்யார்
வாலியநன்றி கொன்றமாக்க ளென்றுளத்தி லெண்ணி.

ஆபத்துக்காலத்திற் செய்த உபகாரங் கடுகேளவாகினும் எண்ணும்போது இப்பூமியை விற்றுத்தரினும் அதற்குப் பிரிதியாகவென்று சொல்லிய வேத மொழியையோர்ந்து எவ்வித மேம்பட்ட தருமத்தைக் கெடுக்கினும் பரிகாரஞ் செய்து தப்பிப் பிழைப்பர் பரிசுத்தமாகிய மனத்தோடு செய்த உபகாரத்தை மறந்த மனிதர் நரகத்திற்குத் தப்பிப் பிழையாரென்று நினைத்தவனாய்—என்றவாறு. (சுஅ)

குடந்தையில் வசிக்கும் யோகக் குரவனை வரவழைத்து
நடந்தடி பரவவெந்நூர் நாபதி யெனவினவ
மடந்தனிற் பிணியுட்பட்டு வருந்தினே னுனதுபோத
திடந்தனு வமலனுகிச் சீருற்றே னென்று செப்பி.

கும்பகோணத்தில் வாழும் சிவயோகியாகிய மறையவனென்னுங் குருவை வரவழைத்து எதிர்கொண்டு சென்று பாதத்தில் வணங்கி அம்மறையோன் இவன் ரூபாலங்காரங்களைக் கண்டு பிரமைகொண்டு மயங்கி எத்தேசத்தரசன் நீயென வினவபூர்வம் தரும சத்திரத்தில் நோய்க்கோட்பட்டு வருந்தியவன் யான் இப்பொழுது உமதுபோதனு சக்தியாற் பரிசுத்தனாய் சிறப்புற்றேனென்றவாறு. (சுக)

தந்தைநீ தாயுநீயென் சற்குரு வாதலாலே
யெந்தனை யகன்றிடாம லிருமினென் றணியும் பொன்னுஞ்
சுந்தரத் துகிலுநல்கித் துயரற வய்யமிட்ட
வந்தணர்க் களந்தஞ் செம்பொ னளித்தன னமைச்சன் மைந்தன்.

தந்தையும் நீ தாயும் நீ சற்குருவும் நீயாதலால் அடியேனை விட்டகலாமல் என்னுடன் வசித்திருமென்று பொன்னும் பூஷணமும் அழகிய வஸ்திரமுங் கொடுத்து தன் கொடிய பசிகாலத்தில் அத்துயர் நீங்கப் பிச்சையிட்ட பிராமணர்க்கெல்லாம் அளவில்லாத் திரவியம் கொடுத்து மந்திரி மகனாகிய பதுமலோசனன் (எ0)

புனிதமா மிரண்டு பொய்கைப் புண்ணிய தீர்த்தமாடிக்
கனிவொடு பிதிர்கட் குள்ள கடனெலாங் கழித்துக் காமன்
முனைகெட வெரித்தக்கண்ட மூர்த்திக்கு மம்பிகைக்குந்
தனமிகு வரிசை செய்து கனகமா மாரிபெய்தே.

பரிசுத்தமாகிய உபயபுண்ணிய தீர்த்தத்தும் முழுகி மனக்களிவுடன் பிதிர்க்கடன்களனைத்தும் கழித்துக் கொழுத்த மன்மதன் செய்த யுத்தம் கெடும்படி அவனை எரித்த கடவுளுக்கும் அம்மனுக்கும் மிகுந்த பொருள் களால் வரிசை முதலியதுஞ் செய்து சொர்னமாரி பொழிந்து என்ற வாறு. (எக)

குருவுட னமைச்சனுன குமரனுஞ் சேனைசூழ
உருபொலன் சிவிகையேறி யூர்வழி கடந்து சேரன்
திருமலி நகர நண்ணுஞ் செய்திகேட்டரசர் கோமான்
பெருமிதத் துடன்முன்றோன்றிப் பெட்புறப் பணிந்து சொல்வான்.

குருவாகிய மறையவனுடன் மந்திரியாகிய பதுமலோசனனும் சதுரங்க சேனை சூழ அழகிய பொற்றண்டிகைமீதேறி அநேக ஊர் வழிகளைக் கடந்து சேர ராஜனது செல்வமிகுந்த நகரின் சமீபத்தில் வருஞ் சங்கதியை அரசர்க் கரசனுகிய சேரன் கேள்விப்பட்டு மிகுந்த பெருமையுடன் எதிர்கொண்டு வந்து ஆசையுடன் பணிந்து சொல்லுவான் என்றவாறு. (எஉ)

எந்தன் மந்திரிமுன்செய்த விருந்தவப் பேறதான
மைந்தனே பரிதிகாதர் மகிழ்வுற வனப்புப்பூண்டு
வந்தனை நின்னையொப்பார் வாதவூரடிகளன்றி
யிந்தமா நிலத்திலுண்டோ வென்னவே முகமன் கூறி

என் முதன் மந்திரியானவர் பூர்வஞ் செய்த பெருந்தவப்பேற்றால் பிறந்த குமாரனே பரிதிவனக் கடவுள் பரிவுமீற அருச்சித்துக் கண்டோர் மகிழும் புகழும் அழகும் பூண்டு வந்தனை உனக்குச் சமானமானவர் அம் மாணிக்கவாசகரன்றி இப் பூலோகத்தில் வேறொருவருண்டோவென்று முக மன் வார்த்தைகள் புகன்று. (எங)

கண்ணுதல் காட்சியுன்னுற் கண்டனன் கடியநோன்பு
மெண்ணுற வென்செய்தேனோ வெனக்குநீ யமைச்சனுனாய்
புண்ணியவானே யென்னைப் புரந்தர தாளாயென்று
வெண்ணிறக் கவிகையன்றி வேறெலாம் வரிசையீய்ந்தான்.

நெற்றிக் கண்களையுடைய நின்மலக் கடவுள் தரிசனையைக் கனவி னிடத்து உன்னுற்கண்டேன் அப்படிக் காணப் பூர்வத்தில் அரிதாகிய நோன்பு கள் அளவற்றதாய் யாது யாது செய்தோ அப்பலனுல் அடியேனுக்கு நீ மந்திரியானுய் ஓ புண்ணியவானே என்னையுங் காத்து எனதாசினையும் ஆள வேண்டுமென்று தனது தவளக்குடையொன்றன்றி மற்றதை யெல்லாம் அவ னுக்கே வரிசையாகக் கொடுத்தான் என்றவாறு. (எச)

மந்திரித் தலைமைபூண்டு மன்னவன் மகிழும் வண்ண
மிந்திரச் செல்வந் தய்த்தே யினிய நற்பொருள்களெல்லாம்
பந்தமதகற்றுமெங்கள் பரிதீசர்க் காக்கினாலுஞ்
செந்திரு மார்பனென்னத் திகழ்ந்தன னுலகுவாழ்த்த.

அதன்பின் மந்திரித் தலைமை வகித்த அச்சேர மகாராஜனும் மகிழும்படி இந்திரபோக முதலியதம் அநுபவித்து மிகுதியாகிய இனிய பொருள்கள் யாவற்றும் பந்தபாசமகற்றும் பரிதிசருக்குப் பரிவுடன் சமர்ப்பித்து நாள்தோறும் இலக்குமி வாசமாகிய மார்பையுடைய திருமாலைப்போல் உலக முழுதும் வாழ்த்த வாழ்ந்திருந்தான் என்றவாறு. (எ௫)

ஓங்காரப் பரமகுரு வத்தரவை மதுரைமுத்துபாத்தியாயன்
தாங்காதரத்தினொடு தலைமேற்கொண்டுலக மெலாந் தந்தவன்னை
பாங்காரும் பரிதீசர் திருவருளாற் பரிதி நேமப் புராணம்
ஆங்காத விறைவேறப் பரிசீலனம் புரிந்தீண்டச் சிட்டானே.

அறுசீர்க்கழில் நெடில் விருத்தம்.

பொன்னுப்பூர் பிஞ்சின் சுபைதாரி ராமஸ்வாமி பொன்னுப்பூண்டார்
தன்னுவற் சுபுத்ர பொன்னுசாமி பிள்ளை மொழிப்படி பல்லாரிதன்னிற்
பன்னுளும் வாசராசப் பிள்ளையெனுந் தமிழுபாத்தியாயன் -
இன்னூற்குப் பொழிப்புரையதியற்ற பொன்னுசாமி யச்சிலிடுவித்தானே.

பாதகந் தீர்த்த சருக்கம்.

முற்றிற்று.

ஆகச் சருக்கம்—கூ-க்குக் கூடிய விருத்தம்—ருாருயகூ.